

கலை கண்ட மலேயா

அவ்வை தி. க. சண்முகம்
புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

UG0087
R032A03

கலை கண்ட மலேயா

அவ்வை தி. க. சண்முகம்
கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 14 திருச்சி - 2 சேலம் - 1
கோயமுத்தூர் - 1 மதுரை - 1

முதற்பதிப்பு—1973

விலை : ரூ. 5-50

ஏஷியன் அச்சகம்
சென்னை - 600 014.

மதிப்புரை

வெளிநாடுகளில் மேற்கொள்ளும் சுற்றுலா பற்றிய விவரங்களைப் பயண நூல்களாக வடித்துத் தரும் முயற்சி தமிழில் மிக மிகக் குறைவாகும். ஆங்கில மொழியில் பயண நூல்கள் பல, சிறந்த இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. சுற்றுலா பற்றித் தமிழில் வெளிவந்துள்ள ஒருசில அரிய நூல்களிலே 'கலை கண்ட மலேயா' என்ற இந்நூலும் ஒன்ருகும்.

'கலை கண்ட மலேயா' என்ற இந்தச் சுற்றுலா நூலை நம் கையில் தவழவிட்டிருப்பவர்கள், கலையுள்ளம் படைத்த கலைஞர் ஔவை டி. கே. சண்முகம் அவர்களும், கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்களும் ஆவார்கள். அவர்கள் இருவரும் கலையுலகில் நீண்ட பெருங்காலமாகவே இரட்டையர் களாகக் காட்சியளிப்பவர்கள். கலைஞர் ஔவை டி. கே. சண்முகம் அவர்களை எங்குக் கண்டாலும், கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் அவர்கள் நிழல் போல் அவரைத் தொடர்வதை நாம் எப்பொழுதும் காணலாம். கலைஞரும், கவிஞரும் அந்த அளவுக்கு நட்புறவு பூண்டு, உணர்ச்சியொத்துக் கருத்து ஒத்து வாழ்ந்தவர்களாவர்.

டி. கே. எஸ். நாடகக் குழுவினரோடு இருவரும் சிங்கப்பூர், மலேயா நாடுகளில் நான்கு திங்கள்கள் சுற்றுப்பயணம் செய்து விட்டு, இருவரும் தாயகம் திரும்பியவுடன் அங்கெல்லாம் தாம் கண்டனவற்றையும் கேட்டனவற்றையும் கருதினவற்றையும் தொகுத்துச் சுவையான செய்திகளாகத் தந்துள்ளனர் இந் நூல் மூலம். கதை கூறுவது போல் செய்திகளையும், நிகழ்ச்சி களையும் அவர்கள் கூறிச் செல்வது படிக்கப் படிக்க இன்பம் பயப்பதாக இருக்கிறது.

சிங்கப்பூர், மலேயா நாடுகளுக்குச் சுற்றுலாச் செல்ல விரும்பி இருப்போர், இந்நூலை ஒருமுறை படிப்பார்களேயானல்

சென்று வந்தது போன்ற உணர்வோடு மனநிறைவு பெற முடியும்.

இந்நூலின் நடையோட்டம் இனிய, எளிய, அழகிய தமிழால் அமைந்திருப்பதால், படிப்போர்க்கு இன்ப உணர்வு ஊற்றெடுக்கும் என்பது திண்ணம்.

சிறந்த கலையார்வமும், நல்ல தமிழார்வமும் கொண்ட கலைஞர் ஔவை டி. கே. சண்முகம், கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் ஆகியோரின் இந்த முயற்சி பெரிதும் பாராட்டுவதற்குரியதாகும். தமிழுலகம் இதனைப் போற்றி வரவேற்கும் என்பது உறுதி.

சென்னை,
21-12-73.

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர்,
தமிழ் நாடு.

அணிந்துரை

குமரி மாவட்டம் தந்த குறிக்கோள் மனிதர் அவ்வை டி. கே. சண்முகம். நெல்லை மாவட்டத்திலே பிறந்த கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவ்வையின் அருமந்த அன்பர்களுள் ஒருவர். இவர்கள் இருவரும் 1957, ஏப்ரல் 14 முதல் ஆகஸ்டு 15-ஆம் நாள் வரை தம் நாடகக் குழுவுடன் மலேயா நாட்டில் செய்த சுற்றுப்பயணம் பற்றிய சுவையான குறிப்புகளை 'கலை கண்ட மலேயா' என்னும் இந்நூல் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு வழங்குகின்றனர். பதினைாண்டுகட்கு முன்பு செய்யப்பட்ட பயணம் பற்றிய நூல் இதுவாயினும் 'சூடும் சுவையும்' குறையாத நிலையில் உள்ளது இந்நூலின் பெருஞ் சிறப்பு.

அவ்வை சண்முகம், புத்தனேரி சுப்பிரமணியம் - இருவர் பெயர் ஒற்றுமை மட்டுமன்றி கருத்தொற்றுமையும் மிகவும் உடையவர்கள். அவர்கள் கருத்தொருமித்த கலை நட்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் இந்நூல் இலங்குகிறது.

தமிழ்ப் புத்தாண்டு முதல் இந்திய விடுதலைப் புத்தாண்டு வரை நாலு மாத காலம் மலேயா நாட்டில் பல்வேறு இடங்களிலும் சண்முகம்-சுப்பிரமணியம் கண்டனவும் கேட்டனவும் 208 பக்கங்களில் - 33 தலைப்புகளில் இந்நூலில் கதை போல்-கவிதை போல் சொல்லப்படுகின்றன. ஒருசில மணி நேரங்களில் எவ்விதப் பயணத்துன்பமும் இல்லாமலே நாம் மெத்தையில் படுத்துக்கொண்டே மலேயாவைப் பார்த்துவிட்டு வந்துவிடலாம்.

'கலை கண்ட மலேயா' நூலாசிரியர்களின் கலை, கவிதை, வரலாறு, மொழி, இலக்கியம், சமயம், சமுதாயம் ஆகிய பிரிவுகளில் கொண்டுள்ள பரிவுகளைக் காட்டும்.

பொதுவாக டி. கே. எஸ். நாடகக் குழுவின்—சிறப்பாக அவ்வை சண்முகத்தின் அரும்பெரும் பண்புகளையும் பணிகளையும் அறிய இந்நூல் இனிய நல்துணையாம்.

இந்நூலைப் படித்து முடித்ததும் உண்டாகும் உணர்ச்சிகளுள் ஒன்று, 'இவ்வளவு அருமையான பணிகளைச் செய்த—பண்புகள் படைத்த அவ்வை நம்மிடம் இல்லையே' என்ற வருத்தந்தான். ஆனால், அவர்களுடைய நாடகக் குழுவின் குறிக்கோள் மொழியே நம் நினைவில் தோன்றி ஆறுதல் தருகிறது....-

'வாழ்வு சிறிது;
வளர்கலை பெரிது'

நெ. து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னை 600 005
10—12—1973

முன்னுரை

தனிப்பட்ட புகழ்ச் செல்வர்கள் பலருடைய சுற்றுலா பற்றிய நூல்கள் சில தமிழில் வெளிவந்துள்ளன. ஆனால், கடல் கடந்து கலைமணம் பரப்பிய தலைசிறந்த ஒரு பெரிய நாடகக் குழுவின் சுற்றுலா பற்றிய முதல் நூல் இதுவே யாகும்.

தமிழகத்தின் தலை சிறந்த நாடகக் கலைஞர்களான டி. கே. எஸ். சகோதரர்கள், 1957-இல் சிங்கப்பூர் - மலேயாவில் நான்கு மாதங்கள் சுற்றுப்பயணம் செய்து, பெரும்புகழ் ஈட்டினர். ஐம்பத்தொருவர் அடங்கிய கலைக்குழுவில் யானும் ஒருவனாகச் செல்லும் பேறு பெற்றேன். அன்புக்குரிய நண்பனாக, உடன்பிறவாத் தம்பியாக, நாடக ஆசிரியனாக, பாடலாசிரியனாக, கௌரவ ஆய்வுரையாளனாக என்னையும் தம்முடன் அழைத்துச் சென்ற முத்தமிழ் வித்தகர் 'அவ்வை' தி. க. சண்முகம் அவர்களின் பரந்த கலையுள்ளத்தை என்றும் மறவேன்.

சுற்றுலாவின்போது தமிழ் உணர்ச்சியும் கலையுறவும் செறிந்த ஒவ்வொரு சுவையான நிகழ்ச்சியிலும் திரு. 'அவ்வை' சண்முகம் அவர்களும் யானும் இணைபிரியாத இரட்டையர் போலக் கலந்து மகிழ்ந்தோம். அவ்வப்போது ஆசுகவியாக யான் எழுதிக் கொடுத்த பாடல்களைத் திரு. சண்முகம் அவர்கள் உடனுக்குடன் அக்கணமே பண்ணமைத்துப் பாடி அவையோரை மெய்சிலிர்க்கவைத்த காட்சிகள் என் மனக் கண்ணில் இன்னும் பசுமையாக நிற்கின்றன.

சுற்றுலா பற்றி யான் உடனுக்குடன் எழுதிவந்த குறிப்புக்களைத் திரு. சண்முகம் அவர்கள் அவ்வப்போது பார்வையிட்டு, "கருத்துக்கள் மிக இனிமையாக இருக்கின்றன. நான் நினைப்பதை நீங்கள் அப்படியே சுவையாக எழுதி இருக்கிறீர்கள்" என்றெல்லாம் வியந்து பாராட்டி வந்தார்.

இவ்வாருக, திரு. 'அவ்வை' சண்முகம் அவர்களின் கருத்து வண்ணமும் எனது எழுத்து வண்ணமும் இணைந்து, எங்கள் இருவர் பெயரிலும், 'கல்கி'யில் 'கலைகண்ட மலேயா' என்னும் தொடர் கட்டுரையாக மலர்ந்தது. பல்லாயிரக் கணக்கான அன்பர்களின் பாராட்டைப் பெற்றது. இந்தப் பயணத் தொடர் கட்டுரை, பதினுறு ஆண்டுகளுக்குப்பின் நூல் வடிவம் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

சிறந்த கலை உலா பற்றிய இந்நூல், காலத்தை வென்று நிலையான இன்பம் தரும் என்பதை உணர்ந்து, இதனை வெளியிடத் துணிந்த பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளர் திரு. எஸ். எம். பழனியப்பச் செட்டியார் அவர்களின் கலையுள்ளத்தை எவ்வளவு பாராட்டினுலும் போதாது.

இந்த நூல் அச்சாகிக்கொண்டிருந்தபோது முதல் ஐந்து படிவங்களுக்குப் பிழை திருத்தம் பார்க்கும் பணியினைக்கூட மருத்துவமனைக்குச் செல்லுமுன் திரு. அவ்வை சண்முகம் அவர்கள் ஆவலோடு நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது. இந்தக் கட்டுரைத் தொடர் உருவான சிறப்பில் எனது முழுப்பொறுப்பைப் பற்றி ஒரு முன்னுரையைத் தாமே எழுதித் தர விரும்புவதாகத் திரு. சண்முகம் அவர்கள் கூறிக்கொண்டிருந்தார். ஆனல், நூலுக்கு முன்னுரை எழுதுமுன்பே அவரது கலைவாழ்வுக்கு முடிவுரை எழுதப்படுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை !

எதிர்பாராத அவரது மறைவின் காரணமாக, எங்கள் இருவர் பெயரில் வெளிவரும் இந்நூலுக்கு யானே தனியனுக முன்னுரை எழுத வேண்டிய நிலைமை ஏற்பட்டதே என எனது நெஞ்சம் நெகிழ்கின்றது. 'அவ்வை' சண்முகம் அவர்களின் உயர்ந்த கலையுள்ளத்திற்கு இந்த நூல் சிறந்த காணிக்கையாகும்.

இந்த நூலை முதலில் தொடர் கட்டுரையாகத் தமது வார ஏட்டில் வெளியிட்டுச் சிறப்பித்த 'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கும், நூல் வடிவில் தந்துள்ள பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தாருக்கும் கலைக்குழுவினரின் நன்றி உரியதாகும்.

இந்நூலிற்குச் சிறந்ததொரு மதிப்புரை வழங்கியுள்ள தமிழ் நாடு கல்வி, சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், கனிந்தவொரு அணிந்துரை வழங்கியுள்ள சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களுக்கும் எங்கள் நன்றி.

வாழ்க நாடகக் கலை!
வளர்க சுற்றுலாக் கலை!

'தமிழ்க் குடில்'
சென்னை-18
21-12-'73

புத்தனேரி ரா. சுப்பிரமணியம்.

உள்ளுறை

1.	எண்ணமும் ஏற்பாடும்	...	1
2.	கப்பல் புறப்பட்டது	...	8
3.	நாகைத் துறைமுகத்தில் ...	...	16
4.	பொழுது போனது எப்படியோ ?	...	23
5.	மலை நாட்டின் தலைவாசல்	....	34
6.	சிங்கப்பூர் சேர்ந்தோம்	...	45
7.	சங்கங்கள் மலிந்த சிங்கப்பூர்	...	54
8.	சிங்கபுரத்தின் சிறப்பு	...	65
9.	விருப்பும் வெறுப்பும்	...	72
10.	தலைசிறந்த கலைத் தோட்டம்	...	78
11.	காய்ச்சல் தந்த கலக்கம்	...	87
12.	சிங்கை மக்களும் திருக்கோயில்களும்	...	91
13.	அன்புக்குள் அடங்கும் கலை	...	97
14.	முதல் முகாம் முடிந்தது	...	107
15.	தலைநகரைக் கண்டோம்	...	116
16.	பூமலை மாநகர்	...	124
17.	கலைச் சங்கங்கள்	...	133
18.	வெந்நீர்க் கிணறும் வேலன் குகையும்	...	137
19.	அறம் வளர்க்கும் கூடங்கள்	...	144
20.	கலை வளர்க்கும் நிலையங்கள்	...	147
21.	இனிய கனி வளம்	...	156
22.	தமிழர் வளர்க்கும் சீனக் குழந்தைகள்	...	163
23.	கிள்ளான்—கோலக் கிள்ளான்	...	166
24.	மூவாருக்குப் புறப்பாடு	...	170
25.	மலாக்காவின் மாண்பு	...	174
26.	மூவார் முகாம்	...	181
27.	ஈப்போவில் அன்புத் தொல்லை	...	183
28.	பொங்கித் ததும்பிய கலை ஆர்வம்	....	185
29.	மலை வளம் கண்டோம்	...	192
30.	கலைக் குலத்தின் ரத்த பாசம்	...	196
31.	வாழ்த்தினார் முதலமைச்சர்	...	198
32.	தாயகம் திரும்பினோம்	...	200
33	சுற்றுலாவின் வெற்றி	...	202

1. எண்ணமும் ஏற்பாடும்

தென்கிழக்கு ஆசியாவின் பொன் கொழிக்கும் பூமியான மலேயாத் தீபகற்பத்துக்கு 1957, ஆகஸ்டு 31–ஆம் நாள் ஒரு பொன்னுளாகும், (மலேயாவைப் பொன் கொழிக்கும் பூமி என்பதைவிட, வெள்ளி கொழிக்கும் பூமி என்பது மிகப்பொருத்தம். ஏனெனில், மலேயா நாணயத்துக்கு வெள்ளி என்ற பெயர்தான் வழங்குகிறது.) மலேயாவில் 'மெர்டேகா' என்னும் சுதந்தரக் குழந்தை பிறந்த சிறந்த நாள் இது.

இந்தச் சுதந்தரக் குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக மலேமங்கை (மலேயா) 1948, பிப்ரவரி முதல் தேதி முதல் அதாவது, ஐக்கிய மலேயா உருவான திருநாளிலிருந்து காத்துக்கொண்டிருந்தாள்.

சுதந்தரக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் மலேமாதா சூல் கொண்ட திருநாள், 1955, ஆகஸ்டு ஒன்பதாம் தேதி என்று சொல்லலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நிர்வாக சபை ஐக்கிய மலேயாவில் அன்றுதான் உதயமாயிற்று.

இரண்டு ஆண்டுகளாகச் சூல் கொண்டிருந்த தன் தங்கையான மலே மங்கையிடம் தமிழ்த்தாய்க்கு மிகுந்த பாசம் ஏற்பட்டது. தமிழ்த்தாய் ஏற்கெனவே —

பத்தாண்டுகளுக்கு முன்பே சுதந்தரக் குழந்தையைப் பெற்றெடுத்துப் பேணி வளர்க்கும் அநுபவம் வாய்ந் தவள் அல்லவா? எனவே, சுதந்தரக் கர்ப்பவதியான மலேயாத் தங்கையின் ஆசாபாசங்களை நன்கு உணர்ந் தாள் தமிழ் அன்னை. "மசக்கை"யின் காரணமாகக் கர்ப்பவதிக்கு மண்ணும் சாம்பலுங்கூட இனிப்பாக இருக்குமே! தன் மலேயாத் தங்கை 'மசக்கை'யினுல் துன்பப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நாவிற் கினிய "மசக்கைப் பணியாரம்" அனுப்பித் தங்கையின் மனங்குளிரச் செய்ய விரும்பினுள் தமிழ்த்தாய்.

சுதந்தரக் குழந்தை பெறப்போகும் மலைமங்கைக்குக் கலைதான் சிறந்த 'மசக்கைப் பணியாரம்' என்பதை நன்குணர்ந்தாள் செந்தமிழ்த்தாய். "மாசற்ற கலை என்னும் மசக்கைப் பணியார விருந்தை மலைமங்கைக்கு அளித்து வருக!" என்று எங்களுக்கு ஆணையிட்டாள் அன்னை! அன்னையின் கட்டளையைச் சென்னியில் ஏற்றுத் தாய்நாடு விட்டு மலேயா செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்யும் பேறு எங்களுக்குக் கிடைத்தது. அங்கே கண்ட தமிழ் ஆர்வமும் கலை ஏக்கமும் எங்களை யும் எங்கள் நாடகக் கலைக்குழுவினரையும் பெரிதும் ஆட்கொண்டுவிட்டன.

"அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே" என்று ஆண்டவனே அழைக்கப்படும்போது நாங்கள் எம்மாத் திரம்? இலங்கை மக்களின் பேரன்பையும் ஆர்வத்தை யும் பாராட்டினேம்.

"இது என்ன பிரமாதம்? மலேயாவுக்குப் போய்ப் பாருங்கள்! மக்களின் கலை ஆர்வம் கடலாக அலைமோதிக்

கொண்டிருப்பதைக் காண்பீர்கள்'' என்று பெரியோர்கள் பலர் எங்களிடம் அடிக்கடி சொல்லி வந்தார்கள்.

திருப்பித் திருப்பிக் கிளிப்பிள்ளைக்குச் சொல்வது போல், ''மலேயாவுக்குப் போங்கள்! மலேயாவுக்குப் போங்கள்!'' என்று அன்புக்குரிய பலர் ஆர்வத்தை எழுப்பிவிட்டார்கள். எனவே, மலேயா செல்லும் வாய்ப்பு எப்போது வரும் என்று மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டே இருந்தோம்.

மலேயாவைக் காண வேண்டும் என்ற தவிப்பு எங்களுக்கு ஏற்படுவதற்கு மற்ருெரு காரணமும் உண்டு. அது மிக முக்கியமான காரணமுங்கூட.

வீர இராஜேந்திர சோழன் கடல் கடந்து சென்று வென்ற கடாரம் என்ற தேசம், மலேயாவின் ஒரு பகுதியே என்பதை எண்ணும் போது உள்ளத்திலே அன்பும் உடம்பிலே தெம்பும் உண்டாகாமல் இருக்குமா? 'கடாரம்' என்பதுதான் 'கெடா' என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு மாகாணமாக இலங்குகிறது.

''கடலில் புயல் இல்லாதிருந்தால் இரவு பகலாகக் கப்பல் பயணம் செய்தால் சீன நாட்டை அடைய 1,150 நாட்கள் ஆகும்'' என்று இராஜராஜ சோழன் காலத்தில் கணக்கிட்டுள்ளனர். சீன தேசத்துக்குச் செல்ல 1,150 நாட்கள் ஆகுமென்ருல் அந்தக் காலத்தில் கடாரத்துக்குச் செல்லக் குறைந்தது ஐந்நூறு நாட்களாவது ஆகியிருக்க வேண்டுமல்லவா? கப்பல் பயணத்தின் கடுமையையும் பொருட்படுத்தாமல் கலம் செலுத்திக் கடாரத்தை வென்று வாகை சூடிய இராஜேந்திரனின் வீரத்தை எப்படிப் புகழ்வது?

போக்குவரத்துச் சாதனங்கள் மிகக்குறைவான அந்தக் காலத்திலேயே, அலைகடலை எதிர்த்து முன்னேறிக் கலாசாரத்தைப் பரப்பும் ஆற்றல்

பெற்றிருந்தான் தமிழன் என்று எண்ணிப் பெருமை கொள்வோம்.

"மலேயாவுக்கு முதன்முதலாக நாகரிகத்தை அளித்தது இந்தியாவே; அதுவும் தென்னாட்டுத் தமிழர்களே" என்று கூறியுள்ளார், ரோலண்ட் புராடெல் என்ற அறிஞர். இப்படி நமது பெருமையை மேலை நாட்டு அறிஞர் ஒருவர் எடுத்துக்காட்டிய பிறகாவது நாம் உணர்ந்து மகிழ வேண்டாமா?

மலேயா நாட்டுக்கு வளங்கொடுப்பவை ஈயமும் ரப்பரும்.

மண்ணிலே ஈயம் பிறக்கும்—பச்சை
மரத்திலே ரப்பரோ பாலாய்ச் சுரக்கும்!

ஈயச் சுரங்கங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் பாடுபட்டு உழைக்கின்றனர். அவர்களில் மிகப்பெரும்பாலோர் தமிழர்கள்.

மலைநாட்டின் வனப்புக்குக் காரணமாக இருப்பவை அழகு தவழும் சாலைகள். அந்தச் சாலைகளிலே தமிழ்த் தொழிலாளர்களின் கைவண்ணத்தைக் காணலாம் என்று பிற மொழியாளரும் பாராட்டுகின்றனர்.

இவ்வாறெல்லாம் தமிழர்களோடும் தமிழ் நாகரிகத்தோடும் நெருங்கிய உறவு கொண்ட மலைநாட்டின் வளத்தைக் காணவும், கடாரத்தைத் தன் ஆட்சியின்கீழ் கொணர்ந்த சோழப் பெருவேந்தன் இராஜராஜ சோழனின் வீர வரலாற்றை மலைநாட்டு மக்களுக்கு நாடக உருவிலே காண்பிக்கவும் எப்போது வாய்ப்புக் கிடைக்கும் என்று ஏங்கினேம்.

"திரைகட லோடியும் திரவியந் தேடு" என்பது பழமொழி. திரவியந் தேடுவதில் மட்டும் சிறப்பில்லை; 'அலைகட லோடியும் கலைவளந் தேடு' என்று எங்கள் கலையுள்ளம் ஏவிக்கொண்டிருந்தது.

தனிப்பட்ட ஒருவரின் அழைப்பின் பேரில் மலேயா வுக்குச் செல்வதை நாங்கள் அவ்வளவாக விரும்ப வில்லே. பொதுநலச் சங்கம் ஒன்றின் சார்பிலே போவது தான் சிறப்பு என்று காத்திருந்தோம்.

கடைசியாக, ஐம்பத்தொரு பேர்கள் அடங்கிய கலேக்குழுவை மலேயாவுக்கு அழைத்துச் செல்வதற் காக முன்பண மூலதனம் இடும் துணிவு, சிங்கப்பூர் வணிகரும் நகரசபை உறுப்பினருமான திரு. **கே. எம். ஒலிமுகமது** என்பவருக்குத்தான் வந்தது.

திரு ஒலிமுகமது 'அவ்வையகத்'துக்கு வந்திருந்த சமயம் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம் என்று கருதுகிறோம். அவர் வந்து அளவளாவிக்கொண்டிருந்த சமயம் திருமதி சகுந்தலா பாரதி 'அவ்வையக'த்துக்கு வந்தார்.

"இவர்தான் பாரதியாரின் அருமைப் புதல்வி, சகுந்தலா பாரதி" என்று திரு. ஒலிமுகமதுவுக்கு அறிமுகம் செய்து வைத்து, எதிரே சுவரில் மாட்டப் பட்டிருந்த பாரதியாரின் படத்தையும் காட்டினேம்.

உடனே அவர் கொஞ்சங்கூடக் கள்ளமில்லாத உள்ளத்துடன், "பாரதியார் என்பவர் யார்?" என்று கேட்டுவிட்டார்! எங்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது; மகாகவி சுப்பிரமணிய பாரதியார் யார் என்று கேட்கும் ஒருவரா தமிழ் நாடகக் கலேக்குழுவை மலேயாவுக்கு அழைத்துச் செல்ல வந்தார் என்று வியப்பில் ஆழ்ந்தோம். ஆனுலும், எங்களுக்கு ஒரு வகையில் ஆறுத லாக இருந்தது. ஒருவரை அறிமுகம் செய்துவைக்கும் போது, எல்லாம் தெரிந்தவர் போல், "அப்படியா! பாரதியாரின் புதல்வியா! உங்களேப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது என் பாக்கியம்!" என்று போலி மகிழ்ச்சி காட்டாமல், தெரியாததைத் 'தெரியாது' என்று துணி

வாக வெளியிட்ட திரு. ஒலிமுகமதுவைப் பாராட்ட வேண்டும் என்றுதான் எங்கள் உள்ளம் எண்ணியது.

மலேயாப் பயணம் பற்றி திரு. ஒலிமுகமதுவுடன் கலைக்குழுவின் சார்பில் திரு. டி. கே. பகவதி ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்த ஒப்பந்தத்துக்கு ஒரு தனிச் சிறப்புக் கிடைத்தது. ஒப்பந்தத்தில் சாட்சியாகக் கையெழுத்திட்டு மதிப்பளித்தவர் சென்னையின் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் திரு. எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார்.

முதல் முகாம் சிங்கப்பூர் என்று திட்டமிடப்பட்டது. சிங்கப்பூருக்கு விமானம் மூலம் செல்வதா, கப்பல் பயணம் செல்வதா என்ற யோசனை எழுந்தது. ஏராளமான காட்சியமைப்புகளுடன் செல்லும் கலைக் குழுவுக்குக் கப்பல் பயணமே ஏற்றது என்பதில் கருத்து வேற்றுமையில்லை. எனவே, கப்பற்பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டார் திரு. பகவதி.

கப்பலில் சிங்கப்பூர் சென்றடைய ஒன்பது நாட்கள் ஆகும் என்று அறிவிக்கப்பட்டது. கப்பற்பயணம் பற்றி நண்பர்கள் சிலர் எச்சரிக்கை செய்ய முனைந்தனர். ஒரு சில நாட்கள் 'கடற்பிணி' ஏற்படும் என்று கூறப்பட்டது. இதனால் எங்கள் குழுவினரில் சிலர் மருட்சியடைந்ததும் உண்டு.

இந்த மருட்சியை மாற்ற முன்வந்தார் திரு. ஏவி. எம். ஸ்டுடியோ அதிபர் திரு. ஏவி. மெய்யப்பச் செட்டியார். கப்பற்பயணம் செய்து அனுபவப்பட்ட அவர் கடற்பிணிக்கு மாற்று மருந்தாகச் சில மாத்திரை களைக் கொடுத்து உதவினார். ஆடும் அலைகளினால் கப்பலின் ஆட்டம் அதிகமானால் சிலருக்கு வாந்தி வரக்கூடும் என்றும், அத்தகைய குமட்டலைத் திரு. ஏவி. எம். தந்த

மாத்திரை உடனே நிறுத்தும் என்றும் உறுதி தரப் பட்டது. கலைக்குழுவின் பிரதம நடிகையான திருமதி டி. எ. ஜெயலட்சுமி முன்னெச்சரிக்கையாகச் சில மாத்திரைகளை வாங்கிப் பத்திரப்படுத்திக்கொண்டார்.

''கப்பற்பயணம் வெகு சுகமாக இருக்கும்; கவலை யில்லாமல் உற்சாகமாகப் போய்வாருங்கள்'' என்று உறுதியாக உள்ளன்போடு நல்லுரை கூறியவர் நடிகமணி திரு. எம். கே. ராதா. ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன் தம் தந்தையாரும் பிரபல நாடக ஆசிரியருமான திரு. எம். கந்தசாமி முதலியாருடன் மலேயாவுக்குக் கப்பல் பயணம் செய்து அனுபவம் பெற்றவர் திரு. ராதா. எனவே அவரது நல்வாக்கு எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

பயணத்துக்குத் தேவையான பாஸ்போர்ட், விஸா முதலிய ஏற்பாடுகளைக் கவனிப்பதில் சுமார் மூன்று மாத காலமாக ஈடுபட்டு வெற்றி கண்டார் திரு. பகவதி.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூருக்குக் கப்பற்பயணம் வெகு எளிதாக இருந்ததாம். புறப்படும் தேதியன்று ரயில் நிலையத்துக்குச் சென்று டிக்கட் வாங்குவது போல் கப்பலடியிலே டிக்கட் வாங்கிக் கொண்டு உடனே புறப்படும் வசதி அந்தக் காலத்தில் இருந்ததாம்; கப்பல் கட்டணமும் மிகக்குறைவு. பதினெட்டு ரூபாய்தானாம்; அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் எத்துணை வேறுபாடு!

1957, ஏப்ரல் 14-இல் ''ஸ்டேட் ஆஃப் மெட்ராஸ்'' கப்பலில் சிங்கப்பூருக்குப் புறப்படுவது என்று முடிவா யிற்று. அதற்கான முன்னேற்பாடுகளும் பின்னமின்றி நிறைவேறின.

புறப்படுவதற்கு ஒரு மாத காலத்துக்கு முன்பிருந்தே கலைக்குழுவினரை வாழ்த்தி வழியனுப்பும் விழாக்களும்,

விருந்துகளும் ஆங்காங்கு நடந்துகொண்டிருந்தன. மலே நாட்டில் தமிழ்க் கலைக்கொடியைப் பறக்கவிடுவதில் தமிழ்ப்பெருமக்களுக்கு எத்துணை ஆர்வம் உள்ள தென்பதை ஒவ்வொரு பாராட்டுக் கூட்டமும் உணர்த்தியது.

புறப்படுவதற்கு முதல் நாளே சுங்கச் சோதனை முதலான பூர்வாங்க ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு பயண மூட்டைகளைக் கப்பலில் ஏற்றும் வசதி கிடைத்தது.

கப்பலில் ஏற்றப்பட்ட காட்சியமைப்புக்குரிய சீன் சாமான்கள் மட்டுமே கப்பல் கணக்குப்படி சுமார் அறுபது டன் நிறை இருந்தன. கப்பலில் ஏற்றும் சாமான்களை எடையைக்கொண்டு கணிப்பதில்லை; அச் சாமான்கள் எவ்வளவு இடத்தை அடைக்கின்றனவோ, அதன் பேரில் கட்டணம் வசூலிக்கின்றனர்.

பயணத்துக்குரிய எல்லா ஏற்பாடுகளும் முதல் நாளே அதாவது, ஏப்ரல் மாதம் பதின்மூன்றும் தேதியே முடிந்துவிட்டமையால், மறுநாள் நிம்மதியாகக் கப்பல் ஏறலாம் என்ற உற்சாகம் எங்களுக்கு ஏற்பட்டது.

2. கப்பல் புறப்பட்டது

எங்கள் பயணத் திருநாள் நெருங்கியது. ஏப்ரல் பதினான்காந்தேதி; பொழுது புலர்ந்தது. புத்துணர்ச்சி மலர்ந்தது. எங்கள் இதயங்களிலெல்லாம் சுறுசுறுப்பு உதயமாயிற்று.

எல்லோரிடத்திலும் விடை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எல்லையற்ற ஆர்வத்தால் என்ன செய்வ தென்று தெரியாமல் திணறினோம். கண்ணில் தென் பட்ட நண்பர்கள், கலையன்பர்கள் ஒவ்வொருவரும் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப்" பிரியா விடை தந்தனர்.

"கலைத் தூதர்களே! உங்கள் கலைத் தோள்களிலே மதத்தான பொறுப்பைத் தாங்கிச் செல்கிறீர்கள்! எனவே பொறுப்புடன் கலைமணம் பரப்பிச் சிறப்புடன் வருக!" என்று சொல்வன போலிருந்தன. அன்பர்கள் எல்லாம் சூட்டிய அன்பு மாலைகள்!

குழுவினர் ஐம்பத்தொரு பேர்களில் எழுவர் பெண்கள். அனைவருக்கும் "வாழ்வு சிறிது, வளர்கலை பெரிதே" என்ற பொன்மொழி பொதிந்த அடையாளச் சின்னங்கள் வழங்கப்பட்டிருந்தன. பொதுச்சின்னம் போதாதென்று பொதுவான சீருடைகளும் வழங்கப்பட் டிருந்தன. மங்கலான மஞ்சள் வண்ணத்தில் சூட்டும் கோட்டும் ஆண்களுக்குச் சீருடையாக அமைந்தன. அரக்கு வண்ணப் பட்டுப் புடைவையும்பச்சை நிறப் பட்டுரவிக்கையும் பெண்மணிகளின் சீருடை.

அத்தனை பேர்களிலும் ஒரே ஒருவர் மட்டும் பொது உடைக்கு விதிவிலக்காக நின்றார். அவர் யார் தெரியுமா? அண்ணா திரு. **டி. கே. முத்துசாமி** அவர்கள் தாம். வழக்கம் போல் எளிய முறையில் வெள்ளை வேட்டியும் முழுக்கை வெண்சட்டையும் அணிந்துகொண்டுதான் புறப்பட்டார். ஆயினும், அடையாளப் பொதுச் சின்னத்தை அணிந்துகொள்ள அவர் தயங்கவில்லை. அனைவருக்கும் தலைவர் என்ற நிலையில் அதுவே அவருக்கு ஒரு சிறப்பாக இருந்தது.

பொது உடை அவசரம் அவசரமாகத் தயாரிக்கப் பட்டது என்பதையும் அவசியம் குறிப்பிட வேண்டும்

புறப்படும் அன்றைக்குத்தான் குழுவினர் தையற்கலைஞரிட மிருந்து வாங்கி அணிந்துகொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவு என்ன தெரியுமா? ஒருசில கோட்டுகளில் போதுமான பித்தான்கள் வைக்கத் தையற்காரர் மறந்து விட்ட வேடிக்கையைக் கண்டோம்! வேறு சில கோட்டு களில் கழுத்துப்பட்டையின் இரு முனைகளும் தென் துருவம் வடதுருவம் போல் வக்கரித்து நின்றன! ஓரிரு காற்சட்டைகளோ கெண்டைக்காலுக்குக் கீழே இறங்கு வது மிகவும் மரியாதைக் குறைவான காரியம் என்று மேலேயே நின்றுவிட்டன !

இந்தப் பொது உடைகளில் சிலவற்றுக்குக் கப்பலில் ஒரு விபத்து ஏற்பட்டது. என்ன விபத்து என்பதைப் பின்னால் அறிவீர்கள்.

ஒவ்வொருவரும் பயணமூட்டைகளை முன் தினமே கப்பலில் அவரவர்க்கு உரிய அறைகளில் வைத்துப் பூட்டிவிட்டோம். ஆதலால், கனமான மூட்டைமுடிச்சு எதுவும் இல்லாமல் கம்பீரமாகக் கையை வீசிக் கொண்டே கப்பலடிக்குச் சென்றோம்.

துறைமுகத்தில் பொதுமக்களின் ஆரவாரம் எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. தேசியத் திருவிழாக்களில் மக்கள் ஆசையோடு கூடுவது போல், ஆங்காங்கு ரஸிகர்கள் ஆவலோடு குழுமி நின்றனர். நாதசுர இன்னிசை முழங்கிக்கொண்டிருந்தது.

முதன்முதலாகச் சுகாதார அதிகாரிகளிடம் சென்றோம். "உடல்நிலை கப்பல்பிரயாணத்துக்கு ஏற்றது தான்" என்று நற்சான்று பெற்றுக்கொண்டோம்.

அடுத்தாற்போல், சுங்க அதிகாரிகளிடம் நாங்கள் கொண்டு சென்ற கைப்பொருளின் கணக்கை அறிவித் தோம்.

இனிமேல் நேரே சென்று கப்பலில் ஏறிக்கொள்ள லாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், சுங்கச் சோதனை நிலையத்தைத் தாண்டிக் கப்பலின் அடிவாரம் போல் விளங்கிய பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்ததும் மக்கட்கடலில் சிக்கிக்கொண்டோம்.

''கலை அன்பர்களே! அமைதியாக இருங்கள்! கலைஞர்களுக்கு வழிவிடுங்கள்!'' என்று ஒலிபெருக்கியின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எங்களுக்கு ஒரே வியப்பாக இருந்தது. ஒருநாளும் இல்லாத திருநாளாகத் துறைமுகத்தில் கபபலடியில் ஒலிபெருக்கி ஏற்பாடும் செய்யப்பட்டிருந்த சிறப்பை எண்ணி எண்ணிப் பூரிப்படைந்தோம்.

ஒலிபெருக்கியின் அருகிலே நின்று, உணர்ச்சி ததும்ப வாழ்த்தி வழியனுப்பும் பொறுப்பிலே வீறு கொண்ட சிங்க ஏறுக விளங்கினர் புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயலாள ரான அவருடன் நூற்றுக்கணக்கான சக நடிகர்களும் கலையன்பர்களும் கூடியிருந்து ஆசி கூறி, மாலை சூட்டி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

உள்ளன்போடு நெருக்கித் திணறிக்கொண்டிருந்த அந்த மாபெருங்கூட்டத்திலே அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், நீதிபதிகள், பேராசிரியர்கள், எழுத் தாளர்கள், சினிமாக் கலைஞர்கள், நடிகர்கள், ரசிகர்கள் எல்லாரும் கலந்துகொண்ட சிறப்பை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தோம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் 'தமிழவேள்' பி. டி ராஜன் அவர்கள் கலைக் குழுவினரை வழியனுப்புவதற்காகவே கப்பலருகே வந்து நின்று ஆர்வக் குரல் கொடுத்த அன்பு எங்களுக்கு மிகுந்த ஊக்கமூட்டியது.

கலையன்பர்கள் காட்டிய உற்சாகத்தில், கப்பலடியில் காத்துநின்ற எங்கள் குடும்பத்தார், உற்ருர், உறவினர் ஆகியோரிடம்கூடச் சற்றுநேரம் அளவளாவி விடைபெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை!

கப்பலின் உச்சித் தளத்திலே நின்ற காப்டன் திரு. கப்ராஜியும் ஏனைய அதிகாரிகளும் மக்களின் உணர்ச்சிப் பெருக்கைக் கண்டு ரசித்துக்கொண் டிருந்தனர். கப்பல் நாயகருக்கு ஒலிபெருக்கியின் மூலம் பின்வருமாறு விருது கூறி அறிமுகம் செய்துவைத்தார் டைரக்டர் திரு. கே. சுப்பிரமண்யம்.

''மதிப்புக்குரிய கப்பல் நாயகரே! ஏனைய கப்பல் அதிகாரிகளே! தென்னுட்டின் கலைச்செல்வங்களை உங்கள் கப்பலிலே ஏற்றியனுப்புகிருேம். அவர்களைப் பத்திர மாகக் கொண்டு சேர்க்கும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிருேம். உங்களுக்கும் கப்பலில் உள்ள மற்றப் பிரயாணிகளுக்கும் உற்சாகம் ஊட்டும் சில கலை நிகழ்ச்சிகளைக் கலைஞர்கள் நடத்திக் காட்டுவார்கள்...''

இந்த அறிவிப்பு ஆங்கிலத்திலும் தமிழிலும் முழக்கப் பட்டமையால் கப்பல் நாயகரும் கப்பலில் இருந்த ஏனைய பிரயாணிகளும் கைகொட்டித் தங்கள் களிப்பை அறிவித்தனர்.

குழுவினருக்குச் சூட்டப்பட்ட மாலைகளுக்குக் கணக்கேயில்லை! ''மலையாகக் குவிந்த மாலைகளின் கனத்தைக் கப்பல் தாங்குமா?'' என்று வேடிக்கையாகக் கேட்டார் கப்பல் அதிகாரி ஒருவர். ''மாலைகளுக்கும் கட்டணம் போடலாம் போலிருக்கிறதே!'' என்ருர் இன்னெருவர்.

பாராட்டுரைகளும் வாழ்த்தொலிகளும் முழங்கக் கப்பலில் ஏறுவதற்காகப் பெருங்கூட்டத்தை விலக்கிக்

கொண்டு நாங்கள் சென்ற சமயம், குள்ளமான அன்புருவம் ஒன்று கையிலே ஒரு கூடையுடன் நுழைந்தது. அந்தக் கூடையை எங்கள் கையிலே திணித்து, "இதிலே ஆயிரம் எலுமிச்சம் பழங்கள் உள்ளன! பிரயாணத்துக்கு மிகவும் பயன்படும்!" என்று உள்ளன்போடு கூறித் தழுவிய அந்த அன்பரை உற்றுநோக்கினோம். அவர்தாம் நகைச்சுவை நடிகர் திரு. பி. டி. சம்பந்தம் என்று அறிந்ததும் புளகாங்கித உணர்ச்சி பெற்றோம்.

ஒன்பது நாட்கள் கப்பலிலே இருக்க வேண்டும் என்பதை நாங்கள் அறிவோம். ஆதலால், ஒரு கூடை எலுமிச்சம் பழத்தையும் பதினெட்டு ஊறுகாய் பாட்டில்களையும் நாங்கள் ஏற்கெனவே ஆயத்தமாக வைத்திருந்தோம். அவற்றுடன் நண்பரின் எலுமிச்சம் பழங்களையும் சேர்த்துக்கொண்டோம்.

பிற்பகல், சுமார் மூன்றரை மணிக்கு அனைவரும் கப்பலின் மேல்தளத்துக்கு வந்தோம். அடிவாரத்தில் நின்ற அன்பர்களோடு உரத்த குரல் கொடுத்தும், சைகையின் மூலமாகவும் அளவளாவிக்கொண்டிருந்தோம். எங்களை விட்டுப் பிரிய மனமில்லாத நண்பர்கள் பலர் கப்பலுக்குள்ளேயே வந்து கப்பல் புறப்படும் வரையில் எங்களுடனே கலந்து நின்று அன்பு பாராட்டினர் "இந்தக் கப்பல் உங்கள் சொந்தக் கப்பல் மாதிரி. எல்லா வசதிகளும் கிடைக்கும். கூச்சமில்லாமல் கேட்டு வசதி பெறுங்கள்!" என்ற உற்சாகமான குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தோம். தமக்கே உரித்தான பாணியில் இந்த ஆதரவுக் குரலைக் கொடுத்தவர் கப்பல் கம்பெனியின் ஏஜண்டும், கலாநிகேதன் துணைத்தலைவரும் சிறந்த ரசிகருமான திரு. சையத் ஹாசன் என்பதை அறிந்து அவருக்கு நெஞ்சு கலந்த நன்றியை அறிவித்தோம்.

ஒய். எம். ஐ. ஏ. நண்பர் திரு. இராமமூர்த்தி, ''புத்தனேரி, சார்! இந்தப் புத்தகத்தை வைத்துக் கொள்ளுங்கள்! மிகவும் பயனுள்ளதாக இருக்கும்'' என்று ஒரு பெரிய புத்தகத்தைத் தந்தார். அந்தப் புத்தகத்தின் பெயர் ''மலேயாவில் திக்விஜயம்'' என்பது. திரு. எஸ். கே. செட்டூர், ஐ. சி. எஸ். எழுதியது. பயணத் துக்குப் பொருத்தமான பரிசாக அமைந்தது அந்நூல்.

பிரயாணிகள் தவிர ஏனையோர் அனைவரும் கீழே இறங்கிய பின், துறைமுகத்தோடு கப்பலை இணைத்திருந்த இருப்புப்பாலம் இயந்திர உதவியால் தூக்கி அகற்றப் பட்டது.

பிற்பகல் சரியாக 4-25 மணிக்குக் கப்பல் துறைமுகத்தைவிட்டு நகரத் தொடங்கியது. அடிவாரத் தில் குழுமியிருந்த அன்பர்கள் அனைவரும் விண்ணதிர வாழ்த்தொலிகள் முழக்கிய வண்ணம் இருந்தனர். அந்த முழக்கத்தோடு எங்கள் பதில் முழக்கம் கொஞ்சிக் குலாவியது.

துறைமுகத்துக்கும் கப்பலுக்கும் இடையில் உள்ள தூரம் கொஞ்சம் கொஞ்சமாக அகன்றுகொண்டே யிருந்தது. ஆனல், கரையில் நின்ற அன்பர்கள் அகன்று விடவில்லை. கண்ணிமையாமல் எங்களையே நோக்கி மெய்ம்மறந்து நின்ற காட்சி எங்களையும் அசைவற்றுக் கப்பல் தளத்திலே நிற்கச் செய்தது.

கரை மறையும் வரையிலும் அப்படியே தளத்திலே நின்றோம். தமிழ் எழுத்தாளர் சங்கமும் கல்கி காரியா லயத்தாரும் எங்களுக்கு அளித்த வழியனுப்பு விருந்தின் போது மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூறிய ஓர் அறிவுரை எங்கள் உள்ளத்திலே நின்று ஒளி வீசும் ஞானவிளக்காக அமைந்தது.

''மலேயாவின் உள்நாட்டுச் சிக்கல்களிலே சிக்கிக் கொள்ளாமல் ஐம்பத்தொரு பேர்களும் முழுமையாகத் திரும்பி வாருங்கள். அதுதான் கலையின் வெற்றி'' என்ற ராஜாஜியின் ஆசி உரையை எப்படி மறக்க முடியும்?

சென்னைத் துறைமுகமும் நகரப்பொலிவும் எங்கள் கண்ணுக்கு எட்டாமல் விலகிய நேரத்திலேதான் கப்பலுக்குள் சென்றோம்.

அப்பொழுதுதான் மாலைக் காப்பி சாப்பிட வேண்டும் என்ற நினைவு ஏற்பட்டது. உடனே, உணவருந்தும் இடத்துக்குள் நுழைந்தோம்.

உணவு பரிமாறும் பணியாளர் ஒருவர் 'சிடுசிடு' என்று முகத்தை வைத்துக்கொண்டு ''தேநீர் தரும் நேரம் கடந்துவிட்டது. இப்போது ஒன்றும் கிடைக்காது!'' என்றார்.

எங்களுக்கு ஒரே ஆத்திரமாக இருந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்புதானே, 'இந்தக் கப்பல் உங்கள் சொந்தக் கப்பல் மாதிரி!' என்று கப்பல் ஏஜண்டு சொல்லிச் சென்றார்! தேவையான சமயத்தில் தேநீர் கூடக் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்தோம்.

சற்று நேரத்துக்குப் பின் பணியாளருக்குக் கொஞ்சம் இரக்கம் வந்தது! ''சரி, இன்றுமட்டும் தேநீர் தருகிறேன். நாளை முதல் சரியான நேரத்தில் வந்துவிட வேண்டும்!'' என்று சொன்னார் அவர்.

கேசரியும் காப்பியும் மட்டும் கிடைத்தன. ''காரம் எதுவும் கிடையாதா?'' என்று கேட்டோம். ''காரம் அவருடைய (பணியாளருடைய) பேச்சிலேதான் இருக்கிறதே!'' என்றார் அருகிலிருந்த நண்பர் ஒருவர்.

''காரம் நான் தருகிறேன்'' என்று எங்களை அழைத்துச்சென்றார், நகைச்சுவை நடிகர் திரு டி.என். சிவதாணு.

'இவரிடம் ஏது காரம்? நல்ல நகைச்சுவையுடையவராயிற்றே!' என்று மிகுந்த வியப்புடன் நோக்கினோம்.

"உண்மையாகவே என்னிடம் காரம் இருக்கிறது. ஒரு டப்பா நிறையச் சீடை கொண்டுவந்திருக்கிறேன்....!" என்ருர்.

நெடுந்தூரப் பயணத்துக்கு ஏற்றதான சீடை என்ற அருமையான பணியாரத்தைக் கண்டுபிடித்த நம்முடைய முன்னேரின் தீர்க்கதரிசனத்தை எவ்வளவுபாராட்டினலும் போதாது அல்லவா?

சற்று நேரங்கழித்து எல்லாரும் அவரவர் அறைக்குள் நுழைந்தோம்.

தமிழ்ப்பெருமக்களின் அன்பு அலேகள் தந்த இன்பத்தால் ஆழ்கடல் அலேகளின் அசைவுத்தொல்லே சிறிதும் இல்லே; தாயானவள் தொட்டிலே ஆட்டிக் குழந்தையைத் தூங்கவைப்பது போலக் கடல் அன்னே அலேக்கரங்களால் தாலாட்டிக் கப்பலுக்கு நளினமான அசைவூட்டினள். கப்பலில் பொருத்தப்பட்ட வானெலியில் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் நடைபெற்றது. வானெலியிலே மிதந்த இலேசான இன்னிசை எங்களுக்குத் தாலாட்டுப் பாடலாக ஒலித்தது. எனவே, நித்திரையின் அரவணேப்பிலே நிம்மதி பெற்ருேம்.

3. நாகைத் துறைமுகத்தில்...

கப்பலில் உயர்வகுப்புப் பிரயாணிகளுக்கு உரிய அறைகளில் எல்லா வசதிகளும் உண்டு. விசாலமான கட்டில், சுத்தமான மெத்தை - தலேயணேகள், செருகு அறைகளுடன் கூடிய நேர்த்தியான மேஜை, அதன்மேல் அழகான பெரிய கண்ணுடி பீரோ, பிரம்பு நாற்காலி,

குழாய் வசதிகளுடன் சுவரிலே பொருத்தப்பட்ட முகம் அலம்பும் கோப்பை, குடி தண்ணீர்ச் செம்புகள், குவளை கள், மின்சார சாதனங்கள், உயிர் காக்கும் ஜாக்கட்டு கள், அவற்றைப் பயன்படுத்தும் முறையை விளக்கும் படம்—இத்தனை வசதிகளும் பொருந்திய அறையிலே ஒரே ஒரு குறைமட்டும் இருந்தது. இந்தக் குறை பிரயாணிகளை மிரட்டியது; அறையை விட்டு வெளியே செல்லும்படி விரட்டியது என்றுகூடச் சொல்லலாம்.

அறையிலே எத்தனை வசதிகள் இருந்தால்தான் என்ன? மெல்லிய பூங்காற்று இல்லையே! எங்களுடைய உடம்பு வெப்பத்தால் வியர்த்தது. நாங்கள் பயணம் செய்த காலம் கடுங்கோடை அல்லவா?

காற்று வசதிக்காகச் சுழலும் மின்விசிறி தவிர, "புளோயர்" என்ற பெயருடைய இரண்டு காற்றுக் குழாய்களும் ஒவ்வொரு அறையிலும் பொருத்தப் பட்டுள்ளன என்பது உண்மைதான்; இயந்திர உதவியால் காற்றைக் குழாய்களின் வழியே ஏவிவிடும் ஏற்பாடு அருமையானதுதான்; ஆனாலும், அறையிலே பொங்கும் வெப்பத்தைத் தணிக்கும் ஆற்றல் செயற்கைக் காற்றுக்கு இல்லையே!

அறைக்குள்ளே உறக்கம் கொண்ட நாங்கள் வெப்பம் தாங்காமல் விழித்தெழுந்தோம். அறையைப் பூட்டிவிட்டு ஒவ்வொருவராகக் கப்பலின் வெளித்தளத் துக்கு வந்தோம்.

களிப்பு மிகுந்த கடலானது தன் அலைக்கரங்களை உயர்த்தி "வருக, வருக!" என்று அழைப்பது போல் மென்மையாக ஆரவாரம் செய்தது. அலைகளோடு கலந்து விளையாடி எங்கள்மீது வீசிய காற்று 'குளுகுளு' என்று வெகு சுகமாக இருந்தது.

'இன்றைக்கு ஏது கடலுக்கு இத்தனை உற்சாகம்?' என்று வானத்தை ஏறிட்டுப்பார்த்தோம். வானவெளியில் மிதந்த கட்டழகு வட்ட நிலாவைக் கண்டுதான் கடல் குதூகலம் அடைந்தது என்பதை உணர்ந்தோம். அன்று சித்திரா பௌர்ணமி. நீல வானிலே நிலவின் கோலமும், அதனை எட்டிப்பிடிக்கத் துடியாய்த் துடித்த கடலின் ஓலமும் எங்கள் இதயத்தைக் கொள்ளைகொண்டன. இயற்கையின் வனப்பை அநுபவித்துக்கொண்டே, வெளித்தளத்தில் போடப்பட்டிருந்த சாய்மான நாற் காலிகளிலே சயனம் கொண்டோம். தூக்கத்திலே அப்படியே சொக்கிப் போனோம்.

அதிகாலையில் நங்கூரம் பாய்ச்சும் சத்தம் கேட்டுக் கண்விழித்தோம். நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டதை உணர்ந்துகொண்டோம்.

சென்னையிலிருந்து நாகைவரை நூற்றைம்பது மைல் களைக் கடந்துவிட்டோம். சிங்கப்பூரை அடைவதற்கு இன்னும் ஆயிரத்து அறுநூறு மைல்களுக்குமேல் செல்ல வேண்டுமே!

பொழுது நன்றாக விடிவதற்குள் காலைக்கடன்களை முடித்துவிட விரும்பினோம்.

குளிக்கும் அறைக்குச் சென்ற திரு. பகவதி, "பிரமாதம்! பிரமாதம்! இரண்டரை அங்குலக் குழாய் வழியே தண்ணீர் அருவி போலக் கொட்டுகிறது!" என்று அளவற்ற ஆனந்தத்துடன் குரல் கொடுத்தார்.

நீர்வளத்தைக் காண்பதற்காக நாங்களும் அறைக் குள் சென்றோம். குழாயிலே பொழிந்த தண்ணீரைக் கையிலே ஏந்தி ஆவலோடு வாயிலே ஊற்றிக்கொண் டார் திரு பகவதி. உடனே அவர் முகத்தை ஒரு மாதிரி யாகச் சுளித்துக்கொண்டார். வாயில் இருந்த நீரைப் 'புளிச்' என்று கீழே கொப்புளித்துவிட்டார்!

கொப்புளிக்காமல் வேறு என்ன செய்வார்? சரியான உப்புத் தண்ணீர்!

"நல்ல தண்ணீர்தான் இவ்வளவு ஜோராக வருகிறது என்றல்லவா எண்ணிவிட்டேன்!..." என்று தம் ஏமாற்றத்தை வெளியிட்டார் திரு. பகவதி.

"சரிதான்! கடலிலிருந்து நேரிடையாகக் குழாய்த் தொடர்பு ஏற்படுத்தி, மோட்டார் மூலம் உப்புத் தண்ணீரை வழங்குகிறார்கள்! ஆசை தீர எவ்வளவு குளித்தாலும் தண்ணீர்ப்பஞ்சமே வராது!" என்று அவரே சமாதானமும் சொல்லிக்கொண்டார்.

கடல் நீரில் எவ்வளவுதான் குளிக்க முடியும்? ஒரு செம்புத் தண்ணீரை ஊற்றிய உடனேயே உடல் 'பிசுபிசு' என்று ஒட்டுகிறதே!

உப்புத்தண்ணீரில் தாராளமாகக் குளித்துவிட்டுப் பின்னர் இரண்டு வாளி நல்ல தண்ணீரில் உடம்பின் பிசுபிசுப்பைப் போக்கிக்கொண்டோம். வாளிகளிலே நல்ல தண்ணீர் அல்லது நல்ல வெந்நீர் பிடித்துத் தருவதற்குப் பணியாட்களும் உள்ளனர். தண்ணீரும் வெந்நீரும் தடையின்றிக் கிடைப்பதற்கேற்ற குழாய் வசதிகளும் கப்பலில் உள்ளன. ஆனால், இவைகளும் சில சமயங்களில் ஒத்துழைக்க மறுப்பதுண்டு.

கதிரவன் உதயமாவதற்கு முன்பே காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டோம். நன்றாகப் பசியெடுத்தது. ஆயினும், முதல் பந்தி எட்டரை மணிக்குத்தான் ஆரம்பமாகும் என்பதை அறிந்து பொறுத்துக்கொண்டிருந்தோம்.

குறிப்பிட்ட நேரத்தில் மணியடித்து உணவு தரும் முறை கப்பலில் மிகக் கண்டிப்பாக அமுல் செய்யப் பட்டு வருகிறது.

காலை ஏழரை முதல் எட்டு மணிவரை குழந்தைகள் பந்தி. எட்டரை மணி முதல் ஒன்பதுவரை பெரியவர்களின்

முதல் பந்தி! ஒன்பது முதல் ஒன்பதரை வரை இரண்டாவது பந்தி.

மத்தியானம் பதினொன்றே முக்கால் முதல் பன்னிரண்டேகால் வரை குழந்தைகள் பந்தி; பன்னிரண்டரை முதல் ஒன்று வரை முதல் பந்தி; ஒன்றேகால் முதல் ஒன்றேமுக்கால் வரை இரண்டாவது பந்தி.

பிற்பகல் நாலு மணி முதல் நாலரை வரை தேநீர்—எல்லோருக்கும் ஒரே பந்தி.

இரவு ஐந்தேமுக்கால் முதல் ஆறேகால் மணிவரை குழந்தைகள் பந்தி; ஆறரை முதல் ஏழு வரை முதல் பந்தி; ஏழேகால் முதல் ஏழேமுக்கால் வரை இரண்டாவது பந்தி.

இந்தப் பந்தியில் உண்ண விரும்புகிறோம் என்பதை முன்னதாகவே அவர்களுக்கு அறிவித்துவிட வேண்டும். முதல் பந்திக்குச் சிவப்பு அட்டையும், இரண்டாவது பந்திக்கு நீல அட்டையும் அடையாளச் சின்னமாகக் கொடுத்துவிடுவார்கள்.

இந்தப் பந்தி முறையிலே எங்களுக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது, காலை, மத்தியானம் இரண்டு நேரங்களுக்கும் முதல் பந்தி வசதியாகத் தோன்றியது. ஆனால், இரவு உணவுக்கு முதல் பந்தி ஏற்றதாக இல்லை. மாலை ஆறரை மணிக்கே எப்படி இரவு உணவை முடித்துக் கொள்வதென்று தயங்கினோம். ஆயினும், ஏதாவது ஒரு முறையைக் கண்டிப்பாகப் பின்பற்றித்தானே ஆக வேண்டும்? இரவு உணவை இரண்டாம் பந்தியில் உண்ண வேண்டும் என்பதற்காக எங்களில் சிலர் காலை – மத்தியான உணவுக்கும் இரண்டாம் பந்தியையே தேர்ந்தெடுத்து நீல அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இப்படி நீல அட்டை பெற்றவர்கள் காலை உணவுக்கு ஒன்பது மணி வரையில் காத்திருக்க வேண்டியதாகவும் இருந்தது.

காலை உணவு கிடைப்பதற்கு வெகுநேரம் ஆகும் என்று தெரிந்தபடியால் நாங்கள் சட்டையணிந்து கொண்டு, கப்பலின் வெளித்தளத்துக்கு வந்தோம். சட்டையணிந்துகொண்டு வந்தோம் என்று அழுத்த மாகச் சொல்வதிலும் ஒரு கருத்து இருக்கிறது. ஆமாம்: சட்டையணியாமல் வெறும் உடம்போடு தளத்திலே நிற்பது கூடாது என்பது கப்பலில் உள்ள கட்டுப்பாடு.

தளத்தில் நின்ற பிரயாணிகளுக்கு நாகப்பட்டினக் கடற்கரையும், சற்றுத் தொலைவிலே நாகூரின் காட்சியும் நன்ருகத் தெரிந்தன.

தாய்க்கோழியைத் தேடி ஓடிவரும் குஞ்சுகளைப் போலப் பாய்மரப் படகுகள் பல, கரையிலிருந்து கப்பலை நோக்கி விரைந்து வரும் வேகத்தைக் கண்டோம். "வங்கக்கடலா? அல்லது மதுராந்தகம் ஏரியா?" என்று ஐயுறும்வண்ணம் கடலிலே மெல்லலைகள் நெளிந்து கொண்டிருந்தன. ஆதலால், படகுகள் அசைவுத் தொல்லை யில்லாமல் கம்பீரமாக மிதந்து வந்தன.

தலைவனைக் கண்டவுடன் மேல்வேட்டியைச் சுருட்டி அரையிலே கட்டிக்கொண்டு மரியாதை செய்யும் உத்தமத் தொண்டர்களைப் போல், கப்பலை நெருங்கிய வுடன் படகுகள் எல்லாம் பாய்களைச் சுருக்கிக்கொண்டு பயபக்தியோடு காணப்பட்டன!

படகுகளிலே பொறிக்கப்பட்டிருந்த பெயர்களும், தமிழ் எண்களும், கடல் வாணிபத்தின் தொன்மையை அறிவிப்பன போல் உணர்ச்சியூட்டின. "வீர குலோத் துங்கன்", "வீர சக்கம்மாள்", "வீர பாண்டியன்", "கௌதமன்" முதலிய பெயர்களைத் தாங்கி நின்ற படகுகள், "சிங்களம் புட்பகம் சாவகம் ஆகிய தீவு பலவினும் சென்றேறிய" பழங்காலத்து வீர மரக்கலங் களையே நினைவூட்டின.

ஏற்றுமதிச் சரக்குகளை மட்டுமல்லாமல் நூற்றுக் கணக்கான பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டு வந்து சேர்ந்தன, அந்தப் படகுகள்.

பிரயாணிகள் படகுகளிலிருந்து கப்பலில் ஏறினார்கள் என்று சொல்வது பொருந்தாது. கப்பலில் தூக்கி வீசப்பட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

படகுகள் கப்பலை நெருங்கியவுடன் தனித்தனியே மூன்று படிகள் கப்பலில் தொங்கவிடப்பட்டன. இந்த ஏணிகளைப் பற்றி ஒரு வார்த்தை. ஒரு படிக்கும் இன்னொரு படிக்கும் இடைவெளி மூன்று அடி உயரம் இருக்கும்!

படிகளின் ஓரமாகப் படகுகள் தத்தளித்துக்கொண்டிருந்தன. அவற்றிலிருந்து பிரயாணிகள் நெருக்கியடித்துக்கொண்டு, உயரமான படிகளிலே தாவியும், கயிறுகளைப் பிடித்துக்கொண்டு தொங்கியும், எப்படியோ கப்பலுக்குள் வந்து விழுந்தார்கள்! இப்படித் தொத்திக்கொண்டு ஏறுவதில் குழந்தைகளும் பெண்களும் எவ்வளவு தொல்லையடைந்தார்கள் என்பதை வருணிக்கவே முடியாது.

உயரமான படிகளைத் தொங்கவிட்டுப் பிரயாணிகளின் உள்ளமும் உடலும் ஊசலாட விடாமல், நல்ல பாதுகாப்போடு கூடிய ஏணியைச் செய்து பொருத்தினால் எவ்வளவு உதவியாக இருக்கும் என்று எங்கள் உள்ளம் எண்ணி வேதனைப்பட்டது.

இலட்சக்கணக்கில் பணத்தை வாரி இறைத்துக் கப்பலைக் கட்டியவர்கள் பிரயாணிகளின் வசதிக்காக ஒரு சிறு ஏணி அமைப்பதிலா சிக்கனத்தைக் காட்ட வேண்டும்?

ஏற்றி இறக்கும் வசதிகளோடு கூடிய பெரிய ஏணி ஒன்று கப்பலிலிருப்பதைக் கண்டோம்.

"இந்த ஏணியைப் பிரயாணிகளுக்காக இறக்கி விட்டால் என்ன?" என்று கப்பல் அதிகாரி ஒருவரைக் கேட்டோம்.

''இந்த ஏணியில் நாலு – நாலு பேர்களாகத்தான் ஏற வேண்டும்; அளவுக்கு மீறி ஆட்கள் ஏறினுல் ஏணி தாங்காது; நாலு - நாலு பேர்களாக ஏறி வரக்கூடிய பொறுமை பிரயாணிகளுக்கு இருப்பதில்லே. நூற்றுக் கணக்கான பிரயாணிகள் ஒரே சமயத்தில் நெருக்கிக் கொண்டு ஏற முயல்வார்கள்! ஆகையினுல் தான், இந்த ஏணியைப் பொதுவாக நாங்கள் பயன்படுத்துவ தில்லே!" என்று விளக்கம் தந்தார், அந்த அதிகாரி. தொங்கும் படிகளில் பிரயாணிகள் தொத்தி ஏறிய வேகத்தைப் பார்த்த போது அதிகாரி சொன்ன காரணமும் சரியானதாகத்தான் தோன்றியது.

அதிகாலேயிலிருந்து மாலே ஐந்து மணிவரை, அதாவது, சுமார் பன்னிரண்டு மணி நேரம் கப்பல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் நிற்கும் என்பது தெரிந்தது. அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்த படகு களில் நாகப்பட்டினத்துக்குப் போய்விட்டு வரலாமா என்ற எண்ணங்கூட எழுந்தது. உரிய நேரத்தில் கப்பலுக்குத் திரும்ப முடியாமல் போய்விடுமோ என்ற அச்சமே எங்களுடைய ஆவலுக்குத் தடையாக நின்றது

ஆயினும், நாகையிலிருந்து நமது நாட்டின் செய்தித் தாள்களே வரவழைத்துப்படிக்கும் வாய்ப்புக் கிடைத்தமை யால் மன ஆறுதல் அடைந்தோம். நாகையைக் கடந்து விட்டால் பினங்குத் துறைமுகம் செல்லும்வரை சுமார் ஐந்து நாட்களுக்கு எந்த விதமான செய்திகளேயும் படித்து அறிந்துகொள்ள இயலாது. எனவே, வெகு ஆவலுடன் செய்தித்தாள்களே ஒரு வரி விடாமல் படித்து முடித்தோம்.

குடும்பத்திலைருக்கும் கலை நண்பர்களுக்கும் ஆர்வம் ததும்பக் கடிதங்கள் எழுதி நாகப்பட்டினத்தில் தபாலில் சேர்க்குமாறு அன்பர்களிடம் கொடுத்து அனுப்பினேம். இந்தக் கடிதங்கள் நண்பர்களுக்கு எவ்வளவு திருப்தியாகவும் ஆறுதலாகவும் இருக்கும் என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்தோம்,

ஒலிபெருக்கி மூலம் கப்பல் முழுவதும் அஞ்சல் செய்யப்பட்ட திருச்சி வானெலி நிகழ்ச்சிகள் மிகுந்த உற்சாகம் அளித்தன. இதனுல், ''எல்லையற்ற நீலக் கடலில் மிதக்கிருேம்!'' என்ற எண்ணமே இல்லாமல் ஏதோ ஒரு தமிழ் நகரத்திலே குடியிருப்பது போன்ற உணர்ச்சியே மேலோங்கி நின்றது.

எங்கள் சாலைப்பந்திக்குரிய மணியோசை கேட்டது. காலந்தவறிச் சென்ருல் உணவு கிடைப்பது அரிது என்பதை முதல் நாளே அனுபவித்து உணர்ந்த நாங்கள் ஆவலோடு விரைவாக உணவு மண்டபத்துக்குச் சென்றேம்.

ஒவ்வொரு மேசையிலும் உணவுப்பட்டியல் வைத்திருந்தார்கள். சைவ உணவு, அசைவ உணவு— இரண்டு வகையும் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. குழுவினரில் எங்கள் இருவரையும் சேர்த்துப் பன்னிருவர் சைவ உணவு உண்பவர்கள். இயன்ற வரையில் புலால் உண்போரும் ஏனையோரும் தனித்தனியாக அமர்ந்து உண்பதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து தந்தார்கள்.

இருவகையான உணவுகளையும் தனித்தனியே சமைத்து வழங்கும் சிப்பந்திகள் இருந்தார்கள். சகித்துக் கொள்ளும் முறையில் நாவுக்குச் சுவையான சைவ உணவு கிடைத்ததுபற்றி நாங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தோம்.

4. பொழுது போனது எப்படியோ?

நெடுங்கடலில் கப்பல் நிம்மதியாகச் சென்று கொண்டிருக்கிறது. கடலுக்கு அடியிலிருந்து பயங்கர மான உடலமைந்த விலங்கு ஒன்று அட்டகாசத்தோடு வருகிறது. கப்பலைத் தாக்குகிறது. கப்பல் நாயகரும் அதிகாரிகளும் பரபரப்படைகின்றனர். அரக்க குணம் படைத்த அந்த விலங்கின் அட்டூழியத்தால் மரக்கலம் கவிழ்ந்துவிடுகிறது! உலகப்பிரளயம் வந்தது போலே உயிருக்காகப் போராடிய பிரயாணிகள் ஏராளம்! கப்பல் அதிகாரிகள் அந்தக் கடல் விலங்குடன் துணிவோடு போராடுகின்றனர். கட்டுக்கடங்காத ஆவேசத்துடன் அந்த விலங்கு கரையிலுள்ள நகரத்தின் மீதும் மோதுகிறது. பாலங்கள் நொறுங்குகின்றன! அதன் வாலினால் நசுக்கப்பட்டுக் கட்டடங்கள் தவிடுபொடி யாகின்றன! கடைசியாகப் பற்பல உபாயங்களைக் கையாண்டு அந்தக் கடல் விலங்கைக் கொன்று வீழ்த்து கின்றனர் அதிகாரிகள்!...

அன்பர்களே! மருட்சியடைய வேண்டாம்! இது நாங்கள் சென்ற கப்பலுக்கு நேர்ந்த விபத்தல்ல என்பதைப் புரிந்துகொண்டிருப்பீர்கள்! வேறு எந்தக் கப்பலுக்கும் இந்த விபத்து உண்மையாக நடைபெற வில்லை! எங்களில் யாரும் இது போன்ற கனவையும் காணவில்லை! "பின்னே என்ன?" என்று கேட்கிறீர் களா?

கப்பலிலே எங்களுக்குக் காட்டப்பட்ட திரைப்படத் தின் கதைச்சுருக்கமே மேலே தரப்பட்டுள்ளது. "அது கடலின் அடியிலிருந்து வந்தது!" என்பதே அந்த ஆங்கிலப்படத்தின் பெயர்.

இந்தப்படத்தைப் பார்த்ததும் எங்களுக்கும் மருட்சி ஏற்படத்தான் செய்தது. கப்பலுக்கு எந்த நேரத்தில் ஆபத்து வரும் என்று சொல்ல முடியாது என்பதைக் காட்டுவதற்காகவே இந்தப் படத்தைக் கற்பனை செய்தார்கள் போலிருக்கிறது! ஆபத்து நேரங்களில் பிரயாணிகள் அத்தனை பேரையும் இயன்றவரையில் பத்திரமாக வெளியேற்றிய பிறகு கடைசியாகவே கப்பல் நாயகர் தப்பிக்க முயற்சி செய்வார் என்பதையும் இந்தப் படம் எடுத்துக் காட்டியது. எனினும், நடுக் கடலில் செல்கிறோமே என்ற நடுக்கம் புதைந்துள்ள நெஞ்சத்தில் சஞ்சலத்தை உண்டாக்கும் இத்தகைய படங்களைப் பிரயாணிகளுக்குக் காட்டுவது அவ்வளவு சரியானதென்று சொல்ல முடியாதல்லவா ?

ஆயினும், கப்பலிலே திரையிடப்பட்ட "தஞ்சாவூர்" என்னும் செய்திப்படமும் வேறு சில படங்களும் பிரயாணிகளுக்கு உற்சாகம் ஊட்டுவனவாக இருந்தன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

நாகப்பட்டினத்தைவிட்டுப் புறப்பட்ட பின் பினங்குத் துறைமுகத்தைக் காணும் வரையிலும் சுமார் நாலரை நாட்கள் (ஏப்ரல் பதினைந்தாம் தேதி இரவு முதல் பத்தொன்பதாம் தேதி இரவு முடிய ஐந்து இரவுகளும் நான்கு பகற்பொழுதும்) கப்பலிலே, வெளியுலகத் தொடர்பு எதுவும் இல்லாமலே இருக்க வேண்டியதாயிற்று.

மேலே நீலவானம்; சுற்றிலும் அலைகடல்; அலையைக் கிழித்துக்கொண்டு முன்னேறிய கப்பலின் நிலையை என்னவென்று சொல்வது? மிதந்து ஊர்ந்த தீவு என்பதா? நகர்ந்து சென்ற நகரம் என்பதா?

அகண்ட வானத்தை விதானமாகவும், அலைகடலைத் "துள்ளு மேடை"யாகவும் கொண்ட அரங்கத்திலே கப்பல் என்னும் கட்டழகி களிநடம் புரிந்து சென்றாள்

என்று கலையழகோடு சொல்வதா? எப்படிப் புகழ்ந்தாலும், கற்பனை புரிந்தாலும் பொருந்துவதாக இருந்தது கப்பலின் போக்கு.

சுற்றிலும் கரையையே காணுமல் இந்த நாலரை நாட்களும் எப்படிப் பொழுது போயிற்று என்பதை நினைக்க நினைக்க விந்தையாகவே இருக்கிறது.

கடிதப் போக்குவரத்துக்கு வழியில்லை; அன்றாடச் செய்திகளைத் தரும் பத்திரிகைகளைப் பெற முடியாது; வானொலி நிகழ்ச்சிகளும் சரியாக ஒலிபரப்ப முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, ஏதோ கனவு உலகத்தில் இருப்பது போன்றே தோன்றியது. மனமகிழ்ச்சி ஊட்டுவதற்காக இசைத்தட்டுகள் மட்டும் அடிக்கடி ஒலிபரப்பப் பட்டன.

உண்ணும் நேரமும் உறங்கும் நேரமும் தவிர மற்ற வேளைகளில் உல்லாசமாக அமர்ந்து மகிழ்வதற்கு வசதியான பொழுதுபோக்கு மண்டபம் கப்பலில் அளவற்ற ஆறுதலைத் தந்தது. புத்தக அலமாரியும், பியானோ இசைக்கருவியும், சுந்தரமான 'சோபா'க்களும், கலையழகு மிளிரும் 'பார்வதி'யின் சிலையொன்றும் பொழுதுபோக்கு மண்டபத்துக்குப் பொலிவு தந்தன. கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கப் பணியாள் ஒருவர் மண்டபத்தில் எப்போதும் ஆயத்தமாக இருந்தார். சீட்டாட்டம், சதுரங்கம் முதலிய விளையாட்டுக்கள் சுறுசுறுப்பாக நடைபெற்று வந்தன. உயர்வகுப்புப் பிரயாணிகளுக்காகச் சினிமாப்படங்களும் கலை நிகழ்ச்சிகளும் இந்த மண்டபத்திலேதான் நிகழ்ந்தன.

எங்களுடன் கப்பலில் கல்லூரி மாணவ மாணவிகள் சிலர் பிரயாணம் செய்தனர். மலேயாவைத் தாயகமாகக் கொண்ட இவர்கள் இந்தியாவில் உள்ள கல்லூரிகளில் படிப்பவர்கள் என்று தெரிந்தது. கோடை விடுமுறைக்காகத் தாயகம் திரும்பிக்கொண்டிருந்த இவர்களுக்கு

எந்த நேரத்தில் கும்மாளம் பிறக்கும் என்று சொல்ல முடியாமல் இருந்தது. அடிக்கடி கப்பலின் வெளித் தாழ்வாரத்தில் கூடிக்கொண்டு இவர்கள் பாட்டுப் பாடியும் சிட்டியடித்தும் ஆரவாரம் செய்தனர்; வெறும் ஆரவாரத்தோடு நில்லாமல் 'ரோங்கிங' என்று சொல்லப்படும் மலேயா நடனமும் ஆடிப்பாடினர். இந்த ஆட்டங்களைக் காணப் பெருங்கூட்டம் கூடியது. இந்த மாணவர்கள் தாம் மட்டும் ஆடிப் பாடியது போதாதென்று வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற எங்கள் நகைச்சுவை நடிகர் 'குண்டு' கருப்பையாவையும் தம்முடன் இழுத்து ஆடும்படி தூண்டினர். 'ஆட்டி வைத்தால் யாரொருவர் ஆடாதாரே!' திரு. கருப்பையாவும் சற்றும் சளைக்காமல் கப்பல் அதிரும்படியாக "டப்பாங்குத்து" ஆட்டம் போட்டு அனைவருக்கும் உளளக் கிளர்ச்சி ஊட்டினர்.

எந்த விதமான கேளிக்கையிலும் ஈடுபாடில்லாத சிலர், அயர்வில்லாமல் கோயில் பிராகாரத்தைச் சுற்றும் பக்தர்களைப் போல வெளித் தாழ்வாரத்தில் வேகமாகச் சுற்றிச் சுற்றித் தேகப்பயிற்சி செய்தனர்.

கப்பல் நாயகர் திரு. கப்ராஜி எவரையும் எளிதில் கவரும் இதயம் படைத்தவர். சிரித்த முகத்துடன் எல்லோருடனும் பழகினர். இவர் பார்ஸீ வகுப்பைச் சேர்ந்தவர்; பூனு நகரத்தில் பிறந்தவர். பரம்பரையாகச் செல்வாக்குள்ள குடும்பத்திலே தோன்றியவர்.

திரு. கப்ராஜி கலையார்வம் மிகுந்தவர். எங்கள் கலைக்குழுவைச் சேர்ந்த நடனச்சிறுமி சந்தோஷ், பாடகர் டி. பி. சங்கர நாராயணன் ஆகியோருடைய கலை நிகழ்ச்சிகளைக் கப்பலிலே நடத்துமாறு செய்து, கண்டு மகிழ்ந்து பாராட்டினர். இது போன்ற காரியங்களில் உற்சாகமாக முன்னின்று கப்பல் நாயகருக்கு உதவியாக ஏற்பாடுகளைக் கவனித்தவர், பொதுநல அதிகாரியான

திரு. **கே. எஸ். இராமநாதன்.** பிரயாணிகளின் உற்ற நண்பர் இவர்.

கப்பல் நாயகரான திரு. கப்ராஜி ஆர்வத்தோடு தமிழ்மொழியைக் கற்கவும் முயற்சி செய்தாராம். "முதிய புலவர் ஒருவரை என்னுடன் கப்பலிலே கூட்டி வந்து அவரிடம் தமிழைக் கற்க முற்பட்டேன். ஆயினும், எனக்கு வெற்றி கிடைக்கவில்லை !" என்றார் அவர். டாக்டர் கால்டுவெல். ஜி. யு. போப், வீரமாமுனிவர் போன்ற ஆங்கிலேய அறிஞர்கள் தமிழிலே புலமை பெற்ற வரலாற்றை அவருக்கு விளக்கி ஊக்கம் அளித்தோம்.

இடையில் ஒருநாள் கப்பலின் மேல் தட்டுக்குச் சென்று 'ஸ்டீயரிங்', 'புரோபெல்லர்' முதலான இயக்கும் கருவிகளைப் பார்வையிட்டோம். இக்கருவிகளுக்கும் கப்பலின் தளத்தில் இருந்த எஞ்சின்களுக்கும் உள்ள தொடர்பை உணர்ந்தோம்.

கப்பல் செல்லும் பாதையில் தடையான பொருள் ஏதேனும் தென்பட்டால், வெகு தொலைவில் இருக்கும் போதே அதனை நிழலாட்டம் போல் காட்டக்கூடிய விந்தையான இயந்திரத்தையும் கண்டு வியந்தோம்.

கப்பல் இயங்குவதற்கு உதவியாக ஆறு எஞ்சின்கள் அடித்தட்டில் உள்ளன. எஞ்சின்கள் உள்ள பகுதிகள் கடல் மட்டத்துக்கு முப்பது அடிக்குக் கீழே இருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு இரும்பு ஏணிகள் பொருத்தப்பட்டுள்ளன.

எஞ்சின்களைப் பார்க்கப் புறப்பட்ட நாங்கள் இரும்பு ஏணியின் முதற்படியிலே அடியெடுத்து வைத்தவுடனேயே திடுக்கிட்டுவிட்டோம். ஏணியின் சூடு தாங்க முடியவில்லை. எனவே, இறங்கத் துணிவில்லாமல் திரும்பிவிடலாம் என்றுகூட எண்ணினோம்.

"இந்தச் சூடு தாங்கமாட்டாமல் தவிக்கிறீர்களே! எஞ்ஜின்களிலேயே வேலை செய்யும் தொழில் நிபுணர்களை எண்ணிப் பாருங்கள்!" என்றார் எங்களை அழைத்துச் சென்ற நண்பர், திரு கே. எஸ். இராமநாதன்.

தகிக்கும் அறைகளுக்குள்ளேயும் தயங்காமல் பாடு படும் தொழில் நிபுணர்களின் சக்தி எங்களுக்கும் துணிவைத் தந்தது.

கையிலே துணியைச் சுருட்டி வைத்துக்கொண்டோம். மெதுவாகப் படிகளைப் பிடித்துக் கொண்டு இறங்கினோம். வெப்பம் மேனியைத் தாக்கியது; விசைப் பொறிகள் இயங்கும் பேரொலி செவிகளைத் துளைத்தது. வெப் பத்துக்கு மத்தியில் ஓரிடத்தில் மேலேயிருந்து, பெரிய குழாய் வழியே "குபு குபு" என்று காற்று பொழியும்படி செய்துள்ளதைக் கண்டோம். அருவி போல் பொழிந்த அந்தக் காற்றின் வேகம் வெப்பத்தின் கொடுமையைத் தணித்தது.

நீராவிக் கொப்பரைக்கு உதவியான எஞ்சின் களோடு காணப்பட்ட இணைப்புப் பொறிகளும், குழாய் களும், சக்கரங்களும் எங்களுக்கு அதிவியப்பை அளித்தன. ஒவ்வொன்றையும் கண்டு வியந்தோமே தவிர, அவை எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய சக்தியோ பொறுமையோ எங்களுக்கு இல்லை.

ஏதோ எஞ்சின்களையும் பார்த்துவிட்டோம் என்ற மன அமைதியோடு திரும்பினோம். இத்தகைய மகத்தான இயந்திர அமைப்பிலே ஒரு திருகு ஆணிகூடப் பிசகாமல் கவனித்துக்கொண்டு வரும் தொழில் நிபுணர்களின் பணியை மனமார வாழ்த்தினோம்.

எங்களில் சிலர், டெக் பிரயாணிகளும் 'பங்க்' பிரயாணிகளும் தங்கிய அடித்தட்டுக்கு அடிக்கடி சென்று அவர்களோடு அன்பாகப் பழகுவது உண்டு. 'டெக்

பிரயாணிகளுக்குக் குறிப்பிட்ட இடம் ஒதுக்குவது கிடையாது. அவரவர் சாமர்த்தியத்துக்குத் தக்கவாறு தரையிலே இடம் பிடித்துக்கொள்ள வேண்டும்.

ஏராளமான மூட்டைமுடிச்சுகளுடன் 'கால்மாடு—தலைமாடு' என்று பார்க்காமல் நெருக்கிக்கொண்டு படுத்து உறங்கும் 'டெக்' பிரயாணிகளைக் காணும் போது மிகவும் இரங்கத்தக்கதாகவே இருக்கும்.

'பங்க்' பிரயாணிகளுக்கு 'டெக்' பிரயாணிகளைவிடக் கொஞ்சம் கட்டணம் அதிகம். எனவே, இவர்களுக்குக் கொஞ்சம் வசதியும் அதிகம். ஒவ்வொரு 'பங்க்' பிரயாணிக்கும் தனியே இடம் உண்டு. இரண்டு தட்டுகளுடன் அலமாரி போல் உள்ள கட்டிலையே 'பங்க் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கட்டிலில் ஒவ்வொரு பிரயாணிக்கும் ஒரு தட்டு ஒதுக்கப்பட்டிருக்கும்.

இந்தக் கீழ் வகுப்புப் பிரயாணிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் எப்போதும் வெங்காய வாடை வீசிக் கொண்டிருக்கும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் வெங்காய மூட்டைகள் கப்பலின் பாதாள அறைகளிலே ஏற்றப்படுவது வழக்கம். இத்தகைய சரக்குகள் அடுக்கும் இடத்தை அடுத்தாற்போல் மூக்கைத் துளைக்கும் முடை நாற்றம் தவிர்க்க முடியாத தொல்லையாக இருக்கும். போதாக்குறைக்குப் பிரயாணிகளில் பலர் ஊதித் தள்ளும் புகை வேறு 'டெக்'கிலே கப்பிக் கொண்டு மூச்சுத் திணறலை உண்டாக்கும். சுத்தத்துக்குப் பகைவர்களாக இருக்கும் பிரயாணிகள் எத்தனையோ பேர்கள் உண்டு. தந்திரமான பிரயாணிகள் சிலர் இந்தத் தொந்தரவெல்லாம் வேண்டாமென்று மிகத் துணிவோடு உயர்வகுப்புப் பிரயாணிகள் தங்கும் இடங்களிலேயே பொழுதுபோக்க நாகரிகமாக வந்துவிடுவார்கள்.

நூற்றைம்பது உயர்வகுப்புப் பிரயாணிகளுக்கும், இருநூற்று முப்பத்தொன்று 'பங்க்' பிரயாணிகளுக்கும், எழுநூற்று முப்பத்தாறு 'டெக்' பிரயாணிகளுக்கும் "சென்னை ராஜ்ய"க் கப்பலில் இடவசதி உண்டு.

கப்பல் அதிகாரிகளின் எண்ணிக்கை இருபத்தைந்து. ஏனைய சிப்பந்திகளின் எண்ணிக்கை நூற்றுமுப்பது.

ஆகவே, கப்பலில் செல்லும் மக்களின் மொத்த எண்ணிக்கை 1,272. கப்பல் கொள்ளக்கூடிய பாரத்தின் மொத்த எடை சுமார் 8,580 டன்கள் என்று தெரிகிறது.

அடித்தளத்தில் எவ்வளவுக்கெவ்வளவு சரக்குகளின் பளு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு கப்பலின் ஆட்டம் குறைவாக இருக்கும்.

"இப்போது நாம் எங்கே இருக்கிறோம்?" என்ற கேள்வி ஒவ்வொரு பிரயாணியின் உள்ளத்திலும் உதிப்பது இயல்புதானே? இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது போல் ஒவ்வொரு நாளும் அறிவிப்புப் பலகைகளில் ஒரு முக்கியமான செய்தியை அதிகாரிகள் வெளியிட்டு வந்தார்கள். கப்பலின் வேகம், அது செல்லும் திசை, பயணம் செய்த தூரம், இன்னும் கடந்து செல்ல வேண்டிய தூரம் முதலிய விவரங்கள் அந்த அறிவிப்பில் அடங்கியிருந்தன. இந்த அறிவிப்பு பிரயாணிகளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் அதிகாலையிலிருந்து அந்திப் பொழுது வரையிலும் கதிரவன் ஒளி வானத்திலும் கடலிலும் பலவித நிற பேதங்களை உண்டாக்கி இயற்கையின் விசித்திரங்களைக் காட்டிக்கொண்டிருந்தது.

காட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டுமல்லாமல் கப்பல் கடிகாரத்திலும் மாற்றங்கள் செய்ய வேண்டியதாயிற்று. நாகையிலிருந்து சுமார் முந்நூறு மைல் தூரம் பயணம் செய்த பின்னர், ஏப்ரல் பதினாறும் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு, கடிகாரத்தில் அரை மணி

நேரம் முன்னே தள்ளி வைக்கப்பட்டது. அதாவது, இந்திய நேரம் பன்னிரண்டு மணி என்றால், அந்த நேரத்தில் கப்பலில் மணி பன்னிரண்டரை.

இவ்வாறு 24 மணி நேரத்துக்கு ஒரு தடவை கப்பலில் நேரம் அரைமணி வீதம் முன்னேக்கிச் சென்றதால் பினங்கு செல்வதற்கு முன்பாகவே கப்பல் கடிகாரம் இந்திய நேரத்தைவிட ஒன்றரை மணி நேரம் முன்னே தள்ளி வைக்கப்பட்டது. அதாவது, இந்தியாவில் நாலரை மணியென்றால் கப்பல் கடிகாரத்தில் மணி ஆறு. சிங்கப்பூர் செல்வதற்குள் இந்தக் "கால வித்தியாசம்" இன்னும் அரை மணி கூடுதலாகும் என்றும் தெரிந்து கொண்டோம்.

சென்னையில் கப்பல் புறப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாவது நாள் (ஏப்ரல் பதினெட்டாம் தேதி) காலையில் நிகோபார் தீவுகள் தென்பட்டன. பகல் 11 மணிக்குக் கப்பலுக்குச் சற்றுத் தொலைவில் வெள்ளி ஈட்டிகள் துள்ளி விழுவது போன்ற காட்சி தெரிந்தது. ஆவலோடு தொலை நோக்கி மூலம் உற்றுப் பார்த்தோம். ஏராளமான சுரு மீன்கள் கூட்டங்கூட்டமாகப் படையெடுத்து அணி வகுத்துத் துள்ளித் துள்ளி ஆட்டம் போட்டு வந்த அழகுக் காட்சி மிகுந்த உற்சாகமூட்டியது.

அன்று மாலை ஆறு மணியளவில் தொலைவில் நிலப் பகுதி தென்பட்டது. 'அதுதான் சுமத்ரா தீவு' என்று விவரமறிந்த பிரயாணி ஒருவர் எங்களுக்குச் சுட்டிக் காட்டினர்.

மண்ணின் சுவை கண்டு அதை விழுங்கி ஏப்பமிடும் சக்தி கடலுக்கு நெடுங்காலமாகவே இருந்து வருகிறது என்று இலக்கியங்கள் பேசுகின்றன அல்லவா? குமரி முனைக்குத் தெற்கே லெமூரியா என்னும் கண்டம் இருந்ததாகவும், அதன் நிலப்பரப்பையெல்லாம் முதல் ஊழியின்

இறுதியில் கடலானது பொங்கி எழுந்து தன் அடி வயிற்றிலே அடக்கிக்கொண்டதாகவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனரே ! அந்த லெமூரியாக் கண்டத்தில் கடலில் மூழ்காமலிருக்கும் பகுதிகள்தாம் நக்காவரம், சாவகம் போன்ற தீவுக்கூட்டங்களாக இருக்குமோ என்றெல்லாம் இலக்கியச் சிந்தனைகள் எங்கள் உள்ளத்திலே எழுந்தன.

மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்குக் 'குருவி மலை' என்று சொல்லப்பட்ட நிலப்பகுதியைக் கண்டோம். அந்த மலை வெறும் பாறைதான் என்றும், மக்கள் வாசம் செய்வதில்லையென்றும் சிலர் சொன்னார்கள். குருவி மலையில் உலகின் பல பாகங்களிலுமிருந்து பல்வேறு வகையான பறவைகள் வந்து தங்குவதுண்டாம். குருவி மலைக்கும் பினாங்குத் துறைமுகத்துக்கும் இடையில் எழுபத்தெட்டு மைல் தூரமே உள்ளதென்றும் தெரிந்து கொண்டோம்.

இரவு 6-15 மணிக்குப் பினாங்கு நன்றாகத் தெரிந்தது. துறைமுகத்தின் கரையைக் கண்டுவிட்டோம் என்று கரை காணாத மகிழ்ச்சிக் கடலில் மிதந்தோம்.

5. மலைநாட்டின் தலைவாசல்

பினாங்குத் துறைமுகத்தின் கரை தெரிந்துவிட்டது ; இன்னும் சற்று நேரத்தில் மலைநாட்டின் தலைவாசலில் அடியெடுத்து வைக்கப்போகிறோம் என்று எங்களுக்கு எவ்வளவோ குதூகலமாக இருந்தது. மலேயாவை 'மலை நாடு' என்றுதான் பழகுதமிழில் அழகாக அழைக்கின்றனர், அங்கு வாழும் தமிழ்ப்பெருமக்கள். மலை

வளமும் கனி வளமும் செறிந்த மலேயாவுக்கு இந்தப் பெயர் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!

கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் கப்பல் நிறுத்தப்பட்டது. கரை என்னும் காதலியை அணையச் செல்லும் கப்பல் என்னும் அருமை மாப்பிள்ளையை எதிர் கொண்டு அழைக்க வரும் மாமனுரைப் போல, மாலை ஆறரை மணிக்கு ஒரு விசைப்படகிலே வந்து சேர்ந்தார் 'பைலட்' ஒருவர்.

கப்பலின் பொறுப்பைக் காப்டனிடமிருந்து பெற்றுக் கொண்டார் பைலட். பினுங்குத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லும்வரை கப்பல் இந்தப் 'பைலட்'டின் பொறுப்பிலேதான் இருக்கும் என்றும் தெரிய வந்தது.

பைலட் வந்து வெகு நேரம் ஆகியும் கப்பல் நின்ற இடத்திலிருந்து புறப்படவில்லை. இது கப்பலிலிருந்த பிரயாணிகளின் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது.

"கைகாட்டி இறங்கவில்லையா? துறைமுகத்தில் கப்பல் நிற்பதற்கு உரிய இடம் காலியாக இல்லையா?" என்றெல்லாம் ஐய வினுக்கள் பிரயாணிகளின் உள்ளத்தில் எழுந்தன. பின்னர் வந்த செய்தி எல்லாருக்கும் ஏமாற்றத்தைத் தந்தது. கப்பல் மறுநாள் காலையிலே தான் துறைமுகத்தை அணையும் என்பதுதான் அந்தச் செய்தி.

கரை தெரிந்த பிறகும் அதைப் பாாத்துக்கொண்டே ஓர் இரவு முழுவதும் கப்பலிலே அடைபட்டுக் கிடப்பதா? சலிப்பிலே தோன்றிய இந்தக் கேள்வியினுல் ஐந்து நாட்கள் கப்பல் பயணம் செய்த அலுப்பைவிட அதிக மான பாரம் எங்கள் நெஞ்சத்தை அழுத்தியது.

'பொறுத்தது பொறுத்தீர்! பொழுது விடியும்வரை பொறுக்கக் கூடாதா?' என்று எங்கள் பொறுமை யின்மையைக் கேலி செய்வது போல் காரிருளைக்

கிழித்துக்கொண்டு கண் சிமிட்டியது மின்னல்! கை கொட்டிச் சிரிப்பது போல் முழங்கியது இடியோசை! தூரத்தில் தீவுக்குள் மழை பொழிவதை உணர்த்தியது ஈர வாடை!

இருளுக்குச் சவால் விடுவது போல் எண்ணற்ற மின்விளக்கு வரிசைகள் சற்றுத் தொலேவிலே குறுக்கும் நெடுக்குமாக நகர்ந்து சென்ற கோலாகலக் காட்சியைக் கண்டோம். பெரிய பெரிய நீராவிப் படகுகளிலே பொருத்தி இருந்த ஒளி விளக்குகளின் காட்சியே அது என்பதை உணர்ந்துகொண்டோம். பினங்குத் தீவையும் மலேயாவின் பெரும் பகுதியையும் இணைக்கும் போக்கு வரவு சாதனங்களாக விளங்குபவை எண்ணற்ற இந்த நீராவி இயந்திரப் படகுகள்.

பினங்குத் துறைக்கு அக்கரையில் உள்ள படகுத் துறைக்கு "மிக்கேல் பியர்" என்ற பெயர். பட்டர் வொர்த் என்ற இடத்திலே இந்தப் படகுத்துறை உள்ளது. இதற்குக் "கோலப்பிறை" என்ற அழகான பெயரைச் சூட்டியுள்ளனர் தமிழ் மக்கள்.

இருட்டுக்கும் எழிலூட்டிய பகட்டான காட்சிகளைக் கண்டவண்ணம் அதைப்பற்றிப் பேசிக்கொண்டே இராப்பொழுதைக் கழித்தோம்.

மறுநாள்; ஏப்ரல் இருபதாம் தேதி பொழுது விடிந்ததும் பினங்குத் தீவின் வனப்பு 'பளிச்' என்று தெரிந்தது. துறைமுகத்துக்கும் கோலப்பிறைக்கும் இடையில் இயந்திரப் படகுகளின் நடமாட்டமும், துறை முக எல்லைக்குள் காத்து நின்ற பலசரக்குக் கப்பல்களின் காட்சியும் அற்புதமாக இருந்தன. இயந்திரப் படகுகள் பிரயாணிகளை மட்டுமன்றிப் பெரிய பெரிய கார்களையும் லாரிகளையுங்கூட ஏற்றிச் செல்லும் அருமையைக் கண்டு வியந்தோம்.

காலை எட்டரை மணிக்கு, போலீஸ் அதிகாரிகளும், சுகாதார அதிகாரிகளும் விசைப்படகுகளில் வந்து கப்பலில் ஏறினர்கள். பிரயாணிகளின் பாஸ்போர்ட், சுகாதார நற்சான்று இதழ் முதலியவற்றை அதிகாரிகள் பார்வையிட்டு முத்திரை பொறித்தனர். உயர்வகுப்புப் பிரயாணிகளுக்கு இந்தப் பரிசீலனை பொழுதுபோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. 'டெக்' பிரயாணிகள் சம்பந்தமான பரிசீலனை, கப்பலின் மருத்துவ சாலைக்கு அருகாமையில் நிகழ்ந்தது.

பினங்குத் துறையில் கப்பல் சுமார் பன்னிரண்டு மணி நேரத்துக்குமேல் தங்கக்கூடும் என்று தெரிந்தது. எனவே, நகருக்குள் சென்று தமிழர் பிரதிநிதித்துவ சபையின் வரவேற்பை ஏற்றுக்கொள்வதென்று முடிவு செய்திருந்தோம், நகருக்குள் செல்லும் போது பொது உடையை அணிந்துகொள்ளவும் எண்ணியிருந்தோம்.

துணிகளைச் சலவை செய்து தரும் வசதி கப்பலிலே இருந்தது. எனவே, பயணத்தின் போது சேர்ந்த அழுக்குத் துணிகளைச் சலவைக்குப் போட்டு வாங்கினேம். சலவைக் கட்டணம் உருப்படி ஒன்றுக்கு நாலணு. சலவை செய்யப்பட்ட எங்கள் கோட்டுகள் சிலவற்றில் சாயம் வெளுத்துப்போகவில்லை ; கறுத்துத் தான் போயிற்று! கோட்டுகளின் முன்பக்கத்தில் கருமேகச் சுருள் போன்ற கறைகள் அழுத்தமாகப் படிந்திருந்தன! 'பெட்ரோல்' சலவையா? அல்லது 'குரூட்ஆயில்' சலவையா? என்று எங்களுக்கு ஒரே ஆத்திரமாக இருந்தது!

கோட்டுகளுக்கு நேர்ந்த விபத்தின் விவரத்தைக் கப்பலின் 'பர்ஸர்' என்று அழைக்கப்படும் பொருளாளரிடம் காண்பித்தோம். கறைக்குக் காரணமான பணியாளரை அவரும் விசாரணை செய்தார். நாங்கள் புறப்படும் போது சென்னையில் எங்களுக்குச் சூட்டப்

பட்ட ரோஜாப்பூ மாலைகளின் கறைகளே அவையென்று பணியாளர் விளக்கம் தந்தார். மீண்டும் வெளுத்தாலும் கறை எளிதிலே போகாது என்றும் தெரிந்தது. அன்பு மாலைகளின் அழியாச் சின்னங்களாக அந்தக் கறைகள் படிந்துவிட்டன என்று ஆறுதல் அடையவேண்டியதாயிற்று. ஆனால், கறைகள் படிந்த கோட்டுகளை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையைத் தவிர்க்க முடியவில்லை. எனவே, பொது உடை அணிந்துகொள்வதிலிருந்து எங்கள் குழுவினரில் சிலருக்கு விதிவிலக்குக் கிடைத்தது.

பகல் சரியாக ஒரு மணிக்கு எங்கள் கப்பல் பினங்குத் துறைமுகப் பாலத்தை அணுகி அணைத்துக் கொண்டது.

துறைமுகத்தில் திரண்டிருந்த தமிழ்ப்பெருமக்களின் அன்பு முகங்களில் பாச உணர்ச்சி பொங்கித் ததும்பி நின்ற பான்மையைக் கண்டோம். "கலை வாழ்க! கலைஞர்கள் வாழ்க! தமிழ் வாழ்க!" என்றெல்லாம் வாழ்த்தொலிகள் வானதிர முழங்கின. எங்கள் கண்களிலே மகிழ்ச்சிக் கண்ணீர் தேங்கி நின்றது. கை குவித்து அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம் செலுத்தினோம். "கடல் கடந்த தமிழர்கள் வாழ்க !" என்று முழங்கி எங்கள் நன்றியைத் தெரிவித்தோம்.

இணைப்புப்பாலம் போடப் பட்டதும் தமிழர் பிரதிநிதித்துவ சபை, தமிழ் இளைஞர் மணிமன்றம் முதலிய நிறுவனங்களைச் சேர்ந்த அன்பர்கள் ஆர்வத்தோடு கப்பலுக்குள் வந்தனர். பொழுதுபோக்கு மண்டபத்தில் எங்கள் கலைக்குழுவினரைக் கண்டு மாலை மரியாதைகள் செய்தனர்.

தமிழர் பிரதிநிதித்துவ சபைத்தலைவர் திரு **டி. பி. எஸ். கிருஷ்ணசாமியும்** ஏனைய நண்பர்களும் வேண்டிக் கொண்டபடி பிற்பகல் மூன்று மணிக்குக் கப்பலை விட்டு இறங்கிப் பினங்கு நகரில், அதாவது, மலைநாட்டின் தலை

வாசலில் அடியெடுத்து வைத்தோம். கப்பல் நாயகரின் இசைவுடன் நகருக்குள் சென்று திரும்பக்கூடிய சலுகை உயர்வகுப்புப் பிரயாணிகளுக்கு இருந்தது.

பேரன்பர்கள் ஏற்பாடு செய்திருந்த 'காடி'களில் முதலில் தண்ணீர் மலைக்குச் சென்று வருவதென்று முடிவாயிற்று. 'காடி' என்ருல் என்னவோ, ஏதோ என்று நினைக்க வேண்டாம். கார்களைத்தான் காடிகள் என்று சொல்லுகின்றனர் மலைநாட்டு மக்கள்.

சாலையில் செல்லும் போதே நண்பர்களிடம் பினங்கு நகரைப் பற்றிய சில விவரங்களைத் தெரிந்து கொண்டோம் :

பினங்குத் தீவு, துறைமுக நகரம் என்ற நிலையை எய்தி நூற்று எழுபது ஆண்டுகளே ஆகின்றன. ஆங்கிலேயர், கிழக்கிந்தியக் கம்பெனியார் என்ற பெயரோடு கீழை நாடுகளில் வாணிபம் செய்துவந்தார்கள் அல்லவா ?

அந்தக் காலத்தில் சோழமண்டலக் கரைக்கும் கெடா (கடராம்) ராஜ்யத்துக்கும் இடையே வசதியான ஒரு துறைமுகத்தைத் தேடிக்கொண்டிருந்தனர்.

இந்த எண்ணத்தோடு முதன் முதலாகப் பினங்குத் தீவைக் காணும் வாய்ப்புப் பெற்றவர் காப்டன் பிரான்சிஸ் லைட் என்பவர். கம்பெனிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றின் காப்டனுக இருந்தார் அவர்.

அவர் நுழைந்த சமயம் இந்தத் தீவு காடு போல் காட்சியளித்தது. பாக்கு வியாபாரத்துக்காசக் குடியேறிய தமிழர்கள் சிலரைத் தீவிலே கண்டார் திரு லைட். அவருக்கு ஒரே வியப்பாக இருந்தது.

"என்ன இது? நான்தான் வியாபார நோக்கோடு முதன் முதலாக இந்தத் தீவைத் தேர்ந்தெடுத்தேன் என்றல்லவா பெருமைப்பட்டேன் ! எனக்கு முன்னுலே இந்தத் தமிழர்

கள் எப்படி இங்கே குடியேறினர்கள் ?'' என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டு ஆச்சரியப்பட்டார் திரு. லைட்.

தமிழ் நாகரிகத்தின் பெருமை அவருக்கு எப்படித் தெரியும் ? தேம்ஸ் நதிக்கரையிலே இலண்டன் மாநகரம் உள்ள இடம் காடாக இருந்த காலத்திலேயே தமிழர்களிடம் திருக்குறள் போன்ற இலக்கியங்கள் தோன்றியிருந்தன என்பதை அந்தக் காலத்தில் திரு. லைட்டுக்கு வெளிச்சம் கொடுக்க ஆளில்லை !

தமிழ் வர்த்தகர்கள் மட்டுமன்றிச் சீன வணிகர்கள் சிலரும், ஆயிரத்துக்குக் குறைவான மலாய்க்கார மீனவர்களும் தீவிலே வாழ்ந்து வந்தனர். பாக்கு வர்த்தகத்தின் காரணமாகவே இந்த தீவுக்குப் பினங்கு என்ற பெயர் நிலைத்தது. பினங்கு என்ற சொல்லுக்குப் பாக்கு என்றுதான் பொருள்.

இந்தத் தீவு கெடா ராஜ்ஜியத்தின் சுல்தானுக்குச் சொந்தமாக இருந்தது. இதன் மலை வளமும் வனப்பும் அமைப்பும் திரு. பிரான்சிஸ் லைட்டை வெகுவாகக் கவர்ந்தன. எனவே, இதனைத் துறைமுகமாக உருவாக்க எண்ணி, கெடா சுல்தானிடமிருந்து 1786, ஆகஸ்டு 11–ல் வாடகைக்கு அமர்த்திக்கொண்டார், திரு. லைட். பினங்கு ஆங்கிலேயரின் ஆளுகைக்குள் வந்த வரலாறு இது.

உலக வர்த்தகர்களின் கவனத்தை இழுப்பதற்காகத் தீர்வையில்லாத துறைமுகமாகப் பினங்கை வளர்ச்சி பெறச் செய்தனர் ஆங்கிலேயர். இதன் முதல் கவர்னராகும் பொறுப்பையும் திரு. லைட் பெற்றார். 1805-ல் ஒரு தனி மாகாணம் என்ற நிலைமைக்கு முன்னேறியது பினங்கு. சிங்கப்பூர்த் துறைமுகம் உருவாவதற்கு முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே பினங்குத் தீவு துறைமுக நகரமாகிவிட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

குன்ருத வளம் கொழிக்கும் பிளுங்குத் தீவு குண திசையின் சொர்க்கம் என்று புகழப்படுகிறது இதன் நிலப்பரப்பு 108 சதுரமைல் : நீளம் பதினைந்து மைல் ; அகலம் எட்டு மைல். இங்கு இப்போது வாழும் மக்களின் எண்ணிக்கை சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதி ஞயிரம். இவர்களில் பாதிக்குமேல் சீனர்கள். அடுத்த படியாக, அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் மலாய்க்காரர் கள். மொத்த மக்கள் தொகையில் பதின்மூன்று சதவிகிதம் இந்தியர்கள்.

பொதுவான இந்த விவரங்களை மட்டும் தெரிந்து கொண்டு தண்ணீர் மலையை அடைந்தோம். தீவின் சிறப்புக்குரிய மற்ற அம்சங்களையெல்லாம் எங்கள் குழு பிளுங்கில் முகாம் இடும் சமயம் நன்ருகக் கண்டறிந்து கொள்ளலாம் என்று எண்ணித் தண்ணீர் மலையை மட்டும் கண்டு திரும்ப முடிவு செய்திருந்தோம்.

மலைக்குச் சென்ற சாலையின் அழகும், அதன் இரு மருங்கிலும் பச்சைப்பசேலென்று காட்சியளித்த இயற்கை எழிலும் இதயத்துக்கு எழுச்சி தந்தன. ஓங்கி உயர்ந்த மலைகள் சூழ்ந்து வட்ட வடிவமான பூந்தோட்ட மாகக் காட்சியளித்தது தண்ணீர்மலை.

நகருக்குக் குடி தண்ணீர் வசதியளிக்கும் நிலையம் இந்த மலைப்பூங்காவிலேதான் உள்ளது. அதனுல்தான் இதனைத் 'தண்ணீர் மலை' என்று அழைக்கின்றனர்.

கண்ணுக்குக் குளுமையாகவும் கருத்துக்கு விருந் தாகவும் அமைந்த தண்ணீர்மலைப் பூங்கா, நகர மக்களுக்கு உல்லாசச் சோலையாகப் பயன்படுவதில் வியப்பில்லையே !

எங்கள் குழுவின் பிளுங்கு முகாமின் போது இந்த மலைக்கு வந்திருந்த சமயம் உள்ளத்தில் தோன்றிய பின் வரும் பாடல் தண்ணீர் மலையின் சிறப்பை உணர்த்தும் ;

"வாடிடத் தெரியா மரங்களைக் காக்கும்
மதிலென நிமிர்ந்தன மலைகள் ;
மூடிடத் தெரியா மேகமுங் கிழிந்து
முழுநிலா வெளிவரக் கண்டோம் ;
கூடிடின் தெரியா தென்றுமே கொஞ்சிக்
குலாவிடக் காதலர் வந்த
காடிகள் கூடும் பினங்குநீர் மலையில்
காரிருள் கதறிய தம்மா !"

[காடிகள்—கார்கள்]

ஆமாம் ; தண்ணீர் மலையில் உள்ள மரங்களுக்கு வாடவே தெரியவில்லை ! எப்போதும் பசுமையாகவே இலங்குகின்றன !

மலையிலிருந்து நகருக்கு வழங்கப்படும் தண்ணீரின் சுவைக்குப் பணியாத நாவே இல்லையென்று சொல்லலாம். தண்ணீரா ? இளநீரா ? என்று ஐயுறும்வண்ணம் சுவை தருகிறது. நமது கோவை மாவட்டத்தில் கிடைக்கும் சிறுவாணி நீரைவிடச் சுவையாக இருக்கிறது, பினங்கிலே வழங்கப்படும் தண்ணீர் என்று சொல்வது மிகையாகாது.

தண்ணீர் மலையிலிருந்து நேராக 'ஈஸ்டர்ன் அண்டு ஓரியண்டல் ஹோட்டல்' என்ற விடுதிக்கு அழைத்து வரப்பட்டோம். மேல் நாட்டு முறையிலே அமைந்துள்ளது, அந்த ஒய்யாரமான மண்டபம். கடலை நோக்கிக் காட்சி தரும் அந்த மண்டபத்திலேதான் எங்கள் குழுவினருக்கு வரவேற்புத் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

ஆண் பெண் அடங்கலாகச் சுமார் அறுநூறு அன்பர்கள் அந்த விருந்திலே கலந்துகொண்டதாகக் கூறினார்கள். தமிழர்கள் பிரதிநிதித்துவ சபையின் சார்பிலும், தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் சார்பிலும் எங்களுக்கு மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

சபைத்தலைவர் திரு. டி. பி. எஸ். கிருஷ்ணசாமி நாடகக் குழுவினரையும், விருந்தினரையும் அகங்குளிர வரவேற்றுப் பேசினர்.

"தென்ன பராக்கிரம மும்முடிச் சோழனை இராஜ ராஜசோழனே தம் பரிவாரங்களுடன் மலைநாட்டுக்கு வருகை தந்துள்ளது போன்ற உணர்ச்சியைப் பெறு கிருேம் !" என்றெல்லாம் பலவாருகப் பாராட்டிப் பேசினர். திருவாளர்கள் துரைசாமித்தேவர், டி. எஸ். இராமநாதன் (தொழிற்சங்கத் தலைவர்), கலைதாசன் முதலிய அன்பர்கள் பலர்.

கலைக்குழுவின் சார்பில் நாங்களும் திருவாளர்கள் பகவதி, சிவதாணு, கருப்பையா, சீதாராமன், ஒலி முகமது ஆகியோரும் வரவேற்புக்கு நன்றி கூறுகையில் எங்கள் கலை உலாவின் நோக்கத்தை விளக்கினேம்.

பின்னர் அந்த ஹோட்டலில் உள்ள விசாலமான அறைகளில் எங்களைச் சிறிது நேரம் இளைப்பாறச் செய்து தமிழகத்துக்கே உரிய முறையில் அறுசுவை விருந் தளித்து மகிழ்வித்தனர் வரவேற்புக் குழுவினர்.

"மேல் நாட்டுப் பாணியில் உள்ள ஹோட்டலில் நம் நாட்டுக்குரிய அறுசுவை விருந்தும் படைக்கிருர்களா ?" என்று கேட்டோம்.

"இல்லையில்லை ! வேறு தென்னிந்திய உணவுச் சாலையிலிருந்து வரவழைத்தோம்" என்ருர் திரு. கிருஷ்ண சாமி.

எங்களைக் காண வந்த அன்பர்கள் சிலர், "என்ன ? பசியாறிவிட்டீர்களா ?" என்று சொல்லின்பம் பொங்கக் கேட்டார்கள்.

"சாப்பாடு ஆச்சா ?" என்பதைவிட, "பசியாறி விட்டீர்களா ?" என்று சொல்வதிலே புதுமையும் சிறப்பும் பொருள் நிறைவும் பொலிகின்றன அல்லவா ?

கடலுக்கு அப்பால் உள்ள பினங்கு நகரின் சாலை களிலே காணும் பலகைகளிலேயும் தமிழ் மணம் கமழ்வதைக் கண்டு மகிழ்ந்தோம்.

"Stop, Look, Go." என்ற ஆங்கிலச் சொற்களும், அவற்றுக்குக் கீழே "நில், பார், போ" என்ற தமிழ் மொழிபெயர்ப்பும் மிகப்பொருத்தமாகப் பலகைகளிலே எழுதப்பட்டுள்ளன.

இது போன்ற காட்சிகள் 'தமிழ் மணக்கும் தீவிலே தான் நாம் இருக்கிறோம்' என்ற பெருமித உணர்ச்சியைத் தந்தன.

இரவு ஒன்பதரை மணிக்கு நகரத்திலிருந்து கப்பலுக்குத் திரும்பினோம்.

கப்பல் வரை வந்து கைகூப்பி வழியனுப்பினர் பினங்குவாழ் தமிழ்ப்பெருமக்கள்.

ஏற்றுமதி இறக்குமதியெல்லாம் முடிந்து இரவு இரண்டேகால் மணிக்குக் கப்பல் பினங்குத் துறை முகத்தை விட்டுப் புறப்பட்டது. துறையிலிருந்து ஐந்தாவது மைல் வரையில் துறைமுகப் பைலட் கப்பலை ஓட்டி வந்தார். பின்னர், காப்டனிடம் ஒப்படைத்து விட்டு இறங்கி விசைப்படகிலே சென்றுவிட்டார். இரவு நேரத்தில் கப்பலுக்கு வழிகாட்டுவதற்காகக் கடலிலே "கண்சிமிட்டி விளக்குகள்" மிதந்துகொண்டிருந்தன.

6. சிங்கப்பூர் சேர்ந்தோம்

ஏப்ரல் இருபத்தோராம் தேதி காலையில் நாங்கள் கப்பலின் வெளித்தளத்துக்கு வந்தபோது பிரயாணிகள் சிலர் ஆங்காங்கு கூடிநின்று பரபரப்புடன் ஏதோ பேசிக் கொண்டிருந்ததைக் கண்டோம். செய்தி என்னவென்று தெரிந்துகொள்ள எங்களுக்கும் ஆவல் எழுந்தது. நண்பர் ஒருவரை அணுகி விவரம் கேட்டோம்.

''நேற்று மாலை நடந்த விபத்தைப் பற்றித்தான் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம்'' என்றார் அவர்.

''விபத்து நடந்ததா? என்ன விபத்து?....'' என்று அதிர்ச்சியடைந்தவராய்க் கேட்டோம்.

''இதுதானா பூலோகம் என்கிறீர்களே! நேற்று மாலையில் எங்கே போயிருந்தீர்கள்?'' என்றார் அந்த நண்பர்.

''நேற்று நாங்கள் எங்கே போயிருந்தோம் என்பதே உங்களுக்குத் தெரியாதா? நகருக்குள்ளே சென்றிருந்தோம். இரவு வெகு நேரத்துக்குப் பிறகுதானே கப்பலுக்குத் திரும்பினோம்! எனவே, விபத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியவில்லை!...கொஞ்சம் விவரமாகக் கூறுங்கள்!'' என்று அந்த நண்பருக்கு விளக்கம் கொடுப்பதற்குள் 'போதும் போதும்' என்றாகிவிட்டது!

எங்கள் நிலைமையை அவர் ஒருவாறு புரிந்து கொண்டு விபத்தின் விவரத்தைக் கூறினார்:

பாரந்தூக்கி-இயந்திரத்தின் உதவியால் கப்பலின் பாதாளக் கிடங்கிலே சரக்குகளை இறக்கி அடைக்கவும்,

வேண்டும் போது வெளியே எடுக்கவும் வசதியாகப் பெரிய 'திறப்பு' ஒன்று உண்டு. இது இரண்டாவது வகுப்பு அறைகளுக்கு அருகாமையில் உள்ளது. சரக்குகளின் 'ஏற்றுமதி—இறக்குமதி' முடிந்தவுடன் இந்தத் 'திறப்பு' பலகைகளைக் கொண்டு மூடப்படும். இவ்வாறு மூடப்பட்ட இடம் 'டெக்' பிரயாணிகள் காற்று வாங்கும் இடமாகப் பயன்படும்.

பினங்குத் துறைமுகத்தில் இறக்குமதியாக வேண்டிய சரக்குகளைப் பாதாளக் கிடங்கிலிருந்து தூக்கு வதற்காகப் பலகைகளை அப்புறப்படுத்தி, திறப்பின் ஓரமாக அடுக்கி வைத்தார்கள். பின்னர், பாதாளக் கிடங்கிலிருந்து சரக்கு மூட்டைகள் இயந்திரத்தின் மூலம் தூக்கப்பட்டுத் துறைமுகப் 'பிளாட்பாரத்'திலே இறக்கப் பட்டன. இறக்குமதி ஏஜண்டின் வேலையாளான சீனர் ஒருவர் பாதாளக் கிடங்கிலே நின்று சரக்குகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். இயந்திர உதவியால் மூட்டைகளைத் தூக்கிக் கிளம்பிய கொக்கி ஒன்று சற்று விலகிப் பலகைகளின்மீது தாக்கிவிட்டது. இதனால் பலகை ஒன்று நழுவிப் பாதாளக் கிடங்கிலே தவறி விழுந்தது. கிடங்கிலே நின்ற சீனரின் தலைக்கு நேரே அந்தப் பலகை விழுந்துவிட்டது! அலறிக்கொண்டு அந்தக் கணமே உயிர் துறந்தார் அந்தச் சீனர்.

துயரச்செய்தி கேட்ட பிரயாணிகளும், துறைமுகக் கூலியாட்களும், போலீஸ் அதிகாரிகளும் அதிர்ச்சி யடைந்து பரபரப்போடு கூடினர். இறந்த சீனரின் நெருங்கிய உறவினர் சிலரும் அங்கே வந்து சேர்ந்தனர். மாண்டவரின் சடலம் 'ஆம்புலன்ஸ்' வண்டியிலே கொண்டு செல்லப்பட்டது.

மேற்கண்டவாறு நண்பர் விளக்கிய விபத்து எங்களையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது! புனிதமான

மனித உயிர் ஒன்று போய்விட்டதே என்று வேதனைப் பட்டோம்.

"அந்த விபத்திலேயும் ஒரு விந்தையைக் கண்டோம்!" என்று மேலும் முக்கிய செய்தியை விளம்பினார் நண்பர் :

"விபத்தைக் கண்டு நாங்கள்தாம் அதிர்ச்சியடைந்து கண்ணீர் சொரிந்தோமே தவிர, இறந்த சீனரின் உற்றார் உறவினரும் ஏனைய சீனக் கூலியாட்களும் கொஞ்சங்கூட மனக்கிலேசம் அடையவில்லை! கண் கலங்கவில்லை! ஒன்றுமே நடவாதது போன்று, உணர்ச்சி காட்டாமல் நின்று பிரேதத்தை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டார்கள்! இது எங்களுக்கு மிகவும் வியப்பாகவே இருந்தது! சீனர்களில் இடுக்கண் கண்டும் நடுக்கம் கொள்ளாத நெஞ்சுரம் உடையவர்களும் இருக்கிறார்கள் போலும்!"

நண்பர் குறிப்பிட்டது எங்களுக்கும் நம்ப முடியாததாகவே தோன்றியது. ஆயினும், 'சீனர்கள் விதியிலே அழுத்தமான நம்பிக்கை உடையவர்கள்; எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்களல்லர்' என்று நாங்கள் கேள்விப்பட்டது உண்மையாகவே இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டோம்.

பினாங்குத் துறைமுகத்துக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் மலேயாவின் மேற்குக் கரையில் போர்ட் வெல்ட், தெலுக்கான்சன், போர்ட் சுவெட்டன்ஹாம் என்னும் கோலக்கிள்ளான், போர்ட் டிக்ஸன், மலாக்கா ஆகிய ஐந்து துறைமுகங்கள் உள்ளன. இவற்றுள் கோலக்கிள்ளான்தான் இப்போது வசதியான பெரிய துறைமுகமாக இலங்குகிறது. இதனைப் மிகப்பெரிய துறைமுகமாக விரிவுபடுத்துவதற்கு மலேயா அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

இராஜராஜ சோழன் காலத்தில் தெலுக்கான்சன் நதித்துறைமுகம் புகழ் பெற்று விளங்கியதாக வரலாறு கூறுகிறது. மலேயாவின் பண்டைப்புகழ் வாய்ந்த துறைமுகப்பட்டினம் மலாக்கா.

இந்தியாவிலிருந்து சிங்கப்பூர் செல்லும் பிரயாணக் கப்பல்கள் மேற்கண்ட ஐந்து துறைமுகங்களில் எதிலுமே நிற்பதில்லை சிங்கப்பூரிலிருந்து திரும்பும் கப்பல்கள் கோலக்கிள்ளானை மட்டும் அணுகிப் பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றி வருகின்றன.

பினங்கிலிருந்து கிளம்பிய கப்பல் மலாக்கா ஜல சந்தியில் முன்னேறிக்கொண்டிருந்தது. தூரத்தில் அவ்வப் போது மலேயாவின் மேற்குக் கரை மங்கலாகத் தென்பட்டுக்கொண்டிருந்தது. ஏற்கெனவே பிரயாணம் செய்து அனுபவப்பட்ட அன்பர்கள், "அதோ கோலக் கிள்ளான்! அதுதான் மலாக்காக் கரை !!" என்றெல்லாம் அவ்வப்போது சுட்டிக் காண்பித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் குறிப்பிட்டது சரியா தவறு என்றுகூட எண்ணிப் பார்க்க நாங்கள் முற்படவில்லை. சிங்கப்பூர் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டோம்.

கப்பலில் மலாய்மொழி தெரிந்த அன்பர்கள் ஏற்கெனவே சில வாக்கியங்களைக் கற்றுக்கொடுக்க முன்வந்தார்கள். எங்கு செல்கிறோமோ அந்த நாட்டு மொழியிலே ஓரளவு பேசக் கற்றுக்கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று எண்ணினேம். இந்த எண்ணத்துக்குத் துணையாக, நமது ஐம்பெருங்காப்பியங் களில் ஒன்ருன மணிமேகலையின் கிளைக்கதை ஒன்று எங்கள் நினைவுக்கு வந்தது.

சாதுவன் என்ற வணிகன் ஒருவன் மரக்கலத்தில் பிரயாணம் செய்கிருன். நடுக்கடலில் அந்த மரக்கலம் விபத்துக்கு உள்ளாகி உடைந்துவிடுகிறது. வணிகன்

தத்தளித்துத் தடுமாறி உடைந்த ஒரு மரக்கட்டையின் உதவியால் நாகர்கள் வாழும் தீவிலே ஒதுக்கப்படுகிறான்.

அந்தத் தீவின் பழங்குடி மக்களான நாகர்கள் அழகான சாதுவனைத் தமக்கு உணவாகக் கொள்ளலாம் என ஆர்ப்பரிக்கின்றனர். உடனே, சாதுவன் நாகர்களின் மொழியிலேயே அம்முரடர்களோடு பேசுகிறான். புதியவன் தமது மொழியிலே பேசுவதைக் கண்டதும் நாகர்தலைவன் வியப்பில் மூழ்கி, உணர்ச்சிவயப்பட்டுச் சாதுவனைத் தழுவிக்கொள்கிறான். நாகர்குல நங்கையை அவனுக்கு மணம் செய்து கொடுக்கவும் துணிகிறான். பிறமொழியறிவால் தன் உயிர் காப்பாற்றப்பட்டதை எண்ணி மகிழ்ந்த சாதுவன் நாகர்களுக்கு அறநெறி கூறி நாகரிகம் கற்பிக்கிறான்... இப்படியாக வளர்கிறது சாதுவன் கதை.

முன்பின் அறிமுகமில்லாத முரட்டு மக்களையும் ''பாடையிற் பிணித்து அவர் பான்மையன் ஆயினன்'' சாதுவன் என்ற மணிமேகலைக் குறிப்பு எங்களையும் மலாய் மொழி பேசக் கற்றுக்கொள்ளத் தூண்டத்தான் செய்தது. சாதுவனுக்குக் கிடைத்தது போன்ற ''மணப் பரிசை'' நாங்கள் விரும்பா விட்டாலும், மலாய் மக்களின் ''குணப்பரிசா''வது கிடைக்கட்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டதில் தவறில்லை அல்லவா?

எங்களுடைய ஆர்வத்தால் நாங்கள் பேசக் கற்றுக் கொண்ட மலாய் வாக்கியங்களில் சிலவற்றைக் கீழே தந்துள்ளோம்:—

மான்யா தபே—வணக்கம்.
அடா பாய்? — சௌக்கியமா?
மாணு பீர்கி—எங்கே போகிறாய்?
சாயா புலால்—நான் போய் வருகிறேன்.
திரிமா கஸி—உங்களுக்கு வந்தனம்: 'தாங்க்யு'
இனி ப்ரபா?—இது என்ன விலை?

மாக்கான் பீர்கி லா—சாப்பிடப் போகிறேன்;
சாப்பிடப் போகிறோம்.

இந்த வாக்கியங்களைப் பேச மட்டும்தான் தெரியும்; எழுதத் தெரியாது. எங்களுக்கு இவற்றைச் சொல்லிக் கொடுத்தவர்களுக்கே எழுதத் தெரியாதாம். மலேயாவில் பெரும்பாலான மக்களுக்கு மலாய் மொழியைப் பேசத் தான் தெரியுமே தவிர, அந்த மொழியை எழுதத் தெரியாதாம்.

சிங்கப்பூரில் இறங்க வேண்டிய நாள் நெருங்கி விட்டமையால் கப்பல் நாயகரிடமிருந்து விடைபெறுவதற்காக அவருடைய அறைக்குச் சென்றோம்.

''சிறிதும் உடல் அலுப்பு ஏற்படாமல் பத்திரமாகக் கப்பலைக் கொண்டுவந்துவிட்டீர்கள். மிகவும் நன்றி'' என்று அவரிடம் முகமலர்ச்சியோடு கூறினோம்,

''இதுதான் பிரயாணத்துக்கு மிகவும் உகந்த காலம். அதனால்தான் கப்பலில் ஆட்டம் இல்லை. நீங்கள் எப்போது திரும்பப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் காப்டன்.

''ஜூலை மாதத்தில் !''

''அப்படியா?....''

''ஏன்? அந்த மாதத்தில் கப்பலில் ஆட்டம் அதிகமாக இருக்குமோ?...''

''இல்லை! மே-ஜூன் மாதங்களில் அசைவுத் தொல்லை மிக அதிகமாக இருக்கும். ஜூலையிலும் கொஞ்சம் தொல்லையுண்டு! ஏன்? ஆகஸ்டில் திரும்புங்களேன்?''

''இல்லை, ஜூலையில் திரும்புவதென்று வகுத்துவிட்டோம். கப்பல் ஆட்டத்தையும் கடற்பிணியையும் கொஞ்சம் அநுபவித்துத்தான் பார்ப்போமே! வாழ்நாளெல்லாம் உங்களைப் போன்றவர்கள் இந்தத் தொல்லைகளையெல்லாம் அநுபவிக்கிறீர்களே!'' என்று நாங்கள் துணிவாகச் சொன்னதைக் கேட்டதும் காப்டன் சிரித்துவிட்டார். (காப்டன் மனமாரப் பரிந்துரை செய்தது போல்

நாங்கள் ஆகஸ்ட் 15 – ல்தான் தாயகம் திரும்ப முடிந்தது என்பதை இங்கே முன்னதாகவே குறிப்பிடுவது பொருந்தும்.)

மறுநாள் பொழுது விடிந்ததும் சிங்கப்பூர்த் துறை முகம் கம்பீரமாகக் காட்சியளித்தது.

வெளுத்த வானமும், நீலக்கடலும், பசுமையான சிறுசிறு குன்றுகளும், வானளாவிய மாளிகைகளும் பட்டொளி வீசிப் பறக்கும் கொடிகளுடன் மிதந்து நின்ற நூற்றுக்கணக்கான கப்பல்களும் பலவண்ணக் காட்சி களாகப் பரிணமித்தன.

கிழக்கும் மேற்கும் சந்திக்கும் கீர்த்தி பெற்ற துறை முகம் சிங்கப்பூர். ஆசியாக் கண்டத்தின் தென்கோடி யில் உள்ள இத்துறைமுகம் பூமத்திய ரேகைக்கு வடக்கில் எண்பதுமைல் தொலைவில் உள்ளது. இந்தத் துறைமுகத் திலேதான் இந்து மகாசமுத்திரமும் பசிபிக் மகா சமுத் திரமும் ஒன்ருக இணைந்து கிழக்கும் மேற்கும் பெற வேண்டிய இணக்கத்தை வலியுறுத்திக்கொண்டிருக் கின்றன.

உலகத்தின் மிகப்பெரிய துறைமுகங்களில் சிங்கப் பூர் முக்கியமானது. 1955ஆம் ஆண்டில் மட்டும் 3694 கப்பல்கள் இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொண்டன என்று கணக்கிட்டிருக்கிருர்கள்.

காலை எட்டு மணிக்குத் துறைமுகத்திலிருந்து சிறிது தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டது. முதலில் ‘டெக்’— ‘பங்க்’ பிரயாணிகள் இறக்கப்பட்டுப் படகுகளின் மூலம் புறமலை என்று சொல்லப்பட்ட தீவுக்கு அனுப்பப்பட் டார்கள். அந்தத் தீவில் உள்ள தொத்துநோய் நிவாரண விடுதியில் பிரயாணிகள் மூன்று நாட்கள் தங்க வேண்டு மாம். உடல்நலப் பரிசிலனை முடிந்தபிறகுதான் அவர்கள்.

நகரத்துக்குள் அநுமதிக்கப்படுவார்களாம். இந்தத் தொல்லை இல்லாமல் இருப்பதற்கமாக 'டெக்'பிரயாணி கள் பலர் பினங்கிலேயே இறங்கி, அங்கிருந்து ரயில் மார்க்கமாகச் சிங்கப்பூருக்கு வருவது உண்டாம். உயர் வகுப்புப் பிரயாணிகளுக்கு இது போன்ற 'குவாரன் டைன்' ஏற்பாடு சாதாரணமாகக் கிடையாது என்று அறிந்து ஆறுதல் அடைந்தோம். உயர் வகுப்புப் பிரயாணி களுக்குத் தொத்துநோய் வராது என்ற எண்ணமோ, வந்தாலும் தாங்களாகவே சமாளித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோ தெரியவில்லை !

கடலானது துறைமுகத்தை முட்டிக் கொண்டு நின்ற காட்சியைக் கண்டோம். அந்தக் கால்வாயின் வழியே இலாகவமாகக் கப்பல் கொண்டு செல்லப்பட்டது. பகல் ஒரு மணிக்குத் துறைமுகக் கரையைச் சேர்ந்தது. 24-ஆவது துறையில் கப்பல் நின்றது.

கரையிலே காத்து நின்ற ஆயிரக்கணக்கான அன்பர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். நெருங்கித் திணறிக்கொண்டிருந்த கூட்டத்துக்கு முன்னல் ஒழுங்காக அணிவகுத்துத் தொண்டர்கள் பலர் காத்துக்கொண்டிருந்தனர். இவர்கள் 'சுப்பிரமணியம் பகுத்தறிவு இல்லத் தொண்டர்கள்' என்று அறிமுகப் படுத்தப்பட்டனர்.

இந்தத் தொண்டர் படையைப் பற்றிக் கேள்விப் பட்டதும் மெய்சிலிர்த்துப்போனேம். தமிழகத்திலிருந்து இங்கு வந்துள்ள தமிழ் மக்கள் எத்தனை எத்தனையோ துறைகளில் தொண்டாற்றி வருகிறுர்கள். அவைகள் எல்லாவற்றிலும் குறிப்பிடத் தக்கது இந்தத் தொண்டர் படையின் அன்புத் தொண்டு. தமிழ் நாட்டிலிருந்து யார் வந்தாலும், ஏதாவது பொது விழாக்கள், கூட்டங்கள் நடந் தாலும் அங்கு இந்தச் 'சுப்பிரமணியம் பகுத்தறிவு இல்லத் தொண்டர்கள்' சென்று அவர்களுக்கு வேண்டிய உதவி

களைச் செய்து வருகிறார்கள். இந்தத் தொண்டர்கள் எல்லாரும் பெருஞ் செல்வந்தர்கள் அல்லர். மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாம். தங்கள் ஊதியத்தில் சிறு பகுதியையும், தங்கள் உழைப்பையும் இம்மாதிரிப் பொதுப் பணிகளுக்குச் செலவு செய்து வருகிறார்கள். அந்தத் தொண்டர்களின் தொண்டை எப்படிப் பாராட்டுவது? அவர்கள் மலர்ந்த முகத்துடன் ஆற்றிய பணியைச் சொல்வதா? கடமையுணர்ச்சியுடன் செய்த சேவைகளைச் சொல்வதா?

ஏணிப்பாலம் போடப்பட்டது; ஏராளமான அன்பர்கள் மாலைகளுடனும் கையெழுத்து வாங்கும் புத்தகங்களுடனும் கப்பலுக்குள் படையெடுத்துவிட்டனர். இந்தக் கூட்டத்தில் சிக்கிக்கொண்டு தவித்த திருவாளர்கள் ஒலி முகமது, போ. கோவிந்தசாமிப் பிள்ளை, தமிழர் பிரதிநிதித்துவ சபைச் செயலாளர் எம்.எம். மாலை முதலிய அன்பர்களும் பத்திரிகை நிருபர்களும் எப்படியோ கப்பலின் பொழுது போக்கு மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கலைக்குழுவினருக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றார்கள்.

அன்பு வெள்ளத்தில் மூழ்கித் திணறி ஒருவாறு கப்பலை விட்டு இறங்கினோம். கீழே நின்ற மக்களில் பெரும்பாலோர் தங்கச்சிரிப்புடன் எங்களை வரவேற்றார்கள். தங்கச்சிரிப்பு என்றதும், என்னவோ ஏதோ என்று எண்ண வேண்டாம். பலர் 'தங்கப் பல்' கட்டிக்கொண்டிருந்தார்கள். சீன மக்களில் இளம்பெண்களுங்கூடத் தங்கப் பற்களுடன் காட்சியளித்தனர். அளவுக்கு மீறி 'ஐஸ்கிரீம்' சாப்பிடுவதனால் பற்கள் அகாலத்தில் விழுந்து விடுகின்றன என்று சிலர் காரணம் கூறினார்கள். சீனர்களுக்கும் மலாய்க்காரருக்கும் தங்கப் பல் கட்டிக்கொள்வது ஒரு நாகரிகமாகவே ஆகிவிட்டதென்று சிலர் குறிப்பிட்டார்கள். இந்தியர்களில் சிலரும் இந்த நாகரிகத்தைப்

பின்பற்றத் தயங்காமல் இருக்கிறார்களாம்! மக்கள் வெள்ளத்திலிருந்து எங்களை ஒருவாறு மீட்டுக் கொண்டு வந்து அலங்கரிக்கப்பட்ட காடிகளிலும் பஸ்ஸிலும் ஏற்றியனுப்ப வழி செய்தனர் தொண்டர்கள். நகருக்குள் நுழைந்ததும் விண்மாளிகை, விக்டோரியா மண்டபம், உயர்நீதி மன்றம், மெர்டேகா பாலம், கல்லாங் பழைய விமானத் துறை முதலியவை எங்களுக்குத் தென்பட்டன. உடன் வந்த தொண்டர்கள் இயன்ற மட்டும் இவற்றை யெல்லாம் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தார்கள்.

பகல் இரண்டு மணி யளவில் 'பிராங்கல் எஸ்டேட் என்ற இடத்தில் எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த வசதியான பெரிய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அன்றிரவே சின் சாமான்கள் அனைத்தும் கப்பலி லிருந்து இறக்கப்பட்டு 'பாட்மின்டன் ஹால்' என்ற இடத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுவிட்டன என்பதை அறிந்து உண்மையில் வியப்படைந்தோம்.

7. சங்கங்கள் மலிந்த சிங்கப்பூர்

உலகப் புகழ் பெற்ற துறைமுக நகரமான சிங்கப்பூரின் சிறப்பை நாங்கள் ஏற்கனவே பலர் வாயிலாகப் பலபடக் கேட்டு நெஞ்சத்திலே பதிய வைத்திருந்தோம்.

> **" எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்**
> **இல்லாத எப்பொருளும் இல்லையாம் " —நல்ல குறட்**
> **பாவுக்கு மேவுமிந்தப் பாராட்டு; சிங்கப்பூர்த்**
> **தீவுக்கும் சேரும் சிறந்து.**

என்று பாராட்டத் தக்கவாறு, மனிதருக்குத் தேவையான

பொருள்கள் அனைத்தையும் மலிவாக வழங்கும் மாபெரும் சந்தையே சிங்கப்பூர் என்பதை எங்கள் உள்ளத்திலே ஒருவாறு கற்பனை செய்திருந்தோம்.

எனவே, நகரத்தை அடைந்ததும், அதன் காட்சிகளை யெல்லாம் கண்ணாரக் கண்டு, எங்கள் கற்பனை நகரத்தை அந்த அசல் நகரத்தோடு ஒத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எங்களிடம் பொங்கிக்கொண்டிருந்தது. இந்த ஆவலின் காரணமாக அகம் குளிர நகர்வளம் காணப் புறப்படத் துணிந்தோம்.

"நீங்கள் புறப்படுமுன் ஒரு வார்த்தை: சிங்கப்பூரி லும் சரி, மலேயாவிலும் சரி, 'ஐடெண்டிடி கார்டு' என்னும் அடையாளச் சீட்டு இல்லாமல் யாரும் வெளியே நடமாடக் கூடாது என்ற சட்டத்தை மறந்துவிடாதீர் கள்!" என்று நண்பர்கள் எச்சரிக்கை செய்தனர்.

'நாங்கள் இன்னும் அடையாளச் சீட்டு பெற்றுக் கொள்ளவில்லையே! அப்படியானால் நாங்கள் வெளியே போகவே முடியாதா?" என்று ஏக்கத்தோடு கேட்டோம்.

"அடையாளச் சீட்டு கிடைக்கும் வரை உங்கள் பாஸ்போர்ட்டைக் கையில் எடுத்துக்கொண்டு போகலாம்!" என்ற ஆறுதலான பதில் கிடைத்தது.

சிங்கப்பூருக்குப் புதிதாக வருகை தருவோருக்கு மட்டுந்தான் அடையாளச் சீட்டு வேண்டும் என்று எண்ண வேண்டாம். சிங்கப்பூரிலும் மலேயா நாட்டிலும் வாழும் மக்கள் ஒவ்வொரும் அடையாளச் சீட்டு வைத்திருக்க வேண்டுமென்பது சட்டம்!

அடையாளச் சீட்டில் சீட்டுக்கு உடையவரின் புகைப் படம், பெயர், முகவரி முதலான விவரங்களும் அடங்கி யிருக்கும்.

நம் இந்தியா போன்ற நாடுகளில் இல்லாத அடை யாளச் சீட்டு முறை சிங்கப்பூர்-மலேயாவில் அமுல்

நடத்தப்படுவது ஏன் என்ற கேள்விக்கும் விளக்கம் தேடிக்கொண்டோம்.

யுத்த காலத்துக்குப் பின் மலைநாட்டில் 'பயங்கரவாதி' களின் நடமாட்டம் அதிகமாகிவிட்டதென்றும், அவர்களை அடக்குவதற்காகப் பிரகடனம் செய்யப்பட்ட அவசரக் காலச் சட்டத்தை அநுசரித்தே அடையாளச் சீட்டு முறை அமுல் செய்யப்படுகிறதென்றும் தெரிந்து கொண்டோம்.

'பயங்கரவாதிகள்' என்றால் யார்?

யுத்த காலத்தில் பிரிட்டிஷாரின் உதவிகொண்டு ஜப்பானியருக்கு எதிராக, மறைவிலிருந்து போராடி வந்த படையினர் தாங்கள் மலாயா அரசாங்கத்தைக் கைப்பற்றி எதேச்சாதிகாரம் புரியும் நோக்கத்துடன் பயங்கரவாத முறைகளைக் கையாண்டார்களாம். காடு மேடுகளில் பதுங்கிக்கொண்டு மறைமுகமாகக் கொலை, தீ வைத்தல், போக்குவரத்து சாதனங்களைக் கவிழ்த்தல், தந்திக் கம்பிகளை அறுத்தல் முதலிய நாசகரமான காரியங்களில் ஈடுபட்டார்களாம். இக்குழுவினர்தாம் பயங்கரவாதிகள். இவர்களின் மிருகத்தன்மைக்கு ஆயிரக்கணக்கான குடிமக்களும் தற்காப்புப் படையினரும் இரையாகியிருக்கிறார்களாம். மலேயாவின் சுபிட்சத்தை விரும்பும் எவரும் இவர்களை ஆதரிக்கவில்லை. இவர்களை அடக்குவதற்காகத்தான் 1948-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாம் தேதி அவசரக் காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

பயங்கரவாதிகளில் பெரும்பாலோர் சீனர் என்று சொல்லப்படுகிறது இவர்கள் புரியும் பயங்கரச் செயல்களைப்பற்றி நண்பர்கள் பலர் கதைகதையாகக் கூறினார்கள்.

சில சமயங்களில் பெரிய பெரிய வியாபாரிகளும் தனவந்தர்களும், ரப்பர்த் தோட்ட முதலாளிகளும் திடீர்

திடீர் என்று காணமற் போய்விடுவார்களாம்! ''மந்திரமோ, தந்திரமோ, மாயமோ?'' என்று மக்கள் திகைத்துப்போவார்களாம்! இப்படிப் பண வசதி படைத்தோரை அலக்காகத் தூக்கிக்கொண்டு போய் நடுக்காட்டிலே வைத்துத் துப்பாக்கி முனையிலும், கத்தி முனையிலும் அவர்களை மிரட்டி, ஆயிரக்கணக்கில் பணம் சேர்ப்பார்களாம் பயங்கரவாதிகள்!

அப்படித் தூக்கிச் செல்லப்பட்டவர்களிடம் அந்த நேரத்தில் பணம் இல்லையென்றால், 'இன்ன இடத்தில் இன்ன தேதியில், இத்தனை மணிக்கு, இவ்வளவு பணத்தை நாங்கள் அனுப்பும் ஆள் வசம் நீ கொடுத்து அனுப்ப வேண்டும்! இல்லாவிட்டால் உன்னை இலேசில் விடமாட்டோம்'என்று 'கெடு' வைத்துக் கடும்எச்சரிக்கையுடன் அனுப்பிவிடுவார்களாம்! அந்தக் கெடுவில் குறிப்பிட்ட பணத்தைக் கொண்டுவந்து கொடுக்கத் தவறினல் மீண்டும் ஆபத்துத்தானும்.

இப்படிப்பட்ட 'பயங்கரச் செயல்'களைப் பற்றிய செய்திகள் அவ்வப்போது சிங்கப்பூர்ப் பத்திரிகைகளில் வெளியாகின்றன. இது போன்ற சம்பவங்களை ''பம்பாய் மெயில்'' போன்ற நாடகங்களிலே மக்கள் கண்டபோது 'இப்படியும் நடக்குமா?' என்று எண்ணி வியந்ததுண்டு!

'இப்படியும் நடக்கும்! இன்னும் பயங்கரமாகவும் நடக்கும்' என்று நிரூபிப்பன போல் இருந்தன பயங்கரவாதிகளைப் பற்றிய பயங்கரமான பல செய்திகள்!

இன்னென்றும் கேள்விப்பட்டோம். பயங்கரவாதிகள் மீது பழியைப் போட்டுவிட்டு அசல் கொள்ளைக்காரர்களே சில சமயங்களில் பயங்கரச் செயல்களில் ஈடுபடுவதும் உண்டு என்பதுதான் அந்தச் செய்தி!

பயங்கரவாதிகளின் இயக்கத்தை அடக்குவதற்காக மலேயா அரசாங்கமும் சிங்கப்பூர் அரசாங்கமும் ஒன்று

சேர்ந்துகொண்டு அதி தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறிந்தோம்.

மேற்கண்டவை அனைத்தும் சிங்கை சேர்ந்ததும் எங்கள் வெள்ளையான கலை உள்ளத்தில் நாங்கள் ஏந்திக் கொண்ட செய்திகளேயாகும். இவற்றைச் செய்தி யளவில் புரிந்துகொண்டதைத் தவிர உள்நாட்டு விவகாரங்கள் எதுவும் எங்களுக்குத் தெரியாது.

வீதியில் நடமாடுவோர் ஒவ்வொருவரிடமும் அடை யாளச் சீட்டு இருக்கிறதா என்று திடீரென்று சோதிக்கும் அதிகாரம் போலீசாருக்குத் தரப்பட்டுள்ளது. எவரிடம் ஐயம் ஏற்படுகிறதோ அவரிடந்தான் "அடையாளச் சீட்டைக் காட்டுங்கள்" என்று போலீசார் கேட்பார்கள். எனவே, எப்போதும் அடையாளச் சீட்டு அல்லது பாஸ் போர்ட்டை உடன் எடுத்துச் செல்ல வேண்டுவது அவசியம் என்பதை உணர்ந்துகொண்டோம். எங்களுக் குத் தாற்காலிக அடையாளச் சீட்டு கிடைப்பதற்கு ஒரு வாரமாவது ஆகும் என்று தெரிந்தமையால் சட்டைப் பையிலே அடங்காத பாஸ்போர்ட்டைக் கையிலே பத்திரமாகக் கொண்டுசெல்ல வேண்டியதாயிற்று.

நாங்கள் சிங்கப்பூர் சேர்ந்த நாள் திங்கட்கிழமை; வியாழக்கிழமையன்றே அதாவது, மூன்று நாட்களுக்குள் தமிழ் நாடக விழாவைத் தொடங்கிவிட வேண்டும் என்று திட்டம் வகுத்து விட்டார் திரு ஒலி முகமது. நாடக விழாவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடம் 'பாட்மின்டன் ஸ்டேடியம்!'

'முழுமையாக மூன்று நாட்கள்தானே உள்ளன! இந்தக் குறுகிய காலத்துக்குள் மேடை அமைத்துவிட முடியுமா?' என்ற ஐயத்தோடு அந்தப் பூப்பந்து விளை யாட்டு அரங்கத்தைப் பார்வையிடச் சென்றோம்.

அந்த அரங்கம் நிரந்தரமான கொட்டகையாகக் கட்டப்பட்டுள்ளது. மிக விசாலமானது. நாலாபுறமும்

காலரிகள் கட்டப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் காலரிக்குப் பின்புறமாக ஒரு கேளிக்கை உணவு விடுதியும் இணைக்கப்பட்டுள்ளதைக் கண்டோம்

போதிய அகல நீளத்துடன் கூடிய அந்த அரங்கத்தின் இடப்பக்கத்திலுள்ள காலரியை ஒட்டி விசாலமான நாடக மேடையமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஸ்டேடியத்துக்கு உள்ளே 'காங்கிரீட்' தளம் போடப் பட்டுள்ளபடியால் பள்ளம் தோண்டிக் கால்கள் ஊன்ற முடியாதென்று அரங்கநிர்வாகி கூறிவிட்டார். கொட்டகையின் மேல் முகடு மிக உயரமாகத் தென்பட்டது. இந்த நிலையில் மேடை எப்படி அமைப்பது? சீன்களைக் கட்டுவதற்குப் பரண் எப்படிப் போடுவது? அந்த அரங்கத்திலே நாடக மேடை அமைக்க முற்படுவது ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போலத்தான் என்று திகைத்துவிட்டோம்.

சீனத் தச்சர்களை அமர்த்தி எப்படியாவது மேடையை எழுப்பிவிட வேண்டுமென்ற முயற்சி தொடங்கப்பட்டது. உயரமான விசிப்பலகைகள் பலவற்றை ஒன்ருகச் சேர்த்துக் குறுக்கும் நெடுக்குமாக மரச்சட்டங்களை வைத்து ஆணியடித்து இயன்றமட்டும் மேடையைப் பலமுள்ள தாக்க முற்பட்டார்கள் சீனத் 'துக்கான்கள்.' துக்கான் என்ருல் மலாய் மொழியில் கைத்தொழிலாளி என்று பொருள்.

சீனத் துக்கான்களுடைய சுறுசுறுப்பு வியக்கத்தக்கதாக இருந்தது. கொட்டகையின் மேல் முகட்டுக்கு அருகில் உள்ள இரும்புக் குறுக்குச் சட்டங்களிலிருந்து முறுக்குக் கம்பிகளைத் தொங்கவிடடுப் பரணையும் மேடையையும் ஆடாமல் அசையாமல் இழுத்துக் கட்டிய அவர்களுடைய திறமையை வியந்து பாராட்டி, மிகவும் மெச்சினேம்.

வேலை நேரம் முடிந்துவிட்டால் ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல் வெளியேறி விடுவார்கள் சீனத் துக்கான்கள். பெரிய அதிகாரிகளைப் போல் ஒய்யாரமாக உடை உடுத்திக்கொண்டு வந்து உற்சாகமாக எங்களோடு கை குலுக்கிவிட்டு, 'நாளைக்குப் பார்ப்போம்!' என்று அவர்களுக்குரிய பாணியிலே வேடிக்கையாகக் கூறிச் செல்வார்கள். உற்சாகமாக உழைப்பதிலும் வாழ்க்கையை உல்லாசமாகக் கழிப்பதிலும் சிறிதுகூட அலுப் படையாதவர்கள் அந்தச் சீனத் துக்கான்கள்.

எப்படியோ அந்தரத்தில் மேடை அமைந்த விந்தையை நினைத்து மிக மகிழ்ந்தோம்.

"புதிதாக மேடையமைக்க வேண்டிய அவசியம் என்ன? சிங்கப்பூரில் நல்ல மேடை வசதிகளோடு கூடிய கொட்டகை கிடையாதா?" என்றால் "கிடையாது" என்று ஒரே வார்த்தையில் பதிலளித்துவிடலாம்.

நல்ல காட்சி அமைப்புக்களோடு கூடிய தமிழ் நாடகத்திற்கு ஐம்பது அடி அகலமும் ஐம்பதடி நீளமும் உள்ள மேடை வேண்டும். சிங்கப்பூர் – மலேயாவில் இவ்வளவு விசாலமான மேடை அமைப்போடுகூடிய கொட்டகையே இல்லை என்று சொல்லப்பட்டது. அந்த நாட்டில் அதிகமாகப் பரவியிருக்கும் கேளிக்கை நடனங் ஏற்ற மேடைகளே எங்கும் காணப்படுகின்றன.

நாங்கள் சிங்கை சேர்ந்த மறுநாள், அதாவது ஏப்ரல் இருபத்து மூன்றும் தேதியன்று, தமிழர் பிரதிநிதித்துவ சபையினர் மாபெரும் வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

தமிழர் பிரதிநிதித்துவ சபையில் சிங்கப்பூரில் உள்ள நாற்பத்து நான்கு சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இந்தச் சங்கங்களின் பெயர்களைக் கேட்டாலே வியப்பாக இருக்கும். நமது தமிழகத்திலுள்ள தாலுகாக்களின்

பெயராலும், கிராமங்களின் பெயராலும் இச்சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழர்கள் கடல் கடந்து எவ்வளவு தொலைவில் வாழ்ந்தாலும் தமிழ் மண்ணை மறவாமல் வாழும் உணர்ச்சி பெற்றிருக்கிறார்களே என்று பூரிப்பு அடைந்தோம். அதோடு, "சங்கங்கள் மலிந்த சிங்கப்பூர்" என்ற ஒரு சிறப்புப் பட்டத்தை இந்தத் துறைமுக நகருக்குச் சூட்டலாமே என்றும் தோன்றியது.

தமிழர் பிரதிநிதித்துவ சபையின் தலைவர் திரு. **கோ. சாரங்கபாணி** என்று அறிந்ததும் சபையில் இத்தனை சங்கங்களும் இணைந்ததில் வியப்பில்லை என்று புரிந்து கொண்டோம். செல்வாக்கு வாய்ந்த 'தமிழ் முரசு' என்ற தினசரியின் ஆசிரியரான திரு. சாரங்கபாணி அவர்கள் வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் விதத்தை நன்குணர்ந்த தமிழ் வீரர். தமிழகத்திலிருந்து சிங்கப்பூர் செல்லும் தமிழ்ப் பெரியார்களையும், கலைஞர்களையும், சாதி, சமய, அரசியல் வேறுபாடு கருதாமல் வரவேற்றுப் பாராட்டும் நல்லிதயம் படைத்தவர் திரு. கோ. சா. "தமிழ் எங்கள் உயிர்" என்ற இயக்கத்தின் தலைவர். மலேயா பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்கு உகந்த உயர்ந்த இடம் வேண்டுமென்று போராடி வெற்றி கண்டு வருபவர். தமிழ் உணர்ச்சி ஒன்றை மட்டும் உரைகல்லாகக் கொண்டு அனைவரையும் தழுவிச் செல்லும் தாராள மனம் படைத்தவராகத் திரு. சாரங்கபாணி இருப்பதனால் தான் அவருடைய செல்வாக்கும் 'தமிழ் முரசு' பத்திரிகையின் வளர்ச்சியும் மேலோங்கி நிற்கின்றன.

சபையின் பொதுச்செயலாளர் திரு. எம். எம். மாலை. முத்துமாலை என்ற பெயரைத்தான் இவர் 'மாலை' யாக்கி அணிந்துள்ளார். மதுரை மாவட்டத்தில் உள்ள உத்தம பாளையத்தைச் சேர்ந்த இவர், சிங்கப்பூரில் திரைப்பட விநியோகத் துறையில் ஈடுபட்டுள்ளார். எனவே, அடிக்கடி விமானத்திலே பறந்து வந்து தமிழகத்தோடு

கலைத்தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நல்வாய்ப்பும் பெற்றவர். எல்லோரிடத்திலும் இன்முகங் காட்டி இங்கிதமாகப் பழகும் இதயப் பண்பு படைத்தவர். தமிழ் உணர்ச்சி மிகுந்தவர். எங்கள் கலைக்குழு மலேயாப் பயணத்தை மேற்கொண்டதற்கு இவருடைய தூண்டுதலும் ஒரு காரணமாகும்.

தமிழர் பிரதிநிதித்துவ சபை ஏற்பாடு செய்த பொது வரவேற்பு விக்டோரியா நினைவு மண்டபம் என்னும் நகர மண்டபத்தில் நடைபெற்றது. சென்னையில் உள்ள நமது ராஜாஜி மண்டபத்தைப் போல் மிக அழகாக அமைந்துள்ளது நகர மண்டபம்

வரவேற்பு விழாவுக்குச் சிங்கப்பூர் கல்வி மந்திரி திரு. சியூ சுவீ கீ தலைமை வகித்தார்.

''கலாசார உயர்வில் இந்தியா எந்த நாட்டுக்கும் இரண்டாவதாகாது. சிங்கப்பூர் அநேக துறைகளில் இந்தியாவை எதிர்நோக்கி இருக்கிறது. இந்தியாவை நோக்கிச் சீனத்துறவி ஒருவர் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சென்று, சுற்றிக் கலை உயர்வு கண்டு, சீனுவுக்குத் திரும்பி இந்தியாவின் சிறந்த கலாசார வகைகளைச் சீன நாட்டிலும் பரப்பினர். எனவே, அப்படிப்பட்ட பழம் பெருமை வாய்ந்த இந்தியாவின் கலாசாரத் தூதுவர்களாகவே டி. கே. எஸ். குழுவினரை மதித்து மகிழ்வித்து வரவேற்கிறேன்' என்று பாராட்டினர் கல்வி அமைச்சர்.

ஏப்ரல் இருபத்துநாலாந் தேதி மாலையில் சிங்கப்பூரிலேயே மிக உயர்ந்த பதினன்கு அடுக்கு மாடியுள்ள மாளிகையும், ஆசியா இன்ஷ்யூரன்ஸ் கட்டடமுமான 'விண் மாளிகை'யில், திரு. ஒலி முகமது நம் கலைக்குழுவினருக்கு ஒரு தேநீர் விருந்தளித்துப் பாராட்டினர். விண் மாளிகையின் அழகு கண்கொள்ளாதது. சிங்கை மாநகரின் பெருமையை வானளாவ உயர்த்திக் காட்டுகிறது இந்த

விண்மாளிகை. இந்த விண்மாளிகையில் நாள்தோறும் ஆடல் பாடல் முதலிய கேளிக்கைகளுக்கும் விருந்துகளுக்கும் குறைவே இல்லை.

சிங்கப்பூரிலே நடமாடும் கடைகளும் உண்டு என்பதைக் கண்டோம். நாங்கள் தங்கியிருந்த வீட்டின் பக்கமாகக் காலையும் மாலையும் சைக்கிள் வண்டிகளிலே பல அழகான கடைகள் செல்லும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தோம். அவற்றில் எங்களை மிகவும் கவர்ந்தது பழக்கடை. நாலு சக்கரச் சிறு வண்டியிலே பல வகையான பழங்களை அடுக்கி வைத்திருக்கும் அழகே தனி. கடைக்காரர் ஆப்பிள் பழத்தின் தோலைச் சீவிய முறையே ஓர் அற்புதக் கலையாகத் தோன்றியது கத்தியானது பழத்தைத் தொட்டும் தொடாமலும் வெங்காயத் தொலியைப் போலத் தோலை மெல்லியதாகச் சீவி எடுக்கும் நேர்த்தியை என்னவென்று சொல்வது ?

ஆப்பிள் பழம் என்றதும் ஒரு சுவையான செய்தியைச் சொல்ல வேண்டும். அங்கு கிடைக்கும் ஆப்பிள் பழங்களில் இனிப்புச் சுவை கிடையாது என்பதுதான் அந்தச் சுவையான செய்தி!

சிங்கப்பூர் ஆஸ்திரேலியாவுக்கு அருகாமையில் இருப்பதால் நாக்கில் நீர் ஊறத் தக்க சுவையுள்ள அருமையான ஆப்பிள் பழம் கிடைக்கும் என்றுதான் நாங்களும் முதலில் எண்ணினேம். ஆனல், அங்கே கிடைத்த பழங்கள் பேரிக்காயைப் போன்று புளிப்பும் கலந்தனவாகவே இருந்தன. எனவே, சிங்கப்பூர் மலேயாவில் கிடைத்த ஆப்பிள் பழங்களுக்கு நாங்கள் 'ஆஸ்திரேலிய மாங்காய்' என்று பெயர் வைத்தோம். ஆனல் இந்த 'மாங்காய்'தான் உடம்புக்கு மிகவும் சத்தானதாம். உடம்புக்குச் சத்தானதாக இருக்கலாம். ஆனல், நாவிற்கு உகந்ததாக இல்லையே!

8. சிங்கபுரத்தின் சிறப்பு

சிங்கப்பூர் நகரத்தின் சிங்காரக் காட்சிகளைக் காலைக் கதிரொளியில் காண வேண்டுமென்ற ஆவல் எங்கள் உள்ளத்தில் எழுந்தது. நாடகத்திற்கு வேண்டிய ஹாலிவுட் ஒப்பனைப் பொருள்கள் சில வாங்க வேண்டுமென்று தம்பி பகவதி விரும்பியது எங்கள் ஆவலுக்கு மேலும் துணையாக நின்றது.

ஒரு நாள் காலை எட்டு மணிக்கு நண்பர் ஒருவரின் காடியில் புறப்பட்டோம். இந்த இடத்தில் அந்த நண்பரைப் பற்றி ஒருசில வார்த்தைகளாவது கூறுமல் செல்வது தகாது.

தமிழ் நாடக விழாவுக்கென்றே பதினெரு பேர் செல்லக்கூடிய பெரிய 'வான்' ஒன்றைப் புதிதாக வாங்கி, அதில் 'டி. கே. எஸ். நாடகக் குழு' என்ற பெயரைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் துலாம்பரமாகப் பொறித்து, நாங்கள் தங்கியிருந்த வீட்டிலேயே நிறுத்தியிருந்தார் திரு. ஒலிமுகமது. ஆயினும், விழா சம்பந்தமான முன்னேற்பாடுகளுக்கும், விளம்பரத்துக்கும் அந்தக் காரை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொள்ள நேரிட்டதால் எங்கள் விருப்பம் போல் வெளியே செல்வதற்கு அந்தப் பெரிய கார் அவ்வளவாகப் பயன்படவில்லை.

நாங்கள் கார் வேண்டுமென்று நினைத்த போதெல்லாம் தங்கு தடையின்றித் தாமதம்ஏதும் இன்றித் தமது காடியை அனுப்பி உதவிய நண்பர் திரு. சி. ஆர். தசரதராஜ் அவர்களை மறக்க முடியவில்லை. சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்த இந்தியர். சிறந்த தமிழ் உணர்ச்சி உடையவர்; இந்திய நுண்கலைக் கழகம், இந்து சபை முதலிய நிறுவனங்களின் பொறுப்பாளராகப் பணியாற்றுபவர்.

திரு. தசரதராஜ் அவர்களின் காடியை எங்கள் சொந்தக் காரைப் போலவே பயன்படுத்திக்கொண் டோம் என்று சொல்வது மிகையாகாது. சில சமயங் களில் நல்ல கார் கிடைத்தாலும் அந்தக் காருக்கு ஏற்ற நல்ல சாரதி அமைவதில்லை என்பதைப் பலர் அனுபவ வாயிலாக உணர்ந்திருப்பார்கள். காருக்கு அமையும் சாரதி காரோட்டுவதில் மட்டும் சூரராக இருந்தால் போதாது. தமது பணியை நிறைவேற்றும்போது கடுகள வும் மனக்கசப்பில்லாதவராகவும் இருக்க வேண்டும். இந்த நற்பண்பு மிகவும் பொருந்தியவராக விளங்கினுர் திரு. தசரதராஜ் அவர்களின் காரோட்டி.

அன்று காலையில் நாங்கள் வெளியே புறப்பட்ட போது வனப்பு வாய்ந்த மவுண்ட்பேட்டன் சாலை வழி யாகக் காரை ஒட்டிச் சென்ருர் சாரதி எங்கள் விருப்பப் படியே கார் மெதுவாகச் சென்றது. வழியில் மெர்டேகா பாலத்தின் அமைப்பையும் அழகையும் ரசித்தோம். பாலத்தைக் கடந்ததும் 'எஸ்பிளனேட்' என்னும் அகல் வெளியின் கண்கவர் காட்சி. மிகநேர்த்தியாகப் பராமரிக்கப்படும் இந்த 'எஸ்பிளனேட்' பகுதி சிங்கப்பூர் நகரத்துக்கே ஒரு வரப்பிரசாதம் போன்றது. நீலக்கடலை ஒட்டிஞற்போல் அமைந்துள்ள பரந்து விரிந்த தளம் போன்ற சாலையும், அதனை அடுத்துப் பசுமையானபுல்வெளியும், பூந்தோட்டங்களும், அவற்ருேடு இணைந்து கம்பீரமாக நிற்கும் சுப்ரீம்கோர்ட், நகர மன்றம், யுத்தத்தில் மரணமடைந்த வீரர்களின் நினைவுச் சின்னம் முதலிய கட்டடங்களும் கண்ணுக்கினிய காட்சிகளாகும். சற்றுத் தொலைவிலே விக்டோரியா நினைவு மண்டபத்தின் மணிக்கூண்டும், சைஞ பாங்கின் உயர் மாளிகையும் நகரத்தின் சிறந்த சின்னங்களாகத் திகழக் கண்டோம்.

அழகுத் திரளாக அமைந்துள்ள 'எஸ்பிளனேட் கரையின் கவர்ச்சியில் மயங்கி அதனோடு மோதி முத்த மிட்டுக்கொண்டிருக்கும் கடல் அலைகள் !

'எஸ்பிளனேட்' பகுதியைக் கடந்து விக்டோரியா நினைவு மண்டபத்துக்கு அருகில் கார் சென்ற போது மண்டபத்துக்கு முன்னால் ஒரு சிலையைக் கண்டோம். "இதுதான் ராபின்ஸ் என்பவரின் சிலை" என்று சுட்டிக் காட்டினார் சாரதி.

"அது மட்டுமல்ல; நாம் இப்போது போய்ச் சேர விருக்கும் மிகப்பெரிய கடைத்தெருவுக்குக்கூட 'ராபின்ஸ் பிளேஸ்' என்றுதான் பெயர்" என்றும் சொல்லப்பட்டது.

ஆண்டர்ஸன் பாலத்தைத் தாண்டிச் சற்று நேரத்தில் "ராபின்ஸ் பிளேஸ்" என்ற இடத்தை அடைந்தோம்.

நாலாபுறமும் மதில் போன்ற உயரமான மாளிகைக் கடைகளுடன் கூடிய சதுரப் பெருவீதியாக விளங்குவது 'ராபின்ஸ் பிளேஸ்'. அது சிங்கப்பூரின் மிகப்பெரிய வர்த்தகக் கேந்திரம் என்பதைப் புரிந்துகொண்டோம்.

'ராபின்ஸ்' சிலையையும் 'ராபீன்ஸ் பிளேஸ்' என்ற பகுதியையும் பார்த்த பிறகு அவ்வளவு புகழ் பெற்ற ராபின்ஸ் என்பவர் யார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா ?

ஜோகூர் சுல்தானின் ஆட்சியில் வெறும் சதுப்பு நிலமாக இருந்த சிங்கப்பூர்த் தீவு உலகப் புகழ்பெற்ற துறைமுகமாக ஆவதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்டாம்போர்டு ராபின்ஸ். இவர் மேற்கிந்தியத் தீவுகளுக் கும் இங்கிலாந்துக்கும் இடையே ஓடிக்கொண்டிருந்த 'ஆன்' என்ற கப்பலில் 1781-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தகப்பனார் அந்தக் கப்பலின் மாலுமி. பதினாலாவது வயதில் ராபின்ஸ் கிழக்கிந்தியக் கம்பெனி

யில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். இலக்கியத்திலும், விஞ்ஞானத்திலும் மிகுந்த காதல் கொண்டார். பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மன், கிரேக்கம், ஹீப்ரு முதலான பல மொழிகளைக் கற்றுணர்ந்தார். கிழக்கிந்தியக் கம்பெனி யின் பினுங்குக் கிளையில் இவர் எழுத்தராக இருந்த போது, மலாய் மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றார். இவருடைய மலாய் மொழிபெயர்ப்புகளைப் பலரும் பாராட்டினர். மொழித்துறையில் இவருடைய அறி வாற்றலை மெச்சிக் கல்கத்தா பல்கலைக் கழகம் இவருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்தியது.

தமது சொந்த முயற்சியாலும் ஊக்கத்தாலும் படிப் படியாக முன்னேறினார் ராபின்ஸ். தமது திருமணத்திலே கூட இவர் முன்னேற்றம் கண்டாராம்! தம்மைவிடப் பத்து வயது மூத்தவரான திருமதி ஒலீவியா பேன் கோர்ட் என்ற ஒரு விதவையைத் திருமணம் செய்து கொண்டார்!

ராபின்ஸின் அரசியல் அறிவும் ஆட்சித் திறமையும் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த மின்டோ பிரபுவைக் கவர்ந்தன. டச்சு ஆதிக்கத்தில் இருந்த ஜாவாவை முற்றுகையிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி மலாக்காவுக்கு அனுப்பப்பட்டார் ராபின்ஸ். ஜாவாவும் சரணாகதியடைந்தது. அதற்கு லெப்டினன்ட் கவர்னராகவும் ராபின்ஸ் அமர்த்தப்பட்டார்.

நிலச்சீர்திருத்தம், நீதிநிர்வாகம்போன்ற ஆக்க வேலை களினால் புகழ் பெற்ற ராபின்ஸ் அடிமை வியாபாரத்தை ஒழிப்பதிலும் வெற்றி கண்டார். மக்களுக்கு எல்லா வகையான சுதந்திரத்தையும் அளித்தார்.

இடைக்காலத்தில் ராபின்ஸ் ஓய்வுக்காக இங்கி லாந்து சென்ற போது ரீஜண்ட் பூங்காவில் விலங்கு நூல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றுக்கு அடிப்படையிட்டார்.

இவருடைய விஞ்ஞான அறிவின் சின்னமாக இன்றும் இலங்குகிறது அந்த நிலையம்.

பின்னர், சுமத்திராத் தீவின் மேற்குக் கரையில் உள்ள பென்கூலன் என்ற பகுதிக்கு கவர்னரானுர் பென்கூலன் மிக மட்டமான இடமாகத் தோன்றியது. ஆங்கிலேயருக்கு நல்லதொரு வியாபாரக் கேந்திரம் வேண்டுமென்று தேடிக்கொண்டு புறப்பட்ட ராபின்ஸ், சிங்கப்பூர்த் தீவிலே 1819, ஜனவரி 29-ல் இறங்கினுர். அதன் இயற்கை அமைப்பிலே இதயத்தைப் பறி கொடுத்தார்.

சிங்கப்பூர்த் தீவில் இருந்த தெமங்காங் என்ற பட்டப்பெயருடைய மலாய் கவர்னரிடமும், ஜோகூர் சுல்தானிடமும் 1819, பிப்ரவரி 6-ல் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார் ராபின்ஸ். அதன்படி, தெமங்காங் குக்கு மூவாயிரம் வெள்ளியும், சுல்தானுக்கு ஐயாயிரம் வெள்ளியும் கொடுத்துச் சிங்கப்பூரில் ஒரு வர்த்தகக் கேந்திரத்தை ஏற்படுத்திக்கொண்டார். இப்போது நினைத்தால் வேடிக்கையாக இருக்கும்! மொத்தம் எண்ணுயிரம் வெள்ளிக்கு வர்த்தகக் கேந்திரமாக இடத் தைப் பிடித்துக்கொண்டு சுமார் ஐந்து ஆண்டுகளுக்குள் 1824, ஆகஸ்டு மாதத்தில், அந்தத் தீவு முழுவதையுமே சுல்தானிடமிருந்து எழுதி வாங்கிவிட்டனராம் ஆங்கி லேயர்! இவ்வளவு தந்திரமாகவும் திறமையாகவும் சிங்கப்பூரில் ஆங்கிலேய ஆட்சியை நிலைநாட்டிய ராபின் ஸுக்கு ஒரு சிலை நாட்டியதுதானு பெரிது!

'ராபின்ஸ்' காலத்துக்கு முந்திய சிங்கப்பூரின் பழைய வரலாற்றையும் சிறிது தெரிந்துகொள்வது நல்லது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தத் தீவுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது,

சிங்கப்பூர் என்ற பெயரே மலாய் வார்த்தையல்ல; சிங்கம்-புரம் என்ற இரு தமிழ்ச்சொற்களின் இணைப்பே சிங்கப்பூராக மருவியுள்ளது என்பது தெளிவு. இத்தீவுக்குச் 'சிங்கபுரம்' என்று பெயரிட்டவன் சோழர் பரம்பரையைச் சேர்ந்த நீல உத்தமன் என்னும் மன்னன் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

நீல உத்தமன் கி. பி. 1160-ல் ரியோ என்னும் தீவை ஆண்டு வந்தான் என்றும், அவன் ஒரு நாள் மரக்கில் சிங்கப்பூர்த் தீவில் வந்து இறங்கினான் என்றும், இறங்கிய சமயம் குடாவிலே சிங்கத்தைப் போன்ற விலங்கு ஒன்றைக் கண்டான் என்றும், அதன் காரணமாகவே தான் கண்ட தீவுக்குச் சிங்கபுரம் என்று பெயரிட்டான் என்றும் மலேயாவின் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது.

மலாய்க்காரர்கள் இந்தத் தீவை 'துமாசிக்' என்றே அழைத்தார்கள். 'துமாசிக்' என்றால், கடல் நகர் என்று பொருளாம்.

பதின்மூன்றாவது நூற்றாண்டில் சிங்கப்பூர், புத்த மதம் தழுவிய மலாய்க்காரர்களின் அரசாங்கத் தலைநகராக விளங்கியது. இந்த அரசை கி. பி. 1377-ல் 'மஜாபஹித்' என்னும் இந்து அரசினர் கவிழ்த்துவிட்டனர். இவர்கள் ஜாவாவை அரசாண்டு வந்தனர். மஜாபஹித்தர்களின் படையெடுப்பினால் சிங்கப்பூரில் ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது என்றும், அதனால் தான் சிங்கப்பூர்ச் சமவெளி இன்னும் இரத்த நிறமாகக் காட்சி தருகிறது என்றும், ஜாவா அரசினர் கொடுத்த சாபத்தினால்தான் சிங்கப்பூர் மண்ணில் நெற்பயிர் தலையெடுக்கவில்லை என்றும் மலாய்க்காரர்கள் இப்போது கூட நம்புகின்றனராம்!

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிலேதான் மலாய்க்காரர்கள் முகமதிய மதத்தைப் பின்பற்றலாயினர் என்றும் தெரிகிறது.

ராபின்ஸ் பிளேஸில் உள்ள கடைகளைப் பார்த்த எங்களுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. நகரத்தில் உள்ள கடைகளை வெறுமனே பார்ப்பதற்கு ஒரு தடவையும், வேண்டிய பொருள்களைத் தேடி வாங்குவதற்கு மற்றும் பல தடவைகளும் போக வேண்டும் என்பதுதான் அந்த உண்மை.

எனவே, எங்கள் முதல் நகர்வலத்தின் போது எந்தப் பொருளையும் வாங்காமலே திரும்பினோம். திரும்பி வரும் வழியில் பாட்மிண்டன் ஸ்டேடியத்துக்குச் சென்று நாடக மேடை அமைப்பைக் கண்காணித்தோம்.

சிங்கப்பூரிலே அதுவரை யாரும் கண்டிராத முறையில் அமைந்திருந்தது மேடை.

நாடகத்துக்கான ஒலிபெருக்கி ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே அசோசியேடட் ரேடியோ ஏஜன்ஸீஸ் என்ற நிறுவனத்தாரின் பிரதிநிதிகளைச் சென்னையிலிருந்தே அழைத்துக்கொண்டு போயிருந்தோம். அரங்கின் தரம் அறிந்து ஒலிபெருக்கி அமைப்பதிலே வல்லுநர்களான இவர்களே சிங்கப்பூர் அரங்கத்திலே திணற வேண்டியதாயிற்று!

ஏனெனில், பாட்மிண்டன் மண்டபத்தில் எதிரொலி மிகுதியாக இருந்தது. இந்தக் குறையைத் தவிர்ப்பதற்கு எத்தனையோ வகையான முன்னேற்பாடுகளையெல்லாம் செய்து பார்த்தனர், ஒலிபெருக்கி அமைப்பாளர்கள். ஆயினும் எதிர்பார்த்த பயன் கிட்டவில்லை.

ஏப்ரல் இருபத்தைந்தாம் தேதி எங்கள் நாடக விழா தொடங்கியது. 'இராஜராஜ சோழன்' நாடகத்தைச் சிங்கப்பூர் முதலமைச்சர் திரு. லிம் யூ ஹாக் தொடங்கி

வைத்தார். 'தமிழ் முரசு' ஆசிரியர் திரு. கோ. சாரங்க பாணி தலைமை வகித்தார்.

சிங்கப்பூர் முதலமைச்சருக்கு நமது தென்னாட்டுக் கலையின்மீதுள்ள மதிப்பை உணர்த்தும் ஒரு சிறப்பு அம்சத்தை நாடக ஆரம்ப விழாவின் போது கண்டோம். திறப்புரையாற்றிய முதலமைச்சர், நாடகம் முடியும் வரை அமர்ந்திருந்து ஒவ்வொரு காட்சியையும் ரசித்த சிறப்பைத்தான் குறிப்பிடுகிறோம்.

நமது இந்தியப் பெருநகரான பம்பாயிலே தமிழ் நாடக விழாக்களைத் தொடங்கி வைக்க எழுந்தருளிய பிரமுகர்கள் வாய் இனிக்கப் பேசிவிட்டு நாடகத்தின் முதல் திரை உயர்த்தப்படுவதற்கு முன்பாகவே அரங்கை விட்டுச் சென்ற காட்சிகள் மனத்திரையிலே 'பளிச்' என்று தெரிந்தன. நமது சொந்த நாட்டுப். பிரமுகர் களிடங்கூடக் காண முடியாத கலை உணர்ச்சியை அயல் நாட்டார் என்று கருதக்கூடிய சிங்கப்பூர் முதல் அமைச்ச ரிடம் கண்டு வியந்து களிப்புற்றோம்.

அரங்கிலே ஆயிரக்கணக்கில் கூடியிருந்த ரசிகப் பெருமக்களின் கலையார்வத்துக்கும் தலைவணங்க வேண் டும். எதிரொலி காரணமாக நாடகத்தின் சுவை குன்றுமோ, ரசிகர்கள் பொறுமை இழந்து கூக்குரல் எழுப்புவார்களோ என்றெல்லாம் உண்மையில் எங்க ளுக்கு அச்சமாகத்தான் இருந்தது. ஆனால், கண்ணை மூடித் திறப்பதற்குள் காட்சி மாறும் விந்தைகளையும், பன்னிற ஆடையணிகளின் பளபளப்பையும், அன்பைக் கவர்ந்த நடிகர்களையும் கண்டு ஒவ்வொரு ரசிகரும் பிரமித்து நாடகத்தைச் சுவைத்தனர்.

9. விருப்பும் வெறுப்பும்

எங்கே சென்றாலும் தங்க வீடும் சாப்பாடும் வசதியாக அமைந்துவிட்டால் பயணத்தின் முதல் கவலை தீர்ந்து போய்விட்டது என்றுதானே பொருள்?

சிங்கப்பூர் பிராங்கல் எஸ்டேட்' பகுதியில் எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த வீடு வசதியானதுதான். ஆனால், ஐம்பத்தோரு உறுப்பினர்கள் அடங்கிய கலைக் குடும்பத்திற்கு அந்த வீடு மிகச்சிறியது. ஆயினும், அவ்வளவு பெரிய துறைமுக நகரில் அந்தத் தனி வீடு அமைந்ததே ஒரு பெரிய காரியம் என்று உள்ளூர் நண்பர்கள் மெச்சினார்கள். கலைக்குழுவினரில் காட்சியமைப்பு, ஒளி அமைப்பு, ஒலி அமைப்பு முதலிய ஏற்பாடுகளைக் கவனிக்கும் அன்பர்கள் பதினறு பேர்களும் நாடகக் கொட்டகையிலே தங்கிக்கொண்டனர். ஏனைய முப்பத்தைந்து பேர்களும் எதையும் தாங்கும் இதயத்தோடு அந்த வீட்டிலேயே இங்கிதமாகத் தங்கிக் கொண்டோம். "மனம் உண்டானால் இடம் உண்டு" என்ற பழமொழியின் உண்மையை எங்கள் அனுபவத்திலே கண்டு உணர்ந்தோம்.

தங்குவதற்கு மட்டும் அல்லாமல் அந்த வீட்டிலேயே எங்களுக்கு உகந்த முறையில் தென்னாட்டு உணவை ஆக்கிப் படைப்பதற்காகச் சில சமையல்காரர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

"இருக்கும் இடந்தேடி
எம்பசிக்கே அன்னம்
உருக்கமொடு கொண்டுவந்து..."

வழங்கும் இந்த ஏற்பாடு எங்கள் அனைவருக்கும் மிகவும் பிடித்திருந்தது.

நாள்தோறும் இன்னின்ன உணவு வகைகள் ஆக்க வேண்டுமென்று திட்டமிடும் கௌரவச்சமையல் அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டார், திரு. சிவதாணு.

வீட்டிலேயே சமையல்காரர்கள் இருந்தும் காலை உணவுக்கு இட்டிலி கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் ஓரிரு நாட்கள் எங்கள் உள்ளத்திலே எழுந்தது. பெரிய இட்டிலிக் கொப்பரையும் ஆட்டுக்கல்லும் கிடைக்காததனால்தான் இட்டிலி போட முடியவில்லை என்று சமையல்காரர் தெரிவித்தார். சிங்கப்பூரில் நூறு வெள்ளி கொடுத்தாலும் நல்ல ஆட்டுக்கல் கிடைக்காதாம்!

''பெரிய ஆட்டுக்கல் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை! இயந்திரத்திலே மாவை அரைத்துச் சமாளித்துக் கொள்ளலாம்! ஆனால், பெரிய இட்டிலிக் கொப்பரை ஒன்று அவசியம் வேண்டும்'' என்று சமையற்காரர் வற்புறுத்திச் சொன்னார்.

''இட்டிலிக் கொப்பரை எப்படி இருக்க வேண்டும்? விவரம் சொல்லுங்கள். நான் தகரத்தினாலேயே ஒரு பெரிய கொப்பரை செய்து தருகிறேன்!'' என்றார் சீனத் தொழிலாளி.

இட்டிலிக் கொப்பரை இருக்கும் முறையை எங்களுக்குத் தெரிந்த அரைகுறையான மலாய் மொழியிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும், அபிநய மொழியிலுமாய் அந்தச் சீனத் 'துக்கானிடம்' வருணித்தோம்.

''ஓ! அருமையாகச் செய்து தருகிறேன்'' என்று தமது சம்மதத்தை மலாய் மொழியில் கூறிச் சென்றார் அந்தச் சீனர்.

மறுநாள் அவர் புதிதாகச் செய்த தகரக் கொப்பரை வந்து சேர்ந்தது. அதைப் பார்த்ததும் எங்களுக்

குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை! சீனத் தொழிலாளி செய்த இட்டிலித் தட்டிலே ஒவ்வொரு குழியும் ஓமப் பொடி உழக்குப் போல் ஆழமாக இருந்தது!

அந்தத் தட்டுக்களைப் பயன்படுத்தி இட்டிலி தயாரித்துத்தான் பார்ப்போமே என்று துணிந்துவிட்டார் சமையற்காரர். அடடா! ஒவ்வொரு இட்டிலியும் எப்படி இருந்தது தெரியுமா? உயரமான காரைக் கட்டியைப் போல அத்துணை வலுவாக இருந்தது.

"இப்படி இட்டிலி தயாரித்தால் உடம்புக்கு ஒத்து வராது! தென்னிந்தியமுறையில் இயங்கும் உணவு விடுதிகளிலிருந்து தேவையான சமயம் இட்டிலியை வரவழைக்க வேண்டியதுதான்!" என்று முடிவு செய்தோம்.

இந்தச் செய்தியை ஜோகூர் சமஸ்தானத்தில் உள்ள மூவார் ஜெயங்கொண்டார் ரப்பர்த் தோட்ட அதிபரான திரு. சித. நாராயணன் செட்டியார் கேள்விப்பட்டார். மூவார் தண்டபாணி கோவிலிலிருந்து ஒரு பெரிய இட்டிலிக் கொப்பரையைக் கொண்டுவந்து கொடுத்தார். ஒரு நல்ல ஆட்டுக்கல்லும் கிடைத்தது. அன்று முதல் எங்கள் இட்டிலிப் பிரச்னை ஒருவாறு தீர்ந்தது.

சிங்கப்பூரில் கேளிக்கைப் பொருள்கள் பெரும்பாலும் விலை மலிவாகக் கிடைக்கின்றன. ஆனால், வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத உணவுப்பொருள்களும், பிற சாதனங்களும் விலை அதிகம்.

நம் நாட்டில் ஐந்தணுவுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு மண் பானை சிங்கையில் ஐந்து வெள்ளி கொடுத்தாலும் கிடைக்காது. ஆனால், ஐந்து வெள்ளி விலையில் ஒரு 'காமிரா' வாங்கிவிட முடியும்!

கண்ணைப் பறிக்கும் பசுமையான காய்கறிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனால்,அவற்றில் சுவை ததும்பி நிற்பதில்லை!

மாலை நேரங்களில் கடைத்தெருப்பக்கம் போய்விட்டால் கண்ணை உறுத்தும் காட்சிகளும், மூக்கைத் துளைக்கும் முடை நாற்றமும், ஒரு மாதிரியான அருவருப்பு உணர்ச்சியை உண்டாக்கும்.

பன்றி, வாத்து, கோழி, மீன் முதலானவற்றை முழுமையாக அவித்து அப்படியே தொங்கவிட்டிருப்பார்கள்.

உலர்ந்த பொடி மீன்களைப் பருப்பு வகைகளைப் போலவே மரத்தொட்டிகளில் நிரப்பிப் படிக்கணக்கில் அளந்து விற்கும் பலசரக்குக் கடைகளும் ஏராளம்!

முதன் முதலாக இது போன்ற ஒரு பலசரக்குக் கடையை நாங்கள் கண்ட போது எங்களுக்கு ஒரே வியப்பாயிருந்தது.

சிங்கப்பூர்ச் சாலைகளில் அநேகமாக ஒவ்வொரு சந்திப்பிலும் தானே இயங்கும் கைகாட்டி விளக்குகள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றன. எனவே, கார்களில் செல்லும் போது அடிக்கடி அந்தக் கைகாட்டி விளக்குகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நிற்க வேண்டியதாக இருக்கிறது.

இரவு நேரங்களில் கைகாட்டி விளக்குகளின் பச்சை, ஆரஞ்சு, சிவப்பு நிறங்களும், சாலைகளிலே பளிச்சிட்டுக் கொண்டிருக்கும் பாதரச ஒளி விளக்குகளும் நமது ஆலயங்களில் நடக்கும் 'லட்ச தீப' விழாவைப் போன்று ஒவ்வொரு தினமும் ஒரே ஒளி மயமாக விளங்குகின்றன.

* * *

இந்தப் பரந்த உலகத்திலே சிங்கப்பூர் நகரமும் அடங்கியுள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், சிங்கப்பூரிலே பல உலகங்கள் அடங்கியுள்ளன என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

'ஹாப்பி ஒரல்டு' என்ற உவகை உலகமும், 'கிரேட் ஒரல்டு' என்ற பெரிய உலகமும், 'நியூ ஒரல்டு' என்ற புது உலகமும் சிங்கை மாநகரில் உள்ள பற்பல உலகங்களில் மிகவும் முக்கியமானவைகளாகும்.

இந்த உலகங்கள் ஒவ்வொன்றும் நிரந்தரப் பொருட்காட்சி போலவே இயங்குகின்றது. நாள்தோறும் இரவு எட்டு மணிக்குத்தான் இந்த உலகங்களின் கோலாகலங்கள் ஆரம்பமாகும். ஒவ்வோர் உலகத்திலும் நுழைவதற்கு இருபது காசு—அதாவது, நமது இந்திய நாணயக் கணக்கில் நாற்பது காசு—செலுத்த வேண்டும். ஒவ்வோர் உலகத்திலும் நுழைந்து பார்த்தால்,

வேடிக்கை கேளிக்கை மீதே—மது
வெறிமோதிப் புரியாத மேல்நாட்டுப் பாதை
தேடியே பின்பற்றும் வேகம்—இன்னும்
தீராத மக்களோ ஏராள மாகும்

என்ற உண்மை புலனாகும்.

சூதாட்டமும் மதுபானமும் மிகப்பெரிய ஆதிக்கம் செலுத்தும் இந்த உலகங்களில் சிங்காரக் கடைகள் உண்டு; சினிமா நாடகத் தியேட்டர்கள் உண்டு; சீனர்களின் கோயில்கள் உண்டு; செவிகளைத் துளைக்கும் ''ராக் அண்டு ரோல்'' என்னும் சங்கீதமும், நடனப் பெண்களின் ஆட்டமும் ஏராளமாக உண்டு!

சிங்கப்பூர்-மலேயாவுக்கே உரித்தான 'ரோங்கின் என்ற நடனங்களை மேலே குறிப்பிட்ட உலகங்களில் தினமும் காணலாம். நடன மாதர்கள் மேடைமீது வரிசையாக நாற்காலிகளில் அமர்ந்திருப்பார்கள், சாயம் பூசிய உதடுகளும், ஈயம் பூசியது போல் பவுடர் தேய்த்த முகமும், துணிப்பஞ்சத்தினால் துவளுவது போன்ற உடலும் அமைந்த அந்த நடனப் பெண்மணிகளைக் கண்டாலே வேடிக்கையாக இருக்கின்றது. பெண்களுக்குப் பின்னால்

வாத்திய இசை உச்ச ஸ்தாயியில் முழங்குவதற்குத் தயாரான நிலையிலே காத்திருக்கும்!

நடனப் பெண்களோடு ஆட விரும்புவோர் யாராய் இருந்தாலும், பத்துக் காசுகள் கொடுத்து அநுமதிச் சீட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். அந்தச் சீட்டை எடுத்துக் கொண்டு நடன மேடையில் ஏறி, எந்தப் பெண்ணுடன் ஆட விருப்பமோ அந்தப் பெண்ணின் கையிலே சீட்டைக் கொடுக்க வேண்டும். உடனே, அவள் எழுந்து சீட்டுக்கு உரிய ஆடவனோடு நடனமாட வந்துவிடுகிறாள்! இந்த "ரோங்கின்" நடனத்தில் ஒரு முக்கியமான நிபந்தனை உண்டு. அதாவது, ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சற்றும் தொடாமலே விலகி நின்று, பின்னணி இசைக்கு ஏற்ப ஆட்டம் போட வேண்டும். ஒவ்வொரு டிக்கட்டுக்கும் மூன்று நிமிடங்கள்தாம் ஆட முடியும். மீண்டும் ஆட வேண்டுமென்று விரும்பினால் இன்னொரு டிக்கட் வாங்கி வர வேண்டும். கொஞ்சங்கூடச் சிரமம் இல்லாமல், உடம்பை வளைக்காமல், தாளத்துக்கு ஏற்றபடி மட்டும் ஆடும் இந்த நடனத்திலே சொக்கிப்போய் மேடையேறி ஆட முற்படும் ஆடவர்களில் இந்தியர்கள் சிலரையும் கண்ட போது எங்கள் இதயம் நோகத்தான் செய்தது!

கேளிக்கை உலகங்களில் ஆடை களைந்தாடும் நடன அலங்கோலமும் உண்டு. 'கலை' என்ற சொல்லுக்கு ஆடை என்ற ஒரு பொருள் உண்டு. அந்தக் 'கலை'யைக் களைந்து ஆடுவதும் ஒரு கலையா என்றெல்லாம் ஆடை களைந்தாடும் நடனமுறையைப் பல கூட்டங்களில் வன்மையாகக் கண்டித்துப் பேசும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. இதன் பயனாகவோ என்னவோ இந்த அலங்கோல நடனத்தின் தலைவியாக விளங்கிய திருமதி ரோஸ் சான் அம்மையாரே நடனத்திலிருந்து விலகி, நாங்கள் மலேயாவிலிருந்து புறப்படுவதற்குள்ளாகவே தம் மனத்துக்குப்

பிடித்த ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு இல் வாழ்க்கையில் ஈடுபடத் துணிந்துவிட்டாராம்! வாழ்க மணமக்கள்! வீழ்க அலங்கோல நடனம்!!

10. தலை சிறந்த கலைத்தோட்டம்

சிங்கப்பூரில் தலைவலி நோய் கண்டால் எவருமே மலைப்பது கிடையாது. ஏன் என்று கேட்கிறீர்களா? தலைவலியைத் தீர்த்துக்கொள்வதற்கு அங்கே மூன்று வழிகள் இருக்கின்றன.

புலியின் சின்னத்துடன் கிடைக்கும் களிம்பு, வெண் பொடி—இந்த இரண்டு உபாயங்களும் மருந்து வகைகளில் அடங்கும். இந்த இரண்டு வகைகளினாலும் தலைவலி தீரவில்லையானால் மூன்றாவது மருந்து ஒன்று உள்ளது. அது வெறும் மருந்தல்ல; கலையெனும் அருமருந்து; கண்களுக்கும் நல்விருந்து.

களிம்பாலும் பொடியாலும் தீர்க்க முடியாத தலைவலியைக் கண்டிக்கும் கலை மருந்தாக விளங்குவது "**ஹா - பார் - வில்லா**" என்னும் கலைத்தோட்டம். இது ஓர் அற்புதமான சிற்பமலை. சிங்கப்பூரிலிருந்து சுமார் ஆறு கல் தொலைவில் பாசிர் பாஞ்சாங் என்ற பகுதியில் நின்று புகழ் பரப்புகின்றது, இந்தக் கலைக் குன்று.

'ஹா' என்ற சொல்லுக்குச் சீன மொழியில் 'புலி' என்று பொருளாம். 'பார்' என்றால் 'சிறுத்தை.' எனவே, "ஹார்-பார்-வில்லா" என்றால் 'புலி-சிறுத்தை மாளிகை' என்று பொருள்படுவதாகத்தான் தோன்றும். ஆனால், இந்தப் பொருளோடுதான் கலைக்குன்று அமைந்துள்ளது என்று எண்ணிவிடக் கூடாது.

அப்படியானால் 'ஹா – பார் – வில்லா' என்ற பெயர் எப்படி அமைந்தது? இந்தக் கலைக் குன்றைச் செய்குன்ருகப் படைத்த கலைச்செல்வர்களின் பெயரையே சூடி நிற்கிறது இந்த ஈடற்ற கலைமலை. கலை உள்ளத்தோடு ஒரு சிற்ப மலையையே உற்பத்தி செய்த பெருமை, ஆ–பூன்–ஹா, ஆ-பூன்-பார் என்ற சீனச் சகோதரர்கள் இருவருக்கே உரியது. இவர்கள் கோடீசுவரர்கள். ஹாங்காங் நகரத்தைச் சேர்ந்தவர்கள். சிங்கப்பூர் நகரில் இவர்கள் நிறுவியுள்ள வர்த்தக நிலையங்கள் கணக்கில் அடங்கா.

வர்த்தக மன்னர்களான ஹா-பார் சகோதரர்கள் நம் சோழ மன்னர்களைப் போலவே 'புலி'யைத் தமது சின்னமாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். இவர்களுடைய நிறுவனங்கள் அனைத்தும் 'புலி மய'மாகவே விளங்குகின்றன. புலியின் சின்னத்துடன் களிம்பும், வெண் பொடியும் உற்பத்தி செய்யும் 'டைகர் பாம்' நிறுவனம் உலகப் புகழ் பெற்றது. புலிச்சின்னத்துடன் வெளியாகும் 'சிங்கப்பூர் ஸ்டாண்டர்டு" என்ற பிரபல ஆங்கில தினசரியும், "சின்–சியூ-ஜிட்-போ" என்ற சீனப் பத்திரிகையும், 'சுங் கியாங்' என்ற பாங்கியும் ஹா-பார் சகோதரர்களின் வர்த்தக நிலையங்களில் முக்கியமானவை,

இருநிதிக் கிழவர்களான ஹா - பார் சகோதரர்கள் தாம் ஈட்டிய பெரும்பொருளை இரும்புப்பெட்டியிலே பூட்டி வைப்பதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. நாட்டின் சிறப்புணர்த்தும் கலைத் தோட்டம் அமைத்துத் தமது புகழை நிலைநாட்ட வேண்டும் என்பதே இவர்களது குறிக்கோளாக இருந்தது. எனவேதான், இவர்கள் தமது வர்த்தகச் செழிப்புக்கு நிலைக்களனாகி விளங்கும் சிங்கப்பூரில் "ஹா-பார்-வில்லா" என்னும் கலைத் தோட்டத்தை உருவாக்கினர். இந்தக் கலைத்தோட்டம் உலகில் வேறு எந்தத்

தனி மனிதரும் செய்து காட்டாத புதுமை என்று சொல்ல வேண்டும்.

1937ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட இந்தக் கலைக் குன்றிலே சீமைக் காரையாலும், சுண்ணும்பாலும், சீனக் களிமண்ணுலும் அமைக்கப்பட்டுள்ள சிற்ப வேலைப்பாடு களின் அற்புதத்தைக் காணலாம். கலைத் தோட்டத்தை அமைப்பதற்குப் பத்து லட்சம் வெள்ளிகள்—அதாவது, சுமார் பதினெட்டுலட்சம் ரூபாய்-செலவாயிற்று என்றும், இதில் உள்ள சிற்பங்களைக் கண்காணிப்பதற்கு, மாதந் தோறும் ஐயாயிரம் வெள்ளிகள் ஒதுக்கப்படுகின்றன என்றும் அறிந்து வியப்படைந்தோம். பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய புதுமையான கலைப் பூங்காவை நிறுவிய ஹா—பார் சகோதரர்கள் பூதவுடலை நீத்துப் புகழுடம்பெய்திச் சில ஆண்டுகள் ஆகின்றன. சகோதரர் களின் பெயரை அழியாமல் காக்கும் நினைவுச்சின்னமாக விளங்குகிறது, ஹா – பார் - வில்லா என்னும் கலைத் தோட்டம்.

கலைப் புரவலர்களாக வாழ்ந்து மறைந்த ஆ-பூன்-ஹா, ஆ-பூன்-பார் ஆகிய இரு சகோதரர்களின் நினைவுக்காகக் கலைப் பூங்காவின் மத்தியிலே தனித்தனியே உயரமான தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன.

கலைவளம் செறிந்த ஹா-பார்-வில்லாவை நாங்கள் கட்டாயம் பார்த்தாக வேண்டும் என்று மிகவும் தூண்டி, விடாப்பிடியாக எங்கள் குழுவினர் அனைவரையும் கலைக் குன்றுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தமிழன்பர்கள் இருவர். ஒருவர், திரு. ஏ. பி. ராமன். இவர் சிங்கையிலிருந்து வெளியாகும் 'கலைமலர்' என்ற கலை ஏட்டின் ஆசிரியர். மற்றவர், திரு. சந்திரன். இவர் 'ரேடியோ மலேயா'வின் சிங்கப்பூர் நிலையத்தில்

அலுவல் பார்க்கிருர். இவர்கள் இருவரும் நாங்கள் சிங்கப்பூர் சேர்ந்தது முதல் எங்கள் குழுவினரோடு அடிக்கடி அன்புத் தொடர்பு கொண்டு பழகி வந்தார்கள்.

இவர்களின் துணையோடு மே மாதம் ஐந்தாம் தேதி காலையில் நாங்கள் ஹா-பார்-வில்லாவை அடைந்தோம். பாசிர் பாஞ்சாங் கடற்கரையில் அலைமுகத்தை நோக்கி நிற்கும் கலையகமாகக் காட்சியளிக்கிறது, இந்தக் கலைப் பூங்கா.

ஹா-பார்-வில்லா ஒரு சிறந்த கலைமலை என்று கேள்விப்பட்டிருந்தோம். ஆதலினுல், நூற்றுக்கணக்கான படிகளில் ஏற வேண்டியிருக்குமோ என்று முதலில் ஐயமடைந்தோம். ஆயினும் குன்றை அணுகியதும் பரந்து விரிந்த பாதை சரிவான ஏற்றமுடையதாகத் தென்பட்டது. எனவே எங்களுக்குத் தெம்பு வந்தது. குன்ருத ஆர்வத்துடன் கலைக்குன்றின் சரிவுப்பாதையிலே ஏறத் தொடங்கினேம்.

பாதையின் முகப்பு வாசல் வண்ண வளைவாக நமது கண்ணைக் கவர்கிறது. அதன் நெற்றியிலே ஹா-பார்-வில்லா என்ற பெயர் சீன மொழியிலும் ஆங்கிலத்திலும் தீட்டப்பட்டுள்ளது.

முகப்பு வாசலைக் கடந்து முன்னேறும் போது நமது வலப்புறத்தில் சுமார் பதினைந்து அடி உயரமுள்ள மேடு இயற்கைப் பாறைகளைப் போலவே எழுப்பப்பட்டுள்ளது. அந்த மேடு பாதையோடு தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளது. அதன்மீது சிற்ப வேலைப்பாடுகள் தெரிகின்றன. பாதையில் நுழைந்தவுடன் மிகப்பெரிய மலைப் பாம்பு ஒன்று பாறைகளுக்கு ஊடே வளைந்து நெளிந்து படுத்திருப்பதைக் கண்டு திகிலடைய நேரிடும். உற்று நோக்கினுல்தான் அந்தப் பாம்பும் ஒரு சிற்பமே என்ற உண்மை புலப்படும்.

இன்னும் கொஞ்ச தூரம் போனல் பாறைகளின் மீது பயங்கரமான புலி ஒன்று பாய்ந்துகொண்டு நிற்கும் காட்சி அனைவரையும் மிரட்டுவதைக் காணலாம்.

ஏற்றப்பாதையின் இடப்புற மதிற்சுவர் அழகு தவழும் கலைச் சுவராகவே விளங்குகின்றது. அது சாதாரணச் சுவர் போல் இல்லை; கொஞ்சம் தொலைவிலிருந்து நோக்கினுல் ஆயிரக்கணக்கான சாத்துக்குடி ஆரஞ்சுப் பழங்களை வரிசை வரிசையாகச் சுவர் போல அடுக்கி வைத்திருக்கிருர்களோ என்றுதான் எண்ணத்தோன்றும்!

தட்டுத்தட்டாக உயர்ந்து, வளைந்து, சுற்றிச் சுற்றிச் செல்லும் பாதை வழியே நடந்து, இன்னும் மூன்று எழிலான கலை வாசல்களைக் கடந்து செல்லலாம். ஒவ்வொரு வாசலுக்குள்ளும் நுழைந்து செல்லும் போது நம் கண்ணிற்படுகின்ற வண்ணச் சிற்பக் காட்சிகள் எத்தனையோ கதைகளை நமக்கு எடுத்து இயம்பும் நிலையில் உள்ளன.

சீனர்களின் பழக்கவழக்கங்கள், அவர்கள் நம்பும் புராணக் கதைகள், ஈசாப் கதைகளைப் போன்று மிருகங்களைப் பற்றிய கதைகள், தீமை செய்த உயிர்கள் நரக உலகத்தில் படும் துன்பக் காட்சிகள், இப்படியாக எண்ணற்ற கருத்துக்கள் காட்சி வடிவங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றுக்கும் விளக்கமும் எழுதப்பட்டுள்ளது.

புத்தர் என்ருல் நமக்கு அருள் பொழியும் திருவதனத்தோடு கூடிய ஓர் அழகுத் திருவுருவந்தான் நினைவுக்கு வரும். ஆனுல், சீனர்கள் புத்தரைப் பல வடிவங்களில் கண்டு மகிழ்கிருர்கள். தொந்தியும் தொப்பையும் வாய்ந்த தஞ்சாவூர்ப் பொம்மை போன்று வடிவம் அமைத்து அதற்குச்'சிரிக்கும் புத்தர்' என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.

ஆறு முக்குக் கோபுரம் போல் அமைந்த மாளிகை யின் உச்சியில் 'மலர்மிசை ஏகிய' வனப்பு மிக்க புத்தரின் தோற்றம் என்றும் இதயத்தை விட்டகலாத ஒன்ருகும்.

சீன மக்கள் போற்றும் மும்மூர்த்திகளின் சிற்பம் ஒன்று அனைவருடைய கவனத்தையும் கவர்வதாகும். இவர்களில் ஒரு மூர்த்தி வெண் தாடியுடனும், மற்றும் இரு மூர்த்திகள் கருந்தாடியுடனும் காட்சி தருகின்றனர். மக்களுக்கு இன்பமும், செல்வமும், வாழ்வும் அளிக்கும் கடவுள்களாக இவர்கள் கருதப்படுகின்றனர்.

கலைப்பூங்காவில் உள்ள சில சிற்பங்கள் நகைச் சுவை உணர்ச்சியோடு அமைக்கப்பட்டுள்ள சிறப்பைக் கண்டு ரசித்தோம். சீட்டாட்டத்திலே சண்டை வந்துவிட் டால் எப்படியிருக்கும் என்பதைக் காட்டும் ''சூதாடி கள்'' என்ற காட்சி மிக அற்புதமாக உருவாக்கப் பட்டுள்ளது.

ஒரு பெண்ணை அவளுக்கு விருப்பமில்லாத ஆடவ னுக்கு மணம் முடிப்பதைக் குத்திக் காட்டும் ''கட்டாயக் கல்யாணம்'' என்ற காட்சி சிந்தனையைத் தூண்டுகிறது.

இவ்வண்ணமே, பழங்காலப் போர் முறை, நீராடும் நங்கையர், கொரில்லாக் குடும்பம், கரடிக் குடும்பம், எலிக்குடும்பம் முதலிய பல நூறு சிற்பக் காட்சிகள் பல வண்ணச் சிறப்போடு மிளிர்கின்றன. இவற்ரேடு குகை களும் கோபுரங்களும், தாமரைத் தடாகங்களும் இன் னும் பல காட்சிகளும் கலைத்தோட்டத்துக்கு எழில் ஊட்டுகின்றன.

குடும்பங்களில் மாமியாருக்கும் மருமகளுக்கும் அடிக்கடி சச்சரவு நடப்பதுதான் உலக இயல்பு. ஒரு லட்சியக் குடும்பத்தில் மருமகள் மாமியாரை எப்படிப் போற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு அற்புதக் காட்சி அமைந்துள்ளது.

மாமியார் எலும்புந்தோலுமாக மெலிந்த கிழவி. அவளுடைய நொந்த உடல் நிலை எந்த வகையான உணவையும் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. நீர் ஆகாரம் மட்டுமே மாமிக்கு ஏற்றது என்பதை மருமகள் உணர்கிருள். எனவே, மாமியையும் தன் குழந்தை போல் மதித்து அன்பு காட்டி, பாலூட்டி வளர்த்து வருகிருள் மருமகள். கிழவி தன் மருமகளிடம் பால் பருகும் பாவனையில் உள்ள சிற்பம் இதயத்தைத் தொட்டு உருக்குவதாக இலங்குகிறது.

சீன அரச பரம்பரையினரைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகளில், பத்தாவது நூற்ருண்டில் அரசாண்ட 'டாய்' சுங் என்னும் மன்னன் அறிஞர் ஒருவரை இந்தியாவுக்குத் தூதராக அனுப்பியதையும், அந்த அறிஞர் சீடர்களுடன் மேற்கு நோக்கிப் புறப்பட்டு வரும் பயணக் காட்சிகளையும் தொடர்கதைபோல் அமைத்துள்ள பகுதி கண்டு மகிழ்தற்கு உரியது. சீனத்தூதர் தம் பயணத்தில் அநுபவித்த இடர்ப்பாடுகளையெல்லாம் சித்திரிக்கும் இந்தப் பகுதியில் காட்சிகளின் விளக்கம் கதை போல எழுதப்பட்டுள்ளது.

கலை ஆர்வம் கொண்ட அந்த இரண்டு சீனச் சகோதரர்களும் மக்களுக்கு வெறும் மகிழ்ச்சியூட்டும், பொழுது போக்கும் கலைக் காட்சிகளை மட்டும் வைக்கவில்லை. மக்கள் எல்லாரும் இந்த உலகில் நியாயம் தவருமல், அன்பு நெறியிலிருந்து சிறிதும் பிறழாமல் வாழ வேண்டும் என்பதற்காகவும் இந்தக் கலைக் காட்சியில் ஒரு பகுதியை வைத்திருக்கிருர்கள். தீமை செய்தவர்கள் இந்த உலகில் தப்பித்துக்கொண்டாலும் அவர்கள் உண்மையில் தப்பித்துக்கொண்டவர்களாக மாட்டார்கள். அவர்கள் செய்த தீமைகளுக்கு உரிய கொடிய தண்டனைகளை

அநுபவித்தே தீருவார்கள் என்பதை விளக்கிக் காட்டும் ஒரு பகுதியையும் நிர்மாணித்திருக்கிருர்கள்.

தீமை செய்த உயிர்கள் நரக உலகத்திலே தத்தம் பாவச் செயல்களுக்கு ஏற்ற தண்டனையை அடையும் என்பதைச் சித்திரிக்கும் நரக உலகக் காட்சிகள் ஹா-பார்-வில்லாவின் சிறந்ததொரு பகுதியாகும்.

தீமை செய்த உயிர்களைத் தண்டிப்பதற்குப் பத்து நீதி மன்றங்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே நீதிதேவன் உண்டு. சின்குவாங், சூ கியாங், சுங் டீ, வூ குவான், யென் லோ, பியன் ஷான், டாய் ஷான், டு ஷீ, பிங் டெங், சுவான் லுன்-இவைகள் நீதி தேவர்களின் பெயர்களாகும்.

அக்கினித் தம்பத்தைத் தழுவச் செய்தல், செக்கி லிட்டுப் பிழிதல், கொதிக்கும் எண்ணெய் உள்ள கொப்பரையில் தள்ளுதல், மண்டை பிளக்கப்படுதல், வயிற்றைக் கிழித்துக் குடலைப் பிடுங்குதல், பல் சக்கரத்தின் கீழே நசுக்குதல் முதலிய கண்டார் மருளும் பற்பல தண்டனைக் காட்சிகள் புராண முறையில் தனித்தனி அறைகளிலே உருவாக்கப்பட்டுள்ளன.

புத்த மதக் கோட்பாடுகளை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள இந்தக் காட்சிகளில் சில நமது நாட்டின் புராணக் கதைகளோடு நெருங்கிய தொடர்பு உள்ளவைகளாகத் திகழ்கின்றன. இறந்த உயிர்கள் விதிச் சக்கரத்தின் வழியாக மீண்டும் பூமிக்கு வந்து மறு பிறவி பெறுகின்றன என்ற தத்துவத்தை எடுத்துக்காட்டும் 'விதிச் சக்கரத்'தையும் ஹா-பார்-வில்லாவில் காணலாம்.

கலைக்குன்றிலே ஏறிவிட்டால் எதைப் பார்ப்பது, எதை விடுவது என்று தெரியாமல் திணற வேண்டிய அளவுக்குப் பல நூறு காட்சிகள் நிறைந்து கிடக்கின்றன. ஒவ்வொரு காட்சியையும் நன்ருகப் புரிந்துகொண்டு

செல்வதென்றால் கலைப்பூங்காவை விட்டு வெளியே வரப் பல நாட்கள் ஆகும். எனவே, இயன்ற மட்டும் காட்சிகளை நான்கு மணி நேரத்துக்குள் சுற்றிப் பார்த்தோம்.

அத்தனை காட்சிகளையும் கல்லிலே செதுக்கியிருந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்தோம். கல்லிலே பொதிந்த காட்சிகளாக இருந்தால் காலமெலாம் அழியாமல் இருக்குமே என்ற எண்ணமும் எழுந்தது. ஆயினும், காரையிலே உருவான பல வண்ணச் சிற்பங்கள் நிறைந்த 'ஹா-பார்-வில்லா' காலத்தை வென்று நின்று புகழ் பரப்பும் வகையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கொளுத்தும் வெயிலானாலும், கொட்டும் மழையானாலும் சிற்பங்கள் பாதிக்கப்படுவதில்லை என்பதை உணர்ந்து மகிழ்ந்தோம்.

இப்போது 'டைகர்' நிறுவனங்களின் தலைவராக இலங்கும் திரு ஆ-செங்-சை என்பவரும் ஆ-பூன்-ஹாவைப் போலவே கலையுள்ளத்தோடு கலைத்தோட்டத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வருகிறார்,

ஹா-பார்-வில்லாவிலிருந்து திரும்புகையில் நாசிம் ரோட்டில் உள்ள ஆ-பூன்-ஹாவின் இல்லத்துக்குச் சென்றோம். அந்த மாபெரும் வீடும் கலை மாளிகையாகவே காட்சி தந்தது. மரகதம், கோமேதகம், வைடூரியம் முதலிய விலை உயர்ந்த கற்களினால் செய்யப்பட்ட கலைப் பொருள்கள் மிகுந்த வியப்பை அளித்தன.

அவற்றையெல்லாம் கண்ட போது, உலகில் உள்ள செல்வர்களெல்லாம் ஆ-பூன்-ஹாவைப் போலவே கலையுள்ளம் படைத்தவர்களாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணத் தோன்றியது.

11. காய்ச்சல் தந்த கலக்கம்

மே மாதம் ஆறும் தேதி காலையில் சிங்கப்பூர்ச் செய்தித்தாள்களில் பரபரப்பான ஒரு செய்தி எட்டுப் பத்தித் தலைப்புக்களில், கொட்டை எழுத்துக்களில் வெளி யாயிற்று. அதைக் கண்டு நகர மக்கள் அனைவரும் திகில் அடைந்தனர். அந்தச் செய்தி எங்களுக்கும் மிகுந்த கலக் கத்தைத் தந்தது.

''ஃபுளு' என்னும் காய்ச்சல் நகரத்தில் மிக வேக மாகப் பரவுகிறது!'' என்பதுதான் அந்தச் செய்தி.

ஹாங்காங் துறைமுகத்திலிருந்து சிங்கப்பூர் வந்து சேர்ந்த ஒரு சரக்குக் கப்பல் மூலமாகவே அந்தக் காய்ச் சல் இறக்குமதி ஆயிற்று எனவும் செய்திகள் குறிப்பிட் டன. சிங்கப்பூர் சுங்க வரி இல்லாத துறைமுகம் என்பது அந்தக் காய்ச்சலுக்கும் எப்படித்தான் தெரிந்ததோ? தங்கு தடையில்லாமல் நகரிலே புகுந்து விளையாடத் தொடங்கி விட்டது காய்ச்சல்!

'ஃபுளு' என்பதைச் சளிக் காய்ச்சல் என்ற பெயரால் தமிழ்ப் பத்திரிகைகள் அறிமுகப் படுத்தின. இந்த நோயின் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் படுத்த படுக்கையாகிவிட்டனர்!

"இது பொல்லாத நோய்தான்; ஆனால், உயிர்களைக் கொல்லாத நோய்!" என்று டாக்டர்களின் ஆறுதல் அறிக் கைகள் நாள்தோறும் வெளியாகிக்கொண்டிருந்தன.

இது உயிரைக் கொல்லாத நோயாக இருக்கலாம்! ஆனால், உடல் வலிவைக் கொன்றுவிடுகிறதே என்றுதான் மக்கள் கலங்கினர்.

பொல்லாச் சளிக்காய்ச்சல்
போலே உடல்வலிவைக்
கொல்லாமற் கொல்வ தெது?

என்று புதுக்குறள் இயற்றும்படியாகவே இருந்தது சளிக் காய்ச்சலின் தன்மை.

உடம்பிலே ஊடுருவிச் சக்தியையெல்லாம் பிடுங்கிக்கொண்டு சடலத்தை மட்டும் பலஹீனமாக விட்டுச் செல்வதே சளிக்காய்ச்சலின் களியாட்டம் என்பது தெரிய வந்தது. இந்தக் காய்ச்சல் காற்றின் மூலமாகப் பரவும் நோய். ஆதலால், இயன்ற மட்டும் வெளியே நடமாட்டம் இல்லாமல் வீட்டுக்குள்ளேயே அடங்கியிருப்பது நல்லது என்று யோசனை கூறப்பட்டது.

புதிய நகருக்கு வந்தும் விருப்பம் போல் வெளியே உலவ முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதே என்ற கவலை எங்களை வாட்டியது.

நகரிலே காய்ச்சல் மும்முரமாகப் பரவிய சமயத்திலேதான் பேராசிரியர் 'கல்கி' அவர்களின் அமர இலக்கியமான "கள்வனின் காதலி" நாடகம் ஆரம்பமாயிற்று. காய்ச்சல் தீவிரமாகப் பரவியிருப்பதால் சினிமா, நாடகம், நடனம் போன்ற பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை மக்கள் தவிர்க்க வேண்டுமென்று அரசாங்க அறிக்கைகள் எச்சரிக்கை செய்தன. அப்படியிருந்தும் ஏராளமான மக்கள் நாடக ஆர்வத்துடன் அரங்கிலே குழுமியிருந்த அருமையை எண்ணி வியந்தோம்.

'கள்வனின் காதலி' இரண்டாவது நாளில் கலைக் குழுவினரையும் அலைக்கழிக்க ஆரம்பித்தது சளிக்காய்ச்சல். காய்ச்சலுக்கு அறிகுறிகளான முக்கல், முனகல், இரு

மல், செறுமல் முதலிய ஒலிகள் மேடைக்கு உள்ளும் புறமும் கிளம்பிக்கொண்டிருந்தன. ஏற்கனவே எதிரொலி நிரம்பிய மண்டபம் ஆதலால் எல்லா ஒலிகளும் இணைந்து அரங்கிலே எதிரொலித்து நாடக வசனங்களை அடக்கிக் கொண்டு ஆரவாரம் செய்தன.

நடிக நடிகையர் சிலர் காட்சிகளுக்கு வரும் போது எப்படியோ இருமலைச் சமாளித்துக்கொண்டும், காட்சி முடிந்து மேடைக்குள் சென்றவுடன் காய்ச்சலின் தொல்லையை அநுபவிப்பதுமாகத் திண்டாடவும் நேர்ந்தது.

ஹார்மோனிய இசைவாணர் திரு. எம். எஸ். செந்தில் வேல் சளிக் காய்ச்சலினால் கடுமையாகத் தாக்குண்டார்.

குழுவினரில் பலர் சளிக் காய்ச்சலுக்கு உள்ளான காரணத்தினால் மே மாதம் ஒன்பதாம் தேதி மூன்றாவது தடவையாக நடைபெறுவதாக இருந்த ‘கள்வனின் காதலி’ நாடகத்தை நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று.

இரண்டு நாட்கள் கழித்து ‘ஔவையார்’ நாடகம் தொடங்கியது. கதாநாயகியான ஔவையாரே சளிக் காய்ச்சலுடன் பேசவும் பாடவும் வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டது. திரு செந்தில்வேலுக்குக் காய்ச்சல் கடுமையாகிவிட்டமையால் ஹார்மோனியம் இல்லாமலே ‘ஔவையார்’ நாடகம் நடைபெற்றது. இது நாடக உலகிலேயே ஒரு புது அநுபவம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஓரிருவரைத் தவிரக் குழுவினர் அனைவரும் காய்ச்சலினால் ஒரு சில நாட்களாவது அவதியுற வேண்டியதாகவே இருந்தது. ஆனால், சளிக் காய்ச்சலைக் கண்டு எங்களில் யாரும் அஞ்சவில்லை. ஏனெனில், “அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்றசொல்லும் உடைய” டாக்டர் ஈ. ஏ. சங்கர் அவர்கள் குடும்ப டாக்டர் போலவே எங்களோடு இணைந்துவிட்டார்.

டாக்டர் சங்கர் சிங்கப்பூரில் வாழும் தமிழர்களுக்கும், அந்த நகரைக் காணச் செல்லும் தமிழர்களுக்கும் சாதி சமய வேறுபாடின்றி உதவி செய்துவரும் இதயப் பண்பு படைத்தவர்.

டாக்டரின் புதல்வியான செல்வி உமா நடனக் கலையில் தேர்ச்சி பெற்றவர். எங்கள் கலைக் குழுவின் நடன ஆசிரியரான திரு டி. வி. சௌந்தரராஜன் செல்வி உமாவின் நடனத் திறமைக்குப் புது மெருகு கொடுப்பது போல், குறுகிய காலத்துக்குள் புதிய நடன அம்சங்கள் சிலவற்றைக் கற்பித்தார்.

இவ்வாறு நடனக் கலையில் புதுப்பயிற்சி பெற்ற குமாரி உமாவின் நடன நிகழ்ச்சிகள் மே மாதம் பத்தாம் தேதி விக்டோரியா நினைவு மண்டபத்தில் சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் திரு பிராகாவின் தலைமையில் நடைபெற்றன. எங்கள் குழுவின் நடன ஆசிரியர் சௌந்தரராஜனும், பின்னணி இசைக்குழுவினரும் உமாவின் நடனத்துக்குத் துணையாகப் பின்னணியில் இருந்து சிறப்பு அளித்தனர். இந்தியர்கள் மட்டுமன்றி ஏனைய இனத்தவரும் குமாரி உமாவின் தரம் உயர்ந்த நடன ஆற்றலைப் புகழ்ந்தனர்.

டாக்டர் சங்கர் அவர்களின் துணையால் சளிக் காய்ச்சலை வென்று சமாளித்து வரும் சமயத்தில் டாக்டரே சளிக் காய்ச்சலில் படுத்துவிட்டார் என்று அறிந்து அதிர்ச்சியடைந்துவிட்டோம்.

நாளடைவில் 'ஃபுளூ' காய்ச்சல் மலேயா முழுவதும் பரவிக் கடல் கடந்து தமிழகத்திலும் நுழைந்துவிட்டதாக அறிந்து துயர் எய்தினோம். சிங்கப்பூரிலிருந்து சென்ற கப்பல் ஒன்றின் மூலம் சளிக் காய்ச்சல் இந்தியாவுக்குள் புகுந்து பரவத் தொடங்கியது என்று கேள்வியுற்று வருந்தினோம்.

தமிழகத்திலிருந்து நண்பர்கள் சிலர் எங்களுக்கு எழுதிய கடிதங்களில், "நாங்கள் கலைச் சரக்கைக் கப்பலில் ஏற்றி அனுப்பினோமே! நீங்கள் எங்களுக்குக் காய்ச்சலை ஏற்றுமதி செய்தது முறைதானா?..." என்று வேடிக்கையும் விசனமும் கலந்த கேள்விகளை எழுப்பியிருந்தார்கள்.

இந்நிலையில் சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்குப் புறப்படும் பயணிகள் கப்பலில் ஏறுவதற்கு முன் பாகவே சுகாதாரப் பரிசோதனை செய்யப்படுவார்கள் என்றும், பின்னர் கப்பல் போக்குவரத்திலேயே தாமதம் ஏற்படலாம் என்றும் பலப்பல செய்திகள் வந்து கொண்டேயிருந்தன. இந்தச் செய்திகளின் காரண மாகத் தாயகத்தில் உள்ள எங்கள் குடும்பங்களையும் நண்பர்களையும் பற்றிய நினைவு மிக அதிகமாக எழுந்தது.

"என் செய்வது? இப்பொழுதுதானே முதல் முகாமில் இருக்கிறோம். என்ன தடைகள் வந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான்!" என்ற ஆறுதலை உள்ளத்தில் நாங்களாகவே வரவழைத்துக் கொண்டோம்.

12. சிங்கை மக்களும் திருக்கோயில்களும்

சிங்கப்பூரில் இப்போது ஏறத்தாழப் பன்னிரண்டு இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் எழுபத் தைந்து சதவிகிதம் சீனர்களும், ஏறக்குறைய பத்து சதவிகிதம் இந்தியர்களும் வாழ்கின்றனர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினென்றும் ஆண்டிலே சுமார் மூன்று லட்சம் மக்களைக் கொண்டிருந்த தீவு இப்போது, அதாவது நாற்பத்தைந்து ஆண்டுகளில்-நாலு மடங்கு மக்களைத் தாங்கி நிற்கிறது என்றால் இங்கு வாழ்வோரின் தொகை எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகிறது என்பது தெரிகிறதல்லவா? இன்னும் பதினைந்து ஆண்டுகளில், சிங்கை மாநகரில் மக்களின் எண்ணிக்கை இருபது இலட்சமாக உயர்வது திண்ணம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இன்னொர் உண்மையும் தெரிவிக்கப்பட்டது. அதாவது, சிங்கையில் வாழும் மக்களிலே பாதிக்குமேல் இருபது வயதுக்கு உட்பட்டவர்களாம். ஏராளமான மனித இளங்குருத்துக்களை ஏந்தி நிற்கும் நகரத்திலே உற்சாகத்திற்குப் பஞ்சமா என்ன?

''பத்துக் குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கணவனைப் பதினோராவது குழந்தையாகப் போற்றுவாயாக!'' என்று பெண்களை வாழ்த்தும் மரபு நமது நாட்டிலே உண்டு. இந்த வாழ்த்து நமக்கு அவ்வளவாகப் பொருந்துவதில்லை. ''குடும்பக் கட்டுப்பாடு'' இயக்கம் வலுத்துவரும் இந்தக் காலத்தில் இத்தகைய வாழ்த்தை எவரும் விரும்பவும் மாட்டார்கள். ஆனால், சீன சமூகத்தினர் இந்த வாழ்த்தை அப்படியே ஏற்று வாழ்க்கையில் பின்பற்றி உள்ளனர் என்று சொல்லலாம் சிங்கப்பூர்-மலேயாவிலே வாழ்ந்துவரும் சீனக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது பத்துக் குழந்தைகளாவது இருக்கும் என்று தெரிகிறது.

குழந்தைச் செல்வத்தைப் பேணித் தம் இனத்தை மலைநாட்டில் பெருக்கி வருகிறார்கள் சீனர்கள் என்று சொல்வது பொருந்தும்.

பல்வேறு இனத்தவரும் பல்வேறு சமயத்தினரும் இணைந்து வாழும் கதம்ப நகரம் சிங்கப்பூர். எனவே,

ஒவ்வோர் இனத்தின் நாகரிகச் சின்னங்களையும் சமயச் சின்னங்களையும் சிங்கையிலே காண முடிகிறது.

சீனர்களின் கோயில்கள் ஏராளமாக உள்ளன. திலோக் அயர் வீதியில் உள்ள 'புண்ணிய ஆலயம்' எல்லாவற்றிலும் பழமையானது என்று கூறப்படுகிறது. இந்தக் கோயிலைப் பற்றி ஒரு கதை உண்டு.

பல ஆண்டுகளுக்கு முன் இந்தக் கோயில் விளங்கும் இடத்திற்கு அருகில் உள்ள கடலில் ஒரு பிணம் மிதந்து வந்ததை மீனவர்கள் கண்டார்களாம். மூடநம்பிக்கை மிகுந்த அந்தச் செம்படவர்கள் அந்தப் பிணத்தையே தெய்வமாகக் கருதி, அதற்கு ஒரு கல்லறை கட்டி வணங்கினார்களாம். இந்த வழிபாடு தொடர்ந்து நடந்து வந்ததாம். பல ஆண்டுகளுக்குப் பின் அந்தக் கல்லறைக்குப் புறம்பாக, ஒரு சீனக் கோயில் எழுப்பப் பட்டது. கோயிலுக்குப் பின்புறம் ஒரு பெரிய மரத்தின் கீழே பழைய கல்லறையை இன்றும் பார்க்கலாம். இந்தக் கோயிலைக் கட்டி 43 ஆண்டுகள் ஆகின்றன.

கிம் கீட் வீதியில் உள்ள "சியோங் லிம் சி" என்னும் புத்தர் கோயில் சீனர்களின் கோயில்களிலேயே மிகப் பெரியதும் சிறந்ததும் ஆகும். கண்டு மகிழ வேண்டியவை. இங்குள்ள புத்த விக்கிரகங்கள். அவை மிக அழகாக உருவாக்கப்பட்டுள்ளன.

ரேஸ் கோர்ஸ் வீதியில் அமைந்துள்ள கோயிலில் 50 அடி உயரமுள்ள பிரும்மாண்டமான புத்தர் சிலையைக் காணலாம். புத்தரைச் சுற்றி அமைத்துள்ள 'ஆயிர விளக்கு' அலங்காரம் உள்ளத்தைக் கவர்கின்றது. புத்தரது ஆசனத்துக்குக் கீழே ஒரு நிலவறை உள்ளது. சிலைக்குப் பின்புறமாக வாசல் அமைந்த அந்த அறைக் குள்ளே சீனர்கள் தாம் எடுத்துக்கொண்ட காரியம் காயா, பழமா என்று நிமித்திகம் பார்க்கும் காட்சிகளைக் காணலாம்.

பொதுமக்கள் எளிதாகச் சென்று காணத்தக்க முறையில் நகருக்கு மையமான இடத்தில் அமைந்துள்ள இந்தக் கோயிலின் முன் வாசலில் இருமருங்கிலும் பயங்கரமான பாயும் புலிகளின் சிலைகள் மருட்சி தருகின்றன. இவற்றைக் கடந்து உள்ளே சென்றால் மருட்சியைப் போக்கும் புத்தரின் மலர் முகத்தைக் காணலாம்.

கருணாதேவியின் கோயில் என்ற பெயரில் சில சீன ஆலயங்கள் சிங்கப்பூரில் இருக்கின்றன. ஜூசியாட் பிளேஸ் என்ற இடத்துக்கு அருகில் உள்ள கருணாதேவி கோயில் புகழ் பெற்றது. அங்குள்ள தேவியின் திருவுருவச்சிலை நிறைந்த ஆபரணங்களோடும், பெரிய கிரீடத்துடனும், பதினெட்டுக் கைகளுடனும் தங்கமயமாகக் காட்சி தருகிறது. ஒவ்வொரு கையிலும் வாள், மணி, மாயக்கண்ணாடி முதலிய அடையாளப் பொருள்கள் தரப்பட்டுள்ளன. கருணாதேவியைப் பற்றியும் கர்ண பரம்பரைக் கதை ஒன்று வழங்கி வருகிறது. கருணாதேவி ஓர் இளவரசி. அவளுடைய தந்தை சாவை எதிர் நோக்கும் நிலையில் கடும் நோய்வாய்ப்பட்டிருந்தார். தந்தைக்குப் போதிய ரத்தம் ஊட்டுவதற்காக இளவரசி தனது கரத்தையே வெட்டவும் துணிந்தாள். இந்தத் துணிகரச் செயலைச் செய்த இளவரசி கடவுளாகவே கருதப்பட்டு வணங்கும் நிலையை எய்தினாள். இப்படிச் சொல்லப்படுகிறது கருணாதேவியின் கதை. கதை எப்படியிருந்தாலும் நமது நாட்டில் உள்ள காளியின் சிலையைப் போல்தான் இருக்கிறது கருணாதேவியின் சிலை.

சிங்கப்பூரில் கிறிஸ்தவக் கோயில்களுக்கும், மசூதிகளுக்கும் குறைவில்லை. ஹில் தெருவில் உள்ள கிரகரி மாமுனிவர் கோயில் மிகப்பழமையான கிறிஸ்தவக் கோயில்களில் ஒன்று.

அரேபிய வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள சுல்தான் மசூதி முஸ்லிம்களின் மிகப்பெரிய தொழுகை நிலையமாகத் திகழ்கிறது. 'ஹரி ராய பூசா', ஹரி ராய ஹாஜி' என்னும் முஸ்லிம் பெருநாட்களின் போது மலாய்க்காரர்கள், தமக்குரிய தேசிய உடையணிந்து குதூகலமாகக் காணப்படுவார்கள். இந்திய முஸ்லிம் களும் இந்த விழாக்களிலே கலந்துகொள்வார்கள்.

சிங்கை மாநகரின் சிறப்புக்குத் துணையாக விளங்கும் நம் திருக்கோயில்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். தெற்குப் பால வீதியில் உள்ள 'மாரியம்மன் கோயில் மிகப்பழமையான திருக்கோயில். 1850-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கோயிலின் அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய கோபுரம் நமது தென்னாட்டின் சிறப்பை எந்நாட்டவர்க்கும் எடுத்துக் காட்டுவதாக நிமிர்ந்து நிற்கிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் 1860 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள தண்டபாணி கோயில் ஆர்ச்சர்டு வீதிக்கு அருகாமையில் சீரும் சிறப்புமாகத் திகழ்கிறது.

திருவிழாக்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெறு வதற்கு ஏற்ற முறையில் இந்த இரண்டு கோயில்களிலும் அழகான மண்டபங்கள் உள்ளன. சமயச் சொற் பொழிவுகளும் இலக்கிய வகுப்புகளும் அவ்வப்போது இக்கோயில்களில் நிகழ்ந்து மக்களின் தமிழ்ப்பசியைத் தீர்த்து வைக்கின்றன. கோயில்களெல்லாம் கலைக் கூடங்களாக விளங்க வேண்டும் என்ற இலட்சியப் பாதையில் இந்த இரு கோயில்களும் காணப்படுகின்றன என்று சொல்லலாம்,

சிங்கப்பூரில் மட்டுமல்ல கடல் கடந்த தமிழர்களின் கல்விக்கும் கலைக்கும் துணை புரியும் நிலையில் மாரியம்மன் கோயிலும் தண்டபாணி கோயிலும் மலேயாவிலுள்ள

ஒவ்வொரு நகரத்திலும் செல்வமும் செல்வாக்கும் பெற்று விளங்குகின்றன என்று அறிந்து பெருமை எய்தினேம்.

மகாத்மா காந்தியடிகளின் நினைவாக ஓர் அழகான மண்டபம் சிங்கப்பூரிலே அமைக்கப்பட்டுள்ளது. மாளிகை போல் அமைந்த இந்த மண்டபத்தை, "காந்தி கலைக் கோயில்" என்று அழைப்பது பொருந்தும். மண்டபத்துக்குள் சர்க்காவை அணைத்துக்கொண்டிருக்கும் பாவனையில் உள்ள காந்தியண்ணலின் வெண் கலச் சிலையின் அழகைக் கண்டால் அடிகளின் ஆன்மா இந்த மண்டபத்தில்தான் கோயில் கொண்டுள்ளதோ என்று எண்ணத் தோன்றும்.

கச்சிதமான ஒரு சொற்பொழிவு மண்டபம் நினைவு மாளிகைக்குள் காட்சி தருகிறது. இசை, நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்ற முறையில் மண்டபம் அமைந்துள்ளது.

அருமையான நூல் நிலையம் ஒன்றும் காந்தி கலைக் கோயிலில் உள்ளது.

இந்த நினைவு மாளிகைக்கு இந்தியப் பிரதமர் திரு. பண்டித நேரு அவர்கள் 1950, ஜூன் மாதம் பதினெட்டாம் நாள் கால்கோள் விழா நடத்தினர். தென்கிழக்கு ஆசியாவில் ஆங்கிலேய கமிஷனர் ஜெனரலாக விளங்கிய திரு. மால்க்ம் மாக்டனல்டு, 1953-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்தைந்தாம் நாள் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

நினைவு மாளிகையை உருவாக்க ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரம் வெள்ளிகள் செலவாயிற்று. மேற்கொண்டு எண்பதாயிரம் வெள்ளிகள் செலவிட்டு மாளிகையை அபிவிருத்தி செய்யவும், காப்பாற்றவும் ஏற்பாடு செய்து வருகின்றனர். மண்டபத்தில் மிளிரும்

அடிகளின் வெண்கலச் சிலையை அன்பளிப்பாகச் செய்து வழங்கியவர் திரு. ஜி. உத்தம்ராம் என்னும் இந்தியர்.

சிங்கையில் விளங்கும் இராமகிருஷ்ணமடம் இந்தியர்களுக்குப் பெருமை தரும் முறையில் பணியாற்றி வருகிறது. ஏழைச் சிறுவர்களுக்கு ஆதரவு கொடுத்து வரும் இந்த மடத்தின் பொது வழிபாட்டு மண்டபம் மிக அழகாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் அமைப்பதற்காக ஒரு லட்சம் வெள்ளிகளுக்கு மேல் நன்கொடை அளித்து உதவிய வள்ளல் திரு. பி. கோவிந்தசாமிப் பிள்ளையவர்களின் தாராள உள்ளத்தைப் பாராட்ட வேண்டும்.

மனிதன் எளிதிலே கெட்டுப்போவதற்கு என்னென்ன மாய வலைகள் உண்டோ அத்தனையும் நிறைந்த சிங்கப்பூரில் திரு. பி. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களைப் போன்ற செல்வர்கள் தமிழர் பண்பாட்டிலிருந்து சற்றும் பிசகாமல் அறவழியில் வாழ்க்கை நடத்தி வருவது மிகவும் போற்றுதற்குரியது. மிகச் சிறந்த செல்வச் சீமானாகிய இவர் தமது குடுமியையும், சந்தனப் பொட்டையும், காலர் இல்லாத சட்டையையும் விடாமல் மிக எளிய தோற்றத்தோடு விளங்குகிறார். செம்மையான வாழ்க்கை நடத்துவதோடு சிறந்த பணிகளுக்கு நிறைந்த பொருள் உதவியும் செய்து வரும் திரு. பிள்ளையவர்களைத் தமிழருக்குப் பெருமை தரும் சான்றோர் என்று புகழ்வது மிகையாகாது.

13. அன்புக்குள் அடங்கும் கலை

சிங்கப்பூரிலும் மலேயாவிலும் வாழும் இந்தியப் பெருமக்களுக்கும் ஏனைய இனத்தவருக்கும் தமிழ் நாடகக்

குழுவினரை அறிமுகப்படுத்தும் முறையில் சுவையான ஓர் இசை நிகழ்ச்சியை உருவாக்கியிருந்தோம். அந்த அறிமுக நிகழ்ச்சி "ரேடியோ மலேயா"வில் இருமுறை ஒலிபரப்பாகியது.

அந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் விளங்கிய கவிதையைக் கேளுங்கள்:

" இன்பத் தமிழ்நாட்டின்
எல்லை தனைத்தாண்டி
அன்பும் அறிவும்
ஆற்றலும் கொண்டவராய்ச்

சிங்கை மலாய்நாட்டில்
சீரோங்க வாழ்ந்துவரும்
தங்கக் குணம்படைத்த
தமிழன்புச் சான்றோரே !

மங்காக் கலையார்வம்
வளர்க்கின்ற அன்பர்களே !
உங்களுக் கெங்கள்
வணக்கம் உரித்தாகும் ;

வந்ததெல்லாம் கொள்ளும்
மதராசுக் கப்பலிலே
செந்தமிழ் நாடகமாம்
சொந்தச் சரக்கேற்றி

அலைகடலைத் தாண்டித்
தொலைதூரம் வந்துள்ளோம் ;
உலகம் வியக்கும்
உயர்ந்த கலைச்சரக்கை

அள்ளியள்ளித் தந்தாலும்
எள்ளளவும் குன்றாது !
கள்ளருக்கும் எட்டாது ;
காவலுக்கும் அடங்காது !

எந்தவிலை தந்தாலும்
ஈடாக மாட்டாது !
சிந்தனையைத் தூண்டும்
சிறந்த கலையமுதம்
பண்புடைய நன்மக்கள்
பற்றுடனே பாராட்டும்
அன்புக்கு மட்டும்
அடங்கும் கலைச்சரக்கு !...''

"ஓ, அப்படியா ! அன்புக்கு மட்டுந்தான் உங்கள் கலைச்சரக்கு அடங்குமா? சரி! அன்பினால் உங்களை என்ன பாடு படுத்துகிறோம், பாருங்கள் !'' என்று சவால் விடுவது போல் ரசிகப் பெருமக்கள், தங்கள் கலையார்வத்தை அன்புப் புயலாக வீசத் தொடங்கினார்கள் !

அந்த ரசிகர்கள் கலைக்குழுவினரைக் கண்டு மகிழத் தவித்தார்கள் ; கையெழுத்துப் புத்தகங்களைக் கொண்டு வந்து குவித்தார்கள்! வாஞ்சையுடன் விருந்துக்கு அழைத்தார்கள் ; வரவேற்பு நல்கத் துடித்தார்கள். தனிப்பட்ட அன்பர்கள் மட்டுமன்றிப் பொது நல மன்றங்கள் பலவும் எங்களை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பை எதிர்நோக்கின.

இயன்ற மட்டும் கலையன்பர்களின் ஆவலை நிறைவேற்றுவதென்று முடிவு செய்தோம். வரவேற்பு நல்குவதில் தமிழ் இனத்தவர் மட்டுமல்லாமல் பிற இனத்தவர்களும் ஆவலோடு முன்வந்தது எங்கள் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்துவிட்டது.

முதன்முதலாக நமது கலைக்குழுவினருக்கு ஒரு சிறந்த வரவேற்பு விருந்து நல்க முன்வந்தவர்கள் கத்தே நிறுவனத்தார். இந்தக் கத்தே நிறுவனத்தின் தலைவராக இருந்து பணியாற்றுபவர் திரு. லோக் வான் தோ என்னும் சீனக் கோடீசுவரர்.

கத்தே நிறுவனம் திரைப்படத்துறையில் உலகப் புகழ் பெற்றது. சிங்கப்பூர், மலேயா, போர்னியோ, சாரவாக் போன்ற நாடுகளில் நாற்பத்தொன்பது சினிமாக் கொட்டகைகள் கத்தே நிறுவனத்துக்குச்

சொந்தமாக விளங்குகின்றன. ஆங்கிலம், சீனம், தமிழ், இந்தி முதலிய மொழிகளில் வெளியாகும் திரைப்படங்கள் பலவற்றை விநியோகிக்கும் உரிமையையும் இந்த நிறுவனம் ஏற்றுள்ளது.

கத்தே நிறுவனத்துக்குச் சொந்தமாக 'கிரிஸ் ஸ்டூடியோ' என்ற பெயரில் ஒரு படத்தயாரிப்பு நிலையம் சிங்கப்பூர் கிழக்கரை வீதியில் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப்பட உலகில் புகழ் பெற்று விளங்கிய டைரக்டர் திரு. பி. என். ராவ் கத்தே நிறுவனத்தின் சினிமா டைரக்டராகப் பணியாற்றக் கண்டோம். இவரது டைரக்ஷனில் உருவான "பாண்டியாஞ" என்ற மலாய்ப்படம் சிங்கப்பூர் கத்தே சினிமாவில் மிக வெற்றிகரமாக ஓடியது.

திரு பி. என். ராவ் எங்களை அடிக்கடி கண்டு பேசி அளவளாவிக்கொண்டிருந்தார். சிங்கப்பூரிலும் மலேயாவிலும் மிகக்குறைந்த செலவில் திரைப்படம் உருவாக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். மலாய் நடிக நடிகைகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் மிகக் குறைவு என்றும், ஆனால், அவர்களின் ஒத்துழைப்பு மிக அதிகம் என்றும் திரு. ராவ் தமது அநுபவ உண்மையை விளக்கினர்.

டைரக்டர் ராவ் கூறிய மற்றொரு செய்தி எங்களுக்கு வியப்பை அளித்தது. சினிமாவுக்காக ஒரு காவல் நிலையக் காட்சியைப் படமாக்க விரும்பினல் அதற்காக 'செட்' போட்டுத்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயம் இல்லையாம். நகரில் வசதியாக இருக்கும் உண்மையான ஒரு காவல் நிலையத்தையும், தேவையான காவலர்களையும் சினிமாவுக்காகப் படமாக்கிக்கொள்ளும்படி அரசாங்கத்தாரே அநுமதியளித்துவிடுவார்களாம். இதைப் போல், அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள எந்த நிலையத்தையும் படப்பிடிப்புக்குரிய சாதனமாகப்

பயன்படுத்த இசைவு கிடைக்கும் என்று திரு. ராவ் குறிப்பிட்டார். கத்தே நிறுவனத்தின் துணைத்தலைவராக விளங்கும் திரு. எஸ்.எ.ராவ் என்னும் இந்திய நண்பரைப் பற்றியும் சில வார்த்தைகள் கூற வேண்டும். இவர் உடுப்பியில் பிறந்தவர். மலைநாட்டின் இயற்கை வளத்தையும் பண்பாட்டையும் பின்னணியாகக்கொண்டு கிரிஸ் ஸ்டுடியோவில் ஒரு தமிழ்ப்படத்தை உருவாக்க வேண்டும் என்ற ஆவல் உள்ளவர். இவர் தமிழ்நாட்டின் கலைச்சிறப்பைச் சீன நண்பர்களுக்கும் எடுத்துக் காட்டிப் பெருமைப்படும் இதயப் பண்பு படைத்தவர்.

சிங்கப்பூரில் உள்ள மாபெரும் கத்தே மாளிகைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. வங்கச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்தின் தலைமை நிலையம் கத்தே மாளிகையில்தான் விளங்கியது என்று இந்தியப் பெருமக்கள் இன்றும் பாராட்டுகின்றனர்.

கத்தே நிறுவனத் தலைவர் திரு. லோக் வான் தோ சிறந்த கலையன்பர்; உயர்ந்த புகைப்பட நிபுணர்; பறவைகளின் இயல்புகளை ஆராய்வதற்காகப் பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்து பெரும் பொருளைச் செலவிட்டு வருபவர். தமது ஆராய்ச்சியின் பயனைப் "பறவைக் கூட்டம்" என்ற பெயரில் ஒரு சிறந்த நூலை உருவாக்கியுள்ளவர். உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஓவியங்களைத் தொகுத்து வைத்துள்ளார்.

திரு. லோக்-வான்-தோ நமது இராஜராஜ சோழன் நாடகத்துக்கும் ஒரு நாள் தலைமை வகித்து அதன் சிறப்பியல்புகளை மிகவும் வியந்து பாராட்டினர்.

தமிழன் கண்ட கலைக்குத் தமது மரியாதையை அறிவிக்கும் நோக்கத்துடனேயே தமது கத்தே நிறுவனத்தின் சார்பில் ஓடியன் தியேட்டரின் மாடியில்

உள்ள அழகான ஹாலிவுட் அறையில் ஒரு வரவேற்பு விருந்து நடத்தினர், திரு. லோக் வான் தோ.

சிங்கப்பூர் மலேயாவில் உள்ள ஒவ்வொரு நகரத்திலும் நல்லதொரு நாடக அரங்கம் கட்டுவதற்குக் கத்தே நிறுவனம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற எங்கள் யோசனையைத் திரு. லோக் வரவேற்றுத் தம்மாலான முயற்சிகளைச் செய்வதாக வாக்களித்தார்.

சீனர்களின் சிறந்ததொரு திரைப்பட நிறுவனம் செந்தமிழ்க் கலைஞர்களாகிய எங்களைப் பாராட்ட முன் வந்த சிறப்பை எண்ணியெண்ணி மகிழ்ந்தோம்.

பின்னர், இந்தியர் நுண்கலைக் கழகம், சிங்கப்பூர் தமிழர் சங்கம், இலங்கைத் தமிழர் சங்கம், தேவி புரொடக்ஷன்ஸ் நாடக மன்றம் முதலிய பல நிறுவனங்கள் தொடர்ந்து பல வரவேற்பு விழாக்களை நடத்தின. 'நீண்ட கடலால் பிரிக்கப்பட்டு, தமிழகத்துக்கு வெகு தூரத்துக்கு இப்பால் நாங்கள் வாழ்கிறோம் ; எனினும், நாங்கள் மொழியால், இனத்தால் தமிழர் என்பதை எண்ணிப் பெருமை கொள்கிறோம்'' என்று ஒவ்வொரு மன்றத்தினரும் தமது இதய ஒலியை எழுப்பினர்.

எல்லா வரவேற்புக்களுக்கும் சிகரம் போல் விளங்கியது, சீனக் கழகத் தலைவர் திரு. லி சியூ மாங், மே மாதம் பத்தொன்பதாம் தேதி இரவு அவரது இல்லத்தில் அளித்த வரவேற்பு.

திரு. லி சியூ மாங் இணையற்ற ஓவியர்; இசை ஞானம் மிகுந்தவர் ; சீனர்களின் பெருமதிப்புக்குரிய தலைவர் ; தமது இல்லத்தையே கலை நுணுக்கம் செறிந்ததாக அமைத்துள்ளார்.

சிங்கப்பூரில் தமிழ் நாடக விழாவின் கடைசி நாளாக நடைபெற்ற 'இராஜராஜ சோழன்' நாடகத்துக்குத் தலைமை தாங்கினர் திரு. லி சியூ மாங். நாடகச் சிறப்பிலே தம் இதயத்தைப் பறி கொடுத்தார். நமது கலைக்

குழுவினரைத் தமது இல்லத்துக்கு வரவழைத்துப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணத்தால் உந்தப்பட்டார். எனவே, அதற்கான ஏற்பாட்டையும் செய்தார்.

திரு. மாங் அவர்களின் இல்லத்துக்கு எங்களை அழைத்துச் சென்று ஏனைய நகரப் பிரமுகர்களுக்கும் குழுவினரை அறிமுகப்படுத்தும் பொறுப்பை மேற் கொண்டவர், திரு கே. சி. நடராஜன் என்னும் தமிழன்பர். இவர் சிங்கையில் வருமான வரி உதவி அதிகாரி.

வரவேற்பு வைபவத்தையே ஒரு கலை நிகழ்ச்சியாக அமைத்திருந்தார். திரு. லி சியூ மாங். சீனப் பாடகர்-பாடகிகள் சிலரும் விழாவிலே கலந்துகொண்டனர்.

தேநீர் விருந்துக்குப் பின் பிடில் ஒன்றை வாசித்துக் காண்பித்தார், திரு. மாங். அவருடைய சின்னஞ்சிறு புதல்விகளான லி சூ பெங், லி சு கியா இருவரும் 'யாங் கின்', 'சேங்' என்ற பெயருடைய நரம்புக் கருவிகளை மீட்டி இசையெழுப்பினர். புதல்விகளுக்கு உதவியாகத் திரு. மாங் பிடில் வாசித்து ரசிகர்களின் மனத்தைக் கவர்ந்தார்.

இந்நிலையில் கலையுணர்ச்சியால் உந்தப்பட்ட சீனப் பாடகர்கள் இருவரும் பாடகிகள் இருவரும் தாமாகவே வலிய வந்து சில பாடல்களைப் பாடினர். அவர்கள் பாடிய ராகம் நமது மோஹன ராகத்தின் சாயலாகவே தோன்றியது.

இந்நிகழ்ச்சிகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த 'தமிழ் முரசு' திரு. செல்வ கணபதி ஓர் அறிவிப்புச் செய்தார்:

''அன்பர்களே! இப்போது சீனப் பாடகர்கள் பாடிய பாட்டின் மெட்டிலேயே திரு டி. கே. சண்முகம் ஒரு தமிழ்ப் பல்லவி பாடுவார்!''

உடனே, "சீனரும் தமிழரும் சிங்கை மாநகரில் சேர்ந்து வாழ்வோமே !" என்ற பல்லவி சீனர்கள் பாடிய பாணியிலே பாடப்பட்டது. குழுமியிருந்தோர் அனைவரும் புளகாங்கித உணர்ச்சியோடு கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பின்னர், "ஜெய பேரிகை கொட்டடா !" என்ற மகாகவி பாரதியாரின் பாடல் வீர முழக்கம் செய்யப்பட்டது

பின்னணிப் பாடகி குமாரி அபிராம சுந்தரி "சின்னஞ் சிறு கிளியே !" என்ற பாடலை அற்புதமாகப் பாடினார். சிறுமி சந்தோஷ் "வெண்ணிலாவும் வானும் போலே" பாடலுக்கு அபிநயம் பிடித்தாள்.

இப்படிச் சேர்ந்தாற்போல் தமிழ் இசை முழங்கியதைக் கேட்ட மலையாள நண்பர் ஒருவருக்கு உற்சாகம் கரை புரண்டு வந்தது. அவர் விரைந்து வந்து, "எங்கே தேடினும் காணலாம்" என்று மலையாளப் பாடலை உணர்ச்சியோடு பாடினார். நல்ல தமிழ்ச் சொற்கள் பாடலிலே பொதிந்திருந்தமையால், அந்தப் பாடலும் தமிழ்ப் பாட்டுப் போலவே ஒலித்தது.

இவ்வாறு ஏறத்தாழ இரண்டு மணி நேரம் போட்டி போட்டுக்கொண்டு இசை முழக்கினர் கலைஞர்களும் கலையன்பர்களும்.

முடிவில், திரு. லி சியூ மாங் நமது தென்னாட்டுக் கலையின் சிறப்பை இதயம் கனிந்து பாராட்டி ஓர் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார்.

"கலாசாரப் பரிவர்த்தனை" என்று பொருள்படும் சீன வாக்கியம் எழுதப்பட்ட அழகான பட்டுக் கலைக் கொடி ஒன்றைத் திரு. லி சியூ மாங் எங்கள் கலைக்குழுவுக்கு அன்புப் பரிசாக வழங்கினார். குழுவினர் அனைவருக்கும் சீனக் கலைப்பொருள்கள் சிலவற்றை அன்பின் அடையாளமாக நல்கினார்.

"திறமான புலமையெனில்
வெளிநாட்டார் அதைவணக்கம்
செய்தல் வேண்டும்......"

என்ற மகாகவி பாரதியின் வாக்குக்கு இணங்கச் சீனக் கலையன்பர்கள் நமது தமிழ் நாடகக் கலையை மனதாரப் போற்றி வாழ்த்திய பெருமையைத் திரு. லி சியூ மாங் அவர்களின் இல்லத்தில் கண்ணாரக் கண்டு களித்தோம்.

மறுநாள் நாடகக் குழு சிங்கையை விட்டுக் கோலாலம்பூருக்குப் புறப்படுவதென்று திட்டமிடப் பட்டது.

புறப்படுவதற்கு முன் கப் வீதியில் உள்ள ஒரு வீட்டில் ஏழைத் தமிழ்மக்கள் எவ்வளவு நெருக்கடியில் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்பதை அவசியம் காண வேண்டும் என்று தொண்டர்படைத் தலைவர் திரு. ஆ. சு. இராமலிங்கம் எங்களை அழைத்தார்.

அவர் குறிப்பிட்ட வீட்டுக்குள் நுழைந்தோம். மாடியில் உள்ள ஓர் அறையில் குடியிருந்த தமிழர்களின் அன்பு முகங்களைக் கண்டோம். அந்த அறைக்குள் ஏறக் குறைய முப்பது பேர்கள் தத்தம் பெட்டி படுக்கையுடன் குடியிருக்கக் கண்டோம்.

தமிழ் நாட்டிலிருந்து மலேயாவுக்குச் சென்றிருக்கும் எண்ணற்ற தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. மனைவி மக்களை விட்டு, உற்றார் உறவினரை விட்டுக் கடல் கடந்து வந்திருக்கும் தமிழ்மக்கள் தமிழை மறக்கவில்லை, தமிழ்நாட்டை மறக்கவில்லை; தமிழ்ப் பண்பை மறக்கவில்லை. தாங்கள் சிங்கப்பூரில் வாழ்கிறோம் என்பதையும் மறக்கவில்லை; அங்குள்ள சூழ்நிலை காரணமாகச் சிலர் சில விதமாக மாறிப் போனாலும் பெரும்பாலான தமிழ்மக்கள் நமது நாட்டின் கௌரவத்தை உயர்த்திக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

நாங்கள் பார்த்த அந்தச் சின்னஞ்சிறு அறையில் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் தங்கியிருந்தாலும் அவர்களுடைய எண்ணங்களும் இலட்சியங்களும் மட்டும் தனித்தனியாக இருந்த அழகைப் பார்த்து அனுபவித்தோம். அந்த அறையில் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை பேதங்களும் அவர்களுக்குள் உண்டு என்பதை ஒவ்வொருவரும் தத்தம் பெட்டிக்கு மேல் உள்ள சுவரில் மாட்டியிருந்த படங்களைக்கொண்டும், அவர்கள் வைத்திருந்த புத்தகங்களைக்கொண்டும் தெரிந்துகொண்டோம். பெட்டி படுக்கை வைப்பதற்கு வேண்டிய தட்டுக்கள் அறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் மாதம் ஐந்து வெள்ளி வாடகை தருகிறார்களாம். அத்தனை கருத்து வேற்றுமையிலும் ஒற்றுமையாக அந்தச் சிறு அறைக்குள் வாழ்ந்து வரும் தமிழர்களின் இணக்கத்தைப் போற்றினோம், கூட்டு வாழ்க்கை முறையில் இவ்வாறு தொல்லைப்பட்டுச் சன்னஞ்சன்னமாகப் பொருள் ஈட்டி, அயராத உழைப்பினால் முன்னுக்கு வருகிறார்கள் தமிழ்த் தொழிலாளர்கள் என்பதை நன்கு புரிந்துகொண்டோம்.

பாடுபட்டு உழைப்பவர்கள் பலன் காணாமல் போவதில்லை, ஆரம்பத்தில் சின்னஞ்சிறு அறையில் மிகுந்த நெருக்கடியில் குடியிருந்த சிலர் இப்போது நல்ல செல்வாக்கோடு வாழ்கின்றனர் என்றும் நண்பர் தெரிவித்தார்.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

14. முதல் முகாம் முடிந்தது.

மே மாதம் இருபதாம் தேதி இரவு ரயிலில் சிங்கப்பூரை விட்டு, மலேயாவின் தலைநகரமான கோலாலம்பூருக்குப் புறப்படுவதாக முடிவு.

"இவ்வளவு சிக்கிரமாகப் புறப்படுகிறீர்களே!" என்று நெருங்கிப் பழகிய நண்பர் ஒருவர் உருக்கமாகக் கேட்டார்.

"சிக்கிரமாகப் புறப்படுகிறோமா? முதல் முகாமிலேயே இருபத்தொன்பது நாட்கள் நிதானமாகத் தங்கிவிட்டோமே! விஸாவிலே காணும் மூன்று மாதத் தவணையில் மூன்றில் ஒரு பகுதியை இங்கேயே கழித்து விட்டோமே!...போதாதா?" என்று நண்பருக்கு ஆறுதல் கூறினேம்.

ஆயினும், உண்மையில் எங்களுக்குக்கூட, நேற்று வந்து இன்று புறப்படுவது போன்ற உணர்ச்சி தான் தோன்றியது. நாட்கள் எவ்வளவு வேகமாக உருண்டோடிவிட்டன!

நெஞ்சிலே கவலையோடு இருப்பவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாக நீளும்! கவலையற்று உற்சாகமாக நண்பர்களின் அன்புச்சூழலிலே வாழ்பவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமாக ஓடும். இது அநுபவ உண்மை அல்லவா?

சிங்கப்பூர் உண்மையில் ஒரு தீவுதானு என்ற ஐயம் எழுவதற்கும் இடமிருக்கிறது. ஏனெனில், சிங்கப்பூரையும் மலேயாவின் தென்கோடியான ஜோகூர்பாருவையும் இணைத்துக்கொண்டு எழில் பரப்புகிறது ஒரு பெரிய

பாலம். இந்தப் பாலத்தில் சாலையும் உள்ளது; இருப்புப் பாதையும் விளங்குகின்றது வனப்பு மிகுந்த இந்த இணைப்புப் பாலம் ஜோகூர் ஜலசந்தியில் கட்டப் பட்டுள்ளது. ஜப்பானியர் படையெடுப்புக் காலத்தில் இந்தப் பாலத்தின் ஜோகூர்முனை தகர்க்கப்பட்டதாகவும், பின்னர் புதுப்பிக்கப்பட்டுவிட்டதாகவும் கேள்விப் பட்டோம்.

சிங்கப்பூர் விமானத்துறையைப் பற்றிக் கொஞ்ச மாவது தெரிந்துகொள்ள வேண்டாமா? இந்த விமானத் துறை அகில உலகத் தொடர்பு கொண்டது. நகரின் மத்தியப் பகுதியிலிருந்து ஏழரை மைல் தொலைவில் உள்ள பாயலபார் என்ற இடத்தில் புதிய விமான நிலையம் கட்டப்பட்டுள்ளது. இந்த நிலையம் 1955, ஆகஸ்டு இருபதாம் தேதி முதல் இயங்கி வருகிறது. இந்த மாபெரும் நிலையத்தைக் கட்டுவதற்கு மூன்றே முக்கால் கோடி வெள்ளிகள் செலவாகியுள்ளன. அறுநூறு ஏக்கர நிலப்பரப்பில் இந்த நிலையம் அமைந் துள்ளது.

"சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சி எப்படி இருக்கிறது?" என்று கேட்டால், "வளர்ச்சியில் சிறிதும் தளர்ச்சி யில்லை!" என்று துணிந்து சொல்வோம். நகரில் வளரும் தமிழ்ச் சிறுவர்–சிறுமிகளுக்காக இருபத்தைந்து தமிழ்ப் பள்ளிகள் உள்ளன. இவற்றுக்கு அரசாங்க உதவி நிதி யும் கிடைத்து வருகின்றது. ஆயினும், தமிழ் கற்பிக்கும் உயர்நிலைப் பள்ளிகள் இல்லாத குறை இன்னும் தீர்க்கப் படவில்லை. இந்தக் குறை தீர்வதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன என்று மட்டும் சொல்ல முடியும். சிங்கையில் உள்ள மலேயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய மொழிப் பகுதி ஒன்று இயங்கி வருகின்றது. இதன் தலைவராக விளங்குபவர் தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. இராசாக்கண்ணு அவர்கள். ஆழ்ந்தகன்ற நுண்ணறி வும், அஞ்சாத தமிழ் நெஞ்சமும் கொண்ட வீரர் இவர்.

பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்கு உரிய, உயரிய இடம் தேடித் தருவதற்காகவே தமது ஆராய்ச்சித் திறன் முழுவதையும் பயன்படுத்தி வருகிறார். பிற மொழிப் பேராசிரியர்களுக்கெல்லாம்நமது தமிழ்மொழியின் தனிப் பெருமையை இனிப்பாக எடுத்துக் காட்டித் தமிழ் உணர்ச்சி ஊட்டி வருகிறார். பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்காக மலைநாட்டில் வாழும் தமிழ்ச்செல்வர்கள் பலர் தாராள உள்ளத்துடன் நன்கொடை தர முன்வந் துள்ளனர். திரு. கோ. சாரங்கபாணியின் முயற்சியால் இயங்கும் "தமிழ் எங்கள் உயிர்" நிதியும், தமிழ் வளர்ச்சிக்காகவே திரட்டப்படுகிறது.

கடல் கடந்து வெகு தொலைவில் வாழும் தமிழர்கள் நமது நாடக வசனங்களைச் சரிவரப் புரிந்துகொண்டு ரசிப்பார்களோ என்ற ஐயம எங்களுக்கு எழுந்தது உண்டு. ஆனால், இந்த ஐயத்துக்கு இடமே இல்லை என் பதைத் தமது ஒப்பற்ற ரசனையின் மூலம் எடுத்துக் காட்டினர் சிங்கை மக்கள். அந்த அளவுக்குத் தமிழ்ப் பேச்சு வழக்கின் இயல்பைக் கடல் கடந்த தமிழர்களும் உணர்வதற்குக் காரணம் என்ன என்பதையும் புரிந்து கொண்டோம். தமிழகத்திலிருந்து வரும் தமிழ்ப் பத்திரிகைகளும், தமிழ்த் திரைப்படங்களும் மக்களின் தமிழறிவை வளர்த்து வருகின்றன. இவற்றோடு சிங்கை யிலே வெளியாகும் தமிழ் ஏடுகளும் அங்கு வாழும் தமிழ் மக்களின் தமிழ் உணர்ச்சியைப் பேணி வளர்த்து வரு கின்றன.

'தமிழ் முரசு', 'மலேயா நண்பன்' ஆகிய இருதமிழ்த் தினசரிகள் சிங்கப்பூரிலிருந்து வெளியாகின்றன. 'தமிழ் நேசன்' என்ற தினப்பதிப்பு கோலாலம்பூரிலிருந்தும், 'சேவிகா' என்ற தினசரி பினங்கிலிருந்தும் வெளியிடப்படு கின்றன. இவையனைத்தும் பெரும்பாலும் தமிழ்நாட்டுச்

செய்திகளுக்கே முக்கியத்துவம் தருகின்றன. இந்த முறையிலிருந்து தமிழகத்தைப் பற்றி அறிந்துகொள்வதில் மலைநாட்டு மக்களுக்கு எத்துணை ஆர்வம் உள்ளதென்று தெரிய வருகிறது.

இந்தத் தினசரிகளில் தமிழ் முரசு மிக அதிக விநியோகமுள்ளது; அதற்கு அடுத்தபடியாக விநியோகமுள்ள ஏடு 'தமிழ் நேசன்.' இரண்டு பத்திரிகைகளும் ஞாயிறு மலரை மிகச் சிறப்பான முறையில் தரம் உயர்ந்த கட்டுரைகளுடன் வெளியிடுகின்றன.

ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணியின் பொறுப்பில் இயங்கும் 'தமிழ் முரசு' அலுவலகத்தில் முன்னாள் 'பொன்னி' ஆசிரியர் திரு. முருகு. சுப்பிரமணியன், திரு. வை. திருநாவுக்கரசு, திரு. செல்வ கணபதி. திரு. அ. முருகையன் ஆகியோர் உதவியாசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

திரு. மலையாண்டிச் செட்டியாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'தமிழ் நேசன்' பத்திரிகையின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றுபவர் தமிழகத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவரான திரு. கு. அழகிரிசாமி அவர்கள்.

இந்தியன் மூவி நியூஸ், கலைமலர், மனோகரன், திரையொளி ஆகிய நான்கு கலை ஏடுகள் சிங்கப்பூரிலிருந்து வெளியாகின்றன. இவையனைத்தும் பெரும்பாலும் திரைப்படச் செய்திகளையே ஏந்தி வருகின்றன. இத்தனை கலை ஏடுகள் வெளியாவதிலிருந்தே சிங்கையிலும் மலேயாவிலும் தமிழ்த் திரைப்படங்களுக்கு எத்தகைய வரவேற்பு இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம். ஈப்போவிலிருந்து வெளியாகும் 'மலைமகள்' பொது விஷயங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

இவையெல்லாம் தவிர தமிழ் நாட்டிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளியாகும் முக்கியமான

பத்திரிகைகள் அனைத்தும் சிங்கையிலும் மலேயாவிலும் கிடைக்கின்றன.

சிங்கப்பூரில் விளங்கும் பல்வேறு சங்கங்களும் தமிழ் வளர்ச்சிக்குத் துணையாக நிற்கின்றன. இவற்றின் சார்பில் அடிக்கடி இலக்கியச் சொற்பொழிவுகளும், விவாதங்களும் நடைபெற்று வருகின்றன. இத்துறையில் சிராங்கூன் வீதியில் உள்ள தமிழர் சீர்திருத்த சங்கம் சிறந்த பணியாற்றி வருவதைக் குறிப்பிட வேண்டும். மாதந்தோறும் ஏதாவது ஒரு வாழ்க்கைப் பிரச்னையைப் பற்றிய விவாதம் இந்தச் சங்கத்தில் நடைபெறும்.

வரதட்சணை, கலப்பு மணம், குடும்பக் கட்டுப்பாடு முதலிய பல பிரச்னைகள் சங்கத்தில் விவாதிக்கப்படுகின்றன. வெறும் விவாதத்தோடு நின்றுவிடாமல் அரங்கிலே கூடியுள்ள மக்களின் தீர்ப்பை வாக்குகளின் மூலம் கணக்கிடுகின்றனர். ஒவ்வொரு பிரச்னைக்கும் சாதகமாகவும் பாதகமாகவும் கிடைத்த வாக்குகளின் விவரம் மறுநாள் பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் வெளியாகின்றன. இத்தகைய கருத்து நிறைந்த விவாதங்களின் மூலம் சிங்கை மக்களில் சிலர் தமது பேச்சு வன்மையை வளர்த்துக்கொள்கின்றனர்.

தமிழும் தமிழ் உணர்ச்சியும் சிங்கப்பூரில் நன்முக ஓங்கி வளர்கின்றன என்பதற்கு இவையெல்லாம் சான்றுகள்.

சிங்கையில் வாழும் சீனர்களின் பழக்கவழக்கங்களில் ஒன்று எங்கள் கவனத்தை மிகவும் கவர்ந்தது.

> **கூற்றின்கைப் பட்டவுடன்—நினைவுக்**
> **கூட்டங்கள் கூட்டுவரோ?**
> **நேற்றைய நண்பர்கள் சுற்றமெலாம்—நம்மை**
> **நீடு நினைப்பாரோ?**

என்ற கவலை சீனர்களுக்கு மிகுதியாக உண்டு. தமது மரணத்தின் போது உற்றுரும் உறவினரும் ஏராளமாகக்

கூடி மரியாதை செலுத்த வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு அதிகம். தமது ஆசை நிறைவேறுவதற்காக அவர்கள் பற்பல சங்கங்களுக்குச் சந்தா செலுத்த வருவார்கள். அந்தச் சங்கங்களை 'இறுதி யாத்திரை உதவிச் சங்கங்கள்' என்றுகூடத் துணிந்து சொல்லி விடலாம்.

செல்வாக்குள்ள சீனர் ஒருவர் ஏறக்குறைய இருபத்தைந்து சங்கங்களுக்குச் சந்தா செலுத்துவாராம்! அவர் இறந்த செய்தி கிடைத்ததும் அத்தனை சங்கத்தார்களும் அவருடைய இல்லத்துக்கு வந்து கூடிவிடுவார்கள். சும்மா வரமாட்டார்கள்! தத்தம் சங்கப் பெயர் தீட்டப்பட்ட ஆலவட்டங்களுடன் ஆர்ப்பாட்டமாக வருவார்கள்.

இதில் இன்னொரு புதுமையும் கண்டோம். வாரத்தில் ஞாயிறு தவிர வேறு எந்தக் கிழமையில் ஒருவர் இறந்தாலும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரையிலுங் கூடச் சடலத்தைப் பேணி வைத்திருக்கும் வழக்கம் சீனர்களிடம் உண்டு. சங்கங்களைச் சார்ந்தோர் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இத்தகைய ஏற்பாடு செய்யப்படுகிறதாக அறிந்தோம்.

இறந்தவரின் இறுதி யாத்திரை குறைந்தது அரை மைல் நீள ஊர்வலமாக இருக்கும். இப்படிப் பல பெரிய இறுதி ஊர்வலங்களையும் நாங்கள் காண நேர்ந்தது.

ஊர்வலத்துக்கு முன்னால் அலங்கரிக்கப்பட்ட பெரிய லாரிகளில் பாண்டு வாத்தியங்கள் முழங்கும். இந்த வாத்தியங்களில் அதிகமாக நம் செவிகளைத் துளைப்பது பெரிய சிங்கிகளைத் தட்டும் ஒலிதான். ஒவ்வொரு சிங்கியும் சுமார் ஓர் அடி விட்டம் உள்ளது. எனவே. 'ஜலார், ஜலார்' ஓசை காதுகளில் 'பளார் பளார்' என்று கேட்கும்.

வாத்திய லாரிகளுக்குப் பின்னால் இறந்தவரின் உருவப்படம் அழகான லாரியில் கொண்டுசெல்லப்

படும், அதற்குப் பின்னல் சங்கங்களின் ஆலவட்டக் கொடிகளும் அங்கத்தினர்களின் அணிவகுப்பும் செல்லும். சவப்பெட்டி வைக்கப்பட்டுள்ள பிரதான வண்டிக்கு முன்னும் பின்னும் உற்ருர் உறவினர்கள் வரிசையாகச் செல்வார்கள். இறந்தவருக்கு மிக நெருங்கிய உறவினரையும் வாரிசு நிலேயில் உள்ளவர்களேயும் எளிதில் அடையாளங் கண்டுகொள்ளலாம். அவர்கள் துக்கத்தின் அறிகுறியாக மெல்லிய சாக்குகளே உடையாகத் தரித்திருப்பார்கள்.

எல்லாவற்றுக்கும் கடைசியாக எண்ணற்ற கார்கள் ஊர்வலத்தைப் பின்தொடரும். அந்த கார்களில் நடக்க இயலாதவர்களும், கிழப் பருவம் எய்தியவர்களும் நோயாளிகளும் அமர்ந்து வருவார்கள்.

இப்படியாகச் சீனரின் இறுதி ஊர்வலமானது மிகக் கோலாகலமாகக் காட்சியளிக்கும். பிறந்த நாளேவிட இறந்த நாளேச் சிறந்த நாளாகக் கொண்டாடும் சீனர்களின் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்து வியந்தோம். பொதுநலச் சங்கங்களிடம் நம்பிக்கையும், அபிமானமும் வளரவும், அவை நல்ல முறையில் பணியாற்றவும் சீனர்கள் வகுத்துள்ள முறை மிகவும் பயன்படும் அல்லவா!

புறப்படும் நாளன்று எங்கள் குழுவினர் ஒவ்வொருவரும் வெகு சுறுசுறுப்பாக இருந்தனர்; மூட்டை முடிச்சுகளேக் கட்டுவதற்குக்கூட நேரமில்லாமல் தவித்தனர். சிங்கப்பூரில் புதிதாகக் கிடைத்த நண்பர்களுடன் அளவளாவி விடை பெறுவதற்குப் போதுமான அவகாசம் இல்லே. அந்த நண்பர்களோ, விடாப்பிடியாக எங்கள் இல்லத்துக்கு வந்து ஆசைதீரப் பேசித் தீர்வதென்று குழுமியிருந்தனர். அவர்களே விலகி இருக்கச் செய்து பெட்டி, படுக்கைகளேச் சரிப்படுத்தி எடுத்து வைப்பதற்குள் பெரும்பாடாகிவிட்டது!

இரவு எட்டு மணிக்கெல்லாம் எல்லோரும் சிங்கப்பூர் கப்பல் வீதியில் உள்ள புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். அழகான அந்த நிலையத்தின் முன்மண்டபத்தில் மலேயாவின் வாழ்க்கை முறை பற்றி வர்ண ஓடுகளில் சித்திரிக்கப்பட்டுள்ள அற்புதமான காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தோம்.

எங்கள் வருகையை எதிர்நோக்கி ஏராளமான கலையன்பர்கள் புகைவண்டி நிலையத்தில் காத்திருந்தனர். சிங்கை ரயிலடியில் அவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருந்தது, என்றும் காணாத புதுமை என்றும் நண்பர்கள் கூறினர்.

சிங்கையிலிருந்து மலேயாவுக்குள் செல்லும் ரயில்களில் அவ்வளவாகக் கூட்டம் இருப்பதில்லையாம். ஏனெனில், சிங்கையிலும் மலேயாவிலும் அற்புதமான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அலுங்காமல் குலுங்காமல் காரிலே பிரயாணம் செய்யும் வசதியிருக்கிறது. சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூருக்குத் துரித மோட்டார் வண்டிகள் சென்று வருகின்றன. இவ்வண்டிகள் தூரப் பயணத்துக்கு மிக ஏற்றனவாக அமைந்துள்ளன. நமது நாடகக் காட்சிக்குரிய சாதனங்கள்கூட லாரிகளிலேதான் ஏற்றியனுப்பப்பட்டன. எனினும், மலைநாட்டில் ரயிலில் பயணம் செய்யும் அனுபவமும் பெற வேண்டும் என்பதற்காகவே நாங்கள் எல்லாரும் ரயில் பயணத்தை மேற்கொண்டோம்.

நம் நாட்டில் 'சின்ன ரயில்' என்று சொல்கிறோமே அது போல் 'மீட்டர் கேஜ்' வண்டிகளே சிங்கப்பூர்—மலேயாவில் ஓடுகின்றன. எஞ்சினுக்கு அடுத்த பெட்டியில் ஏறினால் கடைசிப் பெட்டி வரை செல்லக்கூடிய முறையில் ரயில் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. நமது நாட்டில்கூட வெகு காலத்துக்கு முன் இத்தகைய ரயில் வண்டி இருந்ததாகக் கேள்விப்படுகிறோம் அல்லவா ?

ரயில் வண்டியைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத் தக்க சிறப்பான அம்சம் எதுவும் இல்லை.

நாடக விழா அமைப்பாளரின் சார்பில் நண்பர் திரு. அஜீஸ் நாங்கள் அத்தனை பேரும் தத்தம் பெட்டி படுக்கைகளுடன் பத்திரமாக ரயிலேறுவதற்கான ஏற்பாட்டைத் திறமையாக முடித்து வைத்தார்.

சரியாக எட்டரை மணிக்கு ரயில் புறப்பட்டது. நிலையத்தில் குழுமியிருந்த மக்கள் அனைவரும் மனம் கசிந்து கண்ணீர் மல்கி, வாழ்த்தொலி பெருக்கினர். சிலர் தேம்பித் தேம்பி அழுதனர்! 'அன்பால் ஊற்றெழும் கண்ணீர் அதனுல்' நாங்களும் நனைந்தோம்.

நண்பர்களின் அன்பு முகங்கள் எல்லாம் கண்ணுக்கு எட்டாமல் அகலும் வரையில் கதவடியிலேயே காத்திருந்தோம். பின்னர், ரயில் கதவை அடைத்துவிட்டுப் பெட்டிக்குள் வந்த போது நாங்கள் கண்ட காட்சி எங்களைப் பிரமிக்க வைத்தது.

நண்பர்கள் திரு. அஜீஸ், திரு. ஏ. பி. ராமன், திரு. சந்திரன் ஆகிய மூவரும் ஒரு மூலையில் கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தனர்.

"நீங்கள் எப்படி உள்ளே ஏறினீர்கள்? எங்களுடனேயே வரப்போகிறீர்களா?" என்று வியப்புடன் கேட்டோம்.

"உங்களை விட்டுப் பிரிய மனமில்லை! ஜோகூர்பாரு வரையிலாவது உங்களுடன் பயணம் செய்துவிட்டுத் திரும்பலாம் என்றே புறப்பட்டுவிட்டோம்!" என்று அவர்கள் பதில் அளித்தபோது எங்கள் உடம்பு புல்லரித்தது! "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்!"

15. தலைநகரைக் கண்டோம்

புகைவண்டி மிக வேகமாகப் போய்க்கொண் டிருந்தது. அதைவிட வேகமாகச் சிங்கப்பூரைப் பற்றிய சிந்தனை அலைகள் எங்கள் நெஞ்சத்திலே மோதிக் கொண்டிருந்தன.

தேசப்படத்திலே காணும் சிங்கைத் தீவின் வடிவம் சிறந்த தாமரை மலருக்கு ஒப்பானதே என்ற எண்ணம் எழுந்தது. ஆம்; நீலக் கடலிலே பூத்த வாடாத செந் தாமரையே சிங்கப்பூர் என்று சொல்வது மிகப் பொருத் தம். வாடும் மலர்களையே வண்டினங்கள் மொய்க்கும் போது, வாடாத தாமரையான சிங்கப்பூரை மாநிலத்து வணிகர்கள் மொய்த்துக்கொண்டிருப்பது விந்தை யில்லையே!

இப்படி என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டிருந்த சமயம் எங்கள் சிந்தனையைக் கலைப்பது போல் நண்பர் அஜீஸ் அவர்களின் குரல் கேட்டது.

"ஜோகூர் பாரு நெருங்கிவிட்டது! சுங்கச் சோதனைக்குத் தயாராயிருங்கள்!" என்பதுதான் திரு. அஜீஸ் கொடுத்த அறிவிப்பு.

இந்த இடத்தில் வாசகர்கள் ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். சிங்கப்பூர், பினங்கு ஆகிய இரண்டுமே சுங்கம் தவிர்த்த துறைமுகங்கள். ஆனல், மலேயா அரசாங்கம் இறக்குமதிப் பொருள்களின்மீது சுங்க வரி விதித்து வருகிறது. எனவே, சிங்கப்பூரி லிருந்தும் பினங்கிலிருந்தும் மலேயாவுக்குள் அடி

யெடுத்து வைக்கும் எவரானலும் சுங்கச் சோதனைக்கு ஆளாகியே தீர வேண்டும். சிங்கையிலிருந்து செல்பவர்கள் ஜோகூர்பாருவில் சுங்கச் சோதனை செய்யப்படுவார்கள்.

''ஜோகூர் பாலத்தைக் கடந்துவிட்டோமா?'' என்று திரு. அஜீஸ் அவர்களிடம் கேட்டோம்.

''இப்போதுதான் ரயில் ஜோகூர் பாலத்தைத் தாண்டியது. இதோ! ஜோகூர்பாரு, ரயில் நிலையமும் வந்துவிட்டதே!'' என்ருர் திரு. அஜீஸ்.

''பாலத்தைக் கடக்கும் போது 'தடதட' என்ற பெரிய சத்தம் ஒன்றும் கேட்கவில்லையே!'' என்ரேம்.

'ஜோகூர் பாலம் என்பது இரும்புப் பாலம் அல்ல; அது ஒரு 'காஸ்-வே', அதாவது ஊடு பாதைதான்!'' என்ற பதில் கிடைத்தது.

இரவு சரியாக ஒன்பது மணி ஐந்து நிமிடத்துக்கு ரயிலானது ஜோகூர் பாரு நிலையத்தில் வந்து நின்றது.

நாங்கள் அனைவரும் எங்கள் பெட்டிகளின் சாவிகளை ஆயத்தமாக எடுத்து வைத்துக்கொண்டு நின்ரேம்.

ஒரு பெருங்கூட்டம் எங்களை நோக்கி ஓடி வந்தது. ''இறங்குங்கள்! இறங்குங்கள்!!'' என்று கூட்டத்திலிருந்து பல குரல்கள் சேர்ந்து கேட்டன.

''சுங்கச் சோதனைக்கா இப்படிப் பல குரல்கள் அதிகாரம் பண்ணுகின்றன?'' என்று திகைத்துப் போனேம்!

ஆனலும் நாங்கள் மருண்டுவிடவில்லை. ஏனெனில், சுங்கம் விதிக்கக்கூடிய எந்தப் பொருளையும் எங்களில் யாரும் சிங்கப்பூரிலிருந்து மலேயாவுக்குக் கொண்டுவரவில்லை.

எனவே, நாங்களும் கொஞ்சம் கம்பீரமான குரலில், ''பெட்டிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வர வேண்டுமா?'' என்று கேட்டோம்.

"ஒன்றும் வேண்டாம்! நீங்கள் மட்டும் வாருங்கள்!..." என்று பதில் வந்தது.

அந்தப் பதிலிலே 'அன்பின் அழைப்பு' பொதிந்திருந்தது. எனவே, உற்று நோக்கினோம். அழைத்தவர்கள் சுங்க அதிகாரிகள் அல்லர்; ஜோகூர் பாருவில் உள்ள கலையன்பர்களே என்பதைப் புரிந்துகொண்டோம்.

அந்தப் பெருங்கூட்டத்திலே ஜோகூர் சமஸ்தானக் கவுன்சிலர் திரு. நடேச செட்டியார், சமாதான நீதிபதி திரு. அப்துல் மஜீது, டாக்டர் சர்மா, கத்தே நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை முதலியோரைக் கண்டு மகிழ்ந்தோம்.

அன்பர்கள் பிளாட்பாரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு எங்களை அழைத்துக்கொண்டு போனார்கள். எங்கள் ஒவ்வொருவருடைய கையிலும் அழகான 'எவர் சில்வர்' கோப்பைகளில் அருமையான காப்பியைக் கொடுத்தார்கள். உண்மையில் அந்த இரவு நேரத்தில் அவர்கள் வழங்கிய காப்பி நறுமணமும் இன்சுவையும் வாய்ந்ததாகவே இருந்தது.

அன்பர்கள் அத்துடன் விடவில்லை. ரயில் புறப்படுவதற்குள் விரைவாக ஒரு 'குரூப் - போட்டோ'வும் எடுத்துவிட்டார்கள். அவர்கள் செய்த வரவேற்பு ஆரவாரங்களைக் கண்ட போது, "இது என்ன, ரயில்வே பிளாட்பாரமா? இல்லை, வரவேற்பு மண்டபமா?" என்ற ஐயமே எங்களுக்கு ஏற்பட்டது.

நாங்கள் வரவேற்பு முடிந்து திரும்புவதற்குள் சுங்க அதிகாரிகள் ஓரிரு பெட்டிகளை மட்டும் திறந்து பார்த்து, திருப்தி அடைந்து கலைஞர்கள்மீது தமக்குள்ள நம்பிக்கையை வலியுறுத்திப் போய்விட்டார்கள் என்று கேள்விப்பட்டோம்.

புகைவண்டியும் அதிகத் தாமதமில்லாமல் ஒன்பதரை மணிக்குள் ஜோகூர்பாரு நிலயத்தை விட்டுப் புறப்பட்டது.

சிங்கையிலிருந்து எங்களைத் தொடர்ந்து வந்த நண்பர்கள் அஜீஸ், ஏ. பி. ராமன், சந்திரன் ஆகியோரும் எங்களிடம் பிரியா விடைபெற்றுச் சென்றனர்கள்.

ஜோகூர்பாரு என்பது மலேயாவின் தென்கோடியில் உள்ள அழகிய நகரம். ஜோகூர் சமஸ்தானத்தின் தலைநகரம். ஜோகூர் பாருவை மலைமகளின் திருவடி என்று சொல்லலாம். இந்தத் திருவடி சிங்கப்பூர் என்னும் செந்தாமரையைத் தழுவி நிற்பது எவ்வளவு பொருத்தம்!

ரயில் பெட்டியில் எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த துயிலிடங்கள் ஊடுபாதைக்கு இருபக்கத்திலும் அலமாரிகளைப் போல் அமைந்திருந்தன. ஒவ்வொரு அலமாரிப் படுக்கையிலும் இரண்டு தட்டுகள் இருந்தன. இந்த அமைப்பு சற்று வசதிக்குறைவாகவே தென்பட்டது. ஏனெனில், மேல் தட்டில் காற்று நுழைவதே கடினம்!

தேய் பிறைக் காலம் ஆதலால் வெளியில் எங்கும் இருள் கவிந்திருந்தது. எனவே, மலைநாட்டின் இயற்கை வளப்பங்களைக் காணும் வாய்ப்பு அந்த இரவு நேர ரயில் பயணத்தின் போது கிடைக்கவில்லை.

எனவே, எங்கள் துயிலிடங்களுக்குச் சென்று படுக்கைகளில் சாய்ந்துகொண்டோம். உறக்கம் வரவில்லை. மலேயா நாட்டைப் பற்றிய பல விவரங்களை நினைவுக்குக் கொண்டுவந்தோம்; அவற்றைப் பற்றி நாங்கள் இருவரும் உரையாடிக்கொண்டு தூக்கம் வரும் வரை பொழுதைப் போக்கினோம்.

மலேயாவின் ஆதிக் குடிகள் ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யூனன் என்ற மலைப்பிரதேசத்

திலிருந்து வந்து குடியேறியவர்கள். இவர்கள் 'செனேயர்' என்று சொல்லப்படுகின்றனர்.

மலேயாவில் குடியேறிய நாகரிகம் பெற்ற இனத்தவர்களில் இந்தியர்களே முதன் முதலில் வந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. இவர்கள் கி. பி. முதலாவது நூற்ருண்டில் சோழ மண்டலக் கரையிலிருந்து வந்தார்கள். இவர்கள் மரக்கலங்களில் கடல் கடந்து வந்து பண்டமாற்று வாணிபம் செய்தார்கள். இவர்களில் பலர் மலேயாவிலேயே தங்கவும் முற்பட்டார்கள். இவர்கள் மலேயாவில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளுடன் கொள்வினை கொடுப்பினை செய்துகொள்ளவும் தயங்கவில்லை.

இவ்வாறு குடியேறியவர்கள், கெடா என்று அழைக்கப்படும் கடாரப்பகுதியில் லங்கா சுகம் என்ற ராஜ்யத்தை நிறுவினர்கள்.

"லங்கா சுகத்தில் மதில்கள் சூழ்ந்த பெரிய பட்டணங்களும், மாட மாளிகைகளும் உண்டு; அதன் மன்னர்கள் சீனவுக்குத் தூதர்களையும் வர்த்தகர்களையும் அனுப்புவர்; வறியவர்களின் உடை பருத்தியால் ஆனது. செல்வர்களும், பெண்களும் நீண்ட கருங்கூந்தல் உடையவர்கள்; தங்கக் கடுக்கன்களை அணிவார்கள்; பெண்கள் இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற ஒட்டியாணங்களை அணிவர்; அரசர்கள் யானைமேல் அம்பாரி வைத்து வாத்தியங்கள் முழங்க உலா வருவார்கள்."

இவ்வாறு சீன வரலாறுகளிலிருந்து தெரிய வருகிறது. இதனல் லங்காசுகத்தை ஆண்டவர்கள் தென்னிந்தியர்கள் என்று யூகிக்க முடிகிறது.

"கலங்கா வல்வினை
இலங்கா சோகமும்"

என்று முதலாம் இராஜேந்திர சோழனைப் பற்றிய மெய்க்கீர்த்தியில் 'லங்கா - சுகம்' பற்றிய குறிப்பு வருகிறது.

கி. பி. 1025-ல் இராஜேந்திரன் கடாரப் பேரரசை வென்ற செய்தியை அவனது மெய்க்கீர்த்தி மிகத் தெளிவாக அறிவிக்கிறது.

"அலைகடல் நடுவுள்
பலகலம் செலுத்திச்
சங்கிராம விசயோத
துங்க வர்மன்
ஆகிய கடாரத்(து)
அரசனை வாகையும்
பொருகடல் கும்பக்
கரியொடும் அகப்படுத்து
உரிமையில் பிறக்கிய
பருநிதிப் பிறக்கமும்........"

அலைகடல் நடுவுள் பல கலம் செலுத்திய சோழ மன்னனின் ஒப்பற்ற கப்பற்படையை எண்ணிப் பார்க்கும் போது எவ்வளவு பெருமிதம் எய்துகிறோம்!

இன்றைய மலேயாத் தீபகற்பத்தின் மொத்த நிலப்பரப்பு ஏறக்குறைய 50,690 சதுர மைல்கள். இந் நிலப்பகுதியில் எண்பது சதவிகிதம் காடும், மலையும், சதுப்பு நிலமும் சூழ்ந்து காணப்படுகின்றன.

மலேயாக் கூட்டரசில் பதினொரு அங்கங்கள் உள்ளன. ஜோகூர், நகரி செம்பிலான், சிலாங்கூர், பஹாங், திரெங்கானு, கிளந்தான், பேரா, கெடா, பெர்லீஸ் ஆகிய ஒன்பது ராஜ்யங்களும், பினங்கு, மலாக்கா ஆகிய இரண்டு குடியேற்ற மாகாணங்களும் கூட்டரசில் அடங்கியுள்ளன.

ஜோகூர்பாரு, சிறம்பான், கோலாலம்பூர், கோல லிப்பிஸ், கோலத்திரெங்கானு, கோட்டாபாரு, ஈப்போ, அலோர்ஸ்டார், கங்கார், பினங்கு, மலாக்கா ஆகியவை முறையே மேற்கண்ட பகுதிகளின் தலைநகரங்களாகும்.

மலேயாக் கூட்டரசின் மத்திய தலைநகரமாக மாண்புறுவது கோலாலம்பூர்.

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு ராஜ்யமும் ஒவ்வோர் அரசரின் ஆளுகையில் உள்ளது. ராஜ்ய அரசர்கள் சுல்தான்கள் எனப்படுகின்றனர். இவர்களிலிருந்து கூட்டரசுக்குப் பேரரசர் ஒருவரும், உதவிப் பேரரசர் ஒருவரும் நியமிக்கப்படுகின்றனர். பினங்கு, மலாக்கா ஆகிய மாகாணங்களுக்குத் தனித்தனியே கவர்னர் உண்டு.

ராஜ்ய சுல்தான்கள் அனைவரிலும் ஜோகூர் சுல்தான் மேஜர் ஜெனரல் சர் இப்ராஹிம் என்பவர் ஆண்டிலும் அநுபவத்திலும் மூத்தவர். இம் முதுபெருங் கிழவருக்கு எண்பத்து நாலு வயது நிரம்பிவிட்டது; 1895 முதல் அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இவர் அரசாண்டு வருகிறார்.

ரயிலில் வேலை பார்க்கும் இந்தியர் ஒருவர் மலேயா ரயில்வேயைப் பற்றிய சில விவரங்களை மிக ஆவலோடு கூறினர் :—

ரயில் வண்டிகள் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் நாற்பது லட்சம் மைல்கள் ஓடுகின்றன; அறுபது லட்சம் பயணிகளையும் இருபது லட்சம் டன் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுகின்றன. மலேயாவில் விளையும் ரப்பர், ஈயம் முதலிய சரக்குகளை உற்பத்தி நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கும் கப்பல்களுக்கும் ஏற்றிச் செல்லும் பொறுப்பை ரயில்வே இலாகா மிகத் திறமையாக நிர்வகிக்கிறது. ரயில்வே இலாகாவின் சார்பில் இழுவைப் படகுகளும், மோட்டார்ப் படகுகளும் இயங்கி வருகின்றன. இந்தச் சின்ன நாட்டின் தேவைக்கு ஏற்றபடி, நூற்று எண்பத்தெட்டு ரயில் எஞ்சின்களும், நாலாயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபது சரக்கு வாகன்

களும், பதினெரு படகு வகைகளும் ரயில்வே இலாகாவில் உள்ளன. இவற்றை இயக்கும் துறையில் பதினுலாயிரத்து ஐந்நூறு ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

மே மாதம் இருபத்தோராந் தேதி காலை ஏழரை மணிக்கு ரயில் கோலாலம்பூர் நிலையத்தை அடைந்தது. நூற்றுக்கணக்கான கலையன்பர்கள் பிளாட்பாரத்தில் ஆர்வத்தோடு குழுமி நின்றனர்.

பெடரல் சட்டசபை உறுப்பினர் எஸ். ஓ. கே. உபயதுல்லா, 'தமிழ்நேசன்' கு. அழகிரிசாமி, வி. பி. லிங்கத்தேவர், வீ. ரோச், சுப. நாராயணன், 'பைரோஜி. நாராயணன், கே. கே. சாமி முதலிய அன்பர்கள் கலைக்குழுவினரை முகமலர்ச்சியோடு வரவேற்ருர்கள்.

மலேயாவின் தலைநகரமாக விளங்கும் கோலாலம்பூரின் சிறப்புக்குரிய சின்னங்களில் ஒன்ருக எழில் பரப்பியது ரயில் நிலையம். கட்டடக் கலையழகு ததும்பும் அந்த நிலையத்திலிருந்து நாங்கள் அனைவரும் எங்களுக்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

கோலாலம்பூரில் புதிய நாடக அரங்கம் சின் - வூ - ஸ்டேடியத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளதாகக் கேள்விப்பட்டோம். சின்-வூ-ஸ்டேடியத்துக்குச் சென்ருேம். அதன் அமைப்பையும் அழகையும் இமைப்பில்லாமல் கண்டு மகிழ்ந்தோம். அதன் அருகில் ஓர் அருமையான நீச்சல் குளமும் கட்டப்பட்டுள்ளதைக் கண்டோம். மேட்டுப் பாங்கான ஓர் இடத்தில் அமைந்துள்ள அந்த ஸ்டேடியமும், நீச்சல் குளமும், சீனர்களின் பண வளத்தையும், மன வளத்தையும் களியாட்டத்தில் அவர்களுக்குள்ள ஈடுபாட்டையும் விளம்புவனவாக மிளிர்கின்றன.

இந்த ஸ்டேடியத்தை அமைப்பதற்கு சின்-வூ உடற் பயிற்சிச் சங்கத்தார் பத்து லட்சம் வெள்ளிகள் செல விட்டுள்ளனர்.

சின்-வூ ஸ்டேடியத்துக்கு வலப்புறத்தில் சரிவான ஓர் இடத்தில் நாடகக் கொட்டகை புதிதாக நிர்மாணிக் கப்பட்டிருந்தது. எதிரொலித் தொல்லையில்லாத ஓர் அரங்கம் அமைந்துவிட்டது குறித்துத் திரு. முத்தண் ணுச்சி அவர்களுக்கு அளவற்ற ஆறுதல் ஏற்பட்டது.

16. பூமலை மாநகர்

நாலாபுறமும் மலைவளம் சூழ்ந்த நகரம் கோலாலம்பூர். அதிகாலை நேரத்தின் வனப்பை நோக் கினல் நிலமடந்தை மரகதப் புடைவை உடுத்திக்கொண்டு பசுமையான காட்சி தருகிருளோ என்றுதான் எண்ணத் தோன்றும்.

பச்சைப் பசேலென்ற
வண்ணம்—எங்கு
பார்த்தாலும் பரவசம்
மிகவுண்டு பண்ணும்

இந்த நகரம் தோன்றிச் சரியாக நூறு ஆண்டுகளே ஆகின்றன. மலேரியாக் காய்ச்சலின் கொடுமை சூழ்ந்த அடர்ந்த காட்டுப்பிரதேசமாக இருந்த ஓர் இடம் மலேயாக் கூட்டரசின் தலைநகரமாகத் தோன்றியிருக்கிற தென்ருல் இது மனித சக்தியின் மகத்தான வெற்றி என்றுதானே சொல்ல வேண்டும்?

1857-ல் எண்பத்தேழு சீனர்கள் கிள்ளான் நதிக் கரை வழியாக அடர்ந்த காட்டுக்குள் நுழைந்து 'ஆம்பாங்' என்ற இடத்தில் ஓர் ஈயச் சுரங்கத்தை ஆரம்பித்தார்கள். ஒரு மாத காலத்துக்குள் அந்த எண்பத்தேழு சீனர்களும் பதினெட்டுப் பேர்களாகக் குறைந்துவிட்டார்கள். அறுபத்தொன்பது பேர்கள் மலேரியாக் காய்ச்சலுக்குப் பலியாகிவிட்டார்கள் !

எனினும், சீனர்கள் தளர்ச்சியடையவில்லை. மேலும், பலர் வந்து ஆம்பாங் பகுதியில் குடியேறினர்கள். ஈயச் சுரங்கத்தின் மதிப்பு உயர்ந்தது. சீன வர்த்தகர்கள் பலர் ஈய ஏற்றுமதியில் கவனம் செலுத்தினர்கள். குடியேறிய மக்கள் மலேரியாக் காய்ச்சலோடு போராடி வென்றதன் காரணமாக, ஈயச் சுரங்கம் உள்ள பகுதி ஒரு சிறந்த கிராமமாக விளங்கியது. கிராமத் தலைவர் 'காப்டன் சீனு' என்று அழைக்கப்பட்டார்.

இந்தப் பகுதியின் பெயர் 'கோலாலம்பூர்' என்று எப்படி மாறியது என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் போதிய ஆதாரமில்லை. 'கோலா' என்ற மலாய் வார்த்தைக்குச் 'சங்கமம்' என்று பொருள். சிறிய நதியொன்று பெரிய நதியோடு 'சங்கமம்' ஆகும் இடத்தை மலாய்க்காரர்கள் 'குவாலா' அல்லது 'கோலா' என்று அழைப்பார்களாம். 'லம்பூர்' என்ற மலாய்ச் சொல் 'மண்' அல்லது 'வண்டல் மண்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறதாம். இந்த நகரம் 'கோம்பக்' என்னும் சிறிய ஆறு 'கிள்ளான்' என்னும் பெரிய ஆற்றுடன் சங்கமம் ஆகும் இடத்தில் உண்டானதாலும், சங்கம பூமி வண்டல் வளம் உடையதாக விளங்குவதாலும், 'கோலாலம்பூர்' என்று பெயர் பெற்றிருக்கலாம் என்பதாகச் சிலர் கருதுகின்றனர்.

1880-ம் ஆண்டிலேதான் ஆங்கிலேயர்கள் மாகாணத் தலைநகரத்தைக் கிள்ளான் என்ற ஊரிலிருந்து

கோலாலம்பூருக்கு மாற்றினர்கள். அந்தச் சமயம் கோலாலம்பூரில் ஐயாயிரம் மக்கள் வசித்தார்கள். சுமார் பத்து ஆண்டுகளுக்குள் நகர மக்களின் எண்ணிக்கை இருபத்தையாயிரமாக உயர்ந்துவிட்டது. 1895-ல் கோலாலம்பூர் மலேயாக் கூட்டரசின் தலை நகரம் என்ற சிறப்பை ஏற்றது. தலைநகரமானதன் காரணமாக நகரத்தின் வரம்பும் வனப்பும் மிக வேகமாய்ப் பரவின. இப்போது கோலாலம்பூரில் சுமார் மூன்று லட்சம் மக்களுக்கு மேல் வாழ்கிறார்கள்.

அரசாங்கத் தலைமை நிலைய மாளிகை, சிலாங்கூர் கூட்டுறவு மாளிகை முதலிய உயரமான பல எழில் மாளிகைகள் கோலாலம்பூருக்குச் சிறப்பளிக்கின்றன.

தலைநகரத்தில் வேகமாகப் பெருகிவரும் மக்களுக்குப் புகலிடம் தரவும், இடநெருக்கடியைத் தவிர்க்கவும் ஆறு மைல் தொலைவில் 'பெடாலிங் ஜெயா' என்ற புத்தம் புதிய நகரம் ஒன்று எல்லா வசதிகளோடும் உருவாக்கப் பட்டுள்ளது. ஏறக்குறைய எழுபதாயிரம் மக்கள் வசதியாக வாழ்வதற்கு ஏற்றவண்ணம் புதிய நகரம் அமைந்துள்ளது.

சென்னை மாநகர் மக்களுக்கு வனப்புமிக்க கடற் கரை ஒரு வரப்பிரசாதமாக இருப்பது போல் கோலாலம்பூர் மக்களுக்குப் 'பூமலை' என்ற தோட்டம் பயன்படுகிறது. இந்தப் பூமலை ஒரு செயற்கைப் பூந்தோட்டமல்ல! இயற்கையாகவே பூங்காவைப் போன்ற பொலிவுடன் மிளிர்கின்றது. பூமலைப் பகுதியில் உள்ள அழகான புல்வெளி பல மைல் தூரங்களுக்குப் பரவி, எத்தனை லட்சம் மக்கள் வந்தாலும் ஏற்று இடம் கொடுக்கும் முறையில் அமைந்துள்ளது. பூமலைப் புல் வெளிக்கு ஊடாக மிக அருமையான சாலைகள் அமைக் கப்பட்டுள்ளன. அந்தச் சாலைகளின் வழியே நடந்து

சென்ருலும் சரி, காரிலே சவாரி செய்தாலும் சரி, ஓர் அலாதியான இன்ப உணர்ச்சி உள்ளத்தைக் கிள்ளும்.

பசுமையான பெருநிலமாகப் பரந்து விரிந்த பூமலைப் பகுதியைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற ஆவல் மலேயாவின் முதலமைச்சர் கனம் துங்கு அப்துல் ரஹமான் அவர்களுக்கு ஏற்பட்டது. மாநிலம் வியக்கும் மகத்தான கலை விழா ஒன்றைப் பூமலையிலே நடத்துவதற்கு அவர் ஆணை பிறப்பித்தார். அரசாங்கத் தகவல் இலாகாவினர் முன்னின்று நடத்திய இந்தக் கலை விழா 1956-ம் ஆண்டு ஜூலை மாதம் நிகழ்ந்தது. இவ்விழாவுக்குப் 'பெஸ்டா' என்று பெயர்.

நாங்கள் கோலாலம்பூரில் தங்கியிருந்த போது, 'பெஸ்டா' விழாவின் சிறப்பைப் பற்றி நண்பர்கள் பலர் மனமார, வாயார வாழ்த்திஞர்கள். விழாவைப் பற்றிய செய்திப்படத்தைத் தகவல் இலாகாவினர் எங்களுக்காகத் தனியே திரையிடச் செய்தார்கள். "காணுங்கள், மலேயா வளர்க்கும் கலை வளத்தை !" என்று சொல்வது போல் பெஸ்டா விழா அமைந்திருந்ததைத் திரையிலே கண்டோம்.

மலாய் நாட்டுக்கே உரித்தான கலை நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல் சீனர்களின் கலை நிகழ்ச்சிகளும், தமிழர்களின் கலை நிகழ்ச்சிகளும் கலை விழாவிலே இடம் பெற்றிருந்தன,

கலை விழாவுக்காகப் பூமலைப் பகுதியில் பதிஞெரு கலை மேடைகள் தனித்தனியே அமைக்கப்பட்டிருந்தன என்று அறிந்ததும் எங்களுக்குச் சிலப்பதிகார வரியொன்று நினைவுக்கு வந்தது.

"பதிஞெ ராடலும்
பாட்டும் கொட்டும்"

என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டதற்கு இணங்கப்

பதினெரு அரங்குகளை அமைக்கும் எண்ணம் மலேயா அரசினர்க்கு எப்படி ஏற்பட்டது என்று வியந்தோம்.

பலதேசக் கலைவாசம்
தலைதூக்கும் நிலைகண்டும்
மலையாமல் புதுநேசம்
வரவேற்கும் ஒருதேசம்

என்ற புகழுக்குரியது மலேயா. பல்வேறு நாட்டு நாகரிகங்கள் மலேயாவில் வந்து இணைந்து பிணைந்துள்ளன. ஆயினும், கலாசாரங்களெல்லாம் ஒன்றேடொன்று மோதிக்கொள்ளாமல், இணக்கமாகப் பரிணமிக்கும் நீர்மையைப் பெற்றுள்ளன. பல வர்ணங்கள் சேர்ந்து அழகு பரப்பும் வானவில்லைப் போன்ற பல கலாசாரங்களின் சந்திப்பாக மிளிர்கின்றது மலேயா.

எனவே, மலேயாவில் வாழும் பல்வேறு இனத்தவரின் கலை நிகழ்ச்சிகளுக்கும் பெஸ்டா விழாவில் உரிய இடம் தந்து போற்றிய சிறப்பை மக்கள் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கலை விழாவைத் திறந்து வைப்பதற்காக முதலமைச்சர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களை அலங்காரப் படகு ஒன்றிலே பூமலை ஏரியின் வழியே, முதல் அரங்குக்கு அழைத்துச்சென்ற கோலாகலமான காட்சியை ஏராளமான மக்கள் கண்டு மகிழ்ந்தார்கள்.

மலேயாவின் பழங்குடி மக்கள் நடத்திய கலை நிகழ்ச்சிகள் பெஸ்டாவின் மிகச்சிறந்த அம்சங்களாகும்.

மலேயாவின் பழங்குடிப் பெண்கள் பலர் வரிசையாக அமர்ந்திருக்கிருர்கள். ஒவ்வொருவருடைய கையிலும் குட்டையும் நெட்டையுமான மூங்கிற்குழாய்கள் உள்ளன. அவர்களுக்கு முன்னல் ஒரு பெரிய மரக்கட்டை இருக்கிறது. மூங்கில் குழாய்களைத் தாளத்தோடு மரக்கட்டையிலே தட்டுவதன் மூலம் இனிய நாதம் எழுப்புகின்றனர். பெண்கள் மூங்கிலால் இசைக்கும் தாளத்

துக்கு ஏற்றவாறு ஆண்கள் கிராமிய நடனம் ஆடுகிறுர்கள். பூர்வீகக் குடிகளின் இந்தப் பழைமையான நிகழ்ச்சி நகர மக்களுக்குப் புதுமையாக இருந்ததில் வியப்பில்லையே !

நம்முடைய இசைவாணர்கள் புல்லாங்குழலை உதட்டிலே வைத்து இசை எழுப்புகின்றனர். ஆனல் 'சக்காய்கள்' என்று சொல்லப்படும் மலேயாவின் பூர்வீகக் குடிகள் சிறிய மூங்கில் குழல்களை மூக்கிலே வைத்துப் புதுமையான நாதம் எழுப்புகின்றனர்.

இவைகளைப் போலவே பழங்குடி மக்களின் நிகழ்ச்சிகள் அனைத்தும் உள்ளத்தைக் கவர்வனவாகவே இருந்தன என்பதில் ஐயமில்லை.

மலாய்க்காரர்கள் மிக ஆவலோடு ஆடும் நடனம் ரோங்கிங். பழங்காலத்தில் அரசவைகளிலே மட்டுமே நிகழ்ந்து வந்த ரோங்கிங் நடனம் இப்போது நாடெங்கும் பரவி, இது இல்லாத கலைக்கூடமே இல்லை என்ற அளவுக்கு மலேயாவில் பரவியுள்ளது. இந்த நடனத்தின் அடிப்படைத் தத்துவம் ஊடல் அல்லது பசப்புக் காதல் புரிதல் என்று சொல்லலாம்.

ஆணும் பெண்ணும் பங்கு கொள்ளும் இந்த நடனத்தில், ஆண் தன்னை நெருங்கவிடாமல் பெண்ணனவள் விலகி விலகிச் செல்லும் ஊடல் நிறைந்த நளினமான ஆடலைக் காணலாம். நடனத்தில் கலந்துகொள்ளும் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் தொடக்கூடாது என்பது முக்கிய நிபந்தனை. இந்த நடனத்துக்கு ஏற்ற இசை எழுப்புவதற்கு ஒரு வகையான முரசு வாத்தியம் பயன்படுத்தப்படுகிறது. டொண்டாங் சயாங், மாக் இனங், சங்காங் முதலிய பல வகைகள் ரோங்கிங் நடனத்தில் அடங்கியுள்ளன.

'தாரி பீரிங்' என்பது மலாய்க்காரர்களின் மற்றொரு நடன வகை. இந்த நடன முறை பல ஆண்டுகளுக்கு

முன்பு சுமத்ராவிலிருந்து இறக்குமதியாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது. இளம்பெண்கள் மட்டுமே இந்த நடனத்தில் பங்கு கொள்வார்கள்.

இந்த நடனமாடும் இளநங்கையர் அழகோடு ஆத்ம சுத்தியும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி உண்டு. ஏனெனில், இந்த நடனம் தெய்வ வழிபாட்டு முறை போல் அமைந்தது. உணவுப்பொருள்களைத் தட்டுகளில் வைத்துக் கடவுளுக்கு நைவேத்தியம் செய்யும் பாவனையில் பெண்கள் பக்தி நடனம் ஆடுவார்கள்.

இளம்பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளும் மற்ருெரு நடனம் 'தாரி சபோங்.' கிராமங்களில் திருமணம் போன்ற சமூக விழாக்களின் போது இந்த நடன நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். நடன அமைப்பு முறை சேவற்சண்டை போல் இருக்குமாம்.

ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ளும் நடன முறைகளும் மலாய்க்காரர்களிடம் உண்டு. அவற்றில் "தாரி லபி–லபி" என்பதும் ஒன்று. இந்த நடனத்துக்கு இசை மிகத் துரிதமாக முழங்கும். இசையின் வேகத்துக்கு ஏற்ப ஆட்டத்தினர் உக்கிரமும் அதிகமாகும். வேகம் உச்ச நிலையை அடையும் சமயம் ஆடுபவர் மெய்மறந்து ஆவேசத்தோடு மயக்கமடைந்துவிடுவார். அவர் மயங்கும் வரை நடன நிகழ்ச்சி நடக்கும். ஆகவே, சில சமயங்களில் வெகு நேரமாகியும் நிகழ்ச்சி முடியாத நிலை ஏற்பட்டு, ஆட்டக்காரரைக் கையைப் பிடித்து மேடைக்கு உள்ளே இழுக்க வேண்டிய நெருக்கடியும் ஏற்படுவதுண்டாம்!

'ஒலக் மாயாங்' என்பது மீனவர்கள் ஆடும் பூசை நடனம். ஒரு மணி நேரம் நடனம் நீடிப்பதற்குக் குறைந்தது ஏழு பேர்களாவது இருக்க வேண்டும். ஆட்டத்தின் போது ஒவ்வொருவராக ஆவேசம் அடைய வேண்டும்.

அப்படி ஆவேசம் வருவதற்கு ஏற்ற முறையில் பக்திப் பாட்டுக்கள் முழங்கும்.

"பெர்கா யோங் ஒட்டா ஒட்டா" என்பது உடல் வலிமையை உணர்த்தும் வீர நடனம். இந்த நடனம் ஆடுபவர்கள் ஈட்டிகளையும், வாள், கட்டாரி, கேடயம் முதலான போர்க்கருவிகளையும் அணிந்திருப்பார்கள். பழைமையான சங்கீதத்துக்கு ஏற்றவாறு இரண்டு இரண்டு பேர்களாகச் சேர்ந்து வீர நடனம் புரிவார்கள். இவ்வாறு மேடையிலே மூன்று முதல் ஆறு ஜதை ஆட்டக் காரர்கள் பங்கு கொள்வார்கள்.

"சிலாட் பெஞ்சாக்" என்பது மலாய்க்காரர்களின் பழைமையான தற்காப்பு நடனம். நமது நாட்டில் 'குஸ்தி' என்று சொல்கிறோமே அவ்வகையைச் சேர்ந்தது அது.

ஆடவர் ஒவ்வொருவரும் "சிலாட்" ஆட்டத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்கிற கண்டிப்பு மலாய்க்காரர் களிடம் உண்டு.

"பெடிக்கிர் பாரத்" என்ற இசை நிகழ்ச்சியைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். கவிதையிலே ஆர்வ முள்ளவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்வார்கள். இந்தத் தர்க்கப் பாட்டு நிகழ்ச்சி சில சமயங்களில் விடியும் வரையிலுங்கூடச் சுவையாக நடப்பது உண் டாம். இந் நிகழ்ச்சியில் சாதாரணமாக எட்டுப் பேர்கள் கலந்துகொள்வார்கள்.

கிளந்தான் மாகாணத்தில் பிரபலமாக உள்ள "வயாங் குலிட்" என்னும் பாவைக்கூத்து நிழலாட்ட முறையில் நிகழ்கின்ற கலை நிகழ்ச்சி. திருமணம், பிறந்த நாள் போன்ற விழாக்களின் போதும், அறுவடைக் காலங் களிலும் இந்த நிழலாட்ட நிகழ்ச்சியை மலாய்க்காரர்கள் ஏற்பாடு செய்கின்றனர். இந்த நிழலாட்டத்துக்கு

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசக் கதை களேயே பயன்படுத்துகிருர்கள். ஒரே கதையைப் பல இரவுகளுக்கு நிழலாட்ட நிகழ்ச்சியாக நடத்துவது உண்டு. கதைக்குரிய பாத்திரங்களை அட்டைகளிலே உருவாக்கி, அவற்றை ஒரு வெள்ளைத்திரைக்குப் பின்புற மாக இருந்துகொண்டு ஆட்டிவைக்கிருர் பாவைக் கூத்துக் கலைஞர். அவர் அட்டைப் படங்களை இயக்கு கின்ற வேகத்தில் திரைக்கு வெளியே நிழல் வடிவில் கதை யானது விறுவிறுப்பாகச் செல்லுகிறது. கலை விழாவில் சீனர்கள் நடத்திய "கடல் நாக நடனம்" கலையன்பர் களின் கவனத்தை மிகவும் கவர்ந்த ஒன்று.

கலை விழாவிலே இந்தியர்களின் கலை நிகழ்ச்சிகள் பலவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்தி சபா, ஈஸ்டர்ன் ஆர்ட் சொஸைட்டி, பரத நடன சபா ஆகிய கலைக் கழகங்கள் சிறந்த பரத நாட்டியம், கதகளி போன்ற நிகழ்ச்சிகளையும், நாட்டிய நாடகங்கள் சிலவற்றையும நடத்திப் பிற இனத்தவர் களின் பாராட்டுதலையும் பெற்ருர்கள் என்று அறிந்து பெருமிதம் அடைந்தோம்.

முதன் முதலாகப் பூமலை மாநகரில் மாபெருங் கலை விழா மிகச் சிறப்பாக நடத்துவதற்குக் காரணநாயகராக விளங்கிய முதலமைச்சர், திரு. துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களின் கலையார்வத்தை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

பலநாட்டுக் கலைவண்ணம்
பகையெதுவும் இன்றிப்
பக்குவமாய்க் கலந்தொளிரும்
வான்வில்லைப் போன்ற
மலைநாட்டில் மக்களெலாம்
குடியுரிமை பெற்று
வாழ்வதற்குச் சுதந்திரமாம்
வழிதேடித் தந்த

தலைவா ! இந் நாட்டினிலே
சமத்துவமே பேணுந்
தங்கமனம் படைத்தோனே !
துங்குரஹ்மானே !
கலைவாழப் 'பெஸ்டா'வைக்
கண்டமுத லமைச்சே !
கைகூப்பித் தொழுகின்றோம்
கலையுறவி னாலே.

இவ்வாறு முதல் அமைச்சருக்குப் பாமாலை சூட்டக் கவிதை உள்ளம் முந்திக்கொண்டது.

17. கலைச் சங்கங்கள்

கோலாலம்பூரில் இந்தியர்களாலும் இலங்கைத் தமிழர்களாலும் நடத்தப்படும் சங்கங்கள் பல உள்ளன. ஈஸ்டர்ன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, அசோகன் நாடகக் குழு, கோபால் ஷெட்டி நடனக் குழு, கைரளி ஆர்ட்ஸ் கிளப், சுதந்திர கான சபை, சிவதாஸ் வத்ஸலா நாடகக் குழு, சிலாங்கூர் இந்திய இலங்கை இளைஞர் சங்கம், பாரத் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி, மறுமலர்ச்சி வாத்திய கோஷ்டி, கலைப் பண்ணை, வண்ணக்குமரி நாடக மன்றம் ஆகிய பதினொரு சங்கங்களும் ஒன்றாக இணைந்து நமது கலைக் குழுவுக்கு வரவேற்பு விருந்தும் பொதுக்கூட்டமும் நடத்துவதென்று முடிவு செய்திருந்தன.

ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு இயங்கும் இத்தனை சங்கங்களும் எப்படி ஒன்று சேர்ந்தன என்று கோலாலம்பூர் மக்கள் அதிசயப்

பட்டார்கள். எத்தனை வேற்றுமைகள் இருந்தாலும் கலையினால் ஒன்றுபடுத்திவிடலாம்; கலையினால்தான் ஒன்றுபடுத்தவும் முடியும் என்ற உண்மையை மேற் கண்ட இந்தியர், இலங்கையர் கலாசாரக் கழகங்கள் எடுத்துக் காட்டின.

இந்தக் கழகங்களின் சார்பில் மே மாதம் இருபத்திரண்டாம் நாள் நடைபெற்ற வரவேற்புத் தேநீர் விருந்து, ஈஸ்டர்ன் ஹோட்டல் என்ற நாகரிக உணவு விடுதி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

மலேயா மக்களின் பெருமதிப்புக்குரிய வழக்கறிஞர் திரு. ஆர். ரமணி வரவேற்புக்குத் தலைமை வகித்தார்.

விருந்தின் போது சொற்பொழிவாற்றிய மலேயாவின் தகவல் இலாகா டைரக்டர் திரு. இஞ்சே யாகூப் மகத்தான ஓர் உண்மையை வெளியிட்டார்.

"இந்தியாவிலிருந்து மலேயாவில் குடியேறி வசித்து வருபவர்களில் பெரும்பாலோர் தென் இந்தியர்களே. இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு அவர்கள் பெரிதும் உதவியிருக்கிறார்கள். மலேயாவின் பெருவளத்துக்குத் தென்னிந்தியர்கள் காரணர்களாக விளங்குகிறார்கள். நாடோடிக் கதைகள், மொழி, சமயம், சமூகப் பழக்கவழக்கங்கள், பொதுக் கலாசாரம் முதலிய துறைகளில் அந்த மாபெரும் நாடான இந்தியாவுக்கு மலேயா மிகவும் கடமைப்பட்டிருக்கிறது."

இந்த உண்மையைத் தகவல் இலாகா டைரக்டர் வெளியிட்டது குறித்துத் திரு. ரமணி தமது உரையில் மிகவும் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

''மலேயாவில் உள்ள ஆறு லட்சம் இந்தியத் தொழிலாளர்களின் கடும் உழைப்பினுல்தான் ரப்பர்த் தோட்டங்கள் செழிப்பாக உள்ளன. ஆனல், அண்மையில் வளியாகியிருக்கும் ஆறு காசு அஞ்சல் முத்திரையில் பால் வெட்டும் இந்தியத் தொழிலாளி யின் உருவம் காணப்படாமல் வேறு உருவம் காணப்படுவது பெரும் வருத்தத்தைத் தருகிறது.''

இவ்வாறு வரவேற்புக் குழுத்தலைவர் சுட்டிக் காட்டியதும் விருந்திலே கூடியிருந்தோர் அத்தனை பேரும் கை தட்டி, ஆரவாரம் செய்து தமது உணர்ச்சியை வெளிப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

மறுநாள் இந்தியர் - இலங்கையர் கலாசாரக் கழ கங்களின் கூட்டுறவிலேயே ஒரு வரவேற்புப் பொதுக் கூட்டம் விவேகானந்தா ஆசிரமத் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது. பெடரல் சட்ட சபை உறுப் பினர் திரு. எஸ். ஓ. கே. உபயதுல்லா தலைமை வகித் தார்.

மே மாதம் இருபத்துநாலாம் நாள் புதிய அரங் கிலே தமிழ் நாடக விழாவை மலேயாவின் கைத் தொழில் வர்த்தக மந்திரி டாக்டர் இஸ்மாயில் தொடங்கி வைத்தார். தமிழ் நாடகக் கலையைப் பற்றியும் நமது குழுவைப் பற்றியும் பல விவரங்களை ஆர்வ மாகச் சேகரித்து அவர் வெளியிட்டது மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

விழாவுக்குத் தலைமை வகித்த திரு. ஓ. கே. உபய துல்லா ஒரு சிறந்த தமிழ் நாவலர் என்பதை அவ ருடைய தெளிவான சொற்பொழிவிலே கண்டோம்.

ஆரம்ப நாளன்றே அரங்கிலே கூடியிருந்த மக்களின் நாடக ரசனையின் உயர்வைக் கண்டு மகிழ்ந் தோம். மலேயா மக்களுக்கும் 'இராஜ ராஜ சோழன்' நாடகத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்

பதை அறிவிக்கும் முறையில் ஒரு முன்னுரை தயாரித்து, நாடகம் தொடங்கு முன் ஒலிபெருக்கியில் அதனைப் படிக்கும் வழக்கத்தைக் கையாண்டோம். ராஜேந்திர சோழன் வென்ற கடாரம் என்ற தேசம் மலேயாவின் வடபாகத்தில் உள்ள 'கெடா' என்ற மாகாணந்தான் என்பதைத் தெளிவாக்கினேம். இந்த முன்னுரையின் காரணமாக நாடகத்திலே மக்கள் அதிக ஈடுபாடு கொண்டு அணுஅணுவாக ரசித்தார்கள்.

'இராஜ ராஜ சோழன்' நாடகத்தில் சீனத் தூதுக் காட்சியொன்று வருகிறது. கடல் கடந்து வாழும் தமிழருக்குச் சோழ வேந்தன் அந்தத் தூதரின் மூலம் செய்தி சொல்லியனுப்பும் காட்சி அது. தமிழ் நாட்டில் நாடகம் நடக்கும் போது பொதுவாக இந்த லட்சியக் காட்சி அவ்வளவாக ரசிக்கப்படவில்லை. ஆனல் மலேயா மக்கள் இந்தக் காட்சியை மிக நன்ருக அநுபவித்தார்கள்.

''கடல் கடந்து வாழும் தமிழர்கள், தாம் குடியேறியுள்ள நாட்டையே தங்கள் தாயகமாக எண்ணிப் போற்ற வேண்டும் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள்!'' என்று 'இராஜ ராஜ சோழன்' கூறிய போது ரசிகர்கள், உணர்ச்சியின் சிகரத்துக்கே சென்றுவிட்டனர்.

பொதுவாகத் தமிழ், தமிழன், தமிழ்நாடு, தமிழ் நாகரிகம் என்பன பற்றிக் குறிப்புக்கள் வரும் வசனங்களையெல்லாம் மலேயாவில் வாழும் தமிழ் மக்கள் உள்ளுணர்வோடு ரசித்தார்கள் என்று சொல்ல வேண்டும்.

''நமது தமிழ்நாட்டின் பாதுகாப்பு போர் வீரர்களின் எண்ணிக்கையிலோ, கோட்டை கொத்தளங்களின் சுற்றளவுகளிலோ, பொருளாதார நிலையிலோ இல்லை! அது நம் தமிழ் மக்களுடைய நெஞ்சத்தில்

தான் இருக்கிறது'' என்று இராஜ ராஜ சோழன் கூறும் ஒரு வாக்கியம் கலையன்பர்களுக்கு எவ்வளவு உணர்ச்சியூட்டியது என்பதை எழுத்தால் வருணிக்க இயலாது.

சிங்கப்பூரைவிடக் கோலாலம்பூரில் மக்களின் ரசனை பொங்கிப் பெருகியதற்குப் புதிய நாடக அரங்கமும், ஒலிபெருக்கியும் எவ்வளவு காரண மாக இருந்தன என்பதை எண்ணி மகிழ்ந்தோம்.

சீனர்களும், மலாய்க்காரர்களும் ஐரோப்பியர் களுங்கூடத் தமிழ் நாடக வளம் காண்பதற்காகப் பேரார்வத்தோடு அரங்கிலே கூடியிருந்ததைக் கண்டு எங்கள் தமிழ் உள்ளம் பெருமித உணர்ச்சி பெற்றது.

18. வெந்நீர்க் கிணறும் வேலன் குகையும்

கோலாலம்பூரில் எங்களைக் கவர்ந்த – ஏன்' ஊருக்குப் புதியவர் எவரையுமே கவரக்கூடிய - மற் றொரு சிறந்த அம்சம் வெந்நீர்க் கிணறு. இந்தக் கிணற்றைப் பற்றிக் கேள்விப்பட்ட உடனேயே இதனைக் காண வேண்டுமென்ற ஆவல் பிறந்து விட்டது.

நகரில் நாங்கள் தங்கியிருந்த மாளிகை மேட்டுப் பாங்கான இடத்தில் அமைந்திருந்தது. விசாலமான இட வசதியும், மெய் சிலிர்க்கும் காற்று வளமும் நிறைந்த அந்த இல்லத்திலே நீர் வசதி மட்டும் சற்றுக் குறைவாகவே கிடைத்தது. நகர நண்பர் களின் துணையால் தண்ணீர் வசதியைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. ஆயினும், தண் ணீரை வெந்நீராக்கிக் குளிக்கும் வழக்கத்தை எங் களில் சிலர் விலக்க முடியவில்லை.

இங்கிலேயிலேதான் வெந்நீர்க் கிணறு பற்றிய செய்தி கிடைத்தது. 'பருத்தி புடைவையாய்க் காய்த்தது' போன்ற உற்சாகம் எல்லோருக்கும் ஏற்பட்டது.

"அடுப்பைத் தேடாமல், அனலைப் போடாமல் அருமையான வெந்நீர் போட்டு வைத்திருக்கிருள் பூமா தேவி! வெந்நீரில் நீராட விரைந்தோடி வாருங்கள்!" என்று இயற்கை அன்னையானவள் அன்பு அழைப்பு விடுப்பது போல் இருந்தது.

ஒரு நாள் அதிகாலேயில் வெந்நீர் ஊற்றுக்குச் சென்ருேம்.

இந்தக் கிணறு நமது நாட்டில் உள்ள கபிலேக் கிணறுகளைப் போல மிகப்பெரியதாக அமைந்துள்ளது. அதிகாலேயில் வெப்பத்தின் ஆவி கிணற்றுக்கு மேலே கப்பிக்கொண்டு சுழலுவதைக் காணலாம். ஆவியைக் கண்டதும் வெந்நீர் தாங்க முடியாத சூடுடையதாகத் தோன்றும். நீரை வாளியிலே மொண்டு, தொட்டுப் பார்த்தால் உடம்பு பொறுக்கக்கூடிய சூடாகத்தான் இருக்கிறது என்ற உண்மை புலனுகும்.

வாளியைக்கொண்டு கையினுல் எட்டி மொள்ளக் கூடிய முறையில் நீர் மட்டம் மேலெழுந்து நிற்கிறது. முன் பக்கத்தில் கிணற்ருேடு ஒட்டினுற்போல் குளிக்கும் அறைகள் கட்டப்பட்டுள்ளன. கிணற்று நீர் அறைகளுக் குள்ளும் வியாபித்து நிற்கும் முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தொட்டியிலிருந்து நீரை மொண்டு குளிப்பது போல் கிணற்றிலிருந்து வெந்நீரை மொண்டு நீராடக்கூடிய அருமையான வாய்ப்புக் கிடைக்கிறது.

இருபது முதல் இருபத்தைந்து பேர்கள்வரை ஒரே சமயத்தில் தாராளமாக நின்று குளிப்பதற்கு ஏற்றவாறு கிணற்றைச் சுற்றிலும் தளம் போடப்பட்டுள்ளது.

வெந்நீர், உப்பு நீராக இல்லாமல் நன்னீராக விளங்குவதோடு, கலங்கல் இன்றிப் பளிங்கு போல் தெளிவாக இருக்கிறது.

மலேயா முப்புறங்களிலும் கடல் சூழ்ந்த சிறிய நாடாயினும் எப்புறத்திலும் அங்குள்ள நீர்நிலைகளில் உப்பு நீரையே காண முடியவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மலேயா வெளித் தோற்றத்துக்கு மிகப் பசுமையாக இருந்தாலும் அது ஒரு கந்தக பூமியென்றும், அதனால் தான் வெந்நீர்க்கிணறுகள் சில இடங்களில் காணப்படுகின்றன என்றும் கேள்விப்பட்டோம். மண்ணியல் எவ்வாறாயினும் வெந்நீர்க் கிணற்றை நன்றாகப் பயன் படுத்திக்கொள்ள நாங்கள் தவறவில்லை. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு வெந்நீர்க் கிணற்றில் உள்ள குளிக்கும் அறைக்கு ஈடாக வேறு எதுவும் கிடையாது!

"**கோ**லாலம்பூர் முகாமிலே கண்டிப்பாகக் கண்டு மகிழ வேண்டிய மகத்தான மலைக் குகை உள்ளது. அந்த மலை வளங் காண அவசியம் வர வேண்டும்" என்று மகாமாரியம்மன் கோயில் தர்மகர்த்தா திரு. சு. பழனி வேல் பிள்ளை மனங்கனிந்து அழைத்தார்.

திரு. பிள்ளையவர்கள் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் தலைமையில் இயங்கிய இந்திய சுதந்திரச் சங்கத்தின் பொதுநலத்துறையில் நிர்வாக உறுப்பினராகப் பணி புரிந்தவர். அமைதியான தோற்றமும் அன்புப் பணி செய்ய ஆர்வமும் ஆற்றலும் வாய்ந்தவர்.

அவரது ஏற்பாட்டின்படியே நாங்கள் அனைவரும் மே மாதம் இருபத்தெட்டாம் நாள் பொழுது புலருவதற்கு முன் வெந்நீர் ஊற்றில் குளித்துவிட்டுப் பத்துமலைக்குச் சென்றோம்.

பத்துமலைக் குகை கோலாலம்பூரிலிருந்து ஏழு கல் தொலைவில் உள்ளது. அந்தக் குகையில் உள்ள வேலன் கோயில் மகாமாரியம்மன் கோயில் நிர்வாகத்தில் அடங்கியது.

மலையடிவாரத்தில் உள்ள கொட்டகையில் ஆலயப் பிரமுகர்கள் நமது குழுவினர் அனைவரையும் எதிர் கொண்டு அழைத்து வரவேற்றனர். மலைமேல் உள்ள குகைக் கோயிலை அடைவதற்கு 242 படிகளில் ஏற வேண்டும். ஆதலால், காலையுணவை முடித்துக்கொண்டு புறப்படுவதே சாலச் சிறந்தது என்று ஏற்பாடு செய்திருந்தனர்.

பசுமையான சூழலுக்கு இடையே படிகளின் தோற்றம் மிகக் கவர்ச்சியாக இருந்தது. மனக் குகையிலிருந்து பொங்கியெழுந்த உற்சாகத்தோடு மலைக் குகையைக் காண்பதற்காகப் படிகளிலே விரைந்து ஏறினோம். படிகளில் ஏறுவதில் திரு. 'குண்டு' கறுப்பையா உட்பட எவருமே சிறிதும் சலிப்படைந்துவிடவில்லை.

மலையின்மேல் உள்ள கடைசிப் படியில் காலெடுத்து வைத்ததும் பிரும்மாண்டமான குகையின் அற்புதத்தைக் கண்டோம். அற்புதம் என்னவென்றால், அது ஓர் இருளடைந்த குகையாக இல்லை; பாறைகளை விதானமாகக்கொண்டு இயற்கையாகவே அமைந்த மாபெரும் மண்டபமாகவே அந்தக் குகை காட்சியளித்தது. மிகப் பெரிய பொதுக்கூட்டமே நடத்தலாம். அவ்வளவு விசாலமானதாகக் குகை மண்டபம் விளங்குகிறது. குகைக்கு மேலே பாறையாலது உருகித் தோரணம் கட்டினாற்போல் தொங்கிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு உருகித் தொங்கும் பாறைகள் நம்மீது விழுந்துவிடுமோ என்ற அச்சமும் எழுகிறது.

குகை மண்டபத்துக்குள்ளே வேல் ஒன்று விளங்குகின்றது. இந்த வேல் 1872-ல் கால்கோள் செய்யப்

பட்டதென்று தெரிகிறது. வேல் வழிபாடு நாள்தோறும் தவறுமல் நடைபெற்று வருகிறது.

மலைகள்தோறும் குடியிருக்கும் வழக்கத்தைக் கொண்ட தமிழ் முருகன் மலேயாவில் உள்ள பத்துமலைக் குகையையும் உரிமையாக்கிக்கொண்ட சிறப்பு எண்ணி வியத்தற்குரியது. இந்தியாவிலிருந்து மலேயாவில் குடியேறிய அன்பர்களின் மனம் என்னும் கலத்தில் ஏறிக் கடல் கடந்து பத்துமலையில் வேலன் முகாமிட்டானே என்று எண்ணத் தோன்றுகிறது:

ஆறுபடை வீடுடையான்
　　அழகு வடிவேலன்
அன்பர் அகக் கலம்ஏறி
　　அலைகடலைத் தாவி
வீறுமிகப் பத்துமலை
　　மேல்குகையில் ஏறி
வீற்றிருக்கும் காட்சிதனைப்
　　போற்றிடுவோம் வாரீர்!

பத்துமலை முருகன் கோயிலில் ஆண்டுதோறும் தைப்பூசத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. மலேயாவின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் விழாவிலே கலந்து மகிழ்வார்கள். காவடி எடுத்தல், அலகு குத்திக்கொள்ளுதல் முதலிய பிரார்த்தனைக் கோலாகலங்களில் ஈடுபடும் பக்தர்கள் தைப்பூசத் திருநாளில் ஏராளமாகக் கலந்துகொள்வார்கள். தமிழர்கள் மட்டுமல்லாமல் பிற இனத்தவரும் பத்துமலைக் கோயிலையும் தைப்பூச விழாவையும் புனிதமாகப் போற்றுவது உண்டாம்.

ஒரு சமயம், மாவட்ட அதிகாரியாக இருந்த ஆங்கிலேயர் ஒருவர் குகையிலுள்ள வேலை ஆத்திரத்தோடு இரண்டாக ஒடித்துவிட்டாராம்! இந்தச் சம்பவம் நடந்து இரண்டு நாட்களுக்குள் அவருக்கே ஏதோ மனக் கலக்க

மும் பயமும் ஏற்பட்டுத் தம் சொந்தப் பொறுப்பிலேயே மீண்டும் வேலைப் பிரதிஷ்டை செய்து போற்றினராம்.

1939-ல் குகைக் கோயிலுக்குப் படிக்கட்டு அமைக்கும் வேலை தொடங்கப்பட்ட போது கோயிலுக்கு நிதி எதுவும் கிடையாது என்றும், நம்பிக்கையுடன் வேலை தொடங்கி ஐம்பது நாட்களுக்குள் தொழிலாளர்களின் மூலமே இருபத்தையாயிரம் வெள்ளிகள் நிதி வசூலாகி விட்டதென்றும் திரு. பழனிவேல் பிள்ளை குறிப்பிட்டார்.

ஆண்டுதோறும் தைப்பூசத்தின் போது சுமார் நாற்பதாயிரம் வெள்ளிகள் காணிக்கையாகச் சேர்கின்றன. எச்செலவும் போக முப்பதாயிரம் வெள்ளி மிச்சம் கிடைக்கிறது.

இவ்வாறு சேரும் நிதி முழுவதும் அற வழிகளிலே செலவிடப்படுகிறது பத்துமலை அடிவாரத்திலேயே ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் நடைபெற்று வருகிறது. கோயிலின் நிதியைக் கல்விக் கூடத்துக்காகச் செலவிட முன் வந்த நிர்வாகிகளை மனமார வாழ்த்தினோம்.

பின்னர், இல்லத்துக்குத் திரும்பும் வழியில் மகா மாரியம்மன் கோயிலார் நிர்வாகத்தில் இயங்கும் அப்பர் தமிழ்ப்பள்ளியைக் கண்டோம். இந்தப் பள்ளி சுவாமி ஆத்மராம் என்னும் முதுதமிழ்க் கிழவரால் 1936-ல் குருகுல முறையில் தொடங்கப்பெற்று நாளடைவில் வளர்ச்சியடைந்துள்ளது.

இப்பள்ளியில் உள்ள மாணவ மாணவிகள் பல இலக்கியப் பாடல்களை இனிமையுறப் பாடிக் காண்பித்தனர். தேவாரப் பாடல்களுக்கு அழகாக அபிநயம் பிடித்தனர். கல்வியிலும் கலையிலும் நன்றாக முன்னேறி வரும் இளந்தமிழ்ச் செல்வங்களின் சுறுசுறுப்பு எங்களை மிகவும் கவர்ந்தது.

அப்பர் தமிழ்ப்பள்ளி
அன்புக் கலைப்பள்ளி
இப்பகுதி யில்வாழ்வோர்
எல்லோர்க்கும்—எப்பொழுதும்
செந்தமிழும் நல்லறமும்
சீரியநற் பண்பாடுந்
தந்துதவும் கூடமிது தான்!

என்று வாழ்த்தினேம்.

கோலாலம்பூரில் உள்ள தமிழ்ப்பள்ளிகளில் விவேகானந்தா தமிழ்ப்பாடசாலை மிகப்பெரியது. அழகான கட்டட வசதியும் பெற்றுள்ள கல்வி நிலையம் இது. இந்தப் பள்ளியில் பயிலும் மாணவிகள் மஞ்சள் நிறப் பொது உடையுடன் பொன்னுன காட்சி தருகின்றனர். ஆனல், மாணவர்களுக்குப் பொ உடை கட்டுப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை இப்பள்ளியை இலங்கைத் தமிழர்கள் மிகத்திறமையாக நடத்தி வருகின்றனர். கல்வியில் மட்டுமன்றி இசை நாடகத் துறையிலும் இந்தப் பாடசாலை நிர்வாகிகள் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர். சங்கீத சபையொன்றும் இப்பள்ளியில் செம்மையாக இயங்கி வருகிறது.

நாடகக் கலை நிகழ்ச்சி ஒன்றும், இசை-நடன நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் வெவ்வேறு நாட்களில் எங்களுக்காக நடத்திக் காண்பிக்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகளில் மாணவிகளின் ஆர்வம் போற்றத்தக்கதாக இருந்தது. சிலப்பதிகாரப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து அப்படியே நாடகக் காட்சிகளாக உருவாக்கிப் பெண்கள் சிலர் நடித்துக்காட்டிய சிறப்பு மறக்க வொண்ணுதது.

மேலே குறிப்பிடப்பட்டவைகளைப் போன்ற தமிழ்ப் பாடசாலைகளுக்கு மலேயா அரசாங்கம் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவது பாராட்டத்தக்கது.

19. அறம் வளர்க்கும் கூடங்கள்

கோயில்களையெல்லாம் கலை வளர்க்கும் கூடங்களாக மலேயாத் தமிழர்கள் பேணிவருவதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

"இயல், இசை, நாடகம், சிற்பம் முதலான கலைகள் அனைத்தையும் வளர்க்கும் கலைக்கூடம் எது? மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பள்ளி எது? மருத்துவம், அன்னதானம் முதலான அறத்துறைகளை வளர்ப்பது எது? மெய்க்கீர்த்திகளைக் கல்வெட்டுகளாகப் பதித்து வரலாற்றை வளர்ப்பது எது? ஊருக்குப் புதியவர் தங்கவும் ஊர்ப் பொதுமக்கள் ஒன்று கூடிப் பேசவும் ஏற்ற இடம், எல்லோருக்கும் பொதுவாக விளங்கக்கூடிய ஒரே பொது இடம் எது?"

ஒரே கேள்வி மயமான இந்த அழகு வசனத்தை' எங்கேயோ கேட்ட நினைவு நேயர்களுக்கு வரக்கூடும். "இராஜ ராஜ சோழன்" நாடகத்தைப் பார்த்த அன்பர்கள் தஞ்சைப் பெரிய கோயில் காட்சியில் வரும் இந்த உரையாடலை மறந்துவிட முடியாது. இப்படிப் பல கேள்விகளை இராஜ ராஜ சோழனின் தமக்கையாரான குந்தவைப் பிராட்டியின் வாய்மொழியாகப் பொழியச் செய்வதையும், "அனைத்துக்கும் உரிய பொது இடம் கோயில் என்று குறிப்பிடுகிறீர்களா?" என்று சோழ மன்னன் கேள்வியிலேயே பதில் தருவதையும் எண்ணும்போது கோயில்களின் உண்மைத் தத்துவம் புலனாகாமற்போகாது.

இந்தத் தத்துவத்தை நிலை நிறுத்தும் அற வழியில் கோலாலம்பூரில் பல கோயில்கள் இயங்கி வரும் உண்மையை நேரில் கண்டு மகிழ்ந்தோம்.

மகா மாரியம்மன் கோயில், 'ஸ்காட் ரோடு' கந்தசாமி கோயில் என்னும் செந்தில் செட்டியார் கோயில் என்னும் தண்டபாணி கோயில் ஆகிய முக்கிய

முக்கியமான மூன்று கோயில்களிலும் நமது குழுவினரை வரவேற்றுக் கௌரவித்தார்கள்.

இந்தக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் பொது விழாக்கள் நடத்துவதற்கு ஏற்ற நல்ல மண்டபங்கள் உள்ளன.

மகா மாரியம்மன் கோயில் நிர்வாகிகள் அப்பர் தமிழ்ப்பள்ளி போன்ற கல்விச்சாலைகளை இயக்குவதோடு அவ்வப்போது தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளுக்கும் சமயச் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடுகள் செய்கின்றனர். ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு நிகழ்ந்த வள்ளுவர் விழாவில் எங்கள் குழுவினரில் சிலர் முக்கிய பங்கெடுத்துக்கொண்டனர்.

* * *

'ஸ்காட் ரோடு' கந்தசாமி கோயிலை நடத்துபவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள். அழுத்தமான சைவப்பற்று உடையவர்கள். இக்கோயிலை இயக்கும் சிலாங்கூர் இலங்கை சைவர் சபையின் சார்பில் பெரும்பாலும் சமயச் சொற்பொழிவுகளும், நாயன்மார்களின் குருபூசைத் திருநாட்களும் தவறாமல் நிகழ்ந்து வருகின்றன. இந்தச் சபை நடத்திய திருஞானசம்பந்தர் திருநாளின் போதுதான் எங்களுக்கும் வரவேற்பளித்தது. இந்தக் கோயிலின் சார்பில் ஆறுமுக நாவலர் தமிழ்ப் பாடசாலை சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

செந்துல் என்னும் பகுதியில் உள்ள செட்டியார் கோவில் மிகவும் புகழ் வாய்ந்தது. செல்வமும் செல்வாக்கும் நிறைந்த இந்தக் கோயில் மிகப்பெரியது. கோயில் காம்பவுண்டுக்குள்ளாகவே அழகான பெரிய மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. தமிழ்த் தொடர்பான எந்த விழாவுக்கும் இந்த மண்டபம் இடம் அளிக்கிறது.

திருவள்ளுவர் திருநாள், பாரதி விழா, தமிழர் திருநாள், இசையரங்குகள் முதலிய பல நூறு விழாக் களை இந்த மண்டபம் கண்டிருக்கிறது. செந்தில் ஆண்டவனைச் செந்துல் ஆண்டவனாகக் கோயில் கொள்ளச் செய்த செட்டியார் சமூகத்தார் செந்தமிழ் மண்டபம் ஒன்றையும் அமைத்துள்ள அருமையை எண்ணிப் போற்றாமல் இருக்க முடியுமா? மாபெருங் கோவிலையும் மண்டபத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பை நண்பர் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ஏற்றுச் சிறந்த பணியாற்றி வருகிறார்.

கோலக் கிள்ளான் சாலையில் பெட்டாலிங் என்ற பேட்டையில் விளங்கும் சுத்த சமாஜம் என்னும் அறநிலையம் சாதிமத வேறுபாடு கருதாமல் பொதுநலப் பணி புரிந்து வருகிறது. ஆதரவற்ற அநாதைக் குழந்தை களுக்கு ஆதரவு தந்து கல்விப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் அளிக்கும் சிறந்த குருகுலமாக இந்நிலையம் இயங்கி வருகிறது.

இந்த நிலயத்தைத் தோற்றுவித்துத் திறம்பட இயக்கி வருபவர் 'சமாதான நீதிபதி' என்ற சிறப்புப் பட்டம் பெற்ற சுவாமி சத்தியானந்தா அவர்கள். இவர் தெளிந்த ஆங்கில அறிவும், தமிழ்ப் புலமையும், சீன மொழி, மலாய் மொழி ஆகியவற்றில் ஓரளவு பாண்டித் தியமும் பெற்றவர். இந்தியர், சீனர், மலாய்க்காரர் முதலிய பல்வேறு இனத்தவரின் கலாசாரங்களை எல்லாம் நன்கு உணர்ந்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். 'மலேயா சரித்திரம்' என்ற அருமையான தமிழ் நூலை உருவாக்கியவர்.

சுவாமி சத்தியானந்தரின் தளராத முயற்சியால் சுத்த சமாஜம் நாலரை ஏக்கரா நிலப்பரப்பில் ஒன்பது

நிரந்தரக் கூட்டங்கள் அடங்கிய பெருநிலையமாக வளர்ந்துள்ளது. பல சமூகத்தாரிடமிருந்தும் சுமார் ஒன்றரை லட்சம் வெள்ளிகள் நன்கொடை வசூலித்து அறநிலையத்தை விரிவுபடுத்தியுள்ளார் சத்தியானந்தர். ஆங்கில உயர்தரப் பள்ளிக்கூடம் ஒன்றும், சிறந்த மருத்துவ நிலையமும், தமிழ், சீனம், மலாய் ஆகிய மொழிகளைப் பயிற்றுவிக்கும் பள்ளியும் சுத்த சமாஜத்தின் சார்பில் இயங்கி வருகின்றன.

மகாத்மா காந்தியடிகளின் அஸ்தியில் கொஞ்சம் வரவழைத்து அதனை ஒரு மண் கலயத்தில் பயபக்தியோடு பாதுகாத்து வருகிறார் சுவாமி சத்தியானந்தர்.

ஒரு சிறு குன்றின்மீது அமைந்துள்ள பொது வழிபாட்டு மண்டபத்தில் உருவ வழிபாடின்றி 'ஓம்' என்னும்பிரணவ வடிவம் மட்டும் ஓவியமாக எழுதப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது.

தியானத்துக்கு ஏற்ற அமைதி வாய்ந்த அந்த மண்டபத்தில் குருகுலவாசம் பெறும் குழந்தைகள் வரிசை வரிசையாக அமர்ந்து பக்திப் பாடல்களை இனிய குரலில் பாடும் சிறப்பைக் கண்டு மகிழ்ந்தோம்.

தமிழில் அமைந்த பக்திப் பாடல்களைத் தமிழ்க் குழந்தைகளுடன் சீனக் குழந்தைகளும் சேர்ந்து பாடிய சிறப்பு வியக்கத் தக்கதாக இருந்தது. "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற சமரச சன்மார்க்கமே சுத்த சமாஜத்தின் குறிக்கோள் என்பதை அறிந்தோம்.

20. கலை வளர்க்கும் நிலையங்கள்

கோலாலம்பூரில் தமிழர்கள் சிலரின் கூட்டு முயற்சியால் உருவாகி இயங்கி வரும் திரைப்படக் கொட்டகை

ஒன்று உள்ளது. அதன் பெயர் 'ஹிந்துஸ்தான் தியேட்டர்.' அதன் நிர்வாக டைரக்டர்களில் ஒருவராகவும் மானேஜராகவும் விளங்குபவர் திரு. எஸ். பொன்னுத்துரை. இவர் இலங்கைத் தமிழர்.

''உங்களுக்கு என்னால் ஆகக்கூடிய உதவி ஏதாவது இருக்கிறதா........'' என்று நாள்தோறும் தொலைபேசி மூலம் வினவி அன்பைப் பரிமாறிக்கொண்ட நண்பர் திரு. எஸ். பொன்னுத்துரை. குழுவினர் அனைவருக்கும் ஹிந்துஸ்தான் தியேட்டரில் வரவேற்பளிக்க ஏற்பாடு செய்தார். வெறும் பாராட்டுக் கூட்டமாக இல்லாமல், புதிதாக வெளியான ''வணங்காமுடி'' திரைப்படம் எங்களுக்காகத் தனியே காலை ஒன்பது மணிக்குத் திரையிடப்பட்டது. தமிழகத்திலிருந்து நாங்கள் வெகு தொலைவில் இருந்தபடியால் அந்தப் படத்தைப் பார்த்த போது அதிலே தோன்றிய நடிக நண்பர்களை நேரிலே பார்த்தது போன்ற பாச உணர்ச்சியே மேலோங்கியது.

* * *

மலேயா அரசாங்கத்தின் தகவல் இலாகாவும், 'மலேயன் பிலிம் யூனிட்' என்னும் செய்திப்படத் துறையும் கலை வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன.

தகவல் துறையினர் நமது கலைக் குழுவினரை வரவேற்று உபசரித்துச் சில அருமையான செய்திப் படங்களைத் திரையிட்டுக் காண்பித்தனர். தகவல் இலாகாவில் இந்திய நாடகப் பகுதி ஒன்று இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இப் பகுதியில் நடிகர்கள் சிலரும் பாடகர்கள் சிலரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சில கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பித்தனர்.

அரசாங்கத்தின் சாதனைகளை நாடகங்கள் மூலமாகவும், தெருக்கூத்துப் பாணியிலும், கதாகாலட்சேப முறையிலும் தோட்டத்தொழிலாளர்களிடையே பரப்பும் பணியில் இந்திய நாடகப் பகுதி ஈடுபட்டுள்ளது.

பொதுமக்கள் தொடர்பு அதிகாரி திரு. சயத் உஸ்மான், தகவல் அதிகாரி திரு. ஏ. தர்மதுரை, "ஜனோபகாரி" என்னும் அரசாங்கச் செய்தித்தாளின் ஆசிரியர் திரு. சி. வி. குப்புசாமி ஆகியோர் தகவல் இலாகாவின் கலை ஆர்வத்தை விளக்கித் தமிழ் நாடகக் கலையின் சிறப்பைப் பாராட்டினர்.

"கலைத்துறையில் உள்ள எவருக்குமே இதுவரை தகவல் இலாகா வரவேற்பு நல்கியதில்லை. முதன் முதலாகத் தலை சிறந்த தமிழ் நாடகக் குழுவினரை வரவேற்றுப் பாராட்டுவதில் இந்த இலாகா பெருமைப் படுகின்றது" என்று தகவல் அதிகாரி திரு. தர்மதுரை அவர்கள் கலை உணர்ச்சியோடு குறிப்பிட்டார்.

மலேயாவைப் பற்றிய விவரங்களைச் செய்திப்படங்களின் மூலம் உலகெங்கும் பரப்பும் பணியில் 'மலேயன் பிலிம் யூனிட்' என்ற ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது.

1946-ல் தோன்றிய இந்தச் செய்திப்படத் துறை 1956 முடிய 176 படங்களை உருவாக்கியுள்ளது. இவற்றில் முப்பத்து மூன்று படங்கள் எடின்பர்க், டோக்கியோ, கம்போடியா, பிரிட்டிஷ் கொலம்பியா, ஹாங்காங், மணிலா, மெல்போர்ன், பாடுவா (இத்தாலி), வெனிஸ், வியன்னா முதலான இடங்களில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பதினைந்து படங்கள் பாராட்டும் பரிசுகளும் பெற்றுள்ளன. செய்திப்படத் தயாரிப்பில் பிற நாடுகளைக் கவரத்தக்க முறையில் முன்னேறி வருவது

'மலேயன் பிலிம் யூனிட்' என்ற நிறுவனம் என்று சொல்வது மிகையாகாது.

கிராமங்களிலெல்லாம் சுற்றுப்பயணம் செய்து செய்திப்படங்களைத் திரையிட்டுக் காண்பிப்பதற்கு ஏற்றவாறு 92 நடமாடும் சினிமா யூனிட்டுகள் இயங்கி வருகின்றன.

ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் செய்திப்படங்கள் உருவாகின்றன. இப் படங்களை ஏற்றுத் திரையிடும் வாய்ப்பை உலகில் ஐம்பத்து நான்கு நாடுகள் ஏற்றுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்தியப் பாடல்கள், நடனங்கள் – இவற்றைச் சித்திரிக்கும் சில படங்களையும் 'மலேயன் பிலிம் யூனிட்' நல்ல முறையில் தயாரித்துள்ளது.

செய்திப்படத் துறையின் தமிழ்ப்பகுதியில் திரு. ஆ. பீட்டர்-அம்மாவாசை என்ற தமிழ் டைரக்டரும், திரு. ஜி. மனுவேல் என்ற மொழிபெயர்ப்பாளரும் நற்பணி புரிந்து வருகின்றனர். 'மானுயல்' என்ற ஆங்கிலப் பெயருக்கு 'மனுவேல்' என்ற அழகான தமிழ் வடிவம் தந்து பழக்கத்துக்கும் கொண்டுவந்ததிலிருந்தே அவரது தமிழ்ப்பற்றை நன்கு அறியலாம்.

* * *

கோலாலம்பூரில் உள்ள குணதிசைக் கலைக் கழகம் (ஈஸ்டர்ன் ஆர்ட் சொஸைட்டி) மக்களின் கலைப்பசி தீர அடிக்கடி சிறந்த விருந்து வழங்கி வருகிறது. இக்கழகத்தில் கலையுணர்ச்சி மிகுந்த உறுப்பினர்கள் பலர் உள்ளனர். இக் கழகத்தினர் அயர்வின்றிப் பல உயர்வான தமிழ் நாடகங்களை மேடையேற்றிப் பெருமை பெற்று வருகிறார்கள்.

இக்கழகத்தின் செயலாளராகத் திகழ்பவர் திரு. வீ. ரோச். இவர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். "ரீ-டிபியூஷன்" என்னும் கலை ஒலிபரப்பு நிலையத்தில் தமிழ்ப்பகுதித் தலைவராகப் பணியாற்றுபவர். இந்தியா விலிருந்து கலைத்துறையில் உள்ளோர் எவர் சென்ருலும் இவரோடு தொடர்பு கொள்ளாமல் இருக்க முடியாது.

கலைஞர்களின் இசைவைப் பெற்று எந்தக் கலை நிகழ்ச்சியையும் விரைவில் ஏற்பாடு செய்துவிடக்கூடிய 'முகராசி' படைத்தவர் திரு. ரோச் என்பதையும் கண்டோம். நமது குழுவின் நடனச்சிறுமி சந்தோஷையும் சிங்கப்பூரில் உள்ள டாக்டர் இ. ஏ. சங்கரின் புதல்வி உமாவையும் இணைத்து ஒரே மேடையில் நடன நிகழ்ச்சி நடத்தும் ஏற்பாட்டைத் திரு. ரோச் செய்துவிட்டார் என்ருல் இவருடைய திறமையை என்னவென்று சொல்வது!

இவருடைய ஏற்பாட்டின்படி குமாரிகள் உமா, சந்தோஷ் நடனமும், நம் பின்னணிப் பாடகி அபிராம சுந்தரியின் இசையும் குணதிசைக் கழகத்தின் சார்பில் ஜூன் மாதம் பதினலாம் தேதி, புதிய நாடக அரங்கிலேயே நடைபெற்றன. ஈஸ்டர்ன் ஆர்ட் சொஸைட்டிக்கு நல்ல புகழும் பொருளும் கிடைத்த இந்த நிகழ்ச்சியின் காரணமாகச் சிங்கப்பூர் உமாவின் பரத நாட்டியக் கலைத் திறமை கோலாலம்பூர் மக்களுக்கு அறிமுகமாகியது.

*　　　*　　　*

கோலாலம்பூரில் விருந்துக்கு அழைத்த அன்பர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. விருந்தளித்த அன்பர்களின் கலையார்வத்தையும் மொழிப் பற்றையும் கண்டபோது இவர்கள் அனைவருமே ஒன்று சேர்ந்தால் ஒப்புரவு வளர்க்கும் ஓர் அருமையான கலை

மன்றம் உருவாக முடியுமே என்றுதான் எண்ணத் தோன்றியது.

மலாய்க்காரர்களின் மதிப்புக்குரிய தலைவர்களில் ஒருவரான திரு. இஞ்சே முகமது டின், பார்-அட்-லா, ஜூன் மாதம் பதினேழாம் தேதி இரவு, தமது இல்லத்தில் நமது குழுவினருக்குச் சிறந்த சைவ விருந்து அளித்து அன்பு பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

விருந்து வழங்கியதோடு அமையாமல் சுல்தான் 'சுலைமான் கிளப்' என்ற மலாய்க்காரர் பொழுது போக்குக் கலை மன்றத்தில் நமது குழுவினர் கண்டு மகிழ்வதற்காக மலாய் மக்களின் கலை நிகழ்ச்சிகள் சிலவற்றையும் நடத்திக் காண்பிக்க ஏற்பாடு செய்தார் திரு. முகமது டின். ரோங்கிங் நடனம், தற்காப்பு நடன வகைகள் முதலானவற்றை மலாய்க் கலைஞர் நிகழ்த்தினர். ரோங்கிங் நடன நிகழ்ச்சியின் போது திரு. முகமது டின் அவர்களும் ஆட்டத்தில் பங்கு கொண்டது மிக ரசமாகவும் உற்சாகமாகவும் இருந்தது,

நாட்டிய நாடக பாணியில் அமைந்த மலாய்ச் சிறுமிகளின் நகைச்சுவை நிகழ்ச்சி எல்லோராலும் வெகுவாக ரசிக்கப்பட்டது.

நமது குழுவின் சார்பில் குமாரி அபிராமசுந்தரியின் இசையும், சிறுமி சந்தோஷின் நடனமும் திரு. ஏ. பி. சண்முகத்தின் தில்ரூபா வாத்திய இசையும் நடைபெற்றன.

மறுநாள் அதாவது, ஜூன் மாதம் பதினெட்டாம் தேதி இரவு சீன நாடகச் சங்கத்துக்குச் சென்றிருந்தோம். சீனர்கள் நாடகங்களுக்குப் பயன்படுத்தும் ஆடையணி வகைகளும், இசைக்கருவிகளும் மேடைக்குக் கொண்டு வரப்பட்டு, அவற்றைப் பற்றிய விளக்கங்களும் கூறப்பட்டன. கண்ணைப் பறிக்கும் சிவப்பு, பச்சை போன்ற

வர்ணங்களேயே சீனர்கள் விரும்புகின்றனர் என்பதை நாடக ஆடையணிகள் எடுத்துக் காட்டின.

பின்னர், சீனப் பாடகர்களும் பாடகிகளும் சில பாடல்களைப் பாடிக் காட்டினர். கூட்டிசை முழக்கும் பாணி பிரமாதம்.

சீன நாடகச் சங்கத் தலைவர் 'இராஜராஜ சோழன்' நாடகத்தை ஒவ்வொரு அம்சமாக வர்ணித்து ஏறக் குறைய கால்மணி நேரம் ஒரே புகழுரையாக நிகழ்த்தினர். "தமிழர்களே! நீங்கள் பொல்லாதவர்கள்! கலா வல்லவர்கள்! கலைத்துறையில் நீங்கள் பெற்றுள்ள சாதனையின் எல்லையை, சிறப்பின் உயர்வை நாங்கள் எட்ட முடியாது!" என்ற பொருளுரையெல்லாம் சீன நாடகச் சங்கத்தலைவரின் புகழுரையில்பொதிந்திருந்தன.

இவ்வாறு இரண்டு நாட்களும் மலாய்க்காரர்கள் சங்கத்திலும், சீன நாடகச் சங்கத்திலும் கலந்து கொள்ளும் வாய்ப்பைத் தேடித் தந்த சுவாமி சத்தியானந்தா அவர்களை எவ்வளவு போற்றினலும் தகும்.

* * *

கோலாலம்பூரில் 'ரீ-டிபியூஷன்' என்ற ஒரு நிறுவனம் உள்ளது. ரேடியோவைப் போன்ற ஒலிபரப்பு நிலையம் இது. ரேடியோ செய்கின்ற ஒலிபரப்புப் பணியை 'ரீ-டிபியூஷன்' மிகமிகக் குறுகிய எல்லைக்குள் செய்து வருகிறது என்று சொல்லலாம்.

ரேடியோவுக்கும் ரீ-டிபியூஷனுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. ரேடியோவில் காற்றின் அலைகளின் மூலம் ஒலி பரவுகிறது. ஆனல், ரீ-டிபியூஷனில் கம்பிகளின் மூலம் ஒலிபரப்பப்படுகிறது. ரீ-டிபியூஷன் ஸ்பீக்கர் பெட்டிகளை நிலையத்தினரே தேவையானவர்களுக்கு வழங்கி, மாத வாடகை வசூலித்துக்கொள்ளுகின்றனர். ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து ஒலிபரப்புகின்றனர்.

முக்கியமான 'ரேடியோ மலேயோ' நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும் உரிமையையும் பெற்றுள்ளனர். நகர மக்களிடையே சிறந்தசெல்வாக்குப்பெற்றுள்ளகலை நிறுவனம் ரீ-டிபியூஷன் என்று சொல்லலாம். கம்பிகளால் இணைத்துப் பிணைக்க வேண்டிய அவசியம் இருப்பதால் குறிப்பிட்ட ஒரு நகர எல்லைக்குள் மட்டுமே ரீ-டிபியூஷன் இயங்க முடிகிறது. எனவே, சிங்கப்பூர், கோலாலம்பூர், பினங்கு ஆகிய மூன்று நகரங்களில் மட்டுமே ரீ-டிபியூஷன் இயங்கி வருகிறது. சிங்கை நிலையத்தில் தமிழ்ப்பகுதி கிடையாது.

ரீ-டிபியூஷன் நிறுவனத்தின் தலைமை நிலையம் லண்டனில் இருக்கிறதென்றும், உலகில் பல முக்கிய நகரங்களில் ரீ-டிபியூஷன் முறை பரவியுள்ளதென்றும் கேள்விப்பட்டோம்

ரீ-டிபியூஷன் நிலையத்தின் தமிழ்ப் பகுதித் தலைவர் திரு. ரோச் அவர்கள் நல்ல தமிழ்ப் பற்றுள்ளவர்.

நிலையத்தின் தமிழ் அறிவிப்பாளர் திரு. வி. ராமச்சந்திரனும், பெண் அறிவிப்பாளர் ஒருவரும் தமிழ்த் தொண்டாற்றுகின்றனர்.

* * *

ரேடியோ மலேயாதான் மலை நாடு முழுவதும் ஒலி அலைகளை அடக்கி இயக்கும் அரசாங்கக் கலை நிறுவனம் என்பது அனைவருக்கும் தெரியுமே! எனவே, அதனைப் பற்றி அதிகமாக அறிமுகப்படுத்த அவசியமில்லை என்று கருதுகிறோம். ரேடியோ மலேயாவின் கோலாலம்பூர் நிலையம் வனப்பு நிறைந்த 'பெடரல்' மாளிகையில் அமைந்துள்ளது. அதன் தமிழ்ப்பகுதித் தலைவராக விளங்குபவர் திரு. ஜோசப் என்னும் தமிழன்பர். அவருக்கு உதவியாளராக விளங்குபவர்களில் திரு. சுவாமிநாதன் என்னும் நண்பரை அவசியம் குறிப்பிட வேண்டும்.

விடாப்பிடியாக வற்புறுத்தி நமது ''இராஜராஜசோழன்'' நாடகத்தையே இரண்டரை மணி நேர நிகழ்ச்சியாக ரேடியோ மலேயாவில் ஒலிப்பதிவு செய்துகொள்ளும் படியான சூழ்நிலையை உண்டாக்கி வெற்றியும் கண்ட அன்பர் திரு. சுவாமிநாதன்.

குளிர் சாதன வசதி நிறைந்த ஸ்டுடியோவுக்குள் இந்த நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்துவிட்டு வெளியே வருவதற்குள் நடிக நடிகையர் திணறிப் போய்விட்டனர்! இரண்டரை மணி நேர நாடக நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்வதற்குச் சுமார் ஏழு மணி நேரம் வேண்டியிருந்தது என்ருல், அதற்குள் எவ்வளவு அலுப்பு ஏற்பட்டிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்!

* *

மலேயாக் கூட்டரசில் தமிழர் ஒருவர் மதிப்புக் குரிய மந்திரியாக விளங்குகிருர் என்பது பெருமைக்குரிய செய்தி. மலேயாவின் தொழிலாளர் மந்திரியாகப் புகழ் பெறுபவர் திரு. வீ. தி. சம்பந்தன். இவா மலேயாவில் பேரா மாகாணத்தில் உள்ள சுங்கை சிப்புட் என்ற சிற்றூரில் பிறந்த தமிழர். நமது அண்ணுமலைப் பல் கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர், எனவே, தமிழ் உணர்ச்சியைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? 1955 முதல் மலேயா இந்தியர் காங்கிரசின் தலைவராகப் பணி புரிந்து வருகிருர். மாசற்ற காந்தி பக்தர். எப்போதும் கதராடையே அணிபவர். இவரும் இவருடைய சகோதரர்களும் மது விலக்குப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுவருபவர்கள். சிறிய வெற்றிலை பாக்குக் கடை களிலேகூட மதுபானம் விற்பனையாகும் மலை நாட்டில் மது விலக்குப் பிரசாரம் செய்து வருவது என்ருல் எவ்வளவு துணிச்சல் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்!

மலேயாவுக்குச் சுதந்திரம் பெறுவது சம்பந்தமாக லண்டன் மாநகருக்குச் சென்ற மந்திரி சபையின் தூதுக் குழுவில் திரு. வீ. தி சம்பந்தன் அவர்களும் ஒருவர். லண்டனுக்குச் சென்ற போதும் சூட்டையும் கோட்டையும் நாடாமல் எளிய கதர் உடையிலேயே சென்று திரும்பி மக்களின் கவனத்தையும் அன்பையும் கவர்ந்தவர்.

திரு. சம்பந்தன் அவர்கள் சீர்திருத்த நோக்கமும் உள்ளவர். அர்த்தமற்ற சமூகக் கட்டுப்பாட்டைக் கடந்து கலப்பு மணம் புரிந்துகொண்டவர்.

மந்திரியவர்கள் தமது இல்லத்துக்கும் ஒரு நாள் விருந்துக்கு அழைத்திருந்தார்ம். அப்போது பல செய்திகளைப் பற்றி விசாரித்தோம், கலை வளர்ச்சியிலும் மலேயா இந்தியர் காங்கிரஸ் தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் கலைப்பகுதி ஒன்று தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு. சம்பந்தன் தெரிவித்தார். அரசியல் செல்வாக்கு நிறைந்த மலேயா இந்தியர் காங்கிரஸ், கலை வளர்க்கும் நிலையமாகவும் விளங்கும் என்று அதன் தலைவரே உறுதியளித்தது பாராட்டுக்குரிய செய்தியல்லவா?

21. இனிய கனிவளம்

பழத்திலே சுவை பொதிந்த பான்மையை எழுத்திலே வடித்துக் காட்டுவது என்பது எளிதான காரியமா என்ன ?

> ''பண்ணில் ஓசை
> பழத்தினில் இன்சுவை''

என்றார் நாவுக்கரசர்.

''பண்ணிடைத் தமிழ்ஒப்பாய்
பழத்தினில் சுவைஒப்பாய்''

என்று பாடி மகிழ்ந்தார் சுந்தரர்.

'பழத்தினில் சுவை' சேர்ந்த பொருத்தம் இயற்கை வளத்தின் இணையற்ற அற்புதம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? ஒவ்வொரு கனி வகையிலும் வெவ்வேறு சுவை நயம் மிளிர்வதைக் கண்டு நுகர்ந்து வருகிறோம்.

கனி வகைகளின் செழிப்பு மண்வளத்தைப் பொறுத்தது. மலேயாவின் மண்வளம் காரணமாக அங்கு பழ வகைகளும் செழிப்புற்று விளங்குகின்றன.

அன்னுசி, டொரியான், மங்குஸ்தான், ரம்புத்தான் முதலியன மலேயாவின் சிறப்பான பழவகைகள், அன்னுசிப்பழ உற்பத்தி மலேயாவிலேயே மூன்றுவது பெருந்தொழிலாகக் கருதப்படுகிறது. மற்ற இரண்டு தொழில்களான ரப்பரையும், ஈயத்தையும் பற்றிப் பின்னர் அறிவோம்.

மலேயாவில் கிடைக்கும் அன்னுசிப்பழத்தின் சுவையே தனி. துண்டுகளாகவும், கதுப்புகளாகவும், சதுரச் சுளைகளாகவும், வட்ட வெட்டுக்களாகவும் அன்னுசிப்பழத்தை வீதிகளிலே விற்பனை செய்யும் அழகைக் கண்டு ரசிக்க வேண்டும். அவற்றை வாங்கி உண்டு ரசிக்கவும் வேண்டும்.

தங்க ராணி, இன்பப் பழம் முதலிய சிறப்பு மொழிகளால் மலைநாட்டு மக்கள் அன்னுசிப்பழத்தைப் புகழ்கின்றனர். அன்னுசிச் சுளையின் தங்க நிறம் கவர்ச்சி வாய்ந்தது.

ஜோகூர் ராஜ்யப் புல்வெளி நிலங்களிலே அன்னுசிப் பழத் தோட்டங்கள் வளமாகக் காணப்படுகின்றன. சுமார் இருபதினுயிரம் ஏக்கரா நிலங்களில் அன்னுசி

பயிராகிறது. காடுகளை அழித்து அன்னாசித் தோட்டங்களாக்கும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அன்னாசிச் செடி பயிராகிச் சுமார் ஒரு வருடத்துக்குப் பின் பூப்பூக்கிறது. பூத்து ஒரு மாத காலத்தில் அன்னாசிக் காய் தலை நீட்டுகிறது. காய்த்து மூன்று மாதங்களில் கனியாகிறது. காய், பருத்துத் திரண்டு வருவதற்காகச் சுற்றிலும் உள்ள இலைகளையெல்லாம் நறுக்கிவிடுவார்கள். காயின் தரத்தை ரசாயன நிபுணர்கள் சோதனை செய்வார்கள்.

காய்கள் பழுத்து முதிர்ந்து பக்குவப்பட்டவுடன் அவற்றை அறுவடை செய்யும் வேலை வெகு வேகமாக நடைபெறுகிறது. பழம் பழுத்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் டப்பிகளிலே அடைத்துவிட வேண்டும். பழத்தை அடைப்பதில் நொடிப்பொழுது தாமதித்தாலும் பழம் வீணாகிவிடும்.

பழங்களைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு சென்றதும் அவற்றைத் தரவாரியாகப் பிரிக்கின்றனர். தட்டை, வட்டம், சதுரம் போன்ற பல வடிவங்களில் பழங்கள் வெட்டப்படுகின்றன. பின்னர் டப்பிகளில் பக்குவமாக அடைக்கப்படுகின்றன. டப்பிகளில் அந்தந்தப் பழங்களின் அடையாளச் சின்னங்களை ஒட்டி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வேலை துரிதமாக நடைபெறுகிறது. அன்னாசிப்பழ ரச பானமும் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகிறது.

யுத்தத்துக்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு 25 லட்சம் பெட்டிகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாயிற்று. யுத்த காலத்தில் அன்னாசிப்பழத் தொழில் நசித்துப் போயிருந்தது. மீண்டும் இப்பொழுது புத்துயிர் பெற்று, ஆண்டு ஒன்றுக்கு இருபது லட்சம் பெட்டிகள் ஏற்றுமதியாகும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

இப்போது அன்னுசி ஓராண்டுக்கு இரண்டு போகங்கள் விளைகிறது. இடையில் நான்கு மாத ஓய்வு இருக்கிறது. பழம் அடைக்குந் தொழிலாளர்களுக்கு வருடம் முழுவதும் வேலை கொடுப்பதற்காக நான்கு மாத ஓய்வுக் காலத்தையும் குறைத்துப் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஊட்ட மருந்து செலுத்திப் பழம் பழுக்குங் காலத்தை நீடிக்கச் செய்யும் வழிகள் ஆலோசிக்கப்படுகின்றன.

அன்னுசிப்பழத் தொழிற்சாலைகளில் பழங்களின் தரத்தைச் சோதித்தல், சுவையை ஆராய்தல் முதலிய பொறுப்புக்களைக் கவனிக்கச் சிறந்த நிபுணர்கள் உள்ளனர்.

டொரியான் பழம்

> "அப்பன் சொறியன்
> ஆத்தாள் சடைச்சி,
> அவர்கள் பிள்ளை
> சர்க்கரைக் கட்டி!"

இந்த விடுகதைக்கு விடையென்னவென்று நமது நாட்டுக் குழந்தைகளைக் கேட்டுப் பாருங்கள்! "பலாப்பழம்" என்ற பதில் 'பளிச்' என்று கிடைக்கும்.

ஆனால் மலேயாவில் உள்ள குழந்தைகளிடம் இந்த விடுகதைக்கு விடை கேட்டால் பதில் வேறு விதமாகத் தான் இருக்கும்.

"டொரியான் பழம்" என்றுதான் விடை சொல்வார்கள் அந்தக் குழந்தைகள்.

ஆமாம்; அசல் பலாப்பழம் போலவே—ஆனால், வடிவத்தில் சற்றுச் சிறியதாக—உள்ள பழம் டொரியான். டொரியான் பழத்தைப் போர்த்திக்கொண்டிருக்கும் முட்கள் பலாப்பழத்தைவிடத் தடிப்பாகவும் கூர்மையா

கவும் இருக்கும். நன்கு பழுத்த டொரியான் பழம் பசுமை கலந்த மஞ்சள் நிறமாக விளங்கும். டொரியான் பழுத்த வுடன் மரத்திலிருந்து தானுகவே கீழே விழும்.

டொரியான் பழத்துக்கே உரிய ஓர் அரிய குணுதிசயம் அதன் துர்நாற்றம்! சகிக்க முடியாத துர்நாற்றத்தின் எல்லே எதுவென்று காட்டுவது டொரியான் என்றுகூடச் சொல்லலாம்.

நாங்கள் கோலாலம்பூரில் தங்கியிருந்த போதுதான் டொரியான் பழத்தின் பருவ காலம் தொடங்கியது. முதன் முதலாக ஒரு நாள் சிறந்த கலையன்பரான திரு. வி. பி. லிங்கத் தேவர் நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு இரண்டு டொரியான் பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தார்.

மாடியில் ஒரு மூலையில் அந்தப் பழங்கள் வைக்கப் பட்டிருந்தன. அதன் நாற்றம் வீடு முழுவதும் பரவி விட்டது.

"பழங்களை அப்புறப்படுத்துகிறீர்களா? அல்லது நாங்கள் அறையை விட்டு வெளியே போகட்டுமா?" என்று நடிக நடிகையர் அனைவரும் ஒருமுகமாக எதிர்ப்புக் குரல் எழுப்பினர். இந்த எதிர்ப்புக் குரலில் எங்கள் இருவருடைய குரலும் இழைந்திருந்தது என்பதையும குறிப்பிட வேண்டும்.

ஆயினும். திரு. முத்தண்ணுச்சி அவர்கள் எதிர்ப்புக் குரல் கொடுப்போருக்குப் பின்வருமாறு சமாதானம் கூறினுர்:—

"வெளி நாற்றத்தைக்கொண்டு பழத்தை வெறுக்காதீர்கள்! நன்ருக எண்ணிப் பாருங்கள். டொரியான் மரம் ஆபாசமான இடத்தில் வளரவில்லை. சுத்தமான சாலை ஓரங்களிலேதான் அந்த மரங்கள் காணப்படுகின்றன. அவை மிக உயரமாகவும் வளர்ந்துள்ளன.

உயரமான மரத்திலிருந்து தானுகப் பழுத்து விழும் பழத்திலே ஏதாவது ஆபாசம் இருக்க முடியுமா? எனவே, துர்நாற்றத்தைக் கண்டு மருளாதீர்கள்! பழத்தை உடைத்து உள்ளே இருக்கும் சுளைகளைத் தின்று பாருங்கள். என்ன இருந்தாலும் டொரியான் ஒரு பழம் என்பதை மட்டும் மறவாமல் அதன் சுவையை நுகருங்கள்!"

இவ்வாறு திரு. முத்தண்ணுச்சி அவர்கள் கூறிய சமாதானம் சிலரது உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் பழத்தோடு போராடி, முட்போர்வையை உடைத்து, சுளையை எடுத்துச் சுவை பார்த்தார்.

"தெவிட்டாத ஒரு சுவை டொரியான் பழத்திலே இருக்கத்தான் செய்கிறது!" என்ற உண்மையை அவர் கண்டறிந்தார்.

பின்னர், திரு. சிவதாணுவும் டொரியான் சுவையில் மயங்கிஞர். இவர்கள் இருவரையும் போல் டொரியானை ரசித்து ருசித்து மகிழ்ந்தவர்கள் குழுவினரில் வேறு யாருமிலர் என்று சொல்லலாம்.

நாள்தோறும் டொரியான் பழங்களை ஏராளமாகக் கொண்டுவந்து வழங்க முற்பட்டார் நண்பர் திரு. வி. பி. லிங்கத் தேவர். இவருடைய வள்ளன்மை காரணமாகத் திரு. சிவதாணு வெளியே போய்விட்டுத் திரும்பும் போதெல்லாம் டொரியான் பழங்களை மறக்காமல் வாங்கி வரலாஞர்.

எதிர்ப்பாளரையும் தன் பக்கம் இழுத்துக்கொள்ளும் அதிசய சக்தி டொரியான் பழத்துக்கு இருக்கிறது என்பதைக் கண்டோம்.

"யாரோ ஒரு சீனர் கப்பலேயே விற்று டொரியான் பழம் சாப்பிட்டார்" என்ற செய்திகூட உண்மையாக இருக்குமோ என்ற வியப்பும் தோன்றியது!

டொரியான் பழம் மிகுதியாகத் தின்ருல் 'சந்தான விருத்தி' ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. எனவே தான் சீனர்களுக்கு டொரியான் பழத்தின்மீது அளவற்ற ஆசை!

டொரியானின் சுவை கண்டறிந்தவர்கள் அதனுடன் ஒன்றிப்போய்விடுவார்கள் என்பதற்குச் சான்ருக விளங்கியவர்கள் திரு. முத்தண்ணுச்சியும், திரு. சிவதாணுவும்!

மங்குஸ்தான் பழம்

டொரியான் பழம் மிகச் சூடு தருவது. அளவுக்கு மீறி அதைத் தின்ருல் உடற்கோளாறு ஏற்படும். எனவே, அதற்கு மாற்று மருந்தாக மங்குஸ்தான் பழம் பயன் படுகிறது. மங்குஸ்தான் குளுமை தரும் வளமான பழம்.

நமது நாட்டில் குற்ருலத்தில் 'சீஸன்' சமயத்தில் மங்குஸ்தான் பழம் கிடைக்கும். ஆனுல், நல்ல பழங்கள் கிடையா. பெரும்பாலானவை சொத்தையாக இருக்கும்; விலையும் மிகுதி.

மலேயாவில் கிடைக்கும் மங்குஸ்தான் பழங்கள் மிக நன்ருக இருக்கின்றன. உள்ளே இருக்கும் வெண்சுளைகள் மிக அழகாகவும் சுவையாகவும் உள்ளன. விருந்துகளின் போது மங்குஸ்தான் பழங்களின் ஒரு பாதித் தோலைக் கிண்ணம் போல் நறுக்கி எடுத்துவிட்டு, அடிப்பாகத்துடன் மட்டும் பழங்களை அடுக்கி வைத்திருக்கும் அழகு கண்டு மகிழத் தக்கது. அப்போது முத்துப் பதித்த மிகப்பெரிய தோடு போல் ஒவ்வொரு பழமும் காட்சி தரும்.

"சிங்கார முத்துகள் மேலே—நல்ல
செந்நிறக் கூடொன்று
மூடிஞற் போலே
மங்குஸ்தான் பழமிதற் கீடு—தர
மாட்டாமல் உடம்பிலே
பறந்திடும் சூடு!"

மங்குஸ்தான் பழம் தின்ருல் உடம்பிலே வெப்பம் விலகிக் குளிர்ச்சி மேலோங்கும்.

டொரியான் வெம்மை மிக்கது; மங்குஸ்தான் தண்மை மிக்கது.

மலேயாவில் வளம் பெற்று விளங்கும் மற்ெருரு பழ வகை 'ரம்புத்தான்.' உரோமக் கால்களைப் போன்று முள் நிறைந்த தோலுடன் கூடிய செங்கனி இது. முள்வேலி போன்ற தோலை நீக்கினுல் உள்ளே வலுவான முற்றிப் போன நுங்கு போல் பளபளப்பான வெண்ணிறச் சுளையைக் காணலாம். இதன் சுவையும் மிக இனியது.

'சாங்கிரிஸ்ட்' என்னும் ஆரஞ்சுப்பழமும் மலேயாவில் கிடைக்கிறது. இதன் சொறசொறப்பான மஞ்சள் தோல் கண்ணைப் பறிக்கும். தோலை நீக்கிச் சுளை சுளையாகப் பழத்தை எளிதில் எடுப்பது இயலாதுபோல் தோன்றுகிறது. அதனுல்தான் விருந்துகளின் போது இப் பழத்தைத் தோலோடு சேர்த்துக் குறுக்கே நறுக்கி வைக்கிருர்கள். இக்கனியில் புளிப்புச் சுவைதான் மேலோங்கி நிற்கிறது. உடற்செழிப்பு ஊட்டும் நல்ல கனி என்று சொல்லப்படுகிறது.

பீஸா மாஸ் என்னும் தங்க நிற வாழைப்பழங்களும், அருமையான திராட்சைப் பழமும் மலேயாவில் ஏராள மாகக் கிடைக்கின்றன. இந்த நாட்டின் இனிய கனி வளம் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது.

22. தமிழர் வளர்க்கும் சீனக்குழந்தைகள்

"**யா**தும் ஊரே, யாவரும் கேளிர்" என்னும் தத்து வத்தை வெறும் இலக்கியப் பொது மொழியாக மட்டும்

கொள்ளாமல்வாழ்வியல் புதுவழியாகவும்ஏற்று மகிழ்ச்சியுடன் பின்பற்றும் தமிழன்பர்கள் பலர் மலேயாவில் வாழ்கின்றனர்.

அந்நாட்டில் குடியேறிய தமிழர் சிலர் சீனப் பெண்களை இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்று மகிழ்கின்றனர். இத்தகைய கலப்பு மணத்தால் அவர்கள் உலப்பிலா இன்பந் துய்க்கின்றனர். மக்கட்பேறும் பெற்று வாழ்வாங்கு வாழ்கின்றனர். கொண்டவர் மனங் கோணுமல் தொண்டு செய்யும் பண்பு சீனப் பெண்களிடமும் உண்டு என்பதை அநுபவ வாயிலாகக் கண்டு பாராட்டுகின்றனர் கலப்பு மணம் பெற்ற தமிழன்பர்கள்.

மலேயாவில் குடியேறிய தமிழர்களில் வேறு சிலர் சீனக் குழந்தைகளை 'எடுத்து' வளர்ப்பதில் தனி இன்பம் காணுகின்றனர். இன்னும் தெளிவாகச் சொல்வதானுல் சீனக் குழந்தைகளை 'வாங்கி' வளர்ப்பதில் மனமகிழ்ச்சி எய்துகின்றனர். பிள்ளைப்பேறு நிலையங்களிலே சீனக் குழந்தைகளை விலைக்கு வாங்கலாம் என்றும், ஆனுல் பெண்குழந்தைகள் மட்டுமே கிடைக்கும் என்றும் கேள்விப்பட்டோம்.

தமிழருடைய இல்லங்களிலே வளரும் சீனக் குழந்தைகள் சிலரைக் காணும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. கன்னங்கரிய கூந்தல், பொன்னை நிகர்க்கும் உடல் வண்ணம், சின்னஞ்சிறிய கண்கள், சப்பை மூக்கு முதலிய அங்க அமைப்புக்களுடன் முகத்திலே பாச உணர்ச்சி தவழும் எழிலும் ஏந்தியுள்ள சீனக் குழந்தைகள் தமிழ்க்குழந்தைகளாக வளரும் சிறப்பு எங்கள் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. அக்குழந்தைகள் நமது தமிழ் மரபை ஒட்டிப் பட்டுப் பாவாடையும் சட்டையும் அணிந்து, நமக்கே உரிய முறையில் பொன்

நகைகளும் பூண்டு விளங்கும் காட்சி என்றைக்கும் இதயத்தை விட்டு அகலாத ஒன்று. அவர்கள் வெறும் தோற்றத்தால் மட்டும் தமிழ்க் குழந்தைககளாக வளரவில்லை. தமிழை அழகுறப் பேசும் ஏற்றமும் அவர்களிடம் காணப்படுகின்றது. தமிழ்ப் பாடல்களைத் தங்கு தடையின்றி ஒப்பிக்கும் சிறுமிகளும், தமிழ் இசை முழக்கும் சீனத்து மழலைச்செல்வங்களும்பலர் உள்ளனர்.

கோலாலம்பூரிலிருந்து இருபத்தைந்து கல் தொலைவில் கிள்ளான் என்ற ஊரில் பண வளமும் மனவளமும் செறிந்த இலங்கைத் தமிழர் திரு. டி. டி. குணரத்னம் அவர்களும் ஏனைய அன்பர்களும் மாரியம்மன் கோவில் மண்டபத்தில் எங்களுக்கு மாபெரும் வரவேற்பு விழா ஒன்று நடத்தினர்கள். தமிழ்ப் பெருமக்கள் ஏராளமாகக் கூடி, இதயங்கனிந்து பாராட்டிய இவ்விழாவிலே குறிப்பிடத்தக்க சிறப்பு ஒன்று உண்டு. தமிழரால் வளர்க்கப்படும் ஒரு சீனச்சிறுமி நெஞ்சை அள்ளும் அமுதத் தமிழிலே அழகான சொற்பொழிவு நிகழ்த்திய சிறப்பைத்தான் குறிப்பிடுகிறோம்.

கிள்ளானில் மட்டுமல்ல; நாங்கள் முகாமிட்ட நகரங்கள் பலவற்றிலும் எங்களோடு பழகிய அன்பர்கள் சிலரிடம் வளரும் சீனச் சிறுமிகளின் அன்பு முகங்கள் எங்கள் இதயத்தை மிகவும் கவர்ந்தன. எங்களை யறியாமலே ஒரு பாச உணர்ச்சி அச்சிறுமிகளிடம் ஏற்பட்டது. அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் அந்தச் சிறுமிகளிடம் பொங்கிப் பொலிகின்றன என்பதையும் அன்பர்கள் உவகையோடு குறிப்பிட்டனர்.

ஆனல், அந்தச் சிறுமிகளோடு நாங்கள் பேசும்போது அவர்கள் ‘சீனக் குழந்தைகள்’ என்பதை நினைவுபடுத்தும் முறையில் எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது என்று

அவர்களை வளர்க்கும் அன்பர்கள் எச்சரிக்கை செய்தனர். அவர்களுடைய பொறுப்புணர்ச்சியையும் பாசத்தையும் வியந்து பாராட்டினேம்.

பிறப்பால் வேறு இனத்தவராயினும் வளர்ப்பால் தமிழினமாக ஒன்றியுள்ள சிறுமிகளின் எதிர்காலம் சீரும் சிறப்பும் உடையதாக இருக்கும் முறையில் அவர்களை வளர்க்க வேண்டும்; அவர்கள் வழியே ஒட்டுமாங்கனி இனம் போன்று ஓங்கி வளரும் புதிய தமிழினம் தமிழ் மரபு வழுவாமல் வாழ வேண்டும். இதுவே சீனக் குழந்தைகளை எடுத்து வளர்க்கும் தமிழன்பர்களின் சிறந்த ஆவலாக இருக்கும் என்று கருதுகிறேம்.

23. கிள்ளான்—கோலக் கிள்ளான்

மலேயாவில் உள்ள மக்கள் அனைவருமே "எச்சில் கையால் காக்கை ஓட்டாதவர்கள்!" என்று சொல்லலாம். எச்சில் கையால் மட்டுமல்ல, எந்த நல்ல கையாலும் அவர்கள் காக்கையை ஓட்ட முடியாது! ஏன்? காக்கை இருந்தால் அல்லவா ஓட்டுவதற்கு? மலேயாவில் காகம் என்ற பறவையே கிடையாதாம்! இச்செய்தியை முதலில் கேள்விப்பட்டதும் எல்லாருக்கும் மிகவும் வியப்பாகவே இருந்தது.

ஆயினும், கிள்ளான் என்ற ஊர் மட்டும் இதற்கு விதிவிலக்கு என்று சொன்னர்கள். கிள்ளான் மலேயாவின் பழம்பெரும் பதிகளில் ஒன்று. மலேயாவில் வேறெங்கும் காகத்தைக் காண முடியாவிட்டாலும் கிள்ளானில் மட்டும் அபூர்வமாக ஒருசில காக்கைகள் வாழ்கின்றன எனக் கேள்விப்பட்டோம்.

ஆயினும், அவைகளில் எதுவும் எங்கள் கண்களில் படவில்லை.

கிள்ளானில் அபூர்வமாக ஒருசில காக்கைகள் இருந்த போதிலும் அங்கு வாழும் அன்பர்கள் எங்களைக் 'காக்கா பிடிக்கவில்லை!' உள்ளன்போடுதான் வரவேற்றார்கள். இந்த வரவேற்பில் மாணவர் மணி மன்றம், சுருட்டுத் தொழிலாளர் சங்கம் முதலான நிறுவனங்கள் பங்கு கொண்டு கலைக்குழுவினர்க்குப் பரிசுகள் வழங்கின.

கிள்ளானிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ளது கோலக்கிள்ளான் என்னும் துறைமுகச் சிறுநகர். இதற்கு 'போர்ட்-ஸ்வெட்டன்ஹாம்' என்று பெயர். மலேயாவின் விளைபொருள்கள் இந்தத் துறைமுகத்தின் மூலமாகத் தான் உலகின் பல பாகங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

ஏற்றுமதியாகும் பொருள்கள் கிடங்குகளிலிருந்து பெரிய பெரிய மூட்டைகளில் 'ரப்பர் பெல்ட்' வழியாக வெகு விரைவாய்ப் படகுகளில் ஏற்றப்படும் சுறுசுறுப்பை நேரில் கண்டு வியந்தோம். சரக்குக் கப்பலைக் கரையோடு இணைப்பதற்கு விசைப்படகுகள் உள்ளன. இந்தப் படகு ஒவ்வொன்றுக்கும் ஒரு மணி நேரத்துக்கு இருநூறு வெள்ளி வாடகை. ஒரு மணி நேரத்துக்கு மேல் ஒரு நிமிஷம் அதிகமானாலும் அரைமணி நேரத்திற்குரிய வாடகை தரப்பட வேண்டுமாம்!

கோலக் கிள்ளானில் மலேயா இந்தியர் காங்கிரஸ், மலேயா தமிழர் சங்கம், கேரள சமாஜம், உதயசூரியன் கலை மன்றம், திராவிடர் கழகம் ஆகிய ஐந்து சங்கங்கள் எங்கள் குழுவினருக்கு வரவேற்பு நல்குவதில் ஒன்றுசேர்ந்து கலையார்வம் காட்டின. இவைகள் கொள்கைகளால் வேறுபட்டிருந்தாலும் கலையின் பெயரால் ஒன்றாக இணைந்து

எங்கள் கலைக்குழுவினருக்குப் பெருமித வரவேற்பு அளித்த சிறப்பு 'வேற்றுமையிலும் ஒற்றுமை' (Unity in diversity) என்ற தத்துவ வெற்றியாக மிளிர்ந்தது. 'சிவியூ' ஹோட்டலில் சீனப் பிரமுகர் ஒருவர் தலைமையில் இந்த வரவேற்பு நடந்தது என்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

வரவேற்பு விழா முடிந்ததும் அங்குள்ள சுப்பிரமணியர் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆலயத்தில் எங்களை எதிர்பார்த்து ஆவலோடு குழுமியிருந்த தமிழ்ப் பெருமக்களில் நூறு வயதுக்கு மேற்பட்ட முதுபெருந் தமிழ்க்கிழவர் ஒருவரும் காணப்பட்டார். அவர் எங்களை ஆரத்தழுவிக்கொண்டு. அன்பு ததும்ப, உணர்ச்சி விம்ம, என்னவெல்லாமோ சொல்லிப் பாராட்டினார். அவருடைய பாராட்டுரையில் கீழ்க்கண்ட மணி மொழிகள் எங்கள் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீரை வரவழைத்தன.

"ஐயா, நூறு வயசுக்கு மேலேயும் என்னை என் ஆண்டவன் உயிரோடு வைத்திருக்கிறான் என்று சில சமயங்களில் சிந்திப்பதுண்டு, நான் வாழும் காரணம் இப்பொழுதுதான் புரிகிறது. உங்களைப் போன்ற தரம் உயர்ந்த தாய்நாட்டுக் கலைஞர்களைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்க வேண்டும் என்றுதான் எனக்கு நீண்ட ஆயுள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை! நம் தமிழர்களின் பண்பாட்டையும் கலைப்பெருமையையும் நாடகங்களின்மூலம் பரப்பி வரும் உங்களைக் கண்ணாரக் கண்டு, கையாரத் தழுவி விட்டேன்! என் பிறவியின் பயன் கிடைத்து விட்டது! நீங்கள் என்னைப்போல் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும்!"

அம்முதியவரின் உணர்ச்சி ததும்பிய பேச்சு எங்கள் கண்களைக் குளமாக்கிவிட்டது!

* * *

கோலாலம்பூரிலிருந்து சுமார் இருபத்தைந்து கல் தொலைவில் உள்ள பத்து ஆராங் என்ற சிற்றூரில் ஒரு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. அந்தச் சுரங்கத் தொழிலாளர் சங்க ஆண்டு விழாவில் நமது குழுவினரில் சிலர் கலந்துகொண்டனர். சீனர், மலாய்க்காரர், இந்தியர் ஆகிய முப்பெரும் இனத் தொழிலாளர்கள் இணைந்து அன்பு வரவேற்பு அளித்தனர்.

"நீங்கள் சுரங்கத் தொழிலாளர்கள்; நாங்கள் அரங்கத் தொழிலாளர்கள்! நீங்கள் வளர்ப்பது நிலக்கரிச் சுரங்கம்; நாங்கள் வளர்ப்பது நாடகஅரங்கம்" என்றெல்லாம் பொருத்தமாகப் பேசி, அவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டோம்.

ரவாங் என்னும் சிற்றூர் கோலாலம்பூரிலிருந்து பத்தொன்பதாவது கல்லில் உள்ளது. அங்கு இருக்கும் மலேயா இந்தியர் காங்கிரஸ் கிளை நிலையத்தில் முக்கியமான பொறுப்பில் உள்ளவர்கள், கேரள நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆயினும், மொழி வேற்றுமை கருதாது, கலையார்வத்துடன் நம் தமிழ் நாடகக் குழுவினரை உற்சாகத்துடன் வரவேற்றுப் பாராட்டியதும் இனிய சூழ்நிலையாகும்.

24. மூவாருக்குப் புறப்பாடு

ஜோகூர் ராஜ்யத்தில் உள்ள மூவார் என்னும் சிற்றூரில் இந்தியர் சன்மார்க்க சங்கம் ஒன்று சிறந்த பொதுநல மன்றமாகத் திகழ்கிறது. இந்தச் சங்கத்தின் சார்பில் ஒரு பள்ளிக்கூடமும் இயங்கி வருகின்றது. கல்விப் பணியாற்றும் சங்கத்துக்கு நல்லதொரு கட்டடம் அமைக்க வேண்டும் என்ற ஆவல் மூவாரில் வாழும் இந்தியப் பெருமக்களுக்கு எழுந்தது. சங்கப் பணியில் தளராது உழைத்து வரும் அன்பர் திரு. சித. நாராயணன் செட்டியார் அவர்கள் பள்ளிக்கூட நிதிக்காக மூவாரில், நமது இராஜராஜ சோழன், கள்வனின் காதலி ஆகிய நாடகங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்.

திரு. நாராயணன் செட்டியார் அவர்கள் சிறந்த கலையன்பர். மூவார் ஜெயங்கொண்டான் ரப்பர் தோட்டத்தின் அதிபர். எடுத்த காரியம் எதிலும் வெற்றி காணும் திறம் படைத்தவர். எனவே, அவருடைய ஏற்பாட்டின்படி ஜூன் இருபத்தோராம் தேதி கோலாலம்பூரிலிருந்து மூவாருக்குப் புறப்படுவதென்று முடிவு செய்தோம்.

மலேயாவின் தலைநகரில் ஏறக்குறைய ஒரு மாத காலம் தங்கிஅன்பர்கள்பலருடையநட்புறவைஈட்டினோம். ஆதலால் நகரை விட்டுப் புறப்படப் போகிறோம் என்ற செய்தி கேட்டு நண்பர்கள் கண்கலங்கினர். கோலாலம்பூர் தமிழர் பிரதிநிதித்துவ சபையார் செந்துல் செட்டியார் மண்டபத்தில் திரு. ஜி. குமாரசாமி அவர்கள் தலைமையில் ஒரு வழியனுப்பு உபசார விழா நடத்தினர்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற வள்ளுவர் வாக்கின்படி, "நண்பர்களைப் பிரியப் போகிறோமே!" என்ற துயரம் எங்களுக்கும் கோலாலம்பூர் நண்பர்களுக்கும் இடையே பொங்கி எழுந்தது.

"எங்களைப் பற்றிய நினைவு உங்கள் கலை உள்ளங்களிலே பசுமையாக இருக்கட்டும்!" என்று சொல்வது போல் தமது வர்த்தக அடையாளமான பசுவின் சின்னத்தைப் பொன்னிலே பொதிந்து வழங்கினர், அம்பாள் கம்பெனி அதிபர் திரு. வி. பி. லிங்கத் தேவர்.

நாடகக் கலையின் புகழைப் "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!" என்ற கருத்துடன், ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொண்டு அழகிய பாராட்டு மொழிகளைப் பொழிந்த சட்டசபை உறுப்பினர் 'நாவலர்' எஸ். ஓ. கே. உபயதுல்லா அவர்கள், பிரிந்து செல்ல ஆயத்தமாக இருந்த எங்களுடன் என்ன பேசுவதென்றே தெரியாமல், அளவற்ற அன்பு காரணமாகக் கண் கலங்கினர்.

இவர்களைப் போலவே எங்களோடு நெருங்கிப் பழகிய செழுதகை நண்பர்களான திருவாளர்கள் பொன்னுத்துரை, பழனிவேல் பிள்ளை, 'மனோன்மணி விலாச ராமசாமி, கே.கே.சாமி, கனகரத்தினம் முதலியோரும் பிரிவுத் துயரத்தை எப்படியோ சமாளித்துக்கொள்ள முற்பட்டனர்.

கோலாலம்பூரில் எங்களிடம் உள்ளன்பு செலுத்திய இன்னொரு. நண்பரைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அவர் பெயர் திரு வெ. செல்லமுத்து. 'வெம்பிளி' சிகை அலங்கரிக்கும் நிலையத்தின் அதிபர் அவர். செந்தமிழ் ஆர்வமும், சீர்திருத்த நோக்கமும் கொண்டவர். பெரியார் ஈ.வெ.ரா. அவர்களிடம் எல்லையற்ற பற்றுக்கொண்டவர். நாங்கள் வெம்பிளி நிலையத்துக்குச் சென்ற சமயம் திரு. செல்லமுத்துவும், அவருடைய நிலைய நண்பர்களும், எங்களைக் கண்ட உற்சாகத்தில் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் உள்ளன்பும் உயர்ந்த தமிழ்ப்பற்றும், இருக்குமானல் எவருடைய உள்ளத்தையும் எளிதில் ஈர்த்துவிட முடியும் என்பதற்கு வெம்பிளி நிலையத்தார் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஜூன் மாதம் இருபத் தோராந் தேதி காலையில், குழுவினர் அனைவரும் கோலா லம்பூரிலிருந்து கார்களிலே மூவார் நோக்கிப் புறப் பட்டோம். நகர எல்லையைக் கடந்ததும் மலாய் போலீஸ் காரர்கள் கார்களைத் தடுத்து நிறுத்தினர். நாங்கள் திடுக் கிட்டோம்!

"ஏதாவது உணவுப் பொருள் கொண்டு போகிறீர் களா?" என்று கேட்டனர்.

''ஒன்றும் கொண்டு போகவில்லை.''

''சரி, போகலாம்!'' என்று கையசைத்து அனுமதி தந்தனர் போலீஸார்.

நகரத்திலிருந்து சாலை வழியே பயணம் செய்யும் எவரும் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லக் கூடாது என்பது மலேயா அரசாங்கத்தின் ஆணை. காடு களில் தலைமறைவாக வாழும் 'பயங்கரவாதி'க ளுக்கு யாரேனும் உணவுப் பொருள்களைக் கொண்டுபோய்க் கொடுத்து விடாமல் தடுப்பதற்காகவே நகர எல்லையில் போலீஸ் சோதனை நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு எல்லா நகர எல்லைகளிலும் போலீஸ் சோதனை நிலையங்கள் உள்ளன.

மலேயா அரசினர் பெண் போலீஸாரை நியமித் துள்ளனர் என்பதையும் குறிப்பிட வேண்டும். பெண் போலீஸார் தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட தும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வந்தனவாம். ரப்பர் பால் வெட்டும் பெண் தொழிலாளிகள் முதல் பள்ளிஆசிரியைகள் வரை, பலதுறைகளிலிருந்தும் போலீஸ் வேலைக்கு விண்ணப்பம் இட்டார்கள். அவர் களில் 54 பேர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைஉதவி போலீஸ் கண்காணிப்பாளர் திருமதி. பர்பாராவென்ட் வொர்த் என்னும் அம்மையார் ஏற்றார். பெண்களுக்குத் துப்பாக்கி பிடித்துச் சுடுவது முதல் எல்லாவிதமான

பயிற்சிகளையும் திருமதி வென்ட்வொர்த் அளித்தார். இந்தப் பயிற்சி ஏழு மாதங்கள் நடைபெற்றது. இவ்வாறு பயிற்சி பெற்ற பெண்களில் நாற்பத்தேழு பேர் மலாய் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு பேர் சீனப் பெண்கள். ஒருவர் இந்தியப் பெண். கோலாலம்பூர், ஈப்போ, பினங்கு ஆகிய நகரங்களில் பெண் போலீஸார் பணியாற்றுகின்றனர். குறைந்தது நாலடி பத்து அங்குலம் உயரமுள்ள பெண்களே போலீஸாராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

முதன் முதலில் இன்ஸ்பெக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பெண்களில் ஒரே ஒரு இந்தியப் பெண்ணும் பணியாற்றுகிறார். இவர் குமாரி எமிலி மாத்யூஸ்.

போலீஸ்வேலைக்குப்பெண்களும் தகுதியானவர்களே என்பதை உறுதிப்படுத்தும் முறையில் அவர்கள் பணியாற்றுவதை மலேயாவில் கண்டோம். குற்றம் செய்பவர்களில் பெண்களும் இருப்பதால், பெண் குற்றவாளிகளைச் சமாளிப்பதற்கு ஆண் போலீஸாரைவிடப் பெண் போலீசார் மிகவும் பொருத்தம் என்றே எங்களுக்குத் தோன்றியது.

எங்கள் பயணத்தின் போது சாலை ஓரங்களிலே ஆங்காங்கு டொரியான் பழங்களையும், மங்குஸ்தான் பழங்களையும் குவித்து வைத்துக் கொண்டு விற்பனை செய்யும் காட்சிகளை கண்டோம். மலாய்க்காரர்களுக்கே உரித்தான பரண் வீடுகள் பல எங்கள் கண்களுக்குத் தென்பட்டன. பரண் வீடுகள் பெரும்பாலும் மரத்தினால் அமைக்கப்பட்டுள்ளன. நிலத்திலிருந்து ஏறக்குறைய 3 அடி உயரத்திற்கு மேல் வீடுகள் அமைக்கப்பட்டிருந்த தோற்றம் வனப்பு மிகவுடையது.

முற்பகல் பத்தரை மணிக்கு, கோலாலம்பூரிலிருந்து நாற்பத்திரண்டு மைல் தொலைவில் உள்ள 'சிரம்பான்' என்னும் நகரத்தை அடைந்தோம். சிரம்பான்

நகர் செம்பியான் மாகாணத்தின் தலைநகரம். ஒழுங்காக அமைந்துள்ள வீதிகளும், உல்லாசப் பூங்காவும் நகரத்திற்கு அணி செய்கின்றன. மலாய்க்காரர்களின் மாதிரிப் பரண் வீடு ஒன்று மக்கள் கண்டு மகிழ்வதற்காகவே சிரம்பானில் அமைக்கப்பட்டுள்ளது. காட்சிக்குரிய வீடாதலால் இதில் யாரும் குடியிருக்கவில்லை.

சிரம்பானில் பாரதி அச்சக உரிமையாளர் திரு. இராம சின்னையன் அவர்கள் நாடகக் குழுவினர் அனைவரையும் வரவேற்றுப் பாராட்டி விருந்தளித்தார். விருந்துக்குப் பின் பிற்பகல் இரண்டு மணிக்கு மீண்டும் பயணத்தைத் தொடங்கினோம்.

25. மலாக்காவின் மாண்பு

சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ, பினங்கு-இந்த வரிசையில் எங்கள் கலை உலா முன்னேற வேண்டும் என்பது ஏற்பாடு. இந்த உலாவை முடித்துக் கொண்டு ஜூலை மாதம் பன்னிரண்டாம் தேதி பினங்கில் கப்பலேறிக் கலைக்குழுவினர் அனைவரும் சென்னைக்குப் புறப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஆசிய நாட்டையே கதிகலங்கச் செய்யும் புயல் போல வீசிய சளிக்காய்ச்சலின் களியாட்டம் எங்கள் பயணத் திட்டத்தையும் பலமாகத் தாக்கியது. மலேயாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே கப்பல் போக்குவரத்து தடைப்படும் அளவுக்குக் காய்ச்சலின் வேகம் உச்ச நிலை அடைந்தது.

"ஜூன், ஜூலை மாதங்களில் ஸ்டேட் - ஆஃப் மதராஸ் கப்பல் சென்னைக்குப் புறப்படாது!" என்று கப்பல் கம்பெனியார் மிகத் தெளிவாக அறிவித்துவிட்டனர்.

கம்பெனியார் இந்த அறிவிப்போடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை. இன்னொரு செய்தியையும் வெளியிட்டார்கள்.

எதிர்பாராமல் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு கப்பலைக் கல்கத்தாவுக்கு அனுப்பிப் பழுது பார்ப்பதென்ற முடிவுக்கும் கம்பெனியார் வந்து விட்டனர்.

கப்பல் கல்கத்தாவுக்குப் போய்ப் பழுது பார்க்கப் பட்டுத் திரும்பும் வரை எல்லோரும் மலேயாவிலேயே தங்க வேண்டியதுதானு? நமது பயணம் காலவரையறை யின்றி ஒத்திவைக்கப்படுமா ? இவ்வாறெல்லாம் எங்களில் பலருக்கு ஏக்கம் எழுந்தது.

ஆயினும், கப்பல் கம்பெனியின் கோலாலம்பூர் நிலையப் பொறுப்பாளரான நண்பர் திரு. எஸ்.ஓ.கே. உபயதுல்லா அவர்கள் அளித்த வாக்குறுதி என்னும் மருந்து எங்கள் ஏக்கத்தைப் போக்கி ஊக்கத்தைத் தந்தது.

எதிர்பாராத நிலையில் எங்கள் சுற்றுப்பயணக் காலம் நீடிக்கப்பட்டதும் ஒரு வகையில் நல்லதாகத் தான் பட்டது. எங்கள் முதல் திட்டத்திலே இப்படி ஒரு மாற்றம் ஏற்படாமல் போயிருந்தால், நாங்கள் மூவாருக்குப் புறப்பட்டிருக்க முடியாது. நண்பர் திரு. சித. நாராயணன் செட்டியார் அவர்களின் அன்பு வரவேற்பை ஏற்றிருக்க முடியாது; இந்திய சன்மார்க்க சங்கப் பள்ளிக்கூடக் கட்டட நிதிக்கு உதவி செய்திருக்க முடியாது ; எல்லாவற்றுக்கும் மேலாக மலேயா வின் சரித்திரப் புகழ் பெற்ற பழைய நகரமான மலாக் காவின் மாண்பைக் கண்டு மகிழ்ந்திருக்கவும் முடியாது.

சிங்கப்பூரிலிருந்து இருநூற்றைம்பது மைல்கள் முன்னேக்கிச் சென்று, கோலாலம்பூரில் சுமார் ஒரு மாத காலம் தங்கிய நாங்கள், மூவார் நகரத்தை நாடி. நூற்றிருபது மைல்கள் பின்னேக்கிப் பயணம் செய்ய வேண்டியதாக இருந்தது.

ஜூன் மாதம் இருபத்தோராம் தேதி மாலை குழு வினர் அனைவரும் மூவார் படகுத் துறையை அடைந் தோம், நதிக்கு அக்கரையில் மூவார் நகரம் கம்பீரமாகக் காட்சியளித்தது. அக்கரைக்குச் செல்ல நதியின் குறுக்கே பாலம் ஒன்றும் கிடையாது. படகுகளில்தான் ஆற்றைக் கடக்க வேண்டும், படகுகள் மனிதர்களை மட்டுமல்லாமல் கார்களையும் லாரிகளையுங்கூட ஏற்றிச் செல்லும் வசதி வாய்ந்தவை. படகு ஒன்றில் ஒரே சமயத்தில ஆறு கார்களையாவது மூன்று பெரிய லாரி களையாவது ஏற்றிச் செல்ல முடியும், மனிதர்களை ஏற்றிச் செல்லும் படகு ஒன்றில் ஒரே சமயத்தில் முப்பத் தைந்து பேர்கள் அமர்ந்து செல்ல முடியும்.

அன்னம் போல நீந்திச் செல்லும் படகுகளில் நாங் களும் எங்களை ஏற்றி வந்த கார்களும் ஆற்றைச் கடந்த போது மிகவும் உல்லாசமாக இருந்தது. அக்கரையில் ஆற்றங்கரையாகத் தோற்றமளிக்கும் ஜாலன் மகராணி என்ற வீதியில் படகுத்துறைக்கு எதிராகவே அமைந்துள்ளது, திரு. நாராயணன் செட்டியார் அவர் களின் இல்லம்.

அக்கரையில் இறங்கிய எங்களைத் திருவாளர்கள் நாராயணன் செட்டியார், .காசியா பிள்ளை, விசு. திருநாவுக்கரசு முதலியோரும் சன்மார்க்க சங்கத்தின் ஏனைய அன்பர்கள் |பலரும் எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். நெடுந்தூரம் கார்ப்பயணம் செய்து வந்த எங்களது அலுப்புத் திரச் சற்று நேரமேனும் அமர்வதற் குக்கூட அவகாசம் இல்லாமல் எங்களை நேராக ஒரு மண்டபத்துக்கு அழைத்துச் சென்று, வரவேற்புத் தேநீர் விருந்து அளித்ததுடன் தங்கள் அன்புப் பாராட்டுரை களால் திணறச் செய்தனர். பிற்பகல் 4-30மணிக்கு, அகில மலேயா சினர் சங்கத் தலைவர் டத்தோ சர்செங-

லாக் அவர்கள் இல்லத்தில் தேநீர் விருந்தை ஏற்றோம். சீனப் பெருமக்களின் அன்புக்குரிய தலைவரான இவர் பினங்கு கவர்னர் பதவியையே வேண்டாம் என்று மறுத்துவிட்டதாகக் கேள்விப்பட்டோம்.

மறுநாள் அதாவது ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதி காலையில் திரு. எஸ். வி. ராமன், ஜே. பி. அவர்கள் எங்கள் அனைவரையும் மூவாரிலிருந்து சுமார் இருபத்தைந்து மைல் தொலைவில் உள்ள மலாக்கா என்னும் மூதூருக்கு அழைத்துச் சென்றார். மலாக்காவை அடுத்துள்ள அலோர் காஜா என்ற ஊரில் ஒரு ரப்பர் எஸ்டேட் மேலாளராகப் பொறுப்பு வகிக்கிறார், திரு. ராமன்.

மலாக்காவைப் பற்றிய பெருமைகளை எங்களுக்கு எடுத்துச் சொல்வதிலே அவர் மிகுந்த உற்சாகமாக இருந்தார்,

ஏழு வேட்டை நாய்களை முயல் ஒன்று எதிர்த்து விரட்டிய வீரம் செறிந்த மண் என்று நமது பாஞ்சாலங்குறிச்சி மண்ணின் சக்தி பாராட்டப்படுவது போல் மலாக்கா மண்ணிலும் வீரம் கலந்திருப்பதாக மலாய் வரலாறு ஒன்று கூறுகிறது. மலாக்கா ராஜ்யத்தை நிறுவிய பரமேஸ்வரன் என்னும் இந்து அரசன், முதன் முதலில் இதே மண்ணில் அடியெடுத்து வைத்ததும் ஒரு விந்தையைக் கண்டு சிந்தையைப் பறி கொடுத்தானும். சுங்கை போட்டம் என்னும் ஆற்றங்கரையிலே மான் ஒன்று தன்னைத் துரத்தி வந்த ஒரு வேட்டை நாயை எதிர்த்துக் காலால் உதைத்து ஆற்றிலே தள்ளி விட்டதாம்!

பரமேஸ்வரன் சீனவோடு தொடர்பு கொண்டு ஹூய்-தி என்ற சீனச் சக்கரவர்த்தி ஒருவரின் உதவியினால்தான் மலாக்காவின் அரசனானன். கி. பி. 1403 முதல் 1414 வரை மலாக்காவின் முன்னேற்றத்துக்குக்

காரணமாக இருந்து அரசாண்டான். பரமேஸ்வரனுடைய மகனை ராஜா புசார் மூடா என்பவன் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஓர் அரச குமாரியைத் திருமணம் செய்துகொள்ள நேர்ந்தது. அந்த மனைவியின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு அவனும் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றித் தன் பெயரை முகமது இஸ்கந்தர் ஷா என்று மாற்றிக்கொண்டான். மலேயாவின் முதல் முஸ்லீம் சுல்தானாக விளங்கினான் இஸ்கந்தர் ஷா.

இஸ்கந்தர் ஷாவுக்குப் பின் முஸ்லீம் அரசர்களின் ஆதிக்கத்தில் மலாக்கா இருந்தது. கி. பி. 1511இல் போர்ச்சுகீசியர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர். 1641இல் மலாக்கா டச்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்கு வந்தது. 1795இல் ஆங்கிலேயர்கள் மலாக்காவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றனர்.

மலாக்காவில்இந்தியர்,சீனர், மலாய்க்காரர், போர்ச்சுகிஸீயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலான பல இனத்தவரின் நாகரிகச் சின்னங்களைக் காண முடிகிறது.

தமிழன் வகுத்த நிலப் பாகுபாட்டின்படி கவனித்தால் மலாக்காவை நெய்தலும், குறிஞ்சியும், மருதமும் இணைந்து காணும் புதுமை தவழும் பழம்பெரும் பதி என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

சாலையிலே நாங்கள் சென்றுகொண்டிருந்த போது இருமருங்கிலும் தென்பட்ட பசுமையான வயல்கள் திருநெல்வேலி மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் எங்கள் நினைவுக்குக் கொண்டுவந்தன. தலைக் கூடை அணிந்து வயலிலே வேலை செய்த மலாய்க்காரர்களைக் கண்ட பிறகுதான் 'மலாக்காவையே காணுகிறோம்' என்ற உணர்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது.

'மலாக்கா வண்டி' என்ற சிறப்புப் பெயர் பெற்ற பழமையான மாட்டு வண்டிகள் கிராமப் புறங்களி

லிருந்து விளைபொருள்களை ஏற்றிவரும் அழகு எங்களை மிகவும் கவர்ந்தது.

நகருக்கு நடுவே மலாக்கா நதி ஓடிக்கொண்டிருக்கிறது. நதியைத் தொட்டு முத்தமிட்டுக்கொண்டிருக்கும் கட்டடங்கள் ஏராளம். மலாக்கா என்னும் கிழக்கத்திய வர்த்தகக் கேந்திரத்தைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற எத்தனையோ போர்களைக் கண்டிருக்கிறது இந்த வளமான நதி.

மலாக்காவில் புக்கிட்சீனக் குன்றில் மிகப்பழமையான கிணறு ஒன்று அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதற்கு "பீர்கி ராஜா கிணறு" என்று பெயர். அந்தக் கிணற்றை ஒட்டிச் சீனர் கோயில் ஒன்றும் உள்ளது. அந்தக் கிணற்றுக்கு ஒரு சிறப்பு உண்டென்று மக்கள் நம்புகின்றனர். மலாக்காவுக்கு வரும் வெளிநாட்டார் அந்தக் கிணற்று நீரில் ஒரு குவளை அருந்தினுல் கட்டாயமாக மீண்டும் ஒரு முறை மலேயாவுக்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டே தீரும் என்பது தான் அந்த நம்பிக்கை. கர்ண பரம்பரையாக வளர்ந்து வரும் அந்த நம்பிக்கையைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் எங்கள் குழுவைச் சேர்ந்த நடிக நடிகையர் ஒவ்வொருவரும் அந்தத் தொன்மையான கிணற்று நீரை அள்ளிப் பருகுவதற்கு முந்திக்கொண்டனர்!

பின்னர் சீன, பௌத்த, சீக்கிய தேவாலயங்கள் சிலவற்றுக்குச் சென்று கண்டு மகிழ்ந்தோம்.

நண்பகலில் நகருக்குப் புறத்தே சுமார் நான்கு மைல் தொலைவில் உள்ள சன்யாசி மலைக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டோம். பொதுநலப் பணியாற்றிய சன்யாசி ஒருவர் சமாதி அடைந்த இடம் அது. அந்த மலையில் செட்டியார் சமூகத்தினருக்குச் சொந்தமான தண்டபாணி கோயில் ஒன்று உள்ளது. சுற்று மதிலும் மண்டபமும் அமைந்த அந்தக் கோயிலில்

மிகப்பெரிய மடப்பள்ளி, அதாவது, சமையல் விடுதி ஒன்றும் உள்ளது,

ஜப்பானியப் போர் நிகழ்ந்த காலத்தில் மலாக்காவில் வதியும் செட்டிமார் அனைவருக்கும் புகலிடமாக விளங்கியது சன்யாசிமலைக் கோயில்தான் என்றும், அவர்களுடைய செல்வங்களெல்லாம் கோயிலிலேதான் அந்தரங்கமாகப் பத்திரப்படுத்தப்பட்டன என்றும் நண்பர்கள் தெரிவித்தனர்.

சன்யாசி மலைக்கோயிலில் அன்பர்களின் வரவேற்பும் நண்பகல் விருந்தும் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஊக்கத்தைத் தந்தன. பெருமித விருந்தின் பின்னர் சிறிது நேரம் ஓய்வு பெறுவதற்காக நகரத்தின் மத்தியில் சிங்கைத் தமிழன்பர் திரு. பொ. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களுக்குச் சொந்தமாக விளங்கும் புதிய விருந்து மாளிகைக்குச் சென்றோம். மிக ஒடுக்கமான மூன்று அடுக்கு நிலையமாக எழுந்துள்ளது ஒப்பற்ற அந்த விருந்து மாளிகை.

ஓய்வு நேரத்தைக் குறைத்துக்கொண்டு பிற்பகலில் செயின்ட் ஜான் குன்றிலுள்ள கோட்டையைக் காணச் சென்றோம். டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட இந்தக் கோட்டையில் பாழடைந்த மதில் சுவர்கள் மட்டுமே இப்போது காணப்படுகின்றன.

போர்ச்சுகீசியரால் கட்டப்பட்ட புராதனமான கோட்டை வாசலையும் கண்டோம். பின்னர், வனப்பு மிகுந்த கடற்கரைப் பூங்காவில் சற்று இளைப்பாறினோம்.

மாலை ஆறு மணியளவில் சுப்பிரமணியர்-திரௌபதி அம்மன் கோயில் மண்டபத்துக்கு வந்து சேர்ந்தோம். வெள்ளம் போல் கலை அன்பர்கள் குழுமியிருந்தனர். சமய வகுப்பு மாணவிகள் பதின்மூன்று வயலின்களைக் கொண்டு கூட்டிசை முழக்கினர். வரவேற்புக் கூட்டத்துக்குத் திரு. எஸ். வி. ராமன் அவர்களே தலைமை தாங்கி

முத்தமிழின் சிறப்பைப் பற்றி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். டாக்டர் தம்பிப் பிள்ளை, இரத்தினம் செட்டியார், இளங்கோ கலை மன்றத் தலைவர் டி. சி. தங்கவேல், கிருஷ்ண பாகவதர், அ. பொன்னம்பலனர் முதலியோர் பாராட்டுரை கூறினர்கள்.

தென்னட்டிலிருந்து பல்லாண்டுகளுக்கு முன் மலாக்காவிற்கு வந்து குடியேறிய செட்டிமார் வகுப்பினர் மலாக்காப் பெண்மணிகளைத் திருமணம் செய்து கொண்டுவிட்டார்களாம். இக் கலப்பு மணத்தின் காரணமாக 'மலாக்கா செட்டியார்' என்ற தனி இனமே உருவாகி விட்டதாம். இந்த இனத்தார் தமிழ் மொழியை மறந்து விட்டாலும் தமிழ் வழியை மறந்துவிடவில்லை. திருமணச் சடங்குகள், வழிபாட்டு முறைகள் முதலியன நமது தென்னட்டு மரபிலேயே நிகழ்த்தப் பெறுகின்றன.

கூடை முடைதல், பாய் பின்னுதல் முதலான கைத் தொழில்களும் மலாக்காவில் தனிச்சிறப்போடு மிளிர்கின்றன.

சில மணி நேரங்களில் மலாக்காவின் கலாசாரத்தை ஓரளவு புரிந்துகொண்டோம் என்ற மன நிறைவுடன் மூவாருக்குத் திரும்பிவிட்டோம்.

26. மூவார் முகாம்

மூவாரில் 'பாரடைஸ் பார்க்' என்னும் களியாட்டப் பூங்காவில் இராஜராஜசோழன், கள்வனின் காதலி ஆகிய நாடகங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. சிறிய நகரமாக இருந்தாலும் தமிழ் நாடக விழாவுக்குக் கிடைத்த ஆதரவு மிகப் பெரிது. பொது மக்கள் காட்டிய பேராதரவு காரணமாக 'இராஜராஜ சோழன்' நாடகத்தை

மீண்டும் ஒரு நாள் நீடிக்க வேண்டியதாகவும் இருந்தது. நாடகவிழா நடைபெற்ற மூன்று நாட்களும் மூவார் நகரம் திருவிழாக் கோலத்தோடு காட்சியளித்தது. சுற்று வட்டார ரப்பர்த் தோட்டங்களிலிருந்தும், மலாக்கா, தம்பின் போன்ற ஊர்களிலிருந்தும் ஏராளமான கலையன்பர்கள் கூட்டங்கூட்டமாகப் படகுகளிலே வந்து இறங்கிய காட்சி கண்கொள்ளாதது. சிங்கப்பூர்த் தமிழர் பிரதிநிதித்துவ சபைத் தலைவர் திரு, கோ. சாரங்கபாணி, செயலாளர் திரு. எம். மாலை ஆகியோர் நாடக விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க சங்கத் தமிழ்ப்பள்ளி நிதிக்கு மக்கள் அளித்த ஆதரவைப் பாராட்டினர்.

மலேயாவுக்கு வந்தநாள் முதல் ரப்பர்த் தோட்டம் ஒன்றுக்குச் சென்று ரப்பர் உற்பத்தியையும், தோட்டத் தொழிலாளர்களின் அயராத உழைப்பையும் கண்ணாரக் காண வேண்டும் என்ற ஆவல் உந்தியது.

மூவார் முகாமின் போது எங்களது இந்த ஆவலை நிறைவேற்றி வைத்தார், நண்பர் திரு. நாராயணன் செட்டியார் அவர்கள். ஜெயங்கொண்டார் ரப்பர்த் தோட்டம் செட்டியார் அவர்களின் பொறுப்பில் இயங்குவது. எனவே, அவர் எங்களைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று, ரப்பர் உற்பத்தி பற்றிய விவரங்களையெல்லாம் தெளிவாகக் கூறினர்.

மலேயாவின் செழிப்புக்குக் காரணமான இரு பெருஞ் செல்வங்கள் ஈயமும் ரப்பரும்.

மண்ணிலே ஈயம்
பிறக்கும் - பச்சை
மரத்திலே ரப்பரோ
பாலாய்ச் சுரக்கும்

மலேயாவில் ஏறக்குறைய முப்பத்தேழரை லட்சம் ஏக்கரா நிலப்பரப்பில் ரப்பர் பயிராகிறது, சிங்கப்பூர்-மலேயாவில் சுமார் பதினைந்து லட்சம் பேர்களுக்கு வாழ்

வளிக்கும் தொழிலாக இலங்குகிறது. ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஆறரை லட்சம் டன் முதல் ஏழு லட்சம் வரை ஏற்றுமதியாகிறது.

ரப்பர் வளம் மலேநாட்டிலே பெருகத் தொடங்கி நூறு ஆண்டுகள்கூட நிரம்பவில்லேயாம். அதற்குள் மலேயாவின் வளப்பத்துக்கு ஆதாரமான மாபெரும் தொழிலாக ரப்பர் உற்பத்தி வளர்ந்துள்ளது மகத்தான சாதனே என்றுதான் சொல்ல வேண்டும்.

மலேமுகடு, மலேச்சரிவு, அடிவாரம், பள்ளத்தாக்கு முதலான இடங்களில் கரடுமுரடாக ரப்பர்த் தோட்டங்கள் வியாபித்திருக்கின்றன. இவற்றைரப்பர்த்தோட்டங்கள் என்பதைவிட 'ரப்பர் - காடுகள்' என்று சொல்வது கூடப் பொருத்தமாக இருக்கும். இத்தகைய காடுகளில் புகுந்து ரப்பர் பால் வெட்டும் தொழிலாளர்களின் அயராத உழைப்பை எவ்வளவு போற்றினுலும் தகும். இவ்வாறு காடு திருத்திப்பாடுபடும் தமிழ்த்தொழிலாளர்கள் பலரை ரப்பர்த்தோட்டங்களிலே கண்டு மகிழ்ந்து பாராட்டினேம். கடல் கடந்து, உடல் உழைப்பால் காலம் தள்ளும் அந்தத் தொழிலாளர்கள் நமது தமிழகக் கலேஞர்களேப் பற்றிய விவரங்களே யெல்லாம் தெரிந்துகொண்டிருக்கிற அருமையை வியந்தோம்.

27. ஈப்போவில் அன்புத் தொல்லே,

ஜூன் மாதம் இருபத்தேழாம் தேதி பொழுது புலரா முன்னமே எழுந்து அனேவரும் ஈப்போ நகரை நோக்கிப் புறப்பட்டோம்.

தம்பின் என்ற ஊர்வரையிலும் காரிலே சென்ருேம். தம்பினில் வாழும் தமிழ்ப்பெருமக்கள் ரயிலடியில் திர

ளாகக் கூடி காலை விருந்துடன் மாபெரும் வரவேற்பு அளித்தனர். காலை எட்டு மணிக்குத் தம்பின் நிலையத்தில் ரயிலேறி மாலை ஆறு மணிக்கு ஈப்போ நகரை அடைந்தோம். வழி நெடுக சிரம்பான், கோலாலம்பூர், கம்பார் முதலான ரயில் நிலையங்களில் கலையன்பர்கள் ஆவலோடு கூடி விருந்துபசாரங்கள் செய்து பயணத்தின் அலுப்பு பறந்தோடும்படி செய்தனர்.

ஈப்போ புகைவண்டி நிலையத்தில் மலேயன் இந்தியர் காங்கிரஸ், அகில மலேயா தமிழர் சங்கம் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும், ஏ. எம். எஸ். பெரியசாமி, வீ. மீனாட்சிசுந்தரம், கே. டி. நாகராஜ செட்டியார், ஆர். எஸ். சிவம் முதலியபிரமுகர்களும் ஆயிரக்கணக்கான கலையன்பர்களும் கூடி நின்று நெஞ்சுகந்த வரவேற்பு அளித்தனர்.

ஈப்போ பேரா மாகாணத்தின் தலைநகரம். மலேயாவில் நாங்கள் கண்ட நகரங்கள் எல்லாவற்றிலும் ஈப்போ நகரம் மிகவும் எழில் வாய்ந்ததாக இலங்கக் கண்டோம். அகன்ற நெடுஞ்சாலைகளின் ஒழுங்கும், தூய்மையும் நெருக்கடி அதிக மில்லாத வீடுகளின் அமைப்பும் நகரத்துக்குக் கவர்ச்சி அளித்தன.

கோலாலம்பூரிலிருந்து பினாங்குக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் நூற்றுநாற்பத்து ஆறுவது மைலில் உள்ளது ஈப்போ.

ஈப்போவில் வாழும் இந்தியப் பெருமக்களின் கலையார்வம் கொஞ்சம் அத்துமீறியதாகக்கூடத் தோன்றியது! ஆயிரக்கணக்கான அன்பர்கள் கலைக்குழுவினரைக் காணும் ஆர்வத்தில் நாள்தோறும் கூட்டங்கூட்டமாக வந்து முற்றுகையிட்டு வந்தனர். திருவிழா நடப்பது போல ஏராளமான தள்ளுவண்டிக் கடைகளும் எங்கள் முகாமைச் சுற்றி அமைக்கப்பட்டுவிட்டன. குடை ராட்டினம் உள்படப் பலவகையான வேடிக்கை அம்சங்களும்

வந்திருந்தன. ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் வெள்ளத்தைச் சமாளிக்க முடியாமல் திணறினோம்.

கூட்டத்தைச் சமாளிப்பதற்காக ஒலி பெருக்கி ஏற்பாடு செய்து, "கலைக்குழுவினர் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கின்றனர். மாலையில் அவர்கள் கலையரங்குக்குச் செல்ல வேண்டும். எனவே, அன்பர்கள் அனைவரும் அமைதியாகக் கலைந்து செல்லும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்!" என்றெல்லாம் முழக்கம் செய்ய வேண்டியிருந்தது.

அவ்வளவு கூட்டம் வந்த போதிலும் அசம்பாவிதமான நிகழ்ச்சி எதுவுமே நிகழவில்லை; குழப்பம் சிறிது கூட விளையவில்லை! கலை அன்பர்களின் கட்டுப்பாடு மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தது. எனவே, அன்பர்களின் ஆவலை நிறைவேற்றும் துணிவுடன் நடிக நடிகையர் தத்தம் அறைக்கு வெளியே வந்து கைகூப்பி வணங்கியும் கையெழுத்து வழங்கியும் மக்களுக்கு மகிழ்ச்சியூட்ட முடிந்தது. ரசிகர்களின் அன்புத் தொல்லையும் அகமகிழ்ந்து வரவேற்கும் ஆவலும் ஆர்வமும் பொங்கியெழுந்தன.

28. பொங்கித் ததும்பிய கலையார்வம்

ஈப்போவில் தமிழ் நாடக விழாவைத் தொடங்கி வைத்தவர் மிகவும் புகழ் பெற்ற மலைநாட்டுத் தலைவர்களில் ஒருவர். அவர் பேரா அரசின் இளவரசர். அவருடைய பெயர் விருது மிக நீளமானது. எனவே, அந்தப் பெயரை ஒரு முறை படித்துவிட்டுத் தப்பில்லாமல் சொல்லிக் காட்டும்படி குழுவினர் சிலரிடம் திரு. பகவதி வேடிக்கை வினா எழுப்பி மகிழ்ந்தார். அந்தப் 'பெயர் விருது' என்ன தெரியுமா? "யாங் டெராமட்

மூலியா ராஜா மூடா பேராக்." "மாட்சிமை தங்கிய பேரா ராஜ்ய இளவரசர்" என்பதுதான் இந்தத் தொடரின் பொருள். அவர் தமிழர்களின் கலாச்சார மேன்மையை வாயாரப் புகழ்ந்து அரசாங்கத்தின் சார்பில் நமது கலைக்குழுவுக்கு மனமார வரவேற்புக் கூறினர். தொழிலாளர் நல அலுவலர் திரு. ஆர். எஸ். சிவம் அவர்கள் நாடக ஆரம்ப விழாவுக்குத் தலைமை தாங்கியதோடு மட்டுமல்லாமல், நாங்கள் ஈப்போவை விட்டுப் புறப்படும் வரை அன்பும் சிவமும் போல எங்களோடு இணைந்து பழகி வந்தார்.

ஈப்போவில் "இராஜராஜ சோழன்" நாடகம் எட்டு நாட்களும், 'ஔவையார்', 'ரத்தபாசம்' ஆகிய நாடகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளும், கொட்டகை நிறைந்து வழியும் கூட்டத்துடன் நடைபெற்றன.

சிங்கப்பூர் - மலேயாவில் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர் தொழில் முறை நடிப்பிலோ நடனத்திலோ பங்கு கொள்ளக்கூடாது என்று ஒரு தனிச் சட்டம் அமுலில் இருக்கிறது. இதன் காரணமாக ஔவையார், ரத்தபாசம், எது வாழ்வு போன்ற நாடகங்களில் நமது குழுவில் உள்ள சிறுமி சந்தோஷ் நடிப்பதற்கு இயலாத சூழ்நிலை ஏற்பட்டு, விசேட உத்தரவு பெற்று எப்படியோ சமாளிக்க வேண்டியதாக இருந்தது. ஆனல், பொழுது போக்கு முறையில் விழாக்களின் போது ஊதியம் இன்றி நடனமாடும் சிறுமிகளுக்குத் தடை விதிப்பது இல்லை. நடன ஆர்வமுள்ள பெரும்பாலான சிறுமிகள் சினிமா இசைத்தட்டுகளை ஒலிபரப்பச் செய்து அவற்றுக்கு ஏற்ப மேடையிலே நடனமாடும் நிகழ்ச்சிகள் சிலவற்றை நாங்கள் நேரில் கண்டோம்.

ஜூலை மாதம் ஏழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் பேரா மாகாண இந்தியப் பெருமக்களின்

சார்பில் ஈப்போ தண்டாயுதபாணி திருக்கோயில் மண்டபத்தில் நமது குழுவினருக்கு மாபெரும் வரவேற்பு விருந்து நிகழ்ந்தது. திரு. எஸ். கே. ஜகதீசன் தலைமை தாங்கினர். சிந்தா இந்தியர் சங்கம், மலேயா இந்திய காங்கிரசின் பேரா மாகாணக் கிளை, அகில மலேயா தமிழர் சங்கம், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தகச் சங்கம் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பாராட்டுரை நிகழ்த்தினர். நமது நாடகக் குழுவிற்குத் தங்கக் கேடயம் பரிசளித்த பெருமையும் இந்தக் கூட்டத்திற்கு உண்டு. பேரா மாகாண மக்களிடம் பொங்கித் ததும்பிய கலையார்வத்தை ஈப்போ நாடக விழா எடுத்துக்காட்டியது.

ஈப்போவிலிருந்து மூன்ருவது மைலில் கோபங் சாலைக்கு அருகில் உள்ள 'சாம்-போ' குகைக் கோயில் எங்களை மிகவும் கவர்ந்தது. மிகப்பெரிய சர விளக்குகளும், பல வகையான புத்தர் சிலைகளும், எழில் தவழும் கருணை தேவியின் சிலையும் கண்டு மகிழத் தக்க அம்சங்கள். குகைக் கோயிலுக்கு உள்ளே நுழைந்தால் நாற்புறமும் மதில் எழுந்தாற்போல் அமைந்த மலை அழகு 'நாம் ஏதோ பாதாளத்தில் இருக்கிருேமோ ?' என்ற மருட்சியை உண்டுபண்ணக் காணலாம். அந்தக் குகைக்குள்ளே வில் வளைவு போலத் திண்டு கட்டிவிடப் பட்டுள்ள ஆமைக்குளம் காணப்படுகின்றது. ஊற்று நீர் குறைந்து நூற்றுக்கணக்கான ஆமைகள் நிறைந்து காணப்படும் அந்தக் குளத்தின் அமைப்பே எங்களுக்கு வியப்பாக இருந்தது.

ஈப்போவுக்கு அருகில் உள்ள ஈயச் சுரங்கத்தை நாங்கள் கண்டு களிக்கத் திரு. எம். எஸ். எம். மெய்யப்பச் செட்டியார் மகன் திரு. எம். சொக்கலிங்கம் ஏற்பாடு செய்தார். ஈயச் சுரங்கத்தை ஈயலம்பம் என்று குறிப்பிடுகிருர்கள்.

ரப்பரும் ஈயமும் மலேயா மண் வளத்தின் சின்னங்கள். மலேயாவின் ஈயம் கலந்த மண் வளத்தைத் தக்கவாறு பயன்படுத்த உதவுகின்றன ஈயச் சுரங்கங்கள். ஈயம் கலந்த மண்ணை நீரில் கரைத்துப் பொறிகளின் உதவியால் மண் வேறு ஈயம் வேருகப் பிரித்தெடுக்கும் தொழில் வேகம் எவரது கருத்தையும் கவரும். பெரிய ஈயச் சுரங்கங்களில் ஈயக் கப்பல்கள் என்ற இயந்திரங்கள் இயங்குகின்றன. நாங்கள் பார்வையிட்ட ஈயச் சுரங்கத்தில் ஈயக் கப்பல் இல்லாமலே ஈய மண்ணைத் தொழிலாளர்கள் அரித்து வகைப்படுத்தும் கை வண்ணம் கண்டு வியந்தோம்.

காந்தியடிகளின் பெருமையை மனமார உணர்ந்து போற்றுவதோடு, அண்ணலின் புகழ் பரப்பும் நினைவுச் சின்னங்கள் நிறுவவும், மலைநாட்டு மக்கள் தவறவில்லை என்பதை நேரில் கண்டு பூரிப்படைந்தோம். சிங்கப்பூரில் மட்டுமன்றி தெலுக்கான்சன், தாப்பா போன்ற சிறு சிறு நகரங்களில்கூட மகாத்மா காந்தி நினைவு மண்டபங்கள் எழுப்பப் பெற்றுள்ளன. கோலாலம்பூரில் மிகப் பெரிய நினைவு மாளிகை எழுப்பி நாடக அரங்கம் அமைக்கவும் ஏற்பாடு நடந்து வருவதாகக் கேள்விப்பட்டோம்.

வெறும் நினைவு மண்டபமாக மட்டுமல்லாமல் காந்தி அண்ணலின் நினைவாக ஒரு கலாசாலையே இயங்குமானல் "பொன் மலர் நாற்றம் உடைத்து" என்பது போன்ற சிறப்பு அமைந்துவிடுமல்லவா ? அத்தகைய சிறப்பை, ஈப்போவிலிருந்து பதினெட்டாவது மைலில் உள்ள 'சுங்கை சிப்புட்' என்னும் சிற்றூரிலே கண்டு பெருமிதம் எய்திேனும்.

மலேயாவின் தமிழ் அமைச்சர் திரு. வீ. தி. சம்பந்தன் அவருடைய அண்ணன் திரு. வீ. மீனுட்சிசுந்தரம், தம்பி

திரு வீ.கிருஷ்ணன், திரு. ஏ. எம். எஸ். பெரியசாமி முதலியோரின் சிறந்த முயற்சியால் 'சுங்கை சிப்புட்'டில் மகாத்மா காந்தி கலாசாலே தோன்றிச் சிறப்பாக இயங்கி வருகிறது. கலாசாலேயை இயக்கும் பொறுப்பை, திரு. வீ. மீனுட்சிசுந்தரம் ஏற்றுத் திறம்பட நிர்வகித்து வருகிருர். காந்தியின் பெயரில் ஒரு லட்சம் வெள்ளிகளுக்கு மேல் நன்கொடை அளித்துள்ளார் திரு பெரியசாமி.

மகாத்மா காந்தி கலாசாலேயின் மாண்பை நேரில் கண்டவுடன் எங்கள் இருவரில், கவியுள்ளம் ஒரு பாடலேப் பொழிந்தது; இசையுள்ளம் அதனேப் பண்ணுக முழக்கியது.

''எங்கும் பசுமை இலங்கிடும் நகரம்
 சுங்கை சிப்புட்டில்
எண்ணும் எழுத்தும் கண்ணெனும் உண்மை
 இயம்பிடும் நிலேயமெனத்
தங்கும் கல்விச் சாலே, காந்தித்
 தாத்தா வின்பேரால்
தமிழும் பிறவும் அறமும் அன்பும்
 சமத்துவ மனப்பண்பும்
மங்கா தொளிர அறிவொளி வீசி
 வளரும் பயிரான
மாணவ மணிகளேப் பேணிடும் அறிவு
 வயலிது வளம் பெற்றுப்
பொங்கிடும் சக்தி தந்திடு மாறு
 புவியை இயக்கிடுமோர்
பூரண ஞன வாலறி வனேநாம்
 போற்றிப் பணிவோமே!''

பண் இசைந்த பாடலின் சிறப்பறிந்து வீ. மீனுட்சி சுந்தரமும், ஏ. எம். எஸ். பெரிய சாமியும் எங்களே ஆரத் தழுவிப் பாராட்டினுர்கள்.

திரு. வீ. மீனுட்சிசுந்தரம் அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற வேண்டும். அவர் மலேயா விலேயே பிறந்து வளர்ந்த தமிழர். அவர் இந்தியாவைப் பார்த்ததேயில்லை. தமிழ் நாட்டைக் காண வேண்டும் என்னும் உள்ளத் துடிப்பு மிகுந்துள்ளவர். மலைநாட்டிலே பிறந்து தமிழ் நாட்டையே பார்க்காத ஒருவர் தமிழ் அறிவிற் சிறந்தவராகவும், மொழிப்பற்று நிறைந்தவராகவும் விளங்குகிருர் என்ருல் அவருடைய பெருமையை என்னவென்று சொல்லுவது! திரு. மீனுட்சி சுந்தரம் அவர்களைப் போல் தமிழ் நாட்டைக் காணுமலே அதன்மீது காதல் கொண்டு வாழும் தமிழர்கள் மலேயா வில் ஏராளமாக வாழ்கின்றனர். அவர்களெல்லோரும் தமிழ் நாட்டிலிருந்து செல்லும் ஒவ்வொருவரையும் காணும்போது தமிழ் நாட்டையே கண்டது போன்று மகிழ்கின்றனர்.

ஈப்போவிலிருந்து ஐம்பத்தைந்து கல் தொலைவில் தெலுக்கான்சன் என்ற பழம்பெரும் பதி உள்ளது. பழங்காலத்தில் இவ்வூர் சிறந்ததொரு நதித் துறைமுகமாக விளங்கியது. இராஜேந்திர சோழனுடைய கப்பற் படைகள் தெலுக்கான்சன் ஆற்றிலே நிறுத்தப்பட்டிருந்தன என்று வரலாறுகள் கூறுகின்றன.

தெலுக்கான்சன் ஆறு ஊரையே அரித்துக் கொண்டு வருவது போன்ற வேக நிலையில் உள்ள தெனக் கேள்விப்பட்டோம். ஆற்றின் வேகத்தை நேரிலும் கண்டோம். கரை அரிப்பைத் தடுக்கும் முயற்சிகள் பலவாறு செய்யப்படுவதாகவும் நண்பர்கள் கூறினர்.

திருவாளர்கள் கரு. சிதம்பரம் பிள்ளை, ஜே. பி. ரெங்கசாமிப்பிள்ளை முதலியோர் தெலுக்கான்சனில் வள்ளன்மை மிக்க தமிழ்ச் செல்வர்கள். அவ்வூரில் ஜூலை

14இல் நடைபெற்ற இந்து சபைக் கட்டடத் திறப்பு விழா வில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்தோம். அங்குள்ள நண்பர்கள் மலேயா அரசின் பரிசுச் சீட்டு பற்றிய குறிப்பைத் தெளிவாகக் கூறினர்கள்.

மலேயா அரசாங்கம் "சோஷியல் வெல்ஃபேர் சர்வீஸ் லாட்டரிச் சீட்டு" ஒன்று நடத்தி வருகிறது. மலேயாக் கூட்டரசில் 1950 ஆம் ஆண்டு ஒன்பதாவது விசேடச் சட்டத்தின்படியே "சமூக நலப்பணி பரிசுச் சீட்டுக் குழு" அமைக்கப்பட்டது. கூன் குருடர்களுக்கு உதவுதல், காசநோய் மருத்துவம், பொது விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், அநாதைகளுக்கு ஆதரவு முத லான திட்டங்களுக்கு நிதி சேர்ப்பதற்காகவே இந்தப் பரிசுச் சீட்டு நடைபெறுகிறது.

இந்தச் சீட்டின் மூலம் சுமார் நூற்றைம்பது பரிசு கள் வழங்கப்பெறுகின்றன. பரிசுத் தொகையும் மிக அதிகம். முதற்பரிசு மூன்றரை லட்சம் வெள்ளிகள். இரண்டாவது பரிசு ஒன்றேகால் லட்சம் வெள்ளிகள். கடைசிப் பரிசு இரண்டாயிரம் வெள்ளிகள். நாற்பது நாட்களுக்கு ஒரு முறை நடைபெற்று வரும் இந்த லாட்டரிச் சீட்டு ஒவ்வொரு தடவையும் ஒவ்வோர் ஊரில் குலுக்கப்பட்டு வருகிறது. லாட்டரிச் சீட்டுக்குரிய கூப் பன்கள் மலேயாவில் எல்லாத் தபால் நிலையங்களிலும் விற்கப்படுகின்றன. ஒவ்வொரு கூப்பனுக்கும் விலை ஒரு வெள்ளி. மிகச் சிறப்பாக இந்தச் சீட்டு நடைபெற்று வருவதாக மக்கள் பேசிக்கொள்ளுகின்றனர். அரசாங்க நிதியும் கணிசமாகப் பெருகி வருவதாகச் சொல்லப்படு கிறது.

தெலுக்கான்சன் ஊரில் உள்ள காந்தி நினைவு மண்டபத்தையும், சிதம்பரம் பிள்ளை தமிழ்ப்பாடசாலை யையும் பார்வையிட்டோம். இந்தப் பாடசாலைக்காகத் திரு. சிதம்பரம் பிள்ளை ஒன்றரை லட்சம் வெள்ளி நன்

கொடை ஈந்துள்ள செய்தியறிந்து வியந்து பாராட்டினோம்.

தெலுக்கான்சனுக்குச் சென்ற அன்று மாலையிலேயே ஈப்போவுக்குத் திரும்பினோம்.

29. மலை வளம் கண்டோம்

ஈப்போவில் தங்கியவாறே சுற்றுப்புறங்களிலுள்ள பல ஊர்களுக்குச் சென்று வளங்காணும் வாய்ப்புக் கிடைத்தது.

தைப்பிங் நகரம் ஈப்போவிலிருந்து பினங்கு செல்லும் சாலையில் ஐம்பதாவது மைலில் உள்ளது. தைப்பிங் நகரிலிருந்து ஏழு மைல் தூரம் மலைமீது ஏறினால்தான் மாக்ஸ்வெல் மலையின் சிகரத்தை எட்ட முடியும். மலைச்சாலை மிகவும் செங்குத்தானது. சாதாரணக் கார்களில் செல்ல முடியாது. ஜீப் கார்களிலேதான் போக வேண்டும்.

கடல் மட்டத்திலிருந்து 4750 அடி உயரத்தில் உள்ள மாக்ஸ்வெல் மலையின் சிகரத்திலிருந்து நோக்கினால் மேலைக் கடற்கரையின் எழிலைக் காணலாம். கீழ்ப்பாகத்தில் தைப்பிங் நகரம் அற்புதக் காட்சி தரும்.

நெளியும் வளையும் நிமிரும்செங் குத்து
வழியூர்ந்து **மாக்ஸ்வெல் மலை**யின்—குளிரழகு
மாட்சி நுகர்ந்தோம் மலையின்கீழ்த் தைப்பிங்குக்
காட்சியையும் கண்டோம் கனிந்து

அவ்வளவு உயரமான மலை மீது கூட ஒரு சிறு காளி கோயிலையும், பள்ளிக்கூடம் ஒன்றையும், சில நூறு தமிழ் அன்பர்களையும் காண முடிந்தது. ''வருக! வருக!'' என்று அழகு தமிழில் தோரண வளைவுகளுடன் மக்கள்

அளித்த வரவேற்பு மன நெகிழ்ச்சி தருவதாக இருந்தது. காணுகின்ற இடமெல்லாம் தமிழர்மயமாகவே தோன்றிய காட்சி உற்சாகம் ஊட்டியது. மாக்ஸ்வெல் மலையின் வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்த திரு ரென்னட் அவர்களை மறக்க முடியாது.

மலையிலிருந்து கீழே வந்ததும் தைப்பிங் நகரத்தில் மலேயா இந்தியர் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் திரு. டி. செல்வா நல்லதொரு வரவேற்பு நல்கினர். குவாந்தாங் மண்டபத்தில் நடைபெற்ற பொது வரவேற்பில் திரு. பெரி. முத்தையா போன்ற அன்பர்களின் பாராட்டுரையில் மட்டிலா மகிழ்ச்சி பெற்றோம்.

தைப்பிங்கிலிருந்து ஈப்போவுக்குத் திரும்பும் வழியில் கோலக் கங்சார் என்னும் ஊரில் இந்தியப் பெருமக்கள் அளித்த வரவேற்பும் இரவு விருந்தும் மெச்சத்தக்கதாக இருந்தன. கோலக்கங்சார் ஊரில்தான் பேரா ராஜ்ய சுல்தான் அவர்களின் அரண்மனை உள்ளது. கோலக்கங்சாரிலிருந்து இரவோடு இரவாக ஈப்போவுக்குத் திரும்பிவிட்டோம்.

மறுநாள் அதிகாலையில் தாப்பா என்னும் ஊர் வழியாக காமிரான் ஹைலாண்ட்ஸ் மலைப்பகுதிக்குக் காரிலே பயணப்பட்டோம். மலைச்சாலை அவ்வளவு செங்குத்தாக இல்லாதிருந்தபடியால் பயணம் வெகு சுகமாக இருந்தது.

சாலையோடு இணைந்து விளங்கும் மலைச் சோலையின் வனப்பு மன மகிழ்ச்சி தந்தது. 'ரிங் லெட்' என்னும் சிற்றூரைத் தாண்டித், 'தானரத்தா' என்ற மலை உச்சிக்குச் சென்றோம். அங்கே உள்ள ஒரு விவசாயப் பண்ணையின் சிறப்பும் செழுமையும் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியன.

தானரத்தாவில் உள்ள சினிமாக் கொட்டகையில் அகில மலாயா தமிழர் சங்கத்தின் சார்பில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அங்கிருந்து திரும்பும் வழியில் 'ரிங் - லெட்' என்ற ஊருக்கு ஐந்துமைல் தொலைவில் உள்ள 'போ எஸ்டேட்' என்னும் தேயிலைத் தோட்டத்துக்குப் போனோம். அங்கு நூற்றுக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் தமிழ் முகங்களைக் கண்டோம். அந்தத் தேயிலைத் தோட்டத்திலும், காமிரான் மலைப்பகுதியிலும் வாழும் தொழிலாளர்களில் பெரும்பாலோர் நமது நாமக்கல் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் என்று கேள்விப்பட்டோம். பிறந்த நாட்டை விட்டு வெகு தூரம் சென்று மலையின் சிகரத்திலே பாடுபட்டு வரும் தொழிலாளர்களின் மன வலிமையையும் உடல் வலிமையையும் வாயார வாழ்த்தினோம்.

"கானகத்து மலைச்சோலை வளத்தின் ஊடே
கண்கவரும் **மோதிரச்சிற்றூரைத்** தாண்டித்
தானரத உச்சியிலே வெள்ளை இல்லம்
தனைக்கண்டு பகலுணவை முடித்துக்
கொண்டு
போனவழி திரும்புகையில் **தமிழர் சங்கப்**
பொதுவரவேற் பினை ஏற்றோம்: **போ
எஸ்டேட்டில்**
தேனமுதத் தமிழ்பேசி உழைப்போர் அன்பின்
சிறப்பதனைச் சிந்தனையில் தேக்கினோமே."

[குறிப்பு: மோதிரச்சிற்றூர்-RINGLET என்ற சிற்றூர். தானரதம் - தானரத்தா என்ற மலைப்பகுதி.]

காமிரான் மலைப்பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து 3500 அடி முதல் 6500 அடிவரை உயரம் உள்ளனவாக விளங்குகின்றன. மலேயாவுக்கும், சிங்கப்பூருக்கும் தேவையான காய்கறிகளை விளைவித்துக்கொடுக்கும் மண் வளத்தைக் காமிரான் மலைகள் பெற்றுள்ளன.

மலைப்பகுதியிலிருந்து மாலையில் 'தாப்பா' என்ற ஊருக்கு வந்தோம். தாப்பா வட்டாரத் தமிழ் மக்களின் சார்பில் மகாத்மா காந்தி நினைவு மண்டபத்தில் வரவேற்பு விழா நடைபெற்றது.

வரவேற்பு விருந்து முதலானவற்றை ஏற்றுக் கொண்டு இரவு பதினொரு மணியளவில் ஈப்போவுக்குத் திரும்பினோம்.

ஜூலை மாதம் இருபத்தோராம் தேதி காலையில் ஈப்போவிலிருந்து கார்களிலேயே பினங்கு நோக்கிப் புறப்பட்டோம்.

பட்டர்வொர்த் துறையில் நீராவிப் படகுப் போக்குவரத்து கண்கொள்ளாக் காட்சியாகும். நீராவிப் படகுகள் எங்களை மட்டுமல்ல; நாங்கள் ஏறி வந்த கார்களையும், நாடகக் காட்சிப் பொருள்களை ஏற்றிவந்த லாரிகளையுங்கூட ஏற்றிக்கொண்டன.

பட்டர்வொர்த் துறைக்கும் பினங்குத் துறைக்கும் இடையில் உள்ள சுமார் மூன்று கல் தூரத்தையும் அரை மணி நேரத்தில் நீந்திக் கடந்த நீராவிப் படகுகளின் வேகமும், படகுப் பயணத்தின் போது நாலா புறமும் நாங்கள் கண்ட குளுமைக் காட்சியும் இன்றும் பசுமையாக உள்ளன.

தமிழ் உணர்ச்சி நிறைந்த கலையன்பர்களின் கூட்டம் பினங்குத் துறையில் எங்களை வரவேற்று வாழ்த்தொலி எழுப்பியது.

30. கலைக்குலத்தின் ரத்த பாசம்

இயற்கை எழில் கொழிக்கும் பினங்குத் தீவில் அன்சான் சாலை எண் 27 என்ற இல்லத்தில் தங்கினேம். கலையன்பர்களின் அன்புத் தொல்லை ஈப்போவைவிட மிகுதியாக இருந்தது. ஈப்போ ரசிகர்களாவது நமது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அமைதியாகக் கலைந்து செல்லும் மனப் பண்பு பெற்றிருந்தனர். பினங்கிலோ நாங்கள் தங்கியிருந்த பங்களாவின் கதவுகளைத் தாளிடும் அளவுக்கு ரசிகர்கள் அத்து மீறிய அன்பினல் ஆரவாரம் எழுப்பினர். அவர்களுடைய அன்பும் ஆரவாரமுந்தான் நாடக விழாவின் வெற்றிக்கு அடிகோலின என்ருல் அது மிகையாகாது.

தமிழர் பிரதிநிதித்துவ சபைத் தலைவர் திரு. டி. பி. எஸ். கிருஷ்ணசாமி, திரு. மு. துரைசாமித் தேவர், சுங்குரும்பை திரு. ஆறுமுகம் பிள்ளை, 'வாத்தியார்' கிருஷ்ணன் முதலிய அன்பர்கள் பினங்கில் எங்களுக்கு வேண்டிய உதவிகளை நிறைவேற்றித் தந்தனர்.

மலேயன் இந்தியர் காங்கிரஸ் இளைஞர்களும், தமிழ் இளைஞர் மணி மன்றத்தாரும் வரவேற்பளித்துப் பாராட்டினர்கள்.

பினங்கில் உள்ளூர் நண்பர்களும் வெளியூர் நண்பர்களும் ஏராளமாக எங்களோடு அன்புத் தொடர்பு கொண்டனர்.

கடல் கடந்து வந்த எங்கள் கலைக்குழுவை முதன் முதலில் மலைநாட்டின் தலைவாசலில் வரவேற்றது பினங்கு என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். எனவே, கலைஉலா முடியும் கட்டத்தில் மீண்டும் தலைவாசலுக்கு வந்து விடை

பெறுவதுதானே முறை? அதன்படி நாடக விழாவின் ஐந்தாவது கடைசி முகாம் பினங்கில் அமைந்தது தனிச் சிறப்பாக விளங்கியது.

பினங்குத் தீவில் பேரா சாலையில் நகர ஸ்டேடியத் துக்கு அருகில் ஒரு தனிக்கொட்டகை அமைக்கப்பட்டது. ஜூலை 25-இல் நாடக வரிசை தொடங்கியது. நாள் தோறும் இரவு 8 மணிக்கு நாடகத் தொடக்கம். முதல் நாடகம் இராஜராஜ சோழன்.

ஆரம்ப நாளன்று அடை மழை; ஆயினும், ரசிகர் கூட்டம் அலை அலையாய் அரங்கினை முற்றுகை யிட்டது. அந்த ஆனந்தமே வெற்றியின் ஆரம்பமாக அமைந்தது. நாடகம் நடைபெற்ற பதினொரு நாட்களிலும் இந்தக் கலை யார்வம் மென்மேலும் பொங்கியதே தவிர மங்கியதே இல்லை!

எட்டு நாட்கள் வெற்றி முரசு கொட்டியது இராஜ ராஜ சோழன். எது வாழ்வு, அவ்வையார், ரத்த பாசம்– ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாள் நடந்தது.

கலை உலாவின் கடைசி நாடகம், 'ரத்த பாசம்' என்பதிலும் ஒரு பொருத்தம் இலங்கியது. கடல் கடந்த நாடுகளிலும் கலைக்குலத்தின் 'ரத்த பாசம்' நிலைத்து ஓங்கும் என்பதை உணர்த்தியது.

ஓய்வு கிடைத்த நாட்களில், பினங்குக் கடை வீதி களுக்குச் சென்றோம். விநோதப் பொருள்களைக் கண் டோம், இன்றியமையாத சிலவற்றை வாங்கிக்கொண் டோம்.

கண்ணுடிப் பேழைகளில் வகை வகையான கைக் கடிகாரங்கள் காய்கறிகளைப் போல் குவித்து வைக்கப் பட்டிருந்த காட்சியை என்றும் மறக்க முடியாது.

சுங்க விதிகளுக்குப் புறம்பாக எந்தப் பொருளையும் வாங்கக் கூடாது என்ற கட்டளையை எங்கள் குழுவினர்

அனைவரும் மனப்பூர்வமாக நிறைவேற்றினர் என்பதை அடக்கத்தோடும் பெருமையோடும் கூறிக்கொள்ளுகிறோம்.

31. வாழ்த்தினர் முதலமைச்சர்

பினங்குத் தீவில் அழகின் சிகரமாக விளங்குவது கொடி மலை. சுமார் 2700 அடி உயரமுள்ள இந்த மலை மீது ஏறுவதற்கு மின்சார ரயில் அமைக்கப்பட்டுள்ளது.

பொறி இயற் கலையின் சிறந்த சாதனைகளில் இந்த மின்சார ரயில்வேயும் ஒன்று. 2270 அடி உயரத்திற்குச் சற்றுச் செங்குத்தாக அமைந்துள்ள ரயில் பாதையில் மின்சார ரயில்கள் இரண்டு பகுதிகளாக இயங்குகின்றன. இரண்டு பகுதிகளுக்கும் மத்தியில் ரயில் நிலையம் ஒன்று உள்ளது. மலை அடிவாரத்திலிருந்து முதல் பகுதி ரயிலில் சென்றதும் மத்திய நிலையத்தில் இறங்கி மற்றொரு ரயிலில் ஏறிக்கொள்ள வேண்டும்.

மலையின் அடிவாரத்திலிருந்து உச்சிக்கு ரயில் மூலம் செல்வதற்கு 25 நிமிடங்கள் ஆகின்றன. இந்த மின்சார ரயில்வே அமைவதற்கு அக்காலத்தில் பதினைந்து லட்சம் வெள்ளிகள் செலவாயினவாம்.

கொடிமலையின் உச்சியிலே மலேயாவின் முதலமைச்சர் மாண்புமிகு துங்கு அப்துல் ரகுமான் அவர்களைக் கண்டு அளவளாவும் பேறு கிடைத்தது. காட்சிக்கு எளியனாக விளங்கிய அவர் மிக உற்சாகமாக உரையாடி உள்ளத்தைக் கவர்ந்தார். அவருடைய குண நலன்கள் காரணமாகவே மலேயா மக்களின் ஒப்பற்ற தலைவராக அவர் விளங்குகிறார் என்பதை அவரோடு பழகிய ஒருசில விநாடிகளில் புரிந்துகொண்டோம்.

தமிழ் நாடகக் கலைச்சிறப்பை மற்ற மந்திரிகளின் மூலம் தாம் ஏற்கெனவே கேள்விப்பட்டதாகவும், 'மெர்

டேகா' அலுவல் நெருக்கடி காரணமாகவே நாடகங்களைக் காணும் பேறு தமக்குக் கிடைக்கவில்லையென்றும் துங்கு அவர்கள் மனம் கசிந்து வாழ்த்தினர். முதல் அமைச்சர் அவர்களுக்கு எங்கள் 'மெர்டேகா' வாழ்த்தை வழங்கி விட்டு விடைபெற்றோம்.

- பின்னர், கொடிமலையில் வாழும் இந்தியத் தொழிலாளர்கள் அன்பு கலந்த தேநீர் விருந்தளித்துப் பாராட்டினர்.

பினங்கில் உள்ள 'ஆயர் - இட்டாம்' என்னும் புத்தர் கோயில் மிகப்பெரியது. மலேயாவில் உள்ள புத்தர் கோயில்கள் அனைத்திலும் மிகச்சிறந்தது இது என்று கூடச் சொல்லலாம். பளிங்கினாலும் சலவைக் கற்களினாலும் செய்யப்பட்ட பலவகையான புத்தர் சிலைகளை இந்தக் கோயிலிலே காணலாம். இந்தக் கோயிலைச் சார்ந்து ஆமைக் குளம், மீன் குளம் போன்ற அமைப்புகள் உள்ளன. மலையோடு இணைத்துவனப்பாக அமைக்கப்பட்டுள்ள 'ஆயர் - இட்டாம்' கோயில் பினங்கில் கண்டு மகிழவேண்டிய அபூர்வமான இடங்களில் ஒன்று.

பினங்கு நகரிலிருந்து சுமார் ஒன்பது கல் தொலைவில் பாயன் லபாஸ் சாலையில், சுங்கை குளுவாங் என்ற இடத்தில் அமைந்துள்ள **பாம்புக் கோயில்** மிகவும் புகழ் பெற்றது. 'சோர் - சூ - கோங்' என்னும் சீன முனிவர் கோயில் கொண்டுள்ளதாகக் கூறப்படும் பாம்புக் கோயிலில் உயிருள்ள பாம்புகள் பல உத்திரக் கட்டைகளிலும், விளக்குகளிலும், கதவுக் கம்பங்களிலும் அடங்கி ஒடுங்கிப் படுத்திருக்கக் கண்டோம். கண்டவுடன் மருட்சி தருகின்ற போதிலும் பாம்புகள் யாருக்கும் தொந்தரவு தருவதில்லை. கோயிலின் பக்கத்து மண்டபத்தில் பெரிய மலைப்பாம்பு ஒன்று இரும்பு வலைக் கம்பிகளுக்கு உள்ளே பூட்டி வைக்கப்பட்டுள்ளது.

கோயிலுக்குச் செல்வோர் கோழிகளை மலைப்பாம்புக்கு இரையாகக் கொடுப்பார்களாம்.

மலேயாவில் பிச்சைக்காரர்கள் எவரும் எங்கள் கண்களில் தென்படவில்லை. ஆனால், பினங்கு பாம்புக் கோயில் முன்வாசலில் மட்டும் வயது முதிர்ந்த சீனப் பிச்சைக்காரர்கள் சிலர் பிச்சை ஏற்கும் ஏக்க நிலையில் இருந்ததைக் கண்டு வியப்படைந்தோம்

"ஈயென இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனிலும் இழிந்தன்று"

என்ற புறநானூற்றுக் கருத்தைப் போற்றும் வகையில் 'ஈயேன்' என்னாமல் சீன இரவலர்களுக்கு இயன்ற பிச்சையிட்டு மகிழ்ந்தோம்.

32. தாயகம் திரும்பினோம்

ஆகஸ்ட் மாதம் ஆறாம் தேதி தமிழர் பிரதிநிதித்துவ சபையார் நகர மண்டபத்தில் மாபெரும் பிரியாவிடைக் கூட்டம் நடத்திப் பாராட்டு உரைகளையும் அன்பின் சின்னங்கள் சிலவற்றையும் வழங்கிக் கௌரவித்தனர்.

ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் தேதி பிற்பகல் இரண்டு மணிக்குப் பினங்குத் துறைமுகத்தில் 'ஸ்டேட் - ஆஃப் - மதராஸ்' கப்பலில் தாயகத்துக்குப் புறப்பட்டோம்.

உள்ளூர்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் திரளான கலையன்பர்கள் கப்பலடியில் குழுமி நின்று கண்ணீர் மல்கக் கரம் குவித்து வழியனுப்பிய காட்சி இன்னமும் எங்கள் கண்முன்னே நிற்கிறது.

ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி மாலை ஐந்து மணிக்குப் பினங்கைவிட்டுப் புறப்பட்ட கப்பல் ஆகஸ்ட் 14-ஆம் தேதி காலை 6.30 மணிக்கு நாகப்பட்டினம் துறைக்கு அருகில் நின்றது.

கலாநிகேதன் நண்பர் குருமூர்த்தி எங்களை வரவேற்க, சென்னையிலிருந்து முன்கூட்டியே நாகைத் துறைக்கு வந்து கப்பலில் ஏறிக்கொண்டார். நான்கு மாதங்களாகத் தாயகத்திலும் மலைநாட்டிலும் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றியெல்லாம் வாயாரப் பேசி மகிழ்ந்தோம்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக சென்னை பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள செய்தி ஏற்கெனவே எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தமையால், அவரைக் காண வேண்டுமென்ற ஆவலில், 'எப்போது சென்னை போய்ச் சேர்வோம்' என்ற பரபரப்போடுதான் நாங்கள் இருந்தோம்.

பகல் முழுதும் இறக்குமதி ஏற்றுமதி வேலையில் ஈடுபட்டிருந்த கப்பல் மாலை 7 மணிக்கு நாகைத் துறையை விட்டுப் புறப்பட்டது.

மறுநாள் பொழுது புலர்ந்தது. ஆகஸ்ட் 15, சுதந்திரத் திருநாள். கப்பலிலேயே சுதந்திரக் கொடி ஏற்றப்பட்ட விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துப் பாடினோம். விடுதலை நாள் 'கேக்' வெட்டிக் கப்பல் தளபதி எங்களுக்குப் பகிர்ந்தளித்துப் பூரிப்படைந்தார்.

காலை எட்டு மணிக்குக் கப்பல் சென்னைத் துறைமுகத்தை அடைந்தது. ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசன், தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், டைரக்டர் கே. சுப்பிரமணியம், மற்றும் நடிகர் சங்க உறுப்பினர்களும் கலை அன்பர்கள் பலரும் கப்பலுக்கு அருகாமையில் நின்று பெருமித உணர்ச்சி கலந்த மாலைகள் சூட்டி எங்களை வரவேற்றனர்.

துறைமுகத்துக்கு வெளியே மாபெரும் வரவேற்புக் கூட்டத்துக்கும், தென்னிந்திய நடிகர் சங்கம் ஏற்பாடு

செய்திருந்தது. சுங்க அதிகாரிகளின் இசைவு பெற்று அந்தக் கூட்டத்திற்குச் சென்று வரவேற்பை ஏற்றபின், மீண்டும் சுங்கத் துறைக்குள் வந்து சோதனைகள் எல்லாம் முடிந்தபின், பிற்பகல் இரண்டு மணியளவில் கலைப் புகழோடும் மனநிறைவோடும் வீடு திரும்பினோம்.

33. சுற்றுலாவின் வெற்றி

1957, ஏப்ரல் 14-ஆம் நாள் சென்னையில் கப்பலேறினோம். ஆகஸ்ட் 15-ஆம் நாள் சென்னைத் துறைமுகத்தில் வெற்றிப் புன்னகையோடு இறங்கினோம். ஆண்டில் மூன்றிலொரு பங்கை மலைநாட்டுக் கலையுலாவுக்காக ஒதுக்க நேர்ந்தது.

இந்த நான்கு மாதங்களும் எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத இன்ப நாட்கள். பயன் மிகுந்த நற்காலம் என்பதை மனமார உணர்ந்து மகிழ்கிறோம்.

மொழியால், கலையால், நாகரிகத்தால், பொதுவாக இந்தியர்கள், சிறப்பாகத் தமிழர்கள் உயர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்ட வேண்டும் என்பதும், கலையின் மூலம் மனித உள்ளங்களை உயர்த்திப் பண்படுத்த வேண்டுமென்பதும் எங்கள் குறிக்கோள். இதில் நாங்கள் நல்ல வெற்றி பெற்றுள்ளோம் என்பதை மலைநாட்டிலுள்ள தமிழர் மட்டுமன்றிப் பிற மொழியாளரும் பிற இனத்தவருங்கூட எடுத்துக் காட்டி மனம் விட்டுப் பாராட்டியது குறித்துப் பெருமிதமடைகிறோம்.

மலைநாட்டில் வாழும் மலாய்க்காரரும், சீனரும் மேலை நாட்டாரும் நாங்கள் நடத்திய நாடகங்களைக் கண்டு ''இத்தகைய பயனுள்ள நாடகங்களை இதுவரை கண்டதில்லை'', ''தமிழ்க்கலை உயர்ந்தது'' என்றெல்லாம் மேடைகளிலே பேசி வாயாரப் புகழ்ந்தனர். இதை விடச் சிறந்த வெற்றி வேறு என்ன இருக்க முடியும்?

"திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

என்று கூறிய மகாகவி பாரதியின் கட்டளையை அடக்கத்தோடு நிறைவேற்றினோம் இது டி. கே. எஸ். நாடகக் குழுவுக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல. தமிழ்க் கலைக்குக் கிடைத்த வெற்றி—தமிழருக்குக் கிடைத்த உயர்வு—தமிழுக்குக் கிடைத்த தனிச் சிறப்பு.

சிங்கப்பூர், கோலாலம்பூர், மூவார், ஈப்போ, பினங்கு ஆகிய ஐந்து நகரங்களில் மட்டுமே எங்கள் நாடக விழாவை நடத்த முடிந்தது. எங்கள் குழுவினரின் இசை நடன நிகழ்ச்சிகளும் ஏழு முறை நடைபெற்றன. நாடகம் நடைபெற்ற நகரங்களில் நாள்தோறும் வரவேற்புகளும், பாராட்டுகளும், பரிசுகளும் வழங்கி எங்களை உற்சாகப்படுத்தினர்கள். நாடகம் நடத்த வாய்ப்பில்லாது போன சுமார் ஐம்பது ஊர்களில் எங்களுக்கு மனமார்ந்த வரவேற்பளித்து விருந்து தந்து பாராட்டும் பரிசும் வழங்கி அன்பை வெளிப்படுத்தினர்கள். அத்தகைய அன்புள்ளம் கொண்டோர் அனைவரையும் நாங்கள் என்றென்றும் நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும் பல ஊர்களிலிருந்து வரவேற்புகளும் விருந்துபசாரங்களும் நடத்த விரும்பி வந்த அழைப்புக்களை ஏற்க இயலாத நிலைமைக்காக வருந்தினோம். காலம் எங்களை அனுமதிக்கவில்லை என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

*　　　*　　　*

எங்கள் கலையுலாவிலே நாங்கள் கண்ட ஓர் உண்மையைக் குறிப்பிட விரும்புகிறோம். சிங்கையிலும், மலைநாட்டிலும் நல்ல முறையில் நாடகங்களை நடத்துவதற்கேற்ற நாடக அரங்குகள் இல்லை. இந்தக் குறையைப் பல கூட்டங்களில் நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

கேளிக்கைகள் நடைபெறும் அரங்குகள் எத்தனையோ உள்ளன. அவையனைத்தும் எதிரொலி கிளப்பும் இடங்களாகவே அமைந்திருக்கின்றன. அவற்றில் போதுமான மேடை வசதியும் இல்லை. இந்தக் குறை நீக்கப்பட வேண்டும். முக்கிய நகரங்களிலாவது ஒரு வசதியான நாடக அரங்கம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். கால விரயம், பண விரயம் இல்லாது கலைவிழாக்கள் நடைபெற இது இன்றியமையாதது. சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ, பினாங்கு ஆகிய நான்கு நகரங்களிலாவது வெகு விரைவில் நாடக அரங்கங்கள் அமைந்தாக வேண்டும். சுதந்திர மலேயாவில் கலையன்பர்கள் தீவிரமாக முனைந்து நின்றால் அரசாங்க ஆதரவோடு அரங்குகளை அமைக்க முடியுமென்பதில் ஐயமில்லை.'

சிங்கப்பூர்-மலேயாவில் நடைபெற்ற நாடகங்களைப் பற்றி ஒரு சிறு குறிப்பு:

கலை உலாவில் நடை பெற்ற நாடகவகைகள் ஐந்து:- இராஜராஜ சோழன், ஔவையார், கள்வனின் காதலி, ரத்த பாசம், எது வாழ்வு?

கலை விழா நிகழ்ந்த நகரங்களும் ஐந்து:- சிங்கப்பூர், கோலாலம்பூர், மூவார், ஈப்போ, பினாங்கு. மொத்தம் ஐம்பத்தெட்டு நாடகங்கள் நடைபெற்றன. அவற்றில் நாற்பது **'இராஜராஜ சோழன்'** நாடகம்.

> **'உலகத்தைக் கவர்கின்ற சின்னம்—அதன்**
> **உச்சியைப் போலவே உயர்ந்திடும் எண்ணம்.'**

என்ற புகழுக்குரிய திருக்கோயிலைக் கட்டியதன் மூலம் இராஜராஜ சோழ மன்னன் கலையின் சிகரத்தைக் கண்டான்; இளவரசன் இராஜேந்திரன் வீரத்தின் சிகரத்தைக் கண்டான்; அவன் காதலி வீரமாதேவி கடமையின் சிகரத்தைக் கண்டாள்; இளவரசி குந்தவி காதலின் சிகரத்தைக் கண்டாள்; அவள் காதலனான வேங்கி மன்னன் விமலாதித்தன் கவிதையின் சிகரத்தைக் கண்

டான்; பெரிய குந்தவைப்பிராட்டி பக்தியின் சிகரத்தைக் கண்டாள்; துப்பறியும் தோழி பூங்கோதை தொண்டின் சிகரத்தைக் கண்டாள்; பாலதேவர் சூழ்ச்சியின் சிகரத்தைக் கண்டார்; இத்தகைய பாத்திரப் படைப்புகளின் சிறப்பினுலேதான் இந்த நாடகம் வெற்றியின் சிகரத்தைக் கண்டது. திரு. அரு. ராமநாதன் அவர்களின் எழுத்தாற்றலைப் புலப்படுத்துவது இது.

தமிழ் என்னும் மந்திர சக்தியால் மன்னரையும், மக்களையும் ஆட்டி வைக்கும் அன்புக் கிழவியின் அரிய வரலாறு **ஔவையார்.** ஒரு கிழவியைக் கதைத் தலைவியாக நிறுத்திக் கட்டு மீறிய காதற்சுவையோ, களியாட்டமோ சிறிதுமில்லாத இந்நாடகத்தில் தமிழின் சக்தி சுடர் விடுவதைக் காணலாம். திரு. எத்திராஜு அவர்களின் எழுத்தோவியம் இது.

ஆதரவுக்கு உரியாள் யார்? காதலித்த மங்கையா? கண்ணனைய தங்கையா? எது பெரிது? காதலா? கடமையா? இத்தகைய உணர்ச்சிச் சுழல்களிலே சிக்கி உயிர்த்தியாகம் செய்யும் முத்தையனின் சோக வாழ்வைச் சித்திரிப்பது **கள்வனின் காதலி.** அமரர் கல்கி அவர்களின் கற்பனையிலே மலர்ந்து அழகு தமிழிலே அமரத்துவம் பெற்றுவிட்ட கதை இது. நாடகமாக்கியவர் திரு. எஸ். டி. சுந்தரம்.

"தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்ற தத்துவத்தை இரு சகோதரர்களின் வாழ்க்கைப் போராட்டங்களிலே பிணைத்துக் காட்டுவது **'ரத்த பாசம்.'** திரு. ஸ்ரீதர் அவர்களின் உணர்ச்சிச் சித்திரம்.

உலகம் தூற்ற வாழ்வதைவிட உலகம் போற்றச் சாவதே மேல் என்ற உயரிய எண்ணத்தை நிலை நாட்டுவது **'எது வாழ்வு?'** என்னும் நாடகம். ஆங்கிலக் கதையொன்றைத் தமிழாகக் கற்பனை செய்தவர் திரு. ராஜா. உரைநடை அழகு ஊட்டியவர் திரு. டி. கே. கோவிந்தன்.

* * *

மலேயாவெங்கும் தமிழர் திருநாள் கொண்டாடிச் சமய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்ட உணர்ச்சியைக் காட்டும் தமிழ் அன்பர்களை நாங்கள் வாயாரப் போற்றுகிறோம். ஆண்டுக்காண்டு தமிழர் திருநாள் வலுப்பெறட்டும். இந்தத் திருநாள் மகிழ்ச்சி தரும் திருநாளாக மட்டும் அமையாமல் உணர்ச்சியூட்டும் பெருநாளாகவும் உருவாகட்டும்.

எங்கள் நாடகக் குழு மலைநாட்டிற்குச் சென்று கலையின் வெற்றி காணக் காரணராக இருந்த சிங்கை நகரமன்ற உறுப்பினர் திரு. கே. எம். ஒலி முகம்மது அவர்கட்கும், நாடகங்களுக்குப் பேராதரவு தந்தவர்களுக்கும், வரவேற்பு நல்கி, வாழ்த்துக் கூறி, பாராட்டி, விருந்தளித்துப் பரிசு வழங்கிய நிறுவனங்களுக்கும், கலையன்பர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் எங்கள் நெஞ்சுகந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கலை உலாவிலே நாங்கள் கண்ட காட்சிகளைக் கொண்டும், பெற்ற அனுபவத்தைக் கொண்டும், இந்தப் பயணக் கட்டுரைத் தொடரை உருவாக்கினோம். எங்கள் கண்ணுக்கும், கருத்துக்கும் எட்டாத செய்திகள் இன்னும் எவ்வளவோ இருக்கலாம். எனினும், மலேயாவைப் பற்றி அறிய விரும்புவோருக்கு ஓரளவேனும் இந்தக் கட்டுரைத் தொடர் பயனுக இருக்குமானல் அதுவே எங்கள் வெற்றி என்று கருதி மகிழ்வோம்.

ஒன்று மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். எங்களுக்குப் பின்னல் மலேயாவுக்குச் செல்பவர்கள் உண்மையில் எங்களைவிடப் பேறு பெறுபவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், நாங்கள் மலேயா சுதந்திரம் பெறுவதற்கு முன்னல் போய் வந்தோம். இனிமேல் போகிறவர்கள் சுதந்திர மலேயாவில் உலா வருவார்கள்.

"மலேயாவின் சுதந்திரப் பாதையில் கலை மலர் தூவினர்" என்று அறிஞர்கள் எங்களைப் பாராட்டு கின்றனர். எங்கள் கலைக்குழுவினர் அன்போடு தூவிய கலைமலர்கள் சுதந்திர மலேயா தேவியின் திரு வடிக் கமலங்களுக்கு உரியனவாகட்டும்.

கலை அழியாதது. அதைப் போல் கலையுறவும் அழியாதது. வருங்காலத்தில் இந்தியாவுக்கும் மலேயா வுக்கும் இடையே கலையுறவு நீடிக்குமாக!

மலைநாட்டின் மாண்பு

மலைநாட்டின் கலையார்வம்
கண்டோம் — அதன்
வளமான நில மாண்பின்
வகையறிந்து கொண்டோம்!
— மலைநாட்டின் கலையார்வம்....

பலநாட்டுக் கலைநாட்டம்
தலைகாட்டும் நிலையேற்றும்
மலையாமல் மகிழ்வோடு
வரவேற்கும் ஒருநாடு
— மலைநாட்டின் கலையார்வம்....

பச்சைப் பசேல்என்ற வண்ணம் — எங்கு
பார்த்தாலும் பரவசம் மிகஉண்டு பண்ணும்!
இச்சையும் ஊக்கமும் ஏந்தி — வரும்
எல்லோர்க்கும் இந்நாடு தந்திடும் சாந்தி!

மண்ணிலே ஈயம் பிறக்கும்! — பச்சை
மரத்திலே ரப்பரோ பாலாய்ச் சுரக்கும்!
கண்கவர் சாலைபல வாகும்! — புயல்
காற்றுப் பறந்திடும் கார்களின் வேகம்!

தொலைதூர நகரங்க ளேனும் — சிறு
தும்மலின் வேகத்தில் தொலைபேசி எட்டும்!
அலைகடல் சூழ்ந்ததோர் நாடு — இந்த
அகிலத்தின் கவனத்தை ஈர்க்கும்தேன் கூடு.

விண்மாரி குறைவதும் இல்லை ! — இங்கு
விளைகின்ற காய்கறி சுவைப்பதும் இல்லை !
மண்வாசி அப்படி ! ஆமாம் ! — இங்கு
மலர்களுக்கு அழகுண்டு ! மணமில்லை யம்மா !

சிங்கார முத்துக்கள் மேலே — மிகச்
செந்நிறக் கூடொன்று மூடினாற் போலே
மங்குஸ்தான் பழம்இதற் கீடு — தர
மாட்டாமல் உடம்பிலே பறந்திடும் சூடு !

'டொரியானை' மறந்துவிட் டேனே !— அதன்
துர்நாற்றம் நாசியைத் துளைத்திடும் தானே !
புரியாத சுவையுள்ள தென்பர் — முள்
போர்வையை நீக்கியே போராடித் தின்பர் !

வேடிக்கை கேளிக்கை மீதே — மது
வெறிமோதப் புரியாத மேல்நாட்டுப் பாதை
தேடியே பின்பற்றும் வேகம் — இன்னும்
தீராத மக்களோ ஏராள மாகும் !

உல்லாசம் பொங்கவே ஆண் பெண் — சற்றே
ஒட்டியும் ஒட்டாமல் ஆடிடும் "ரோங்கிங்"
மெல்லிசை மின்களி யாட்டம் — இன்ப
விளையாட்டி லும்உண்டு பலரது நாட்டம் !

தரமான நாடகம் கண்டு — போற்றும்
தாராள மனத்தினர் ஏராளம் உண்டு ;
உரம்வாய்ந்த கலையன்பர்க் கெல்லாம் —தமிழ்
உறவோடு வணக்கமும் நன்றியும் சொல்வோம் !

— மலைநாட்டின்....

ஏஷியன் அச்சகம், சென்னை-600014.